# திருச்சிற்றம்பலம்

# திருமந்திரம்

## விநாயகர் காப்பு

*ஐந்து கரத்தனை யானை முகத்தனை*
*இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை*
*நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்*
*புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.*

(துதிக்கையோடு கூடிய) ஐந்து கைகளையுடையவனும், யானை முகத்தையுடையவனும், இளம்பிறைச் சந்திரனைப் போன்ற தந்தத்தை உடையவனும், சிவனது குமாரனும், ஞானச் சிகரமாக விளங்குபவனும் ஆகிய விநாயகக் கடவுளை, அறிவினில் வைத்து அவன் திருவடிகளைத் துதிக்கின்றேன்.

## 1. கடவுள் வாழ்த்து

அஃதாவது, கடவுளின் பெருமையைக் கூறி ஏத்துதல்,

*1.* *ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்*
*நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து*
*வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்*
*சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே.*

ஒரு பொருளாகிய சிவனே, இனிமையான சத்தியோடு இரண்டாயும், பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்ற மூன்று நிலைகளில் நிற்பவனாயும், நான்கு புருடார்த்தங்களை உணர்ந்தவனாயும், மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐந்து இந்திரியங்களை வென்றவனாயும், மூலாதாரம், சுவாதிட்டனம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை ஆகிய ஆறு ஆதாரங்களில் விரிந்தனவாயும், அதற்குமேல் ஏழாவது இடமாகிய சகஸ்ரதளத்தின் மேல் விளங்குபவனாயும், நிலம், நீர், தீ, காற்று, விண், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய எட்டுப் பொருள்களையும் உணர்ந்து அவற்றில் கலந்து விளங்குகிறான்.

*2.* *போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை*
*நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கும் நாதனை*
*மேற்றிசைக் குளதென் திசைக்கொரு வேந்தனாங்*
*கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே.*

இனிமையான உயிரிலே பொருந்தியிருக்கும் தூய்யையானவனும், கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆகிய நான்கு திசைகளுக்கும் பராசத்திக்கும் தலைவனும், மேலே சொல்லப்பெற்ற திசைகளுள் தெற்குத் திசைக்குரிய இயமனை உதைத்தவனும் ஆகிய இறைவனை, புகழ்ந்து பாடி நான் உரைக்கின்றேன்.

*3.* *ஒக்கநின் றானை உலப்பிலி தேவர்கள்*
*நக்கனென் றேத்திடு நாதனை நாள்தொறும்*
*பக்கநின் றார் அறி யாத பரமனைப்*
*புக்குநின் றுன்னியான் போற்றிசெய் வேனே.*

உடனாய் நின்றவனும், அழிவில்லாத தேவர்கள் ஆடையில்லாதவன் என்று பரவும் தலைவனும், பக்கத்திலுள்ள திருமால் முதலிய தேவர்கள் அறிய முடியாத மேலோனும் ஆகிய இறைவனை, நான் அணுக்கமாக இருந்து அனுதினமும் வழிபாடு செய்வேன்.

விளக்கம் : நக்கன்- ஆடையில்லாதவன், இறைவன் திசைகளையே ஆடையாகக் கொண்ட அகண்ட வியாபகம் உடையவன்.

*4.* *அகலிடத் தார்மெய்யை அண்டத்து வித்தைப்*
*புகலிடத் தென்றனைப் போதவிட் டானைப்*
*பகலிடத் தும்இர வும்பணிந் தேத்தி*
*இகலிடத் தேஇருள் நீங்கிநின் றேனே.*

அகன்ற சீவர்களுக்கு மெய்ப்பொருளானவனும், ஆகாய மண்டலத்துக்கு வித்துப் போன்றவனும், அடைக்கலாமான இடத்தில் என்னைச் செல்லவிட்டவனும் ஆகிய இறைவனை, பகலிலும் இரவிலும் வணங்கிப் பரவி, மாறுபாடுடைய இவ்வுலகில் நான் அறியாமை நீங்கி நின்றேன்.

*5.* *சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை*
*அவனொடொப் பார்இங்கு யாவரும் இல்லை*
*புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்*
*தவனச் சடைமுடித் தாமரை யானே.*

சிவபெருமானோடு ஒப்பாகவுள்ள கடவுள் புறத்தே உலகில் எங்குத் தேடினும் இல்லை, இனி அவனுக்கு உவமையாக இங்கு அகத்தே உடம்பிலும் எவரும் இல்லை, அவன் அண்டத்தைக் கடந்து நின்று போது பொன் போன்று பிரகாசிப்பான், செந்நிறம் பொருந்திய ஊர்த்துவ சகஸ்ரதளத் தாமரையில் விளங்குபவனாவான்.

*6.* *அவனை ஒழிய அமரரும் இல்லை*
*அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை*
*அவனன்றி மூவராகி ஆவதொன் றில்லை*
*அவனன்றி ஊர்புகு மாறறி யேனே.*

சிவனைக் காட்டிலும் மேம்பட்ட தேவர்கள் ஒருவரும் இல்லை, அவனல்லாது செய்கின்ற அருமையான தவமும் இல்லை, அவனை அல்லாது பிரமன், விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவராலும் பெறுவது ஒன்றும் இல்லை, அவனையல்லாது வீடுபேறு அடைவதற்குரிய வழியை அறியேன்.

*7.* *முன்னையொப் பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்*
*தன்னையொப் பாயொன்றும் இல்லாத் தலைமகன்*
*தன்னையப் பாஎனில் அப்பனு மாய்உளன்*
*பொன்னையொப் பாகின்ற போதகத் தானே.*

பொன் போன்ற சகஸ்கரதளத்தில் விளங்குபவனே, பழமையாகவே சமமாக வைத்து எண்ணப்படும் பிரமனாதி மூவர்க்கும் பழமையானவன், தனக்கு ஒப்பாரும் மிக்காருமில்லாத தலைமன், அவனை யாரேனும் ‘அப்பனே’ என்று வாயார அழைத்தால் அப்பனாக இருந்து உதவுவான்.

*8.* *தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்*
*ஆயினும் ஈசன் அருளறி வார்இல்லை*
*சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்*
*தாயினும் நல்லன் தாழ்சடை யோனே.*

தாழ்ந்த சடையையுடைய சிவன், தீயைக்காட்டிலும் வெம்மையானவன், (அன்பர்க்கு) நீரைக்காட்டிலும் குளிர்ச்சியானவன், குழந்தையினும் நல்லவன், பக்கத்தில் இருப்பவன், அவனிடம் அன்பு செய்வார்க்குத் தாயைக் காட்டிலும் கருணை புரிபவன், இவ்வாறிக்கும் இறைவனது கருணையை அறிபவர் இல்லை.

*9.* *பொன்னாற் புரிந்திட்ட பொற்சடை யென்னப்*
*பின்னாற் பிறங்க இருந்தவன் பேர்நந்தி*
*என்னால் தொழப்படும் எம்இறை மற்றவன்*
*தன்னால் தொழப்படு வாரில்லை தானே.*

பொன்னால் செய்யப்பெற்ற அழகான சடை என்று கூறுமாறு, அவன் பின்புறம் விளங்க இருப்பவன், அவனது திருநாமம் நந்தி என்பதாகும். என்னால் வணங்கத்தக்கவன் உயிர்கட்கெல்லாம் தலைவனாகிய சிவன், ஆனால், அப்பெருமானால் வணங்கத்தக்கவர் பிறர் எவரும் இல்லையாம்.

*10.* *தானே இருநிலந் தாங்கிவிண் ணாய்நிற்குந்*
*தானே சுடும்அங்கி ஞாயிறுந் திங்களுந்*
*தானே மழைபொழி தையலு மாய்நிற்குந்*
*தானே தடவரை தண்கட லாமே.*

சிவனாகிய தானே இப்பூவுலகத்தைத் தாங்கிக் கொண்டு ஆகாய வடிவினனாக உள்ளான், அவனே சுடுகின்ற அக்கினியாகவும், சூரியனாகவும், சந்திரனாகவும் உள்ளான். அவனே அருள்பொழியும் சத்தியமாய் இருக்கின்றான், அவனே விசாலமான மலையாகவும் குளிர்ச்சியான கடலாகவும் உள்ளான்.

*11.* *அயலும் புடையும்எம் ஆதியை நோக்கில்*
*இயலும் பெருந்தெய்வம் யாதுமொன் றில்லை*
*முயலும் முயலில் முடிவுமற் றாங்கே*
*பெயலும் மழைமுகிற் பேர்நந்தி தானே.*

தூரத்திலும் பக்கத்திலும் எமக்கு முன்னோனாகிய இறைவனது பெருமையை எண்ணினால், ஒத்ததாகச் சொல்லக்கூடிய பெரிய தெய்வம் பிறிதொன்றில்லை; முயற்சியும் முயற்சியின் பயனும், மழை பொழிகின்ற மேகமும் அவ்விறைவனேயாகும், அவன் பெயர் நந்தி என்பதாகும்.

*12.* *கண்ணுத லான்ஒரு காதலின் நிற்கவும்*
*எண்ணிலி தேவர் இறந்தார் எனப்பலர்*
*மண்ணுறு வார்களும் வானுறு வார்களும்*
*அண்ணல் இவன்என் றறியகில் லார்களே.*

நெற்றிக் கண்ணையுடைய சிவன் ஒப்பற்ற அன்போடு அழியாதிருக்கவும், எண்ணற்ற தேவர்கள் இறந்தாராக, மண்ணிலும் விண்ணிலும் வாழ்கின்ற பலரும், இச்சிவனே அழியாதிருக்க அருள் புரிபவன் என்ற இவர் அறியாதிருக்கின்றனரே. என்ன பேதைமை !

*13.* *மண்ணளந் தான்மல ரோன்முதல் தேவர்கள்*
*எண்ணளந் தின்னும் நினைக்கிலார் ஈசனை*
*விண்ணளந் தான்தன்னை மேல்அளந் தாரில்லை*
*கண்ணளந் தெங்குங் கடந்துநின் றானே.*

மண்ணை அளந்த மாயவன், அவனது உந்திகமலத்தில் உதித்த பிரமன் முதலாய தேவர்களும், சிவனை எண்ணத்தில் அகப்படுத்தி நினையாதிருக்கின்றனர், ஆகாயத்தில் விரிந்து விளங்குபவனை மண்ணுலகோர் கடந்து சென்று அறிய முடியவில்லை, ஆனால் அவன் கண்ணில் கலந்தும் எங்கும் கடந்தும் விளங்குகின்றான்.

*14.* *கடந்துநின் றான்கம லம்மல ராதி*
*கடந்துநின் றான்கடல் வண்ணன்எம் மாயன்*
*கடந்துநின் றான் அவர்க் கப்புறம் ஈசன்*
*கடந்துநின் றான்எங்கும் கண்டுநின் றானே.*

சிவன் சுவாதிட்டமான மலரிலுள்ள பிரமனைக் கடந்துள்ளான், மணிபூரகத்தானத்திலுள்ள எமது மாயனாகிய விஷ்ணுவைக் கடந்துள்ளான், அவ்விருவர்க்குமேல் அநாகதச் சக்கரத்திலுள்ள உருத்திரனைக் கடந்துள்ளான். இம்மூவரையும் கடந்து சிரசின் மேல் நின்று எங்கும் கண்காணித்துக் கொண்டுள்ளான்.

*15.* *ஆதியு மாய்அர னாய்உட லுள்நின்ற*
*வேதியு மாய்விரிந்த தார்ந்திருக் தான்அருட்*
*சோதியு மாய்ச்சுருங் காததோர் தன்மையுள்*
*நீதியு மாய்நித்த மாகிநின் றானே.*

சிவன் உலகினைப் படைப்பவனாயும் அழிப்பவனாயும் உடலைக் காத்து மாற்றம் செய்பவனாயும், அவற்றைக் கடந்து நிறைந்து விளங்கினான். திருவருள் சோதியாயும், குவிதல் இல்லாத இயல்போடு ஊழைச் செலுத்துபவனாயும், என்றும் அழியாத தன்மையோடு உள்ளான்.

*16.* *கோது குலாவிய கொன்றைக் குழற்சடை*
*மாது குலாவிய வாள்நுறல் பாகனை*
*யாது குலாவி அமரருந் தேவருங்*
*கோது குலாவிக் குணம்பயில் வாரே.*

நரம்பு பொருந்திய கொன்றை மலரை அணிந்த கருண்ட சடையையும், அழகு நிறைந்த ஒளியோடு கூடிய நெற்றியுடைய உமாதேவியை ஒரு பாகத்தில் உடையவனுமாகிய சிவனை, அமரர்களும் தேவர்களும், குற்றத்திலே பொருந்தி, என்ன என்று பாராட்டிக் குணத்தை நாடுவார் ? நாட மாட்டார்.

*17.* *காயம் இரண்டுங் கலந்து கொதிக்கினும்*
*மாயங்க கத்தூரி யதுமிகும் அவ்வழி*
*தேசங் கலந்தொரு தேவனென் றெண்ணினும்*
*ஈசன் உறவுக் கெதிரில்லை தானே.*

தூல உடம்பும் சூக்கும உடம்பும் ஆகிய இரண்டும் ஒன்றாகக் கலந்து இருப்பினும், மாயை சம்பந்தமுடைய சூக்கும உடம்பில் தான் கானமானது (ஸ்பந்தமானது) மிகுந்திருக்கும், அக்கானம் அல்லது நாதவழியே மனம் பதிந்து ஆன்மா தன்னை ஒளி வடிவமாகக் காணினும், உடலை விட்டு ஆகாய வடிவினனாகிய சிவனோடு கொள்ளும் தொடர்புக்கு நிகரில்லை.

*18.* *அதிபதி செய்து அளகை வேந்தனை*
*நிதிபதி செய்த நிறைதவ நோக்கி*
*அதுபதி யாதரித் தாக்கம தாக்கின்*
*இதுபதி கொள்ளென்ற எப்பெரு மானே.*

வடதிசைக்குத் தலைவனாகச் செய்து, அளகாபுரி அரசனை, செல்வத்துக்குத் தலைவனாச் செய்த நிறைந்த தவத்தின் பயனைக் கருத்தில் கொண்டு, அவ்வாறு வடதிசையைப் போற்றி நீயும் சேமிப்பைப் பெருக்கினால், இவ்வடதிசைக்குத் தலைவனாக நீயும் ஆகலாம் என்று சொல்பவன் எமது தலைவனாவான்.

19. *இதுபதி ஏலங் கமழ்பொழில் ஏழும்*
*முதுபதி செய்தவன் மூதறி வாளன்*
*விதுபதி செய்தவன் மெய்த்தவம் நோக்கி*
*அதுபதி யாக அமருகின் றானே.*

வடக்குத் திசைக்குத் தலைவன், விஷய வாசனைக்கு இடமான ஏழு ஆதாரங்களையும் அழித்துப் பாழ் நிலமாக்கினவன், அவன் பழமையாகவே எல்லாம் அரிபவன், பாவங்களைப் போக்கடிக்கின்ற பலியினைக் கொள்ளும் வடதிசையை இடமாக்கிக் கொண்ட சீலரது உண்மையான தவத்தை நோக்கி, அத்தவம் செய்வோரையே இடமாக்கிக்கொண்டு எழுந்தருளியிருக்கிறான்.

20. *முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த*
*அடிகள் உறையும் அறனெறி நாடில்*
*இடியும் முழக்கமும் ஈசர் உருவங்*
*கடிமலர்க் குன்ற மலையது தானே.*

இறப்பையும் பிறப்பையும் கருவில் உதிக்கும் முன்பே வரையறை செய்த, சிவன் பொருந்தியுள்ள நியதியை அறியின், அது விளக்கம் மிக்க கண்மலருக்கு மேல் உள்ள சிரசாகும், அவ்விறைவனது வடிவம் ஒளியும் ஒலியுமாகும்.

21. *வானப் பெருங்கொண்டல் மாயைன் வானவர்*
*ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவனைக்*
*கானக் களிறு கதறப் பிளந்தஎங்*
*கோனைப் புகழுமின் கூடலு மாமே.*

ஆகாயத்திலுள்ள மேகம் போன்ற கரிய திருமால் பிரமன் தேவர் முதலியோரது, இழிந்த பிறவியை நீக்குகின்ற ஒப்பற்றவனும், ஆணவமாகிய காட்டு யானையைக கதறும்படி பிளந்த எம் தலைவனுமாகிய சிவனை, அவனை அணைந் உய்யலாம்.

22. *மனத்தில் எழுகின்ற மாயநன் னாடன்*
*நினைத்த தறிவ னென்னில்தான் நினைக்கிலர்*
*எனக்கிறை அன்பிலன் என்பர் இறைவன்*
*பிழைக்கநின் றார்பக்கம் பேணிநின் றானே.*

தியானப் பொருளாக மனத்தில் தோன்றுகின்ற மாய நாடனாகிய சிவன், சீவர் நினைத்ததை அறிவான் என்ற போதும் இவர்தாம் நினையாதிருக்கின்றனர். கடவுளுக்கு என்னிடத்துக் கருணை இல்லை என்று சொல்லுவர், இறைவன் தன் கருணைக்கு இலக்காகாமல் தப்ப நிற்பவர்க்கு கருணை வழங்கி நிற்கின்றான். அவன் கருணை இருந்தவாறு என்னே!

23. *வல்லவன் வன்னிக் கிறையிடை வாரணம்*
*நில்லென நிற்பித்த நீதியுள் ஈசனை*
*இல்லென வேண்டா இறையவர் தம்முதல்*
*அல்லும் பகலும் அருளுகின் றானே.*

சர்வ வல்லமையுடையவனும்,தேவனைக் கடலின் மத்தியில் நிலைக்கச் செய்த நீதியுள் நீதியையுடையவனும் ஆகிய இறைவனை, இல்லை என்று கூற வேண்டா, படைத்தல் முதலியவற்றைச் செய்கின்ற கடவுளர்க்கும் தலைவனாய் இரவும், பகலும் ஆன்மாக்களுக்கு அருள் செய்துகொண்டிருக்கின்றான்.

24. *போற்றிசைத் தும்புகழ்ந் தும்புனி தன்னடி*
*தேற்றுமின் என்றுஞ் சிவனடிக் கேசெல்வ*
*மாற்றிய தென்று மயலுற்ற சிந்தையை*
*மாற்றிநின் றார்வழி மன்னிநின் றானே.*

போற்றிக் கூறியும் புகழ்ந்து பாடியும், நின்மலனாகிய சிவனது திருவடியை இடைவிடாது தாரகமாகக் கொண்டு தெளியுங்கள், சிவபெருமான் திருவடிக்கே நம் செல்வமெல்லாம் உரியது என்று எண்ணி, புறப்பொருளில் மயங்கிக் கிடக்கின்ற மனத்தை மாற்றி நிற்பவரிடத்தில் சிவன் நிலைபெற்று நிற்பான்.

25. *பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாளன்*
*இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்*
*துறப்பிலி தன்னைத் தொழுமின் தொழுதால்*
*மறப்பிலி மாயா விருத்தமு மாமே.*

பிறவாதனும், யாவற்றையும் ஒடுக்குபவனும், பேரருளுடையவனும், அழிவில்லாதவனும், எல்லோர்க்கும் இடையறாது இன்பத்தை நல்குபவனும் ஆகிய சிவனை, வணங்குங்கள், அவ்வாறு வணங்கினால், நீங்கள் அவனடி மறவாதவர்களாய் அஞ்ஞானம் நீங்கி ஞானப்பேறு அடையலாம்.

*26.* *தொடர்ந்துநின் றானைத் தொழுமின் தொழுதால்*
*படர்ந்துநின் றான்பரி பாரக முற்றங்*
*கடந்துநின் றான்கம லம்மலர் மேலே*
*உடந்திருந் தானடிப் புண்ணிய மாமே.*

ஆன்மாக்களை என்றும் தொடர்ந்து நின்ற சிவனை எப்பொழுதும் வணங்குங்கள், அவ்வாறு வணங்கினால், எங்கும் வியாபித்துள்ளவனும், விசாலமான உலக முழுவதும் கடந்து நின்றவனும், சகஸ்ரதள கமலத்தின்மேல் உடனாய் இருந்தவனும் ஆகிய சிவனது, திருவடிப்பேறு கிட்டும்.

*27.* *சந்தி எனத்தக்க தாமரை வாண்முகத்*
*தந்தமில் ஈசன் அருள்நமக் கேயென்று*
*நந்தியை நாளும் வணங்கப் படும் அவர்*
*புந்தியி னுள்ளே புகுந்துநின் றானே.*

சேர்க்கையின் இடம் என்று சொல்லப்படும் சுவாதிட்டான மலரின் கீழ் ஒளி பொருந்திய முகத்தையுடைய, இறுதியில்லாத இறைவனது கருணை நமக்கே உரியது என்று, அப்பெருமானைத் தினந்தோறும் வழிபடுவோரது, புத்தியில் தானே புகுந்து பெயராது நின்றான்.

*28.* *இணங்கிநின் றான்எங்கு மாகிநின் றானும்*
*பிணங்கிநின் றான்பின்முன் னாகிநின் றானும்*
*உணங்கிநின் றான்அம ராபதி நாதன்*
*வணங்கிநின் றார்ககே வழித்துணை யாமே.*

எவ்விடத்தும் நீக்கமற நிறைந்துள்ளவனுமாகிய சிவன் ஆன்மாவோடு பொருந்தியுள்ளான். எல்லாக் காலத்தும் இருப்பவனுமாகிய பெருமான் மாறுபட்ட தன்மையில் உள்ளான், தேவர் உலகை ஆளும் சிவன் தனக்கெனச் செயலின்றி உள்ளான், அவன் தன்னை வழிபடுவோர்க்கு வழித்துணையாக உள்ளான்.

*29.* *காணநில் லாயடி யேற்குற வாருளர்*
*நாணகில் லேன்உன்னை நான்தழு விக்கொளக்*
*கோணநில் லாத குணத்தடி யார்மனத்*
*தாணிய னாகி அமர்ந்துநின் றானே.*

சிவத்தைவிட்டு மாறிய நினைவு இல்லாத அடியார் மனத்திடை, ஆணிவேர் போல எழுந்தருளியிருப்பவனே, சீவயாத்திரை முழுதும் உதவக்கூடியவர் உன்னையன்றி வேறு உறவு யார் உள்ளார்? ஆகையால் இறையவனே அடியேனுக்கு ஞானகோசரப் பொருளாய் விளங்க வேண்டும், அப்போது நான் உன்னைத் தலைவனாக ஏற்றுக் கொள்ள வெட்கப்பட மாட்டேன்.

*30.* *வானின் றழைக்கும் மழைபோல் இறைவனுந்*
*தானின் றழைக்குங்கொல் என்று தயங்குவார்*
*ஆனின் றழைக்கு மதுபோல்என் நந்தியை*
*நானின் றழைப்பது ஞானங் கருதியே.*

ஆகாயத்தில் விளங்கித் தானே பொழியும் மழையைப் போன்று, இறைவனும் தானே வலிய வந்து அருளைப் பொழியும் என்று சிலர் தயக்கம் கோள்வர். பசுவின் கன்று பால் கருதித் தன் தாயை அழைப்பது போல, என் நந்தியை நான் இப்போது அழைப்பது ஞானம் கருதியேயாம்.

*31.* *மண்ணகத் தான்ஒக்கும் வானகந் தான்ஒக்கும்*
*விண்ணகத் தான்ஒக்கும் வேதகத் தான் ஒக்கும்*
*பண்ணகத் தின்னிசை பாடலுற் றானுக்கே*
*கண்ணகத் தேநின்று காதலித் தேனே.*

இறைவன் பூவுலகில் வாழ்கின்றவர்க்கு மானிட வடிவில் வெளிப்பட்டருளுவான், புவர்லோக வாசிகளுக்கு ஆகாய வடிவினனாக ஒளி வடிவில் வெளிப்பட்டு அருளுவான், சுவர்லோக வாசிகளுக்கு அவ்வண்ணமே தேவ வடிவில் வெளிப்பட்டருளுவான், சித்திகளை விரும்பினவர்க்குச் சித்தனாக நின்றருளுவான், நிறைவு பெற்ற மனத்தின் இடமாக நாதத்தை வெளிப்படுத்துபவனாகிய அவனுக்கு, அறிவினிடமாக நின்று நான் அன்பு பூண்டிருந்தேன்.

*32.* *தேவர் பிரான்நம் பிரான்திசை பத்தையு*
*மேவு பிரான்விரி நீருல தேழையுந்*
*தாவு பிரான்தன்மை தானறி வாரில்லை*
*பாவு பிரான்அருட் பாடலு மாமே.*

சிவன் தேவர்கள் அனைவர்க்கும் தலைவன், அவன் மானிடர்க்கும் தலைவன், அவன் சீலகோடிகளிடம் மேல் கீழ் பக்கம் எனப்பத்துப் பக்கங்களிலும் நிறைந்துள்ளவன், அவனே விரிந்த நீரால் சூழப்பெற்ற ஏழு உலகங்களையும் கடந்து உள்ளான். இவனுடைய தன்மையை ஒருவரும் அறிபவர் இல்லை, இவ்வண்ணம் வியாபித்துள்ள இறைவனது அருளை எம்மால் எவ்வாறு பாட முடியும்.

*33.* *பதிபல வாயது பண்டிவ் வுலகம்*
*விதிபல செய்தொன்று மெய்ம்மை உணரார்*
*துதிபல தோத்திரஞ் சொல்லவல் லாரும்*
*மதியிலர் நெஞ்சினுள் வாடுகின் றாரே.*

தொன்று தொட்டே இவ்வுலகில் கடவுளர் பலர் உளர், அக்கடவுளர் வழிபாட்டுக் கிரியை விதிகள் ஏற்படுத்தி உண்மைப் பொருளை உணரராயினர், துதித்துப் பல தோத்திரப் பாடல்களைப் பாட வல்லாரும் சிவத்தோடு கலந்திருந்து பெறும் உண்மை அறிவைப் பெறாதவராய் உளர், மனத்தினுள் அமைதியின்றி வாடுகின்றார்கள்.

*34.* *சாந்து கமழுங் கவரியின் கந்தம்போல்*
*வேந்தன் அமரர்க் கருளிய மெய்ந்நெறி*
*ஆர்ந்த சுடரன்ன ஆயிர நாமமும்*
*போந்தும் இருந்தும் புகழுகின் றேனே.*

சிவபெருமான் தேவர்க்கு அருளிய உண்மை நெறி, கலவைச் சாந்தில் வீசுகின்ற கத்தூரியின் மணம் போலச் சிவமணம் வீசும், அவ்வுண்மை நெறி செல்ல அருமையான சுடர்போன்ற ஒளியினை நல்கும் அவனது ஆயிரம் திருநாமங்களையும், நடக்கும் போதும் இருக்கும் போதும் எப்போதும் பரவிக்கொண்டிருக்கிறேன்.

*35.* *ஆற்றுகி லாவழி யாகும் இறைவனைப்*
*போற்றுமின் போற்றிப் புகழ்மின் புகழ்ந்திடில்*
*மேற்றிசைக் குங்கிழக் குத்திசை எட்டொடு*
*மாற்றுவன் அப்படி யாட்டவு மாமே.*

பிறர் படைக்காத சன்மார்க்க நெறியில் விளங்கும் சிவனை, போற்றுங்கள், போற்றிப்புகழுங்கள், அவ்வாறு புகழ்ந்தால், ஈசான திக்குக்கும், சிரசில் கிழக்கு முதலாகவுள்ள அஷ்டதள கமலத்தை நிமிரும்படி செய்வன், அவ்வாறு உங்களது ஈசான முகம் விளங்கவும் ஆகும்.

*36.* *அப்பனை நந்தியை ஆரா அமுதினை*
*ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை*
*எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்*
*அப்பரி சீசன் அருள்பெற லாமே.*

உயிருக்கு தந்தையை, இறைவனை, தேவிட்டாத அமுதம் போன்றவனை, தனக்கு ஒப்பிலாதவனை, வேண்டுவோர்க்கு வேண்டியதை ஈயும் வள்ளலை, ஊழியைச் செய்கின்ற முதல்வனை, எவ்வகையாயினும் வழிபடுங்கள், வழிபட்டால், அவ்வகையே இறைவனது அருளைப் பெறலாகும்.

*37.* *நானும்நின் றேத்துவன் நாள்தொறும் நந்தியைத்*
*தானும்நின் றான்தழல் தானொக்கு மேனியன்*
*வானில்நின் றார்மதி போல்உடல் உள்ளுவந்*
*தூனில்நின் றாங்கே உயிர்க்கின்ற வாறே.*

நாள்தோறும் இறைவனை நானும் நிலையாக இருந்து வழிபடுவேன், அக்கினி போன்ற திருமேனியுடைய இறைவனும் வெளிப்பட்டு நின்றான், அவன் வானத்தில் கலைகள் நிறைந்த சந்திரனைப் போல, உடல் இடமாக மகிழ்ந்து, ஊன் பொருந்திய உடலில் சகஸ்ரதள கமலத்தில் பிராணரூபமாய் இருக்கிற விதம் இதுவாகும்.

*38.* *பிதற்றொழி யேன்பெரி யான்அரி யானைப்*
*பிதற்மொழி யேன்பிற வாஉரு வானைப்*
*பிதற்மொழி யேன்எங்கள் பேர்நந்தி தன்னைப்*
*பிதற்மொழி யேன்பெரு மைத்தவன் நானே.*

பெரியவனும் அரியவனும் ஆகிய சிவனைத் தோத்திரம் செய்வதை விட மாட்டேன், ஒரு தாயின் வயிற்றில் பிறவாதவனும் உருவமுடையவனுமாகிய சிவனைத் தோத்திரம் செய்வதை விட மாட்டேன், எங்களுடைய பெருமையான சிவனைத் தோத்திரம் செய்வதை விடமாட்டேன், எப்போதும் தோத்தரித்துக் கொண்டு இருக்கும் நானே பெரிய தவம் செய்தவனாவேன்.

*39.* *வாழ்ந்தவல் லார்மனத் துள்ளூறு சோதியைத்*
*தீர்த்தனை அங்கே திறைக்கின்ற தேவனை*
*ஏத்தியும் எம்பெரு மான் நிறைஞ்சியும்*
*ஆத்தஞ்செய் தீசன் அருள்பெற லாமே.*

வாயாரப் புகழ்ந்து வாழ்த்துவாரது மனத்தினுள் விளங்கும் சோதியும், குற்றங்களைப் போக்கும், தீர்த்தம் போன்றவனும், அவ்வாகாய மண்டலத்தில் வெளிப்படுகின்ற தேவதேவனுமாகிய இறைவனை, துதித்தும்,எம் தலைவனே! என்று வணங்கியும், நேசித்து வந்தால் அவ்விறைவனது அருளைப் பெறுதல் எளிதாகும்.

*40.* *குறைந்தடைந்த தீசன் குரைகழல் நாடும்*
*நிறைந்தடை செம்பொனின் நேரொளி ஒக்கும்*
*மறைஞ்சடஞ் செய்யாது வாழ்த்துவல் லார்க்குப்*
*புறஞ்சடஞ் செய்வான் புகுந்துநின் றானே.*

சீவர்களின் குறையை நினைந்து சென்று இறைவனது ஒலிக்கின்ற திருவடியை நீங்கள் நாடுங்கள், அது பூரணமாகப் பெற்ற சிவந்தபொன் போன்ற ஒளியினை ஒத்திருக்கும், மறைஞ்சு அடம் செய்யாது அத்திருவடியை வணங்குவார்க்கு, உள்ளத்தே புகுந்து வணங்கும் சிவன் உடம்பைப் புறம் என்று உணர்த்துவான்.

*41.* *சினஞ்செய்த நஞ்சுண்ட தேவர் பிரானைப்*
*புனஞ்செய்த நெஞ்சிடைப் போற்றவல் லார்க்குக்*
*கனஞ்செய்த வாள்நுதல் பாகனும் அங்கே*
*இளஞ்செய்த மான்போல் இணங்கிநின் றானே.*

திருப்பாற் கடலில் சீறி எழுந்த நஞ்சை உண்டருளிய மகாதேவனை, திருத்தம் செய்த விளைநிலம் போன்ற மனத்தில் வைத்து வணங்க வல்லார்க்கு, நாத ஒலி காட்டிய (ஒளி பொருந்திய நெற்றியையுடைய) உமையொரு பாகனும், அவர் மனத்தில் பெண்மானைக் கண்ட ஆண் மானைப் போன்று கூடி நின்றான்.

*42.* *போயரன் தன்னைப் புகழ்வார் பெறுவது*
*நாயக னான்முடி செய்தது வேநல்கு*
*மாயகஞ் சூழ்ந்து வரவல்ல ராகிலும்*
*வேயன தோளிக்கு வேந்தொன்றுந் தானே.*

சிவனிடம் அடைக்கலம் புகுந்து தோத்திரம் செய்வார் பெறும் பயனாவது, நான்கு முடிகளையுடைய பிரமன் படைத்தபடியே மீள மீளப் படைக்கும்; மாயையோடு கூடி சம்சாரப் பந்தத்திலும் உழல்பராகிலும், திரட்சியான தோள்களையுடைய உமாதேவிக்கு தலைவனான சிவன் வந்து பொருந்தலாம்.

*43.* *அரனடி சொல்லி அரற்றி அழுது*
*பரனடி நாடியே பாவிப்ப நாளும்*
*உரனடி செய்தங் கொதுங்கூவல் லார்க்கு*
*கிரனடி செய்து நிறைந்துநின் றானே.*

இறைவனது திருவடியைப் புகழ்ந்து பாடி அன்பினால் கசிந்துருகி, இடைவிடாது திருவருளைச் சிந்தித்து, ஞானத்தை நிலைக்கும்படி செய்து அங்கே நிலைத்திருப்பார்க்கு, அவரது மனத்தைச் செம்மை செய்து பூரணமாக நிறைந்திருப்பான்.

*44.* *போற்றிஎன் பார்அம ரர்புனி தன்அடி*
*போற்றிஎன் பார் அசு ரர்புனி தன்அடி*
*போற்றிஎன் பார்மினி தர்புனி தன்அடி*
*போற்றிஎன் அன்புள் பொலியவைத் தேனே.*

தேவர்கள் சுழுமுனையில் விளங்கும் ஏகபாத சிவனை வாழ்க என்று வாழ்த்துவார்கள், அசுரர்கள் அவனை வாழ்க என்ற வாழ்த்துவார்கள், மனிதர்கள் அவன் திருவடி வாழ்க என்று கூறுவார்கள், நான் அவனை வணங்கி என் அன்பினுள் விளங்குமாறு நிலைபெறச் செய்தேன்.

*45.* *விதிவழி அல்லதில் வேலை உலகம்*
*விதிவழி இன்பம் விருத்தமும் இல்லை*
*துதிவழி நித்தலுஞ் சோதிப் பிரானும்*
*பதிவழி காட்டும் பகலவ னாமே.*

கடல் சூழ்ந்த உலகம் இறைவன் விதித்த முறையின்படி நடப்பதன்றி வேறு முறையால் அல்ல, இவ்விதமுறைக்கு நாம் அடையும் போகம் விரோதம் இல்லை, சோதி வடிவான இறைவனும் நாடோறும் துதி வழியாக, வீட்டு நெறியை அளிக்கும் சிவசூரியனாவான்.

*46.* *அந்திவண் ணாஅர னேசிவ னேஎன்று*
*சிந்தைசெய் வண்ணந் திருத்தடி யார்தொழ*
*முந்திவண் ணாமுதல் வாபர னேஎன்று*
*புந்தி வண்ணன்எம் மனம்புகுந் தானே.*

இறைவனையே சித்தித்திருக்கும் வண்ணம் மனம் திருந்திய அடியார்கள், செம்மேனியம்மானே, எப்பொருளுக்கும் இறைவனே, மங்கள வடிவினனே என்று தொழ, பழமையானவனே, முதல்வனே, மேலானவனே என்று நான் தொழ, ஞான சொரூபியாய் எம் மனத்தில் எழுந்தருளியிருந்தான்.

*47.* *மனையுள் இருந்தவர் மாதவர் ஒப்பர்*
*நினைவுள் இருந்தவர் நேசத்துள் நிற்பர்*
*பனையுள் இருந்த பருந்தது போல*
*நினையாத வர்க்கில்லை நின்இன்பம் தானே.*

இல்லறத்திலிருந்து இறைபணி செய்பவர் பெரிய தவத்தையுடையவர்க்கு ஒப்பாவர், இடைவிடாது தியானத்தில் இருப்பவர் இறைவனது அன்பினுள் பொருந்தியிருப்பர், பனை மரத்தில் உள்ள பரந்து உணவெடுக்க வெளியே வரும் நேரத்தைத் தவிர பனையிலே ஒடுங்கியிருப்பது போல, உலகில் ஈடுபடவேண்டிய நேரத்தில் ஈடுபட்டு, மற்ற நேரங்களில் சிவசிந்தனையில் ஈடுபடாதவர்க்கு இறையின்பம் கிட்டாது.

*48.* *அடியார் பரவும் அமரர் பிரானை*
*முடியால் வணங்கி முதல்வனை முன்னிப்*
*படியார் அருளும் பரம்பரன் எந்தை*
*விடியா விளக்கென்று மேவிநின் றேனே.*

அடியார்கள் வணங்கும் தேவதேவனை, என்னுடைய சிரசால் வணங்கி அப்பெருமானை நினைந்து, பூமியிலுள்ளார்க்கு அருளும் மேலானவனாகிய எந்தையை, அணையாத விளக்கு என்று எண்ணிப் பொருந்தியிருந்தேன்.

*49.* *நரைபசு பாசத்து நாதனை உள்ளி*
*உரைபசு பாசத் தொருங்காலம் லார்க்குத்*
*திரைபசு பாவச் செழுங்கடல் நீந்திக்*
*கரைபசு பாசங் கடந்தெய்த லாமே.*

பழமையான சீவன், பாசம் ஆகியவற்றுக்கு நாதனாகிய சிவனை நினைத்து, பசு என்றும் பாசம் என்றும் சொல்லப் பெறுகின்றவற்றின் இயல்பை அறிந்து சிவனோடு ஒன்றுகூட வல்லார்க்கு, அலை போன்று வரும் பசுக்கள் செய்யும் பாவமாகிய கடலை நீந்தி, பசு பாசங்களைக் கடந்து முத்திக் கரையை அடையலாம்.

*50.* *சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான் என்று*
*பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்துநின்*
*றாடுவன் ஆடி அமரர்பி ரான்என்று*
*நாடுவன் நானின் றறிவது தானே.*

இறைவனது திருவடியைச் சிரசில் சூடிக்கொள்வேன். மனத்திலே வைத்துப் போற்றுவேன், தலைவன் என்று பாடுவேன், பல மலர்களை அர்ச்சித்து வணங்கி நின்று கூத்தாடுவேன், அவ்வாறு ஆடி அவனே தேவதேவன் என்று விரும்புவேன். நான் இன்று அவனைப்பற்றி அறிந்து செய்வது இவ்வளவாகும்.

## ௨. வேதச் சிறப்பு

அஃதாவது, வேதத்தின் பெருமை

*51.* *வேதத்தை விட்ட அறம்இல்லை வேதத்தின்*
*ஓதத் தகும்அறம் எல்லாம் உளதர்க்க*
*வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற*
*வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே.*

வேதத்தில் சொல்லப்படாமல் விட்டுப்போன நீதி ஒன்றும் கிடையாது, நாம் ஓதத்தக்க நீதிகள் எல்லாம் வேதத்தில் உள்ளன. அதனால் அனுபூதிமான்கள் தர்க்கவாதத்தை விடுத்து, எல்லாப் பொருளும் நிரம்பிய வேதத்தை ஓதியே முத்தி அடைந்தார்கள்.

*52.* *வேதம் உரைத்தானும் வேதிய னாகிலன்*
*வேதம் உரைத்தானும் வேதா விளங்கிட*
*வேதம் உரைத்தானும் வேதியர் வேள்விக்காய்*
*வேதம் உரைத்தானும் மெய்ப்பொருள் காட்டவே*

வேதங்களை ஓசையளவில் எடுத்தும் படுத்தும் சொல்கின்றவன் அவற்றை அறிந்தவனாகான், வேதத்தை உரைத்த இறைவன் பிரமப்பொருள் விளங்கவும், அவன் அந்தணர் வேள்வி செய்தவன் பொருட்டும், உண்மைப் பொருளை உணர்த்தவும் வேதத்தைக் கூறியருளினான்.

*53.* *இருக்குரு வாம்எழில் வேதந்தி னுள்ளே*
*உருக்குணர் வாயுணர் வேதத்துள் ஓங்கி*
*வெருக்குரு வாகிய வேதியர் சொல்லுங்*
*கருக்குரு வாய்நின்ற கண்ணனு மாமே.*

மந்திர வடிவான அழகிய வேதத்தில், உள்ளத்தை உருக்குகின்ற உணர்வாய் உணரப்படுகின்ற வேதத்தினில் விளங்கி, அச்சத்தை விளைவிக்கும் கம்பீரத் தொனியுடைய வேத மந்திரங்களாய், சூக்கும நிலையில் நின்றவன் முக்கண்ணையுடை சிவபெருமானாவான்.

*54.* *திருநெறி யாவது சித்தசித் தன்றிப்*
*பெருநெறி யாய பிரானை நினைந்து*
*குருநெறி யாஞ்சிவ மாநெறி கூடும்*
*ஒருநெறி ஒன்றாக வேதாந்தம் ஓதுமே*

தெய்வீக நெறியாவது, அறிவு அறியாமையற்ற வீடுபெறாயுள்ள இறைவனை எண்ணி, குருவால் உணர்த்தப்பெறும் நெறியாய்ச் சிவத்தைப் பொருந்தும் ஓர் ஒப்பற்ற நெறியாகும். இந்நெறியினையே சிறப்பாக வேத முடிவான உபநிடதம் கூறும்.

*55.* *ஆறங்க மாய்வரு மாமறை ஓதியைக்*
*கூறங்க மாகக் குணம்பயில் வாரில்லை*
*வேறங்க மாக விளைவுசெய் தப்புறம்*
*பேறங்க மாகப் பெருக்குகின் றாரே.*

ஆறு அங்கங்களாக ஆராயப்பெற்று வரும் வேதத்தை அருளிச் செய்தவனை, உடம்பின் பகுதியாகக் கொண்டு அவனது இயல்பை உணர்வார் இல்லை, தம்மின் வேறான அங்கமாக வைத்து வழிபட்டு, பிறகு தமது இஷ்ட காமியங்களைப் பெருக்கிக் கெடுகின்றார்களே.

*56.* *பாட்டும் ஒலியும் பரக்குங் கணிகையர்*
*ஆட்டும் அறாத அவனியில் மாட்டதார்*
*வேட்டு விருப்பார் விரதமில் லாதவர்*
*ஈட்டும் இடஞ்சென் றிகலலுற் றாரே.*

பாடல்களும் அவற்றுக்கான இசையும், அலைந்து ஆடுகின்ற ஆடல் மகளிரின் ஆட்டமும் நீங்காத உலகில், வேதநெறி காட்டும் உண்மை நெறி நில்லார், வேள்வி செய்யும் விருப்பம் உடையவராய் விரதமில்லாதவராவர், அவர் புறத்தே சென்று மாறுபாடுத்து அழிகின்றனர்.

## 3. ஆகமச் சிறப்பு

அஃதாவது ஆகமத்தின் பெருமை

*57.* *அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்*
*அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்*
*அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்*
*அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே.*

கரிய நிறமுடைய உமாதேவியை இடப்பக்கத்தில் உடையவன், அருளிர் செய்த ஆகமங்கள் இருபத்தெட்டு உள்ளன. வணக்கத்தைச் செய்து பிரணவர் முதல் மகாகாளர் ஈறாக அறுபத்தறுவரும், ஐந்தாவது முகமாகிய ஈசான முகத்திலிருந்து அவற்றின் பொருளைக் கேட்டனராம்.

*58.* *அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்*
*எண்ணில் இருபத்தெண் கோடி நூறா யிரம்*
*விண்ணவா ஈசன் விழுப்பம் உரைத்தனர்*
*எண்ணிநின் றப்பொருள் ஏத்துவன் நானே.*

இறைவன் ஆன்மாக்கள் மீது வைத்த கருணையால் கூறியருளிய ஆகமங்கள், எண்ணுவதற்கு இயலாது இருபத்தெட்டு கோடியே நூறாயிரமாகும், இவற்றின் வழி தேவர்கள் இறைவனது பெருமையைச் சொன்னார்கள். நானும் அவ்வழியைப் பின்பற்றி அப்பொருளை வணங்குகிறேன்.

*59.* *பண்டித ராவார் பதினெட்டுப் பாடையுங்*
*கண்டவர் கூறுங் கருத்தறி வார்என்க*
*பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்*
*அண்ட முதலான் அறஞ்சொன்ன வாறே.*

அறிஞர் என்பவர் பதினெட்டு மொழிகளும் தெரிந்தவர், அத்தகையோர் ஆகமம் கூறும் உண்மையை நன்றாக அறிவர், பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும், அறிஞர்கள் அறிந்த பதினெட்டு மொழிகளும், அண்டங்களுக்கு முதல்வனாகிய சிவன் வெளிப்படுத்திய அறத்தைச் சொல்லுவனவாம்.

*60.* *அண்ணல் அருளால் அருளுந்திவ் யாகமம்*
*விண்ணில் அமரர் தமக்கும் விளங்கரி*
*தெண்ணில் எழுபது கோடிநூ றாயிரம்*
*எண்ணிலும் நீர்மேல் எழுத்தது ஆகுமே.*

இறைவன் கருணையால் அருளிச் செய்த தெய்வத்தன்மை பொருந்திய ஆகமம், வானுலக வாசிகளாகிய தேவர்களுக்கும் அனுபவத்துக்கு வாராதது, அவற்றைக் கணக்கிடின் எழுபதுகோடியே நூறாயிரமாகும், அவ்வாறு கணக்கிட்டு அறிந்தாலும் அனுபவம் இன்றேல் அவை நீரின் மேல் எழுத்துப் போலப் பயன்படாது போகும்.

*61.* *பரனாய்ப் பராபரங் காட்டி உலகில்*
*தரனாய்ச் சிவதன்மந் தானேசொல் காலத்*
*தரனாய் அமரர்கள் அர்ச்சிக்கு நந்தி*
*உரனாகி ஆகமம் ஓங்கிநின் றானே.*

மிக மேன்மையானவனாய், பரஞானம் அபரஞானம் ஆகிய இரண்டையும் அறிவித்து, உலகைத் தாங்குபவனாய், சிவபுண்ணியத்தைத் தான் அருள் செய்யும் போது அரனாய், தேவர்கள் வணங்கி வழிபடும் சிவபெருமான், அறிவாய் ஆகமத்தில் விளங்குகிறான்.

*62.* *சிவமாம் பரத்தினிற் சத்தி சதாசிவம்*
*உவமா மகேசர் உருத்திர தேவர்*
*தவமான் பிரமீசர் தம்மில்தாம் பெற்ற*
*நவஆ கமம்எங்கள் நந்திபெற் றானே.*

சிவமாகிப் பரம்பொருளிடமிருந்து, சத்தியும் சதாசிவமும், மனத்துக்கு உவந்த மகேசர் உருத்திரர் தவத்தைச் செய்த திருமால் பிரமன் ஆகியோர், அவரவர் அறிவில் விளங்கிய ஒன்பது ஆகமங்களும், எங்களது குருநாதனாகிய நந்தியெம் பெருமான் வழி முறையாகப் பெற்றவையாகும்.

*63.* *பெற்றநல் ஆகமங் காரணங் காமிகம்*
*உற்றநல் வீரம் உயர்சிந்தியம் வாதுளம்*
*மற்றவ் வியாமள மாகுங்கா லோத்தரந்*
*துற்றநற் சுப்பிரஞ் சொல்லு மகுடமே.*

குரு பரம்பரையில் பெற்ற ஆகமங்கள், பொருந்திய நல்ல வீரம், உயர்ந்த சிந்தியம் வாதுளம், மேலும் தந்திர சாத்திரமாகிய யாமளம், நன்மையாகும் காலோத்தரம், மேற்கொண்டு ஒழுகவல்ல நல்ல சுப்பிரம் சொல்லத் தகுந்த மகுடம் என்ற ஒன்பதுமாகும்.

*64.* *அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்*
*எண்ணிலி கோடி தொகுத்திடு மாயினும்*
*அண்ணல் அறைந்த அறுவறி யாவிடின*
*எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே.*

இறைவன் அருளால் வந்த சிவாகமங்கள், கணக்கற்ற கோடிகளாகத் தொகுத்துச் சொல்லப் பெற்றிருப்பினும், இறைவன் சொன்ன உண்மைப் பொருளை உணராவிடில், அவை அனைத்தும் நீர்மேல் எழுத்துப்போலப் பயனற்றவையாகும்.

*65.* *மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின்*
*றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து*
*ஆரிய முந்தமி ழும்உட னேசொலிக்*
*காரிகை யார்க்குக் கருணைசெய் தானே.*

மழைக்காலமும் கோடைக்காலமும் பனிக்காலமும் இலயப்பட்டு நின்று, ஏரியும் வறட்சியடைந்திருக்கும் ஊழிக்காலத்து, வடமொழியையும் தமிழ் மொழியையும் ஏக காலத்து உபதேசித்து, சிருட்டி தொடங்குமுன் பராசக்திக்குச் சிவபெருமான் அருள் புரிந்தான்.

66.   *அவிழ்க்கின்ற வாறும் அதுகட்டு மாறும்*
*சிமிட்டலைப் பட்டுயிர் போகின்ற வாறும்*
*தமிழ்ச்சொல் வடசொல் எனும் இவ் விரண்டும்*
*உணர்த்தும் அவனை உணரலுமாமே.*

ஆன்மாக்களைப் பந்தத்தினின்றும் நீக்கும் முறைமையினையும், பந்தத்தில் விடுகின்ற முறைமையினையும், கண் இமைத்தல் ஒழிந்து உயிர் போகின்ற முறைமையினையும், தமிழ்ச் சொல் வடசொல் எனும் ஆகிய இரண்டாலும் உணர்த்தப்பெறுகின்ற சிவனை, உணர முடியுமோ முடியாது.

## 4. குரு பராம்பரியம்

அஃதாவது, குரு மரபு.

67.   *நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்*
*நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி*
*மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்*
*என்றிவர் என்னோ டெண்மரு மாமே.*

திருநந்தி தேவனது அருளைப் பெற்ற குருநாதர்களை ஆராயின், சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்ற நால்வரும், சிவயோக மாமுனிவரும், திருவம்பலத்தில் திருக்கூத்தைத் தரிசித்த பதஞ்சலி, என்னுடன் கூட எட்டுப் பேர்கள் ஆவார்கள்.

68.   *நந்தி அருளாலே நாதனாம் பேர்பெற்றோம்*
*நந்தி அருளாலே மூலனை நாடினோம்*
*நந்தி அருளாவ தென்செயும் நாட்டினில்*
*நந்தி வழிகாட்ட நானிருந் தேனே.*

சிவனது அருளால் குருநாதன் என்ற தகுதியை அடைந்தோம், அவனது அருளாலே மூலாதாரக் சக்கரத்தில் விளங்கும் உத்ரினை நாடினோம், உலகில் சிவனது அருள் எல்லாவற்றையும் செய்யும், அவன் வழிகாட்ட மூலாதாரத்திலிருந்து மேலேறிச் சிரசின் மேல் நிலைபெற்றிருந்தேன்.

69.   *மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்*
*இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்*
*கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனோ*
*டிந்த எழுவரும் என்வழி யாமே.*

திருமந்திரம் உபதேசம் பெற்ற வழிமுறையாவது, மாலாங்கள், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், கட்டுத்தறி போன்று அசையாதிருக்கும் காலாங்கி கஞ்சமலையனோடு ஆகிய இவ்வெழுவரும் என் வழி வந்த மாணாக்கர்களாம்.

70.   *நால்வரும் நாலு திசைக்கொன்று நாதர்கள்*
*நால்வரும் நானா விதப்பொருள் கைக்கொண்டு*
*நால்வரும் நான்பெற்ற தெல்லாம் பெறுகென*
*நால்வரும் தேவராய் நாதரா னார்களே.*

சனகாதி நால்வரும், நான்கு திக்குகளுக்கு ஒரு நாதராய், அந்நால்வரும் தாம் பெற்ற பல்வேறு வகை அனுபவங்களைகொண்டு, அவர் தாம்தாம் பெற்ற அனுபவத்தை பிறர்க்கு எடுத்து அருளி, அந்நால்வர்களும் மேன்மையுடையவராய் குருநாதரானார்கள்.

71.   *மொழிந்தது மூவர்க்கும் நால்வர்க்கும் ஈசன்*
*ஒழிந்த பெருமை இறப்பும் பிறப்புஞ்*
*செழுஞ்சுடர் மூன்றொளி யாகிய தேவன்*
*கழிந்த பெருமையைக் காட்டகி லானே.*

சிவயோக மாமுனி பதஞ்சலி வியாக்கிரபாதர் ஆகிய மூவருக்கும், சனகாதியர் நால்வருக்கும் சிவபெருமான் உபதேசம் செய்தது, இறப்பையும் பிறப்பையும் நீங்கும்படி செய்யும் பெருமையுடைய நெறியாகும், செழுமையான சோம சூரியாக்கினி வடிவான பெருமான், குறைந்த பெருமையைக் கொடுப்பவன் அல்லன்.

72.   *எழுந்துநீர் பெய்யினும் எட்டுத் திசையுஞ்*
*செழுந்தன் நியமங்கள் செய்யுமினென் றண்ணல்*
*கொழுந்தண் பவளக் குளிர்சடை யோடே*
*அழுந்திய நால்வர்க் கருள்புரிந் தானே.*

எட்டுத் திசைகளிலும் பெருமழை பெய்தாலும், வளர்ச்சியைத் தரும் அருள்மிகு கடன்களைச் செய்யுங்கள் என்று, சிவபெருமானது சிறந்த குளிர்ச்சியான பவளம் போலும் சிவந்த சடையிடம், காதல் கொண்டு பொருந்தியிருந்த சனகாதி நால்வருக்கும் அருள் புரிந்தான்.

## 5. திருமூலர் வரலாறு

அஃதாவது ஆசிரியர் வரலாறு

**73.** *நந்தி திருவடி நான்தலை மேற்கொண்டு*
*புந்தியின் உள்ளே புகழ்பெற்ற போற்றிசெய்*
*தந்தி மதிபுனை அரனடி நாள்தொறுஞ்*
*சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற் றேனே.*

என் குருநாதனாகிய நந்தியின் இரு திருவடிகளையும் என் சிரசின்மேல் கொண்டு, அறிவினுள்ளே நிறுத்தி வணக்கம் செய்து, முச்சந்தி வீதியில் பொருந்திய மதி சூடிய சிவபெருமானது திருவடியினை, தினந்தோறும் தியானித்துத் திருமந்திரமாகிய ஆகமத்தைச் சொல்லத் தொடங்குகின்றேன்.

**74.** *செப்புஞ் சிவாகமம் என்னும் அப் பேர்பெற்றும்*
*அப்படி நல்கும் அருள்நந்தி தான்பெற்றுத்*
*தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்*
*ஒப்பில் எழுகோடி யுகம்இருந் தேனே.*

சிவகாமம் கூற வல்லவன் என்னும் அத்தகுதியைப் பெற்றும், அத்தகுதியை அருளும் குரு நாதரின் திருவடியைப் பெற்றும், சிரசின் மேல் குறைவேயில்லாத ஆகாயப் பெருவெளியில் ஒப்பற்ற ஒளி அணுக்களின் அசைவினைத் தரிசித்தபின், ஒப்பில்லாத ஏழு ஆதாரங்களும் விளங்குமாறு பொருந்தியிருந்தேன்.

**75.** *இருந்தவக் காரணங் கேளிந் திரனே*
*பொருந்திய செல்வப் புவனா பதியாம்*
*அருந்தவச் செல்வியைச் சேவித் தடியேன்*
*பரிந்துடன் வந்தனன் பத்தியி னாலே.*

இந்திரனே! இங்ஙனம் ஏழு ஆதாரங்களையும் பொருந்தியிருந்ததற்குரிய காரணத்தைக் கேட்பாயாக, அங்குப் பொருந்திய புவனங்களுக்குத் தலைவியாகிய அருமையான தவத்துக்குரிய செல்வியை, சிதாகாயப் பெருவெளியில் பத்தியினாலே அவளை அடைந்து தரிசித்தபின் நான் அருளுடன் திரும்பினேன்.

**76.** *சதாசிவந் தத்துவம் முத்தமிழ் வேதம்*
*மிதாசனி யாதிருந் தேனின்ற காலம்*
*இதாசனி யாதிருந் தேன்மன நீங்கி*
*உதாசனி யாதுட னேஉணர்ந் தோமால்.*

சாதாக்கியத் தத்துவத்தையும் முத்தமிழ் மொழியையும் வேதத்தையும், பெரிதும் நுகர்த்திருந்தேன், அவ்வாறு அப்பொருள்களை நுகர்ந்த காலத்தில் நன்மையைத் தருவதான உணவுமின்றி இருந்தேன், அதனால் மனம் தெளிந்து பாராமுகமாய் இருந்தமையின் உண்மைப் பொருளை உணர்ந்தேன்.

**77.** *மாலாங்க னேயிங்கு யான்வந்த காரணம்*
*நீலாங்க மேனியள் நேரிழை யாளொடு*
*மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்*
*சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே.*

மாலாங்கனே! இத்தென்திசைக்கு யான் வந்த காரணம் என்னவெனில், நீல நிறமான திருமேனியையும் நேர்மையான அணிகளையுமுடைய சிவகாமி அம்மையோடு, மூலாதாரத்தை இடமாகக் கொண்டு சதாசிவம் முடிய நடித்தருளும் ஐந்தொழிற் கூத்தினது, இயல்பினை விளக்கும் வேதத்தை உலகினர்க்குச் சொல்ல வந்தேன் என்றபடி.

**78.** *நேரிழை யாவாள் நிரதிச யானந்தப்*
*பேருடை யாளென் பிறப்பறுத் தாண்டவள்*
*சீருடை யாள்சிவ னாவடு தண்டுறை*
*சீருடை யாள்பதஞ் சேர்ந்திருந் தேனே.*

நேர்மையான அணிகளையுடைய சத்தி மேலான சிவானந்த வல்லி என்னும் திருநாமம் உடையவள், என்னுடைய பிறவியின் காரணத்தை வேரோடு களைந்து ஆட்கொண்டவள், எல்லையற்ற சிறப்பினை உடையவள், சிவபெருமான் சீவர்களைப் பக்குவம் செய்யும் பொருட்டு எருந்தருளியிருக்கும் வீணாத்தண்டில் பொருந்தியிருப்பவள், அவளது திருவடியைச் சேர்ந்திருந்தேன்.

*79.* *சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்*
*சேர்ந்திருந் தேன்சிவ னாவடு தண்டுறை*
*சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலிற்*
*சேர்ந்திருந் தேன்சிவ நாமங்கள் ஓதியே.*

அர்த்தநாரி (அம்மையப்பர்) வடிவாகவுள்ள இறைவனைப் பொருந்தி வழிபட்டிருந்தேன், சிவன் சீவர்களைப் பக்குவம் செய்யும் வீணாத்தண்டின் முடிவிலுள்ள சகஸ்ரதளத்தில் சேர்ந்திருந்தேன், சிவமாகிய அறிவின் நிழலில் சேர்ந்திருந்தேன், அப்போது சிவனது நாமத்தைச் சிந்தித்திருந்தேன்.

*80.* *இருந்தேன்இக் காயத்தே எண்ணிலி கோடி*
*இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே*
*இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே*
*இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே.*

இவ்வுடம்பினுள் எண்ணற்ற காலம் தங்கியிருந்தேன், இரவும் பகலும் அற்ற சுயம்பிரகாச வெளியில் தங்கியிருந்தேன், தேவர்களும் துதிக்கும்படியான இடத்தில் பொருந்தியிருந்தேன், என் குருநாதராகிய நந்தியின் இரு திருவடிக்கீழ் அமர்ந்திருந்தேன்.

*81.* *பின்னைநின் றென்னே பிறவி பெறுவது*
*முன்னைநன் றாகமுயல்தவம் செய்கிலர்*
*என்னைநன் றாக இறைவன் படைத்தனன்*
*தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே.*

பிற்பால் தயங்கி நின்று ஏன் பிறவியைப் பெறுகிறார்கள்? அவர்கள் முற்பிறவிகளில் நன்றாக முயன்று தவம் செய்யாதவர்களாம் ; (நான் நல்ல தவம் செய்தமையின்) ; தன்னைப் பற்றித் தமிழில் ஆகமம் செய்யும் வண்ணம், எனக்கு நல்ல ஞானத்தை அளித்து இறைவன் பிறவியைக் கொடுத்தருளினான்.

*82.* *ஞானத் தலைவிதன் நந்தி நகர்புக்கு*
*ஊனமில் ஒன்பது கோடி யுகந்தனுள்*
*ஞானப்பா லாட்டி நாதனை அர்ச்சிற்று*
*நானும் இருந்தேன்நற் போதியின் கீழே.*

ஞானத் தலைவியாகவுள்ள சத்தியோடு கூடிய சிவநகர் புகுந்து, ஊனம் ஒன்றில்லாத ஒன்பது முடிவுகளுடன் கூடிய சந்திப்பில், தோத்திரமாகிய அபிடேகத்தைச் செய்து இறைவனைப் பூசித்து, நான் நல்ல அறிவு மயமான சிவனடியின் கீழ் இருந்தேன்.

*83.* *செல்கின்ற வாற்றிற் சிவன்முனி சித்தசன்*
*வெல்கின்ற ஞானத்து மிக்கோர் முனிவராய்ப்*
*பல்கின்ற தேவர் அசுரர்நரர் தம்பால்*
*ஒல்கின்ற வான்வழி யூடுவந் தேனே.*

திருக்கைலாயத்திலிருந்து செல்லுகின்ற வழியில் சிவனை நினைத்து, மன்மதனை வெல்கின்ற ஞானத்தில் மிகுந்த முனிவராக,முப்பத்து முக்கோடி தேவர்கள் அசுரர்கள் மானுடர்கள் ஆகியோர், தம்மிடம் சூக்குமமாயுள்ள விண் வழியாக இவ்வுலகுக்கு யான் வந்தேன்.

*84.* *சித்தத்தின் உள்ளே சிறக்கின்ற நூல்களில்*
*உத்தம மாகவே ஓதிய வேதத்தின்*
*ஒத்த உடலையும் உள்நின்ற உற்பத்தி*
*அத்தன் எனக்கிங் கருளால் அளித்ததே.*

சித்தத்தின் உள்ளத்தின் கண்ணே சிறந்து விளங்குகின்ற நூல்களில், மிகச் சிறந்ததாகச் சொல்லப் பெற்ற வேதத்தின், உடலாகிய சொல்லையும் அவ்வுடலுள் ஒத்திருந்து உற்பத்தியாகின்ற பொருளையும், இறைவன் கருணையால் எனக்கு இங்கு உணர்த்தியருளினான்.

*85.* *நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்*
*வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்*
*ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரந்*
*தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே.*

நான் இறைவனைப் பற்றி நினைந்து அடைந்த இன்பத்தை இவ்வுலகமும் அடைவதாக, ஆகாயத்தை இடமாகக் கொண்ட அறிவு சொரூபமான சிவத்தைப் பற்றிச் சொல்லப்போனால், அது உடலைப் பற்றிய உணர்வாகவுள்ள மந்திரமாகும், அவ்வுணர்வை அடிக்கடி முயன்று பற்றிக் கொண்டால் சிவம் வந்து உங்களிடம் பொருந்திவிடும்.

*86.* *பிறப்பிலி நாதனைப் பேர்நந்தி தன்னைச்*
*சிறப்பொடு வானவர் சென்றுகை கூப்பி*
*மறப்பிலர் நெஞ்சினுள் மந்திர மாலை*
*உறைப்பொடுங் கூடிநின் றோதலு மாமே.*

பிறப்பு இறப்பில்லாத பெருமானை, நந்தி என்னும் திருநாமம் படைத்தவனை,சிறப்புகளோடு ஆகாய மண்டலவாசிகள் கரங்கூப்பித் தொழுது, நெஞ்சினுள் மறவாதவராய் மந்திரமாகிய மாலையால், பத்தியோடு பொருந்தியிருந்து ஓதவும் கூடும்.

*87.* *அங்கியி காமையைத் தானுடல் வைத்தான்*
*எங்குமி காமைவைத் தானுல கேழையுந்*
*தங்கிமி காமைவைத் தான்தமிழ்ச் சாத்திரம்*
*பொங்கி மிகாமையைத் தான்பொருள் தானுமே.*

உடலை அளித்த இறைவன் உடலில் அக்கினியை மிகாமல் அளவுடன் அமைத்தருளினான், பூலோகம் முதலிய ஏழுலங்களையும் அழியாதவாறு அக்கினியை வைத்தான், குழப்பமில்லாது இருக்கத் தமிழாகமமாகிய திருமந்திரத்தை வைத்தான், எல்லாப் பொருளும் இந்நூலின்கண் அடங்குமாறு செய்தான்.

*88.* *அடிமுடி காண்பார் அயன்மால் இருவர்*
*படிகண் டிலர் மீண்டும் பார்மிசைக் கூடி*
*அடிகண் டிலேன் றச்சுதன் சொல்ல*
*முடிகண்டேன் என்றயன் பொய்ம்மொழிந் தானே.*

இறைவனது திருவடியையும் திருமுடியையும் காண்போம் என்று கருதி முயன்ற பிரமனும் திருமாலும் ஆகிய இருவரும், உருவத்தைக் காணாது மீளவும் பூமியில் கூடி, திருவடியைக் காணவில்லை என்று திருமால் கூற, 'திருமுடியைக் கண்டேன்' என்று பிரமன் பொய்யை உரைத்தான்.

*89.* *பெற்றமும் மானும் மழுவும் பிரிவற்ற*
*தற்பரன் கற்பனை யாகுஞ் சராசரத்*
*தற்றமும் நல்கி அடியேன் சிரத்தினில்*
*நற்பத மும்அளித் தான்எங்கள் நந்தியே.*

இடபமும் மானும் மழு ஆயுதமும் பிரிவில்லாது கொண்ட மேலான பரம்பொருளின், கற்பனையாகவுள்ள இவ்வுலகில், எங்களது குருநாதனாகிய நந்தி, ஒழிவினைக் கொடுத்து அடியவன் முடிமீது தன் மேலான திருவடியையும் சூட்டியருளினான்.

*90.* *ஞேயத்தை ஞானத்தை ஞாதுரு வத்தினை*
*மாயத்தை மாமாயை தன்னில் வரும்பரை*
*ஆயத்தை யச்சிவன் தன்னை யாகோசர*
*வீயத்தை முற்றும் விளக்கிவிட் டேனே.*

அறியப்படும் பொருளையும், அறிகின்ற அறிவையும், அறிகின்றவனையும், மாயையின் விவரங்களையும், சுத்தமாயையில் விளங்கும் பரை, ஆதி, இச்சை, ஞானம், கிரியை ஆகிய சத்தியின் கூட்டத்தையும், அவ்வித சத்திகளில் விளங்கும் சிவத்தயும் சொரூப சிவத்தின் பிரபாவத்தையும், ஆகிய முழுவதும் இந்நூலில் விளக்கியுள்ளேன்.

*91.* *விளக்கிப் பரமாகும் மெஞ்ஞானச் சோதி*
*அளப்பில் பெருமையன் ஆனந்த நந்தி*
*துளக்கறும் ஆனந்தக் கூத்தன்சொற் போந்து*
*வளப்பிற் கயிலை வழியில்வந் தேனே.*

அகோசர விந்து நிலையைச் சொல்லப்போனால் அது பரம் என்ற பேருடன் கூடிய அறிவு மயமான சோதியாகும், அவ்வானந்த நந்தி எம்பெருமான் அளவில்லாத பெருமையுடையவன், அசைவற்றிருக்கும் அந்த ஆனந்த நடராஜ மூர்த்தியினது ஆணையின் வண்ணம், சிறப்பு மிக்க திருக்கயிலையினின்றும் இவ்விடம் வந்தேன்.

*92.* *நந்திஅரு ளாலே மூலனை நாடிப்பின்*
*நந்திஅரு ளாலே சதாசிவ னாயினேன்*
*நந்திஅரு ளால்மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன்*
*நந்திஅரு ளாலே நானிருந்தேனே.*

சிவகுருவின் அருளாலே மூலாதராத்திலுள்ள உருத்திரனை நாடி, பின் நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன், சிவகுருவின் அருளால் உண்மையான ஞானத்தைப் பெற்றேன், சிவகுருவின் அருளாலே நான் நிலை பெற்றிருந்தேன்.

*93.* *இருக்கில் இருக்கும் எண்ணிலி கோடி*
*அருக்கின்ற மூலத்துள் அங்கே இருக்கும்*
*அருக்கனும் சோமனும் ஆரழல் வீச*
*உருக்கிய ரோமம் ஒளிவிடும் தானே.*

இருக்குருவான வேதத்தில் மந்திரங்கள் எண்ணற்றவையாக இருக்கும், அவையாவும் சூக்குமமான பிரணவத்தில் அடங்கும், சூக்குமமான பிரணவத்தின் உச்சியில் சூரியனும் சந்திரனும் தங்களுடைய ஒளிகளை ஆத்ம சோதியில் வெளிப்படுத்த, அந்நிலையில் பொன்னொளி போன்ற கிரணங்கள் பிரகாசித்துக்கொண்டிருக்கும்.

*94.* *பிதற்றுகின் றேன்என்றும் பேர்நந்தி தன்னை*
*இயற்றுவன் நெஞ்சத் திரவும் பகலும்*
*முயற்றுவன் ஓங்கொளி வண்ணன்எம் மானை*
*இயற்றிகழ் சோதி இறைவனு மாமே.*

நந்தி என்னும் நாமம் உடையவனது புகழினை எப்போதும் புகழ்ந்துகொண்டிருக்கிறேன். இரவிலும் பகலிலும் அவனை என் நெஞ்சத்தில் வைத்துத் தியானித்திருப்பேன். சுயம்பிரகாசமாய் இருக்கின்றவனும் என் தலைவனுமாகிய இறைவனை அடைய முயலுவேன், அவன் இயல்பாகவே திகழுகின்ற ஒளி வடிவினன் ஆவான்.

## 6. அவையடக்கம்

அவையடக்கம் கூறலாவது, அண்ணலின் பெருமையும் தன் சிறுமையும் கருதி அடக்கமாகக் கூறுக.

*95.* *ஆரறி வார் எங்கள் அண்ணல் பெருமையை*
*யாரறி வார்இந்த அகலும் நீளமும்*
*பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்றநின்*
*வேரறி யாமை விளம்புகின் றேனே.*

எம் சிவபெருமானது பெருமையை அறிவார் யார்? அவனது அகலத்தையும் நீளத்தையும் கொண்ட பரப்பினை யாரே அறிய வல்லார்? தனக்கென நாமமும் உருவமும் இல்லாத பெரிய சுடரினது, வேரினையும் அறியாது அதைப் பற்றிப் பேசுகின்றேன்.

*96.* *பாடவல் லார்நெறி பாட அறிகிலேன்*
*ஆடவல் லார்நெறி ஆட அறிகிலேன்*
*நாடவல் லார்நெறி நாட அறிகிலேன்*
*தேடவல் லார்நெறி தேடகில் லேனே.*

சிவனது புகழைப் பாடுகின்றார் நெறியில் சென்று பாட அறியேன், இனி பக்தி மேலீட்டால் ஆடுகின்றவர் நெறியில் சென்று ஆடவும் அறியேன், போகத்தினால் நாடுகின்றவர் நெறியில் சென்று நாடவும் அறியேன், ஞானத்தால் தத்துவ விசாரணை செய்து ஆராய்கின்றவர் நெறியில் நின்று ஆராயவும் அறியேன்.

*97.* *மன்னிய வாய்மொழி யாலும் மதித்தவர்*
*இன்னிசை உள்ளே எழுகின்ற ஈசனைப்*
*பின்னை உலகம் படைத்த பிரமனும்*
*உன்னும் அவனை உணரலு மாமே.*

நிலைபேறுடைய வேத வாக்கினாலும், ஓதுபவர் ஸ்வரத்தினுள்ளே இனிய நாத ரூபமாக எழுகின்ற ஈசனை, சூக்குமத்திலிருந்து தூல உலகைச் சிருட்டித்த நான்முகனும் எண்ணிக்கொண்டிருக்கும் அப்பெருமானை, நம்மால் உணர முடியுமோ? முடியாது.

*98.* *தத்துவ ஞானம் உரைத்தது தாழ்வரை*
*முத்திக் கிருந்த முனிவருந் தேவரும்*
*இத்துடன் வேறா யிருந்து துதிசெயும்*
*பத்திமை யால்இப் பயனறி யாரே.*

சிவபெருமான் குருவாய் எழுந்தருளி வந்து தத்துவ ஞானத்தை உரைத்தது திருக்கயிலையின் அடிவாரத்திலாகும், வீடுபேற்றினை விரும்பியிருந்த முனிவர்களும் தேவர்களும், இத்தத்துவ ஞானத்தை வேறாக இருந்து ஓதுந்தன்மையால், இதன் பயனை அறியமாட்டாதவராயினார்.

## 7. திருமந்திரத் தொகைச் சிறப்பு

திருமந்திரத் தொகைச்சிறப்பவாது, திருமந்திரப் பாடல்களின் எண்ணிக்கையும் பெருமையுமாம்.

*99. மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்*
*ஞாலம் அறியவே நந்தி அருளது*
*காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்*
*ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே.*

மூலனாகிய நான் உரைத்த மூவாயிரம் தமிழ் மந்திரங்களைக் கொண்ட திருமந்திர மாலை, உலகவர் அறிந்து உய்தி பெறும் பொருட்டே குருநாதனாகிய நந்தியினது அருளால் உரைத்த தாம், உலகவர் காலை எழுந்தவுடன் இதன் பொருள் உணர்ந்து ஓதி வந்தால், உலக நாயகனை அடைந்து இன்புறுவர் அல்லவா?

*100. வைத்த பரிசே வகைவகை நன்னூலின்*
*முத்தி முடிவிது முவா யிரத்திலே*
*புத்திசெய் பூர்வத்து மூவா யிரம்பொது*
*வைத்த சிறப்புத் தருமிலை தானே.*

திருமந்திரமாகிய நல்ல நூலில் வைத்த தன்மை ஒன்பது தந்திர வகையாம், இம்மூவாயிரமும் முடிவான முத்தி நிலையைக் கூறுவது, புத்திபூர்வமாகச் சொன்ன மூவாயிரம், ஆகிய இவைதாம் பொதுவும் சிறப்புமாக அமைந்து ஓதுவார்க்கு நன்மை பயக்கும்.

## 8. குருமட வரலாறு

அஃதாவது மூலன் மரபு உரைத்தல்.

*101. வந்த மடமேழும் மன்னுஞ்சன் மார்க்கத்தின்*
*முந்தி உதிக்கின்ற மூலன் மடவரை*
*தந்திரம் ஒன்பது சார்வுமூ வாயிரம்*
*சுந்தர ஆகமச் சொல்மொழிந் தானே.*

கயிலாய பரம்பரையிலே வந்த ஏழு மடங்களும் சன்மார்க்கத்தைப் போதிப்பனவாம், அவற்றுள்ளே முன்னே தோன்றிய மூலன் மடத்தில் வந்த ஆசிரியர் வரை, வகை செய்யப்பெற்ற ஒன்பது தந்திரங்களையும் அவற்றில் கூறப்பெறும் மூவாயிரம் மந்திரங்களையும் அநுசரிக்கும்படி, அழகிய ஆகமங்களில் சொன்னவற்றை எடுத்துக் கூறினார்.

*102. கலந்தருள் காலாங்கர் தம்பால கோரர்*
*நலத்தரு மாளிகைத் தேவர்நா தாந்தர்*
*புலங்கொள் பரமானந் தர்போக தேவர்*
*நிலந்திகழ் மூலர் நிராமயத் தோரே.*

சிவானந்தத்தில் திளைத்திருக்கும் காலாங்கர் பின்னர் அகோரர், நன்மையைச் செய்கின்ற திருமாளிகைத் தேவர் நாதாந்தர், அறிவு மயமான பரமானந்தர் போகதேவர், உலகில் விளங்கியிருக்கும் திருமூலர் ஆகிய எழுவரும் பிறவி நோயற்ற சித்தர்களாம்.

## 9. திருமூர்த்திகளின் சேட்ட கனிட்ட முறை

அஃதாவது, மும்மூர்த்திகளாகிய பிரமன், விஷ்ணு, உருந்திரன் ஆகியோரது இயல்பு.

*103. அளவில் இளமையும் அந்தமும் ஈறும்*
*அளவியல் காலமும் நாலும் உணரில்*
*தளர்விலன் சங்கரன் தன்னடி யார்சொல்*
*அளவில் பெருமை அரிஅயற் காமே.*

எல்லையில்லாத இளமைப் பருவமம் எல்லையில்லாத அழகும் எல்லையற்ற இறுதியும், அளவு செய்கின்ற காலமும் ஆகிய நான்கையும் நன்கு ஆராயின், ஆன்மாக்களுக்குச் சுகத்தைச் செய்யும் சங்கரன் ஒருவாற்றானும் குறைவு இல்லாதவன், தன் அடியாரால் சொல்லப்பெறும் எல்லையற்ற பெருமையெல்லாம் திருமாலுக்கும் பிரமனுக்கும் ஆகுமோ? ஆகாது.

*104. ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்*
*ஆதிக் கமலத் தலர்மிசை யானுஞ்*
*சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றெனார்*
*பேதித் துலகம் பிணங்குகின் றார்களே.*

மூலாதாரத்திலுள்ள உருத்திரனும், நீலமணி போன்ற வண்ணத்தையுடைய திருமாலும், சிருட்டிக்கக் காரணமாயுள்ள சுவாதிட்டான மலரில் இருக்கும் பிரமனும், ஆராயுமிடத்து இம்மூவரும் தொடர்பினால் ஒருவரே என்று துணியமாட்டாராய், வேறு வேறாகக் கருதி உலகவர் மாறுபட்டுப் பேசுகிறார்களே, என்னே இவரது அறியாமை!

*105. ஈசன் இருக்கும் இருவினைக் கப்புறம்*
*பீசம் உலகில் பெருந்தெய்வ மானது*
*நீசர் அதுஇது என்பர் நினைப்பிலார்*
*தூசு பிடித்தவர் தூரறிந் தார்களே.*

சிவன் இருவினைக்கேற்ப உடம்பினைப் படைத்துக் காத்து அளிக்கும் முத்தேவர் ஆட்சிக்கு அப்புறம் உள்ளான், அம்மூவர் உண்டாவதற்குக் காரணமான மூலப்பொருளாகிய சிவனே உலகில் பெரிய தெய்வமாகும், மாசுடையோர் தெய்வம் அது என்றும் இது என்றும் மயங்குவாராய்ப் பிதற்றுவர். மாசில்லாத தூய்மையுடையோர் மூலமாகிய சிவனே பரம்பொருள் என்று உணர்ந்திருந்தனர்.

*106. சிவன்முதல் மூவரோ டைவர் சிறந்த*
*அவைமுதல் ஆறிரண் டொன்றொடொன் றாகும்*
*அவைமுதல் விந்துவும் நாதமும் ஓங்கச்*
*சவைமுதற் சங்கரன் தன்பெயர் தானே.*

சிவனாதிப் முதல்வன் மூவராகவும் ஐவராகவும் திருச்சிற்றம்பலமான சபையில் சிறந்து விளங்குவான், அச்சபையானது ஆறு ஆதாரங்களும் மகேசுவர சதாசிவம் பொருந்திய இரண்டும் கவிழ்ந்த சகஸ்ரதளம் ஒன்றும் நிமிர்ந்த சகஸ்ரதளம் ஒன்றுமாகப் பத்தாகும். அவற்றில் விந்துவும் நாதமும் விளங்க, அந்நிலையில் சபை முதலாகவுள்ள அவனுக்குச் சங்கரன் என்பது யெராகும்.

*107. பயன்அறிந் தவ்வழி எண்ணும் அளவில்*
*அயனொடு மால்நமக் கன்னியம் இல்லை*
*நயனங்கள் மூன்றுடை நந்தி தமராம்*
*வயனம் பெறுவீர்அவ் வானவ ராலே.*

சீவர்கள் அடையும் பயனை அறிந்து சிந்திக்கும் அளவில், பிரமனும் திருமாலும் சிவனுக்கு வேறானவர் அல்லா, அவர் மூன்று கண்களையுடைய சிவனது வழிநின்று முத்தொழிலைச் செய்பவராம், ஆதலின் அத்தேவரால் மேன்மை அடையுங்கள்.

*108. ஓலகக் சூழ்ந்த உலப்பிலி தேவர்கள்*
*பாலொத்த மேனி பணிந்தடி யேன்தொழ*
*மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் ஒப்புநீ*
*ஞாலத்து நம்மடி நல்கிடென் றானே.*

அழியா தன்மை பெற்ற தேவர்கள் சூழ்ந்துள்ள திருச்சபையில், பால் போன்ற நிறமுடைய பெருமானை நான் வணங்கவும், நீ திருமாலுக்கும் முதல் தொழிலாகிய சிருட்டியைச் செய்யும் பிரமனுக்கும் ஒப்பாவாய், பூவுலகில் போதகாசிரியனாக இருந்து திருவடி ஞானத்தைக் கொடுத்தருள்க என்று அருளினான்.

*109. வானவர் என்றும் மனிதர்இவர் என்றுந்*
*தேனவர் கொன்றைச் சிவனருள் அல்லது*
*தானமர்ந் தோருந் தனித்தெய்வம் மற்றில்லை*
*ஊனமர்ந் தோரை உணர்வது தானே.*

தேவர்கள் என்றும் மனிதர்கள் என்றுமுள்ள இவர்கள், தேன் துளிக்கும் கொன்றை மலரையுடைய சிவனது அருளாலன்றி, தாமே பொருந்தி உணரும் தெய்வம் வேறொன்றும் இல்லை, மூவராகவும் ஐவராகவும் இவர்களின் வேறாகவும் உடலில் விளங்கும் சிவன் ஒருவனே என்பதை அறிவதாகும்.

*110. சோதித்த பேரொளி மூன்றைந் தெனநின்ற*
*ஆதிக்கண் ஆவ தறிகிலர் ஆதர்கள்*
*நீதிக்கண் ஈசன் நெடுமால் அயன்என்று*
*பேதித் தவரைப் பிதற்றுகின் றாரே.*

ஒளி விடுகின்ற பேரொளிப் பிழம்பாகிய சிவன், பிரமன், விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவராகவும், பிரமன் விஷ்ணு உருத்திரன் மகேசுவரன் சதாசிவன் ஆகிய ஐவராகவும் நின்ற தொன்மைக் கோலத்தை அறியாதவராகிய மூடர்கள், முறைமையாக உருத்திரன் திருமால் பிரமன் என்று, வேறு வேறாகக் கருதி அவர்களைப் பேசுகின்றார்களே ! (என்னே அவரது பேதைமை!)

*111.* *பரத்திலே ஒன்றாய்உள் ளாய்ப்புறு மாகி*
*வரத்தினுள் மாயவ னாய்அய னாகித்*
*தரத்தினுள் தான்பல தன்மைய னாகிக்*
*கரத்தினுள் நின்று கழிவுசெய் தானே.*

மேன்மையான நிலையில் ஒப்பற்ற சிவமாய், எல்லாவற்றிலும் உள்ளும் புறம்புமாகி, விருப்பத்தை உண்டாக்குவதில் திருமாலாய்ச் சிருட்டித்தலில் பிரமனாகி, தகுதிக்கேற்ப ஒருவனே பலப்பல தேவராக, தான் விளங்காதவாறு மறைவாக உருத்திரனாக நின்று சங்காரத் தொழிலையும் செய்வான்.

*112.* *தானொரு கூறு சதாசிவன் எம்இறை*
*வானொரு கூறு மருவியும் அங்குளான்*
*கோனொரு கூறுடல் உள்நின் றுயிர்க்கின்ற*
*தானொரு கூறு சலமய னாமே.*

சிவபிரம்பொருளின் ஒரு கூறாகிய சதாசிவனாகிய எம் தலைவன், ஆகாயக் கூற்றில் பொருந்தி எல்லாத் தத்துவங்களிலும் ஊடுருவியும் வேறாயும் உள்ளான், அவனே உடலுள் பிராண ரூபமாகவுள்ள தலைவனாவான், அவனது மற்றொரு கூறு ஸ்பந்த ரூபமாக உள்ளது.

## முதல் மந்திரம்

## 1. உபதேசம்

குரு, சீடனுக்குக் கூறும் வாசகம் உபதேசமாகும். குரு உபதேசத்தால் அருட்கண் விழிப்படையும் என்க.

*113.* *விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு*
*தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து*
*உண்ணின் றுக்கியொ ரொப்பிலா ஆனந்தக்*
*கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே.*

பரமாகாயத்தினின்று இறங்கி, ஆன்மாக்களின் விளைக்கேற்பத் திருமேனி தாங்கி, குளிர்ச்சி பொருந்திய தனது திருவடியை ஆன்மாக்களுக்குப் பாதுகாவலாக அமைத்து, உள்ளேயிருந்து ஊன், ஒப்பு ஒன்றுமில்லாத ஆனந்தத்தைக் கண்ணில் நின்று காட்டி, பாசத்தை நீக்கியருளினான்.

*114.* *களிம்பறுத் தான்எங்கள் கண்ணுதல் நந்தி*
*களிம்பறுத் தான்அருட் கண்விழிப் பித்துக்*
*களிம்பணு கார கதிரொளி காட்டிப்*
*பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே.*

எங்களது நெற்றிக்கண்ணுடைய சிவபெருமான் ஆணவம் முதலிய பாசத்தை நீக்கியருளினான், தனது அருட்சத்தியைப் பதிய வைத்துப் பாசத்தைப் போக்கியருளினான், மேலும் பாச இருள் வந்தடைய வண்ணம் சிவசூரியனை உதிப்பித்து, நந்தியெம்பெருமான் பளிங்கு போன்ற சீவனில் பவளம் போன்ற செந்நிறமான சோதியைப் பதிப்பித்தருளினான்.

*115.* *பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்*
*பதியினைப் போற்பசு பாசம் அனாதி*
*பதியினைச் சென்றணு காப்பசு பாசம்*
*பதியணு கிற்பசு பாசம் நிலாவே.*

சிவன் என்றும், சீவன் என்றும் தளை என்றும் சொல்லப்பெறும் முப்பொருள்களில், சிவனைப் போன்று சீவனும் தளையும் மிகவும் தொன்மையானவை, சீவத் தன்மையும் தளை அல்லது பந்தமும் சிவனைச் சென்றடையா, சிவன் சீவனிடம் விளங்கினால் பசுத் தன்மையும் பந்தமும் நீங்கிவிடும்.

*116.* *வேயின் எழுங்கனல் போலேஇம் மெய்யெனுங்*
*கோயி லிருந்து குடி கொண்ட கோன்நந்தி*
*தாயினும் மும்மலம் மாற்றித் தயாஎன்னுந்*
*தோயம தாய்எழுஞ் சூரிய னாமே.*

மூங்கிலில் இருந்து தானே தோன்றும் தீயைப் போன்று, இவ்வுடம்பாகிய கோயிலில் கூடியிருக்கின்ற தலைவனாகிய நந்தி, தாய், சேயினது அழுக்கை மாற்றுவது போன்று, சீவர்களது மும்மலங்களாகிய அழுக்கினைப் போக்கி, கருணையாகிய கடலினின்றும் உதிக்கின்ற சூரியனாகும்.

*117.* *சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே*
*சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுட்டிடா*
*சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்*
*ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே.*

சீவனும் சீவனை மறைத்துள்ள பாசமும் சூரியகாந்தக கல்லும் அதனைச் சுற்றியுள்ள பஞ்சம போலாம், சூரிய காந்தக்கல் அதனைச் சூழ்ந்துள்ள பஞ்சைக் சுடாது. சூரிய காந்தக்கல் சூரியன் முன்னே பஞ்சைச் சுட்டு எரிப்பது போல, சீவனது அறிவு, குருவின் முன் பாசத்தைச் சுட்டெரிக்கும் தன்மையைப் பெறும் என்க.

*118.* *மலங்களைந் தாமென மாற்றி அருளித்*
*தலங்களைந் தானற் சதாசிவ மான*
*புலங்களைந் தானப் பொதுவினுள் நந்தி*
*நலங்களைந் தானுள் நயந்தான் அறிந்தே.*

ஐம்மண்டலங்களை இயக்கும் நல்ல சதாசிவன் முதலான ஐவரால், சிவனுக்கு அமைந்த ஐம்மலப் பாசமானவற்றைக் கெடுமாறு செய்து, சிதாகாயப் பெருவெளியில் நடிக்கும் நந்தியெம்பெருமான் மனம் புறத்தே சென்று பற்றும் விஷயங்களை அறுத்தருளினான், உயிர்க்குயிராய் விரும்பி எழுந்தருளியிருக்கும் பெருமான் அகத்தேயுள்ள விஷய வாசனைகளையும் அறிந்து போக்கியருளினான்.

*119.* *அறிவைம் புலனுட னேநான்ற தாகி*
*நெறியறி யாதுற்ற நீராழம் போல*
*அறிவறி வுள்ளே அழிந்தது போல*
*குறியறி விப்பான் குருபர னாமே.*

சீவ அறிவு ஐம்புலன்களுடன் கூடியதாய், வழி அறியாது வெள்ளத்தில் அகப்பட்டது போல் மயங்கி நிற்கும், ஆனால் சிற்றறிவு பேரறிவிற் சென்று அடங்கியது போல, குருபரனாகியவன் தெளிவினை நல்கி வழியைக் காட்டி அழைத்துச் செல்வான்.

*120.* *ஆமேவு பால்நீர் பிரிக்கின்ற அன்னம்போல்*
*தாமே தனிமன்றில் தன்னந் தனிநித்தந்*
*தீமேவு பலகர ணங்களுள் உற்றன*
*தாமேழ் பிற்பெரி சார்ந்தவித் தாமே.*

பசுவின் பாலினிடமிருந்து நீரைப் பிரிக்கின்ற அன்னப் பறவை போல, சிதாகாயப் பெருவெளியில் ஆடுகின்ற அம்பலவனது ஒப்பற்ற ஆட்டமே சீவர்களிடமிருந்து வினையைப் பிரித்துவிடும். அதனால் தீமை காரணமாகக் கருவி கரணங்களில் பொருந்திய பாவபுண்ணியம் பயன் தாரா என்க.

*121.* *வித்தைக் கெடுத்து வியாக்கிரத் தேமிகச்*
*சுத்தத் துரியம் பிறந்து துடக்கற*
*ஒத்துப் புலனுயிர் ஒன்றாய் உடம்பொடு*
*செத்திட் டிருப்பர் சிவயோகி யார்களே.*

முற்கூறியவாறு பிறவிக்குக் காரணமான கண்மத்தை அழித்து மேல் நிலை எய்த, விழிப்பு நிலையிலேயே தூய்மையான துரிய நிலை எய்திப் பந்தங்கள் நீங்க, புலன், உயிர்வழி நின்று ஏகமாய், சிவயோகியார்கள் உடலில் அறிவும் செயலுமின்றி இருப்பார்கள்.

*122.* *சிவயோக மாவது சித்தசித் தென்று*
*தவயோகத் துன்புக்குத் தன்னொளி தானாய்*
*அவயோகஞ் சாரா தவன்பதி போக*
*நவயோக நந்தி நமக்களித் தானே.*

சிவயோகம் என்பது, சித்துப் பொருள்கள் இவை சடப்பொருள்கள் இவை என்று விவேகத்தினால் அறிந்து, சிரசால் சென்றடையும் சிவராஜயோகத்தை அறிந்து அங்குக் காணும் சிவபொளியுள் புகுந்து நின்று, வேறு வகையான தீமை தரும் யோகத்தை மேற்கொள்ளாது அவனுடைய பதியாகிய பரமாகாய மண்டலத்தில் நின்று உய்யும்படியாக, தோழமை நெறியை நந்தியெம் பெருமான் நமக்கு அளிந்தருளினான்.

*123.* *அளித்தான் உலகெங்குந் தானான உண்மை*
*அளித்தான் அமரர் அறியா உலகம்*
*அளித்தான் திருமன்றுள் ஆடுந் திருத்தான்*
*அளித்தான் பேரின்பத் தருள்வெளி தானே.*

உலகமெல்லாம் சிவமாகவே இருக்கின்ற உண்மையை உணர்த்தியருளினன், தேவர்களும் அறிய முடியாத இன்ப உலகை எமக்கு வழங்கியருளினான், பரமாகாய வெளியில் திருநடனம் புரிகின்ற திருவடிவயை எமக்குச் சூட்டியருளினான், பேரின்ப நிலையமாகிய அருள் வெளியையும் வழங்கியருளினான்.

*124.* *வெளியில் வெளிபோய் விரவிய வாறும்*
*அளியில் அளிபோய் அடங்கிய வாறும்*
*ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறுந்*
*தெளியும் அவரே சிவசித்தர் தாமே.*

சிவன் விளங்கும் சிதாகாயப் பெருவெளியில் ஆகாயமயனான ஆன்மா கலக்கின்ற விதமும், சிவனது இச்சையில் ஆன்மாவினது இச்சை அடங்கிய விதமும், சிவ ஒளியில் ஆன்மவொளி ஒடுங்கிய விதமும், அறிவில் தெளிந்து கண்டவரே சிவ சித்தராவார்.

*125.* *சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தோர்*
*சத்தமுஞ் சந்த முடிவுந்தம் முன்கொண்டோர்*
*நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர*
*மூத்தர்தம் முத்தி முதல்முப்பத் தாறே.*

சித்தர்கள் சிவலோகத்தில் பெறும் பேரின்பத்தை இங்கேயே சமாதி நிலையில் பெறுவார்கள், நாதத்தையும் நாத முடிவாகிய நாதாந்தத்தையும் தம்முள்ளேயே தரிசிப்பார்கள், அவர்கள் அழிவற்றவராய்க் குற்றமற்றவராய்த் தூய்மையான இன்பத்தில் உறைபவராவர், அவ்வாறான மேல் நிலையிலுள்ள சித்தர்களுக்கு முத்திக்கு வழியாகவுள்ளது முப்பத்தாறு தத்துவங்களாகும்.

*126.* *மூப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்*
*ஒப்பிலா ஆனந்தத் துள்ளொளி புக்குச்*
*செப்ப அரிய சிவங்கண்டு தான்தெளிந்*
*தப்பரி சாக அமர்ந்திருந் தாரே.*

ஆகமங்கள் கூறும் முப்பத்தாறு தத்துவங்களையே முத்தியை அடைவதற்குரிய ஏணியாகக் கொண்டு, நிகரில்லாத சிவானந்தத்தைத் தரும் ஒளியில் புகுந்து, வாக்கினால் கூறுவதற்கு முடியாத பெருமையுடைய சிவத்தைத் தரிசித்துத் தன்னுண்மையை உணர்ந்து, சித்தர்கள் சிவமாகவே விளங்கியிருந்தனர்.

*127.* *இருந்தார் சிவமாகி எங்குந் தாமாகி*
*இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி*
*இருந்தார் மூக்காலத் தியல்பைக் குறித்தங்*
*கிருந்தார் இழவுலந் தெய்திய சோம்பே.*

சிவசித்தர்கள் சிவமாந்தன்மை எய்தி எங்கும் நீக்கமற நிறைந்து இருப்பர், எல்லாம் சிவன் செயல் என்று யாவற்றையும் தரிசித்துக் கொண்டு இருப்பர், மூன்று காலங்களின் தன்மைகளை உணர்ந்து இருப்பர், அவர்கள் தங்களுக்கென ஒரு செயலின்றி இருப்பர்.

*128.* *சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே*
*சோம்பர் கிடப்பதுஞ் சுத்த வெளியிலே*
*சோம்பர் உணர்வு கருதி முடிந்திடஞ்*
*சோம்பர் கண்டாரச் சுருதிக்கண் தூக்கமே.*

ஆன்மகத்து பெற்ற சித்தர்கள் பராகாயத்திலே பொருந்தியிருப்பர், அவர்கள் அவ்வெளியிலே தம் செயலற்றுக்கிடப்பர், அவர்களது உணர்வு வியாபித்திருக்கும் இடம் நாத முடிவான நாதாந்த நிலையாகும், அச்சித்தர்கள் நாதத்தைக் கவனித்துக் கொண்டு யோக நித்திரை செய்வர்.

*129.* *தூங்கிக்கண் டார்சிவ லோகமும் தம்உள்ளே*
*தூங்கிக்கண் டார்சிவ யோகமும் தம்உள்ளே*
*தூங்கிக்கண் டார்சிவ போகமும் தம்உள்ளே*
*தூங்கிக்கண் டார்நிலை சொல்வதெவ் வாறே.*

நாதாந்தம் எய்திய சித்தர்கள் சிவலோகத்தைத் தம்முள்ளே யோக நித்திரையில் கண்டவராவர், அவ்வாறு நித்திரையில் உள்ளனர் தம்முள்ளே சிவனோடு பொருந்தியிருப்பவராவர், அவரே சிவபோகமாகிய பேரின்பத்தைத் தம்முள்ளே அனுபவிப்பவராவர், அவர்களது நிலையை அனுபவமில்லாதவர் சொல்வது எங்ஙனம்?

*130.* *எவ்வாறு காண்பான் அறிவு தனக்கெல்லை*
*அவ்வா றருட்செய்வன் ஆதியரசன் தானும்*
*ஒவ்வாத மன்றுள் உமைகாண ஆடிடுஞ்*
*செவ்வானிற் செய்ய செழுஞ்சுடா மாணிக்கமே.*

அறிவுக்கு எல்லையாகவுள்ள சிவனை எம்முறையில் 'அணுகிறார்களோ', அம்முறையில் அவனும் இறங்கி வந்து அணுகுவார்க்கு அருள் புரிவான், அப்பழமையான சிவபெருமானும் உவமையில்லாத சபையில் உமையம்மையாகிய சத்தி காண ஆடுகின்றவன், அவன் செவ்வானத்தைக் காட்டிலும் மிக்க செம்மையான ஒளியை வீசுகின்ற மாணிக்கமாவான்.

*131.* *மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்*
*மாணிக்கத் துள்ளே மரகத மாடமாய்*
*ஆணிப்பொன் மன்றில் ஆடுந் திருக்கூத்தைப்*
*பேணித் தொழுதென்ன பேறுபெற் றாரே.*

மாணிக்கம் போன்ற செவ்வொளியினூடே மரகதம் போன்ற பச்சை ஒளியாய், அச்செவ்வொளியுள் விளங்கும் பச்சை நிறமே மண்டபமாய், மாற்றுக் குறையாத பசும்பொன் பொருந்திய பரமாகாயத்தில் ஆடுகின்ற நடனத்தை, போற்றி வணங்கி எத்தகைய பெருமையினைச் சிவயோகியர் அடைந்தனர்.

*132.* *பெற்றார் உலகிற் பிரியாப் பெருநெறி*
*பெற்றார் உலகிற் பிறவாப் பெரும்பயன்*
*பெற்றார் அம் மன்றிற் பிரியாப் பெரும்பேறு*
*பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே*

பொன்னொளியில் திகழ்கின்ற சிவயோகியர் உலகை விட்டுப் பிரிந்து செல்லாது உலகில் நின்று உலகவர்க்கு உதவுவதையே கொள்கையாகப் பெற்றனர், உலகிலிருந்து உலக சேவை செய்வாராயினும் பந்தமின்றிச் செய்வதால் பிறவிக்கு வாராத பெரும்பயன் பெற்றனர், இத்தகையோர் ஆனந்தக் கூத்தனது திருவடியில் அகலாது நிற்கும் பெரும் வாய்ப்பினை உடையவராவர், இவர்கள் அருவத்தில் இருக்கின்றமையின் உலகவரோடு பேசித் திருந்தாது அவரது மனமண்டலத்தில் பொருந்தி அறிவுறுத்துபவராவார்.

*133.* *பெருமை சிறுமை அறிந்தெம் பிரான்போல்*
*அருமை எளிமை அறிந்தறி வாரார்*
*ஒருமையுள் ஆமைபோல் உள்ளைந் தடக்கி*
*இருமையும் கேட்டிருந் தார்புரை அற்றே.*

எம் சிவபிரானைப் போன்று அண்டத்திலும் அணுவிலும் நிறைந்து, அவற்றின் அருமையையும் எளிமையையும் ஒருசேர உணர்ந்து அறிபவர் ஆர்? அச்சாதகர் மன ஒருமைப்பாட்டுடன் ஆமையைப் போல ஐம்பொறிகளையும் புறத்தே செல்லாது உள்ளுக்கு இழுத்துக்கொண்டு பெருமை சிறுமையாகிய இரண்டையும் குற்றமின்றிச் சாதகர்கள் உணர்ந்திருந்தார்கள்.

*134.* *புரைஅற்ற பாலினுள் நெய்கலந் தாற்போல்*
*திரைஅற்ற சிந்தைநல் ஆரியன் செப்பும்*
*உரையற் றுணர்வோர் உடம்பிங் கொழிந்தாற்*
*கரையற்ற சோதி கலந்தசத் தாமே.*

காய்ச்சிப் புரை குத்தாத பாலினுள் நெய் எங்கும் நிறைந்திருத்தல் போல, எண்ண அலைகள் இல்லாத மனத்தில் நீக்கமற நிறைந்திருக்கும் நல்ல ஆசிரியன், கூறும் உபதேச மொழியை ஆன்ம அறிவு கெட்டு உணர்வோர், தூல உடம்பை இவ்வுலகில், எல்லைக்குட்படாத அகண்ட சோதியுடன் பொருந்தி அவர்கள் சத்தாவார் (சிவமாவர்).

*135.* *சத்தமுதல் ஐந்துந் தன்வழித் தான்சாரில்*
*சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ*
*சுத்த வெளியிற் சுடரிற் சுடர்சேரும்*
*அத்தம் இதுகுறித் தாண்டுகொள் அப்பிலே.*

அறிவற்ற தத்துவங்களான சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தமாகிய தன் மாத்திரைகள் ஐந்தும் தோன்றிய முறையே அறிவற்ற அகங்காரத்தில் ஒடுங்க, அறிவுமயமான ஆன்மாவுக்கு அறிவு மயமான சிவனைத் தவிர ஒடுங்குவதற்குரிய இடம் வேறு உள்ளதா? பரமாகாய வெளியில் விளங்கும் சிவவொளியோடு ஆன்மவொளி பொருந்தும், ஆதலால், என்னைப் பொருளாகக் கொண்டு இத்தன்மை கருதி அருள்நீரால் ஆட்கொள்வாயாக.

*136.* *அப்பினில் கூர்மை ஆதித்தன் வெம்மையால்*
*உப்பெனப் பேர்பெற் றுருச் செய்த அவ்வுரு*
*அப்பினிற் கூடிய தொன்றாரு மாறுபோற்*
*செப்பினிற் சீவன் சிவத்துள் அடங்குமே.*

கடல் நீரிலுள்ள உப்புத்தன்மையானது சூரிய வெப்பத்தால், உப்பென்று பெயர் பெற்று உப்புக் கல்லாக மாறிய அவ்வுருவம், மீண்டும் நீரில் சேர்ந்து அவ்வுருவம் கரைந்து நீராக மாறுவது போல், சொல்லுமிடத்து சீவன் சிவத்துள் அடங்கியிருக்கும்.

*137.* *அடங்குபேரண்டத் தணுஅண்டஞ் சென்றங்*
*கிடங்கொண்ட தில்லை இதுவன்றி வேறுண்டோ*
*கடந்தொறும் நின்ற உயிர்கரை காணில்*
*திடம்பெற நின்றான் திருவடி தானே.*

எல்லாவற்றையும் கொள்ளுகின்ற இறைவனது எல்லையற்ற பரப்பினுள், சீவனது எல்லையான அண்டகோசம் சென்று பொருந்தியுள்ளது, இவ்வாறு பேரண்டத்தில் சீவனது அண்டகோசம் அடங்குவதேயன்றிப் பிறிதோர் இடம் உண்டோ இல்லை, உடம்புகள் தோறும் நின்ற உயிர்கள் தாம் சேரும் இடத்தை ஆராயின், எல்லாவற்றுக்கும் ஆதாரமாகவுள்ள இறைவனது திருவடியேயாகும்.

*138.* *திருவடி யேசிவ மாவது தேரில்*
*திருவடி யேசி லோகஞ்சிந் திக்கில்*
*திருவடி யேசெல் கதியது செப்பில்*
*திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே.*

ஆராயின் ஒளியான திருவடியே சிவமாம், எண்ணிப்பார்க்கின் அவ்வொளியே சிவன் உறைகின்ற உலகம், அதனைச் சொல்லப் புகின் அவ்வொளியே சிவனை அடைவதற்குரிய நெறியாகும், அகநோக்குடையார்க்கு ஒளியே புகலிடமாகும்.

*139.* *தெளிவு குருவில் திருமேனி காண்டல்*
*தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்*
*தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்*
*தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே.*

சிவகுருவைச் சோதிப்பிழம்பாகச் சிரசின் மேல் காணுதல் தெளிவினைத் தரும், அக்குருநாதனின் திருநாமமாகிய அஞ்செழுத்தைச் செபித்தல் தெளிவினை நல்கும், அக்குருவினது உபதேச மொழியை அஃதாவது நாதத்தைக் கேட்பது தெளிவை உண்டாக்கும், இனி, சிவகுருவினது ஒளியான திருமேனியை இடைவிடாது நினைத்தல் மிக்க தெளிவினைத் தருவதாகும்.

*140.* *தானே புலன்ஐந்துந் தன்வச மாயிடும்*
*தானே புலன்ஐந்துந் தன்வசம் போயிடுந்*
*தானே புலன்ஐந்துந் தன்னில் மடைமாறும்*
*தானே தனித்தெம் பிரான்தனைச் சந்தித்தே.*

ஆன்மா தானே தத்துவங்களை விட்டு இறைவனைத் தனியே சந்திக்கும் பேறு பெற்றால், சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் ஆகிய ஐம்புலன்களின் வழி ஓடும் மனம் ஆன்மாவின் வசமாகிவிடும், அவ்விஷய சுகங்களின் இயல்பு கெட்டுவிடும், அப்புலன்களே ஆன்மாவை இறைவன்வழி நிற்கச் செய்யும்.

*141.* *சந்திப் பதுநந்தி தன்திருத் தாளிணை*
*சிந்திப் பதுநந்தி செய்ய திருமேனி*
*வந்திப் பதுநந்தி நாமம்என் வாய்மையாற்*
*புந்திக்குள் நிற்பது நந்திபொற் போதமே.*

இடைவிடாமல் கூடுவது சிவனது திருவடி, சிந்திப்பது அவனது சிவந்த திருமேனி, நாவினால் தோத்தரித்து வணங்குவது அவனது திருநாமம், என்னுடைய அறிவில் விளங்குவது சிவனது திருவடி ஞானமாகும்.

*142.* *போதந் தரும்எங்கள் புண்ணிய நந்தியைப்*
*போதந் தனில்வைத்துப் புண்ணிய ராயினார்*
*நாதன் நடத்தால் நயனங் களிகூர*
*வேதந் துதித்திடப் போயடைந்தார் விண்ணே.*

மேன்மையான ஞானத்தை அளிக்கும் அறமே வடிவான சிவபெருமானை, அறிவினில் வைத்து எண்ணிப் புண்ணியம் மிக்கோர், நாதனது நடத்தைக் கண்கள் களிகூரக் கண்டு, நாதம் முழுங்கப் பரகாய வெளியில் விளங்கியிருந்தனர்.

## ௨. யாக்கை நிலையாமை

யாக்கை நிலையாமையாவது, உடம்பினது நிலையாமை, திருவள்ளுவர் போன்று நிலையாமை கூறிப் பின் அறம் கூறுவார் ஆசிரியர்.

*143.* *மண்ணொன்று கண்டீர் இருவினைப் பாத்திரம்*
*திண்ணென் றிருந்தது தீயினைச் சேர்ந்தது*
*விண்ணின்று நீர்விழின் மீண்டுமன் ணாவபோல்*
*எண்ணின்ற மாந்தர் இறக்கின்ற வாறே.*

மாயையாகிய மண் ஒன்றுள்ளது, அதனின்றும் தோன்றியது இரு வினையால் விளைந்த உடம்பாகிய பாத்திரம், அப்பாத்திரம் சுடப்பட்டபோது வலிமையாகக் காணப்பட்டிருந்தது, சுடப்படாத பாண்டம் ஆகாயத்திலிருந்து மழைநீர் பெய்தபோது கரைந்து மண்ணாவது போல, எண்ணற்ற மக்கள் உடம்பழிந்து கெடுகின்றனர்.

*144.* *பண்டம் பெய்கூரை பழகி விழுந்தக்கால்*
*உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செலார்*
*கொண்ட விரதமும் ஞானமும் அல்லது*
*மண்டி அவருடன் வழிநட வாதே.*

வினைபோகங்களை அளவிட்டு வைக்கப்பட்ட உடம்பு வினைபோகங்களை அனுபவித்து நீங்கியபின், சுகபோகங்களை உடனிருந்து அனுபவித்த மனைவியும் மக்களும் கூட வரமாட்டார், உயிரோடு வாழ்ந்த காலத்துக் கடைப்பிடித்த விரதத்தின் பயனும் ஞானமும் அன்றி, வேறு எவையும் இறந்தோருடன் கூடச் செல்வது இல்லை.

*145.* *ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்*
*பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்*
*சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு*
*நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.*

உடல் விழுந்தபின் ஊரார் எல்லாம் ஒன்றுகூடி ஓலமிட்டு அழுது, அது வரையிலுள்ள பெயரை மாற்றிப் பிணம் என்ற பெயரைச் சூட்டி, தூதுவளை நிறைந்த சுடுகாட்டில் கொண்டுபோய்க் கொளுத்திவிட்டு, இவ்வண்ணம் ஒருவர் இருந்தார் என்ற எண்ணமின்றி நீரினில் முழுகிவிட்டு நீங்கினார்கள்.

*146.* *காலும் இரண்டு முகட்டல கொன்றுள*
*பாலுள் பருங்கழி முப்பத்தி ரண்டுள*
*மேலுள கூரை பிரியும் பிரிந்தால் முன்*
*போலுயிர் மீளப் புக அறி யாதே.*

உடம்பாகிய வீட்டுக்குக் கால்கள் இரண்டு, உச்சி உத்தரமாகிய முதுகுத்தண்டு ஒன்றுள்ளது, பக்கத்தில் போடப்பட்ட விலா எலும்பாகிய சாற்றுக்கழிகள் முப்பத்திரண்டுள்ளன, இவையெல்லாம் மூடப்பெற்ற தசையாகிய கூரை ஒரு காலத்தில் பிரியும், பிரிந்தால் உயிர் அதனுள் முன்போல் புக அறியாது.

*147.* *சீக்கை விளைந்தது செய்வினை மூட்டிற்ற*
*ஆக்கை பிரிந்த தலகு பழுத்தது*
*மூக்கினிற் கைவைத்து மூடிட்டுக் கொண்டுபோய்க்*
*காக்கைக் குப்பலி காட்டிய வாறே.*

சுபம் மேலோடியது, பல பிறவிகளில் செய்யப்பட்ட வினைகளின் தொடர்புகள் ஒழிந்தன, உடம்பு நீங்கியது, பழு எலும்பு வலி கெட்டது. மூக்கினில் கைவைத்துப் பார்த்து உயிரியக்கம் இல்லாமையை உணர்ந்து ஆடையால் மூடிக் கொண்டுபோய், காக்கைக்குப் பலியிட்டு இறுதிக் கடனைச் செய்தனர்.

*148.* *அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்*
*மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்*
*இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்*
*கிடக்கப் படுத்தார் கிடந்தொழிற் தாரே.*

நல்ல முறையிலே பக்குவமாகச் சமையல் பண்ணி வைத்தனர், அவ்வாறு சமைத்த அறுசுவை உணவை வீட்டுக்குத் தலைவன் உண்டார், மனைவியோடு குலாவியிருந்தார், இடப்புறம் நெஞ்சம் சிறிது வலிக்கிறது என்று மனைவியிடம் கூறினார், சொன்ன பிறகு கீழே படுத்தவர் அப்படியே கிடந்து இறந்து ஒழிந்தார்.

*149.* *மன்றத்தே நம்பி மாடம் எடுத்தது*
*மன்றத்தே நம்பி சிவிகைபெற் றேறினான்*
*மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினான்*
*சென்றத்தா வென்னத் திரிந்திலன் தானே.*

சிறப்புடைய தலைமகன் மாடி வீடு கட்டி மகிழ்ந்திருந்தான், அவன் பலர் காணப் பல்லக்கில் அமர்ந்து சென்றான், அவன் பொது இடத்தில் இயல்புடைய மூவர்க்கும் புத்தாடை வழங்கினான், உயிர் பிரிந்த பின் மக்கள் அப்பா என்று அழைக்கவும் அவன் மீண்டிலன்.

*150.* *வாசந்தி பேசி மணம்புணர்ந் தப்பதி*
*நேசந் தெவிட்டி நினைப்பொழி வார்பின்னை*
*ஆசந்தி மேல்வைத் தமைய அழுதிட்டுப்*
*பாசந்தீச் சுட்டுப் பலியட்டி னார்களே.*

நிச்சியத்தாம்பூலம் பண்ணித் திருமணம் செய்து கொண்ட அக்கணவனது, காதலும் கசந்து அவரது நினைப்பையும் உரிமை மனைவிய பின்னர் மறந்துவிடுவர், அவர் இறந்த பின் பாடையில் வைத்துப் பொருந்தமாகப் புலம்பி அழுது, பற்றினையும் சுட்டெரித்துப் பிண்டம் போட்டார்களே, என்ன பரிதாபம்.

*151.* *கைவிட்டு நாடிக் கருத்தமிழ்ந் தச்சற*
*நெய்யட்டுச் சோறுண்ணும் ஐவரும் போயினார்*
*மையிட்ட கண்ணாளும் மாடும் இருக்கவே*
*மெய்விட்டுப் போக விடைகொள்ளு மாறே.*

நாடி பார்ப்பவர் இனிய பயனில்லையெனக் கைவிட்டுவிட, நினைவு கெட்டு உயிர்ப்பியக்கம் நீங்க, நெய்யிட்டுப் பிசைந்த சோற்றைச் சுவைக்கும் நாக்கு முதலிய பஞ்சேந்திரியங்கள் செயலழிந்தன, மை பூசிய கண்ணையுடைய மனைவியும் செல்வமும் இவ்வுலகத்திருக்கவே, உடலை விட்டு உயிர் போக விடை கொள்ளும் முறை இதுவாகும்.

*152.* *பந்தல் பிரிந்தது பண்டாரங் கட்டற்ற*
*ஒன்பது வாசலும் ஒக்க அடைத்தன*
*துன்புறு காலத் துரிசுவர மேன்மேல்*
*அன்புடை யார்கள் அழுதகன் றார்களே.*

உடம்பாகிய பந்தல் பிரிந்தது, உயிர்நிலையாகிய களஞ்சியம் கட்டுவிட்ப போயிற்று, உடம்பிலுள்ள ஒன்பது வாயில்களும் ஒருசேர அடைப்பட்டன, துன்பத்தைத் தருவதாகிய கால முடிவு விரைவாக வந்தடைய, அன்புடைய கற்றத்தாரும் பிறரும் அழுது நம்மை விட்டகன்றார்கள்.

*153.* *நாட்டுக்கு நாயகன் நம்மூர்த் தலைமகன்*
*காட்டுச் சிவிகையொன் றேறிக் கடைமுறை*
*நாட்டார்க்ள பின்செல்ல முன்னே பறைகொட்ட*
*நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே.*

நாட்டுக்குத் தலைவனும் நம்முடைய ஊருக்குத் தலைவனுமாக உள்ளவன், சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லும் பாடையில் இறந்தபின் ஏறிக் கொண்டு, நாட்டிலுள்ளவர் இறுதிக் கடன் செலுத்தப் பின்னே வரவும் பாடைக்கு முன்னே பறை கொட்டவும், நாட்டின் தலைமகன் காட்டுக்குச் செல்கின்ற முறை இதுவாம்.

*154.* *முப்பதும் முப்பதும் முப்பத் தறுவருஞ்*
*செப்ப மதிளுடைக் கோயிலுள் வாழ்பவர்*
*செப்ப மதிளுடைக் கோயில் சிதைந்தபின்*
*ஒப்ப அனைவரும் ஓட்டெடுத் தார்களே.*

தொண்ணூற்றாறு தத்துவங்களும், நன்றாகச் செய்யப்பெற்ற மதில் சூழ்ந்த கோயிலில் வாழ்பவராவர், செம்மையாகச் செய்யப் பெற்ற மதின் சூழ்ந்த கோயில் நிலை கெட்டபின், அக்கோயிலில் வாழ்ந்த அனைவரும் ஓடிப் போயினர்.

*155.* *மதுவூர் குழலியும் மாடும் மனையும்*
*இதுவூர் ஒழிய இதணம் தேறிப்*
*பொதுவூர் புறஞ்சுடு காடது நோக்கி*
*மதுவூர வாங்கியே வைத்தகன் றார்களே.*

தேன் பிலிற்றும் மலர்களை அணிந்த கூந்தலையுடைய மனைவியும் செல்வமும் வீடும், இவ்வூரின்கண்ணே தங்கிவிட உயிர் நீக்கிய உடம்பைப் பாடையில் வைத்து, ஊருக்குப் பொதுவாகப் புறத்தேயுள்ள சுடுகாட்டை நோக்கி எடுத்துச் சென்று, மயக்கத்தோடு பாடையினின்றும் எடுத்துச் சிதையில் வைத்துவிட்டுச் சென்றார்கள்.

*156.* *வைச்சகல் வுற்றது கண்டு மனிதர்கள்*
*அச்சக லாதென நாடும் அரும்பொருள்*
*பிச்சது வாய்ப்பின் தொடரவுறு மற்றவர்*
*எச்சக லாநின் றிளைக்கின்ற வாறே.*

மேலே சொன்னவாறு சுடுகாட்டில் வைத்து எல்லோரும் நீங்கியதைக் கண்டும், மக்கள் உயிர் உடலை விட்டு நீங்காது என்று, தாம் தேடும் அருமையான பொருள்களில் மயக்கமுற்று, அதனைத் தேடுவதற்கு அலையும் மக்கள், மேன்மை நீங்க நின்று வருந்துகின்றார்களே!

*157.* *ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரம் மக்களும்*
*ஊர்த்துறைக் காலே ஒழிவர் ஒழிந்தபின்*
*வேர்த்தலை போக்கி விறகிட் டெரிமூட்டி*
*நீர்த்தலை மூழ்குவர் நீதியி லோரே.*

ஆரவாரம் செய்து கொண்டு எழுகின்ற உறவினரும் மனைவியும் மக்களும், ஊருக்குப் புறம்பேயுள்ள நீர்த்துறை வரை வந்து நீங்குவர், அவ்வாறு நீங்கிய பின், வாழ்வுக்கு அடியாகவுள்ள தலையினை மறைத்துப் பின்னர்த் தீயினை மூட்டி, நீரில் தலை முழுகுவார்கள் நீதியில்லாதவர்.

*158.* *வளத்திடை முற்றத்தோர் மாநிலம் முற்றுங்*
*குளத்தின் மண்கொண்டு குயவன் வனைந்தான்*
*குடமுடைந் தால் அவை ஓடென்று வைப்பர்*
*உடலுடைந் தால்இறைப் போதும் வையாரே.*

ஒப்பற்ற உலக முழுவதும், வளப்பமிக்க இடைப்பிரதேசமாகிய முன்னிடத்து, கருப்பையாகிய குளத்தினது சுரோணிதமாகிய மண்ணைக் கொண்டு பிரமனாகிய குயவன் படைத்தலைச் செய்தான், மண்ணாலாகிய குடம் உடையுமாயின் அதன் பகுதியாகிய ஓடானது உதவும் என்று வைத்திருப்பர், உடம்பு என்ற பாத்திரம் உடைந்தால் ஒரு கணபொழுதும் வீட்டில் வைக்க மாட்டார்கள்.

**159.** ***ஐந்து தலைப்பறி யாறுசடையுள***
***சந்தவை முப்பது சார்வு பதினெட்டுப்***
***பந்தலும் ஒன்பது பந்தி பதினைந்து***
***வெந்து கிடந்தது மேலறி யோமே.***

இவ்வுடம்பில் ஐந்து இந்திரியங்களும் ஆறு ஆதாரங்களும் உள்ளன, எலும்பு இணைப்புகள் முப்பது, அவற்றைச் சார்ந்துள்ள பொருத்துக்கள் பதினெட்டு, இவற்றின் மீது போர்த்தப்பெற்ற பந்தலும் ஒன்பது, வரிசையாகவுள்ள எலும்புகள் பதினைந்து, இவையெல்லாம் சேர்ந்த உடம்பு தீயில் வெந்து கிடந்தது, அதற்கு மேல் உயிரின் நிலையை நம்மால் அறிய முடியவில்லை.

**160.** ***அத்திப் பழமும் அறைக்கீரை நல்வித்துங்***
***கொத்தி உலைப்பெய்து கூழட்டு வைத்தனர்***
***அத்திப் பழத்தை அறைக்கீரை வித்துண்ணக்***
***கத்தி எடுத்தவர் காடுபுக் காரே.***

சுரோணிதமாகிய அத்திப்பழத்தையும் சுக்கிலமாகிய அறைக்கீரை வித்தையும், கிளறிக் கருப்பையாகிய உலையிலிட்டுக் கருவாகிய கூழைச் சமைத்தனர், சுரோணிதமாகிய அத்திப் பழத்தைச் சுக்கிலமாகிய அறைக்கீரை வித்து உண்டு சிசுவாய் வளர்ந்து, பின் அழுது சமைந்தவர் இறுதியில் சுடுகாட்டுக்குச் சென்றனரே.

**161.** ***மேலும் முகடில்லை கீழும் வடிம்பில்லை***
***காலும் இரண்டு முகட்டலக் கொன்றுண்டு***
***ஓலையான் மேய்ந்தவ ரூடு வரியாமை***
***வேலையான் மேய்ந்ததோர் வெள்ளித் தனியே.***

உடம்பாகிய வீட்டுக்கு உச்சிக்குவரை இல்லை, கீழே குறடும் இல்லை, ஆனால் இரண்டு கால்கள் உள்ளன, நடுக்கால் ஒன்று உள்ளது, இவ்வாறுள்ள கூரையை ஓலையினால் வேய்ந்தவர் இடையே வரிச்சுக்கழி போட்டுக் கட்டாமல், அழகுபடச் செய்த ஒரு வெண்கோயிலாகும்.

**162.** ***கூடங் கிடந்தது கோலங்கள் இங்கில்லை***
***ஆடும் இலயமும் அற்ற தறுதலும்***
***பாடுகின் றார்சிலர் பண்ணில் அழுதிட்டுத்***
***தேடிய தீயினில் தீயவைத் தார்களே.***

உயிர் நடனம் செய்த உடம்பாகிய கூடம் அப்படியே கிடந்தது, முன் உயிர் இருந்த காலத்துள்ள அழகு இப்போது அவ்வுடம்பில் இல்லை,அசைந்து ஆடிக்கொண்டிருந்த பிராண ஒட்டமும் நின்றது, அவ்வாறு பிராணன் நீங்குதலும் உற்றார் உறவினர் ஒப்பாரி வைத்து அழுகின்றனர், நெருப்பை உண்டாக்கி அதில் உடலைச் சுட்டெரித்து விடுகிறார்கள்.

**163.** ***முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்***
***இட்டது தானிலை ஏதேனும் ஏழைகாள்***
***பட்டது பார்மணம் பன்னிரண் டாண்டினிற்***
***கெட்ட தெழுபதிற் கேடறி யீரே.***

மீன் முட்டையைப் போல் கருப்பையில் பதியும் உடம்பு பத்து மாதங்களில் வெளி வந்தது, இவ்வுடம்பு ஏதாவது விருப்பப்படி அமைந்ததல்ல, அறிவிலிகளே ! பிறந்து பன்னிரண்டு ஆண்டுகளில் அது உலகவாசனை பொருந்தும் இடமாக இருந்தது, எழுபது ஆண்டுகளில் மடிந்தது, இந்நிலையாமையை அறிவீராக.

**164.** ***இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டான்***
***முடிஞ்ச தறியார் முழுங்குவர் மூடர்***
***விடிஞ்சிரு ளாவ தறியா உலகம்***
***படிஞ்சு கிடந்து பதைக்கின்ற வாறே.***

உடம்பாகிய அகல் இருக்க உயிராகிய தீபவொளியைக் காலன் கொண்டு சென்றான், அறிவில்லாதவர்கள் உடம்பு அழியும் உண்மையை அறியாது அரற்றுகின்றனர், பிறப்பாகிய விடிவும் இறப்பாகிய இருளும் மாறி மாறி வரும் என்பதை உலகினர் அறியாது, நிலையற்ற உடம்பை நிலையென்று பற்றிக் கிடந்து வருந்துகின்றனரே.

**165.** ***மடல்விரி கொன்றையன் மாயன் படைத்த***
***உடலும் உயிரும் உருவந் தொழமல்***
***இடர்படர்ந் தேழா நரகிற் கிடப்பர்***
***குடர்பட வெந்தமர் கூப்பிடு மாறே.***

விரிந்த கொன்றை மாலை அணிந்தவனும் மாயைக்கு ஆதாரமானவனுமாகிய சிவன் படைத்த, உடம்பிலும் உயிரிலும் கலந்து விளங்கும் உருவத்தை வணங்காமல், குடர் கிழிய விருப்பம் மிக்க சுற்றத்தார் கதறுமாறு, துன்பம் பெருகி ஏழு வகையான நரகத்தில் வாடிக் கிடப்பர்.

*166.* *குடையுங் குதிரையுங் கொற்றவா ளுங்கொண்*
*டிடையுமக் காலம் இருந்து நடுவே*
*புடையு மனிதனார் போக்கும்அப் போதே*
*அடையும் இடம்வலம் ஆருயி ராமே.*

வெண்கொற்றக் குடையும் குதிரையும் செங்கோலும் கொண்டு, நாற்புறமும் மக்கள் சூழ்ந்து வர நடுவில் செல்லும் போதே, அழிவு உண்டாகும் காலத்தில் அத்தலைவனது பிராணன் இடம் வலமாகச் கழன்று நின்றுவிடும்.

*167.* *காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்*
*பாற்றுளி பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென்*
*தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டுங்*
*கூத்தன் புறப்பட்டுப் போனஇக் கூட்டையே.*

உடம்பாகிய தோற்பையில் இருந்து வினைமுடிவுபெறச் செய்து, வினைப்பயனை ஊட்டிக் கொண்டிருந்த உயிராகிய கூத்தன் வெளிப்பட்டுப் போனபின் இவ்வுடம்பாகிய கூட்டை, காக்கை கொத்தினால் என்ன? கண்டவர்கள் பழித்தால் என்ன? உடம்பைச் சுட்டெரித்த பின் எலும்பின்மேல் பாலைத் தெளித்தால் என்ன? பலர் பாராட்டிப் பேசினால் என்ன?

## 3. செல்வ நிலையாமை

செல்வ நிலையாமையாவது, புறச்செல்வமாகிய மாடு மனை முதலியவற்றின் நிலையாமை.

*168.* *அருளும் அரசனும் ஆனையுந் தேரும்*
*பொருளும் பிறர்கொள்ளப் போவதன் முன்னந்*
*தெருளும் உயிரொடுஞ் செல்வனைச் சேரின்*
*மருளும் பினையவன் மாதவ மன்றே.*

அருள் புரியும் அரச பதவியும், யானைப்படையும், தேர்ப்படையும், பொருட்குவியலும் ஆகியவற்றை, பிறர் கவர்ந்து செல்வதற்கு முன், தெளிந்த உயிரோடு நிலையான செல்வத்தையுடைய இறைவனை அடைந்துவிடின், பிறகு அவன் பெரிய தவத்தையும் விரும்பாது வெருவுவான்.

*169.* *இயக்குறு திங்கள் இருட்பிழம் பொக்குந்*
*துயக்குறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா*
*மயக்கற நாடுமின் வானவர் கோனை*
*பெயற்கொண்டல் போலப் பெருஞ்செல்வ மாமே.*

வானத்தில் இயங்குகின்ற ஒளியுடைய சந்திரன் ஒளி குறைந்து இருளாவது போல, தளர்ச்சியுறும் செல்வம் குறைந்து இல்லையாவதை யாரும் சொல்லத் தேவையில்லை, தேவதேவனாகிய இறைவனைப் பொருள் மயக்கம் நீங்கி நாடுங்கள், மழை மேகம் போலப் பெருஞ்செல்வம் உண்டாகும்.

*170.* *தன்னது சாயை தனக்குத வாதுகண்*
*டென்னது மாடென் றிருப்பர்கள் ஏழைகள்*
*உன்னுயிர் போம்உடல் ஒக்கப் பிறந்தது*
*கண்ணது காணொளி கண்டுகொ ளீரே.*

தன்னோடு பொருந்திய நிழல் தனக்கு உதவாதது கண்டும், அறிவில்லாதவர்கள் தமக்கு வேறாகவுள்ள செல்வம் தமக்கு உதவும் என்று எண்ணுவார்கள், உடலோடு ஒன்றாக வந்தது உன்னுடைய உயிர், எனினும் உயிர் போகும்பொழுது உடல் அழிந்து போகும், அகக் கண்ணிடமாக விளங்குகிறது நிலையான ஒளி, அதனை உடம்பு உள்ள போதே நாடிக்கொள்ளுங்கள்.

*171.* *ஈட்டிய தேன்பூ மணங்கள் டிரதமும்*
*கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடும்*
*ஓட்டித் துரந்திட் டதுவலி யார்கொளக்*
*காட்டிக் கொடுத்தது கைவிட்ட வாறே.*

பூவினது மணத்தை ஆராய்ந்து கொண்டு அதனுள் பொருந்திய தேனைச் சேகரித்த வண்டு, எடுத்துக் கொண்டுவந்து ஒரு மரக்கிளையில் அடையாக வைக்கும், வண்டினை விரட்டிவிட்டு வலிமையுடையவர் அத்தேனை எடுத்துச் செல்ல, அது காட்டிக் கொடுத்து நீங்கிவிடும்.

*172.* ***தேற்றித் தெளிமின் தெளிந்நீர் கலங்கன்மின்***
***ஆற்றுப் பெருக்கிற் கலக்கி மலக்காதே***
***மாற்றிக் களைவீர் மறுத்துங்கள் செல்வத்தைக்***
***கூற்றன் வருங்கால் குதிக்கலு மாமே.***

செல்வ நிலையாமையை நன்கு அறிந்து தெளியுங்கள், தெளிந்தவர்கள் மீண்டும் பயம் கொள்ளாதீர்கள், ஆற்று வெள்ளம் போல் பெருகி வரும் செல்வத்தைக் கண்டு கலங்கி மயங்காமல், உங்களது பொருட்பற்றினை நீத்து மேலான செல்வத்தைப் பெருக்கிக் கொள்ளுங்கள், உயிரை உடலினின்றும் கூறு செய்கின்ற கூற்றுவன் வரும்போது கடத்தலும் கூடும்.

*173.* ***மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே***
***கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லுங்க கலம்போல்***
***அவிழ்கின்ற ஆக்கைக்கோர் வீடு பேறாகச்***
***சிமிழென்று வைத்தமை தேர்த்தறி யாரே.***

மகிழ்ந்து அனுபவிக்கின்ற பரம்பரைச் சொத்தும் தாமே முயன்று ஈட்டிய பொருளும், ஆற்றுப் பெருக்கில் சென்று உடனே கவிழ்கின்ற படகைப் போன்றன, அழிந்துபோகின்ற உடம்புக்கு ஒரு நிலைபேறாக, சேமித்து வைத்துள்ளதை உணர்ந்து பெருக்கிக்கொள்ள உலகவர் அறியார்.

*174.* ***வாழ்வும் மனைவியும் மக்கள் உடன்பிறந்***
***தாரு மளவே தெமக்கென்பர் ஒண்பொருள்***
***மேவு மதனை விரிவுசெய் வார்கட்குக்***
***கூவுந் துணையொன்று கூடலு மாமே***

உயிர்க்கு உதவியில்லாத வாழ்வுக்குரிய பொருளும் மனைவியும் மக்களும் உடன்பிறந்தாரும், எமக்கு அளவற்றவர் இருக்கின்றனர் என்று உலகவர் கூறுவர், ஆனால், இவற்றை விட்டு உற்ற இடத்து உதவும் ஒளிப்பொருளான சிவத்தை நினைந்து, கூவி அழைத்துக்கொள்ளும் மேலான செம்பொருளை அடைதல் கூடும்.

*175.* ***வேட்கை மிகுத்தது மெய்கொள்வார் இங்கிலை***
***பூட்டுந் தறியொன்று போம்வழி ஒன்பது***
***நாட்டிய தாய்தமர் வந்து வணங்கிப்பின்***
***காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே.***

உலக வாழ்வில் ஆசை பெருகிற்று, உண்மைப் பொருளை அறிபவர் யாரும் இல்லை, உடம்பை நிலையாக நிறுத்தும் சுழுமுனையாகிய தறி ஒன்று உள்ளது, ஆனால், அதற்கு அழிக்கின்ற வழி ஒன்பது உள்ளன, உறவு முறையை நிலைநாட்டிய தாயாரும் சுற்றத்தாரும் வந்து வணங்கிய பின், சுடுகாட்டைக் காட்டிக் கொடுத்து நீங்கிவிடுவர்.

*176.* ***உடம்பொ டுயிரிடை விட்டோடும் போது***
***அடும்பரி சொன்றில்லை அண்ணலை எண்ணும்***
***விடும்பரி சாய்நின்ற மெய்ந்நமன் தூதர்***
***சுடும்பரி சத்தையுஞ் சூழகி லாரே.***

உடம்பை விட்டு உயிர் இடையிலே விட்டுச் செல்லும்போது, வெல்லும் வகை ஒன்றுமில்லை, இறைவனை எண்ணுங்கள், உயிரை உடம்பினின்றும் வேறுபடுத்தும் பரிசினை நல்கும் உண்மையான எமதூதர்கள், வேதனைப்படுத்தும் பரிசினைக் கருதமாட்டார்கள்.

## 4. இளமை நிலையாமை

அஃதாவது வாலிபத் தன்மை மாறும் இயல்பினது.

*177.* ***கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே***
***விழக்கண்டுந் தேறார் விழியிலா மாந்தர்***
***குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்***
***விழக்கண்டும் தேறார் வியனுல கோரே.***

கிழக்கே வானத்தில் உதயமாகி நன்றாக விளங்கிய சூரியன், மேற்கில் மறைவதைக் கண்டும் அறிவில் தாத மக்கள் இளமை நிலையாமையை உணரார், அதே போன்று இளங்கன்று சில நாளில் வளர்ந்து மூப்படைந்து இறப்பதைக் கண்டும், அகன்ற உலகிலுள்ளோர் இவ்விளமை நிலையாமையை உணரமாட்டார்.

*178.* ***ஆண்டு பலவுங் கழிந்தன அப்பனைப்***
***பூண்டுகொண் டாரும் புகுந்தறி வார்இல்லை***
***நீண்டன காலங்கள் நீண்டு கொடுக்கினுந்***
***தூண்டு விளக்கின் சுடரறியாரே.***

பல ஆண்டுகள் அறியாமையில் கழிந்தோடின, உயிர்த் தந்தையாகிய இறைவனை யாரும் தங்கள் உடலில் நிலைபெறச் செய்து அவனது அகண்ட ஒளியில் புகுந்து பேரறிவைப் பெறுவார் இல்லை, நீண்ட காலம் உலகில் வாழும் பேறு பெற்றிருப்பினும், தூண்டுகின்ற விளக்கின் சுடர் போன்ற இறைவனை உலகவர் அறியாதவராக உள்ளனர்.

*179.* ***தேய்ந்தற் றொழிந்த இளமை கடைமுறை***
***ஆய்ந்தற்ற பின்னை அரிய கருமங்கள்***
***பாய்ந்தற்ற கங்கைப் படர்சடை நந்தியை***
***ஓர்ந்துற்றுக் கொள்ளும் உயிருள்ள போதே.***

இளமையானது நாள்தோறும் சிறிது சிறிதாகத் தேய்ந்து கடைசியில் இற்று ஒழிந்தது, மூப்பு எய்திய பின் அருமையான காரியங்கள் செய்ய முடியாதனவாகும், ஆதலால் உயிர் செழுமையான உடலில் இருக்கும்போதே, கங்கையாறு பாய்ந்து மறைந்த பரவிய சடையையுடைய சிவபெருமானை ஆராய்ந்து பொருந்துங்கள்.

*180.* ***விரும்புவர் முன்னென்னை மெல்லியன் மாதர்***
***கரும்பு தகர்த்துக் கடைக்கொண்ட நீர்போல்***
***அரும்பொத்த மென்முலை ஆயிழை யார்க்குங்***
***கரும்பொத்துக் காஞ்சிரங் காயும்ஒத் தேனே.***

மென்மையான பெண்கள், கரும்பைப் பிழிந்து கடைசியில் வருகின்ற சாற்றினைப் போல, இளமைக்காலத்தில் என்னை இனிமையாக விரும்புவர், அத்தகைய யான், தாமரை மொட்டுப் போன்ற முலையினையும் அழகிய அணியையும் உடைய பெண்களுக்கு, இளமையில் கரும்பைப் போன்று இனிமையாகவும் முதுமையில் எட்டிக்காகப் போன்று கசப்பாகவும் ஆயினேன்.

*181.* ***பாலன் இளையன் விருத்தன் எனநின்ற***
***காலங் கழிவன கண்டும் அறிகிலார்***
***ஞாலங் கடந்தண்டம் ஊடறுத் தானடி***
***மேலுங் கிடந்து விரும்புவன் நானே.***

பாலன் என்றும் இளையன் என்றும் முதியோன் என்றும் உள்ள, பருவ காலங்கள் மாறுபடுவதை உலகோர் அறியவில்லை, ஆனால், இவ்வுலகத்தைக் கடந்து அதற்கு மேலாகவுள்ள அண்டங்களையும் ஊடறுத்து நிற்கின்ற இறைவனது திருவடியை, மேன்மேலும் பொருந்தி நான் அன்பு செய்வேன்.

*182.* ***காலை எழுந்தவர் நித்தலும் நித்தலும்***
***மாலை படுவதும் வாணாள் கழிவதுஞ்***
***சாலும்அவ் வீசன் சலவிய னாகிலும்***
***ஏல நினைப்பவர்க் கின்பஞ்செய் தானே.***

நாள்தோறும் காலையில் எழுந்தவர்கள், மாலையில் உறக்கத்துக்குச் செல்வது வாழ்நாள் குறைதலும் போதும், அவ்வாறு வாழ் நாளைக் குறைக்கின்ற உருத்திரமூர்த்தி கோபமுடைவனாகிலும்,பொருந்த நினைப்பவர்க்கு இன்பம் அருளுகின்றான்.

*183.* *பருவூசி ஐந்துமோர் பையினுள் வாழும்*
*பருவூசி ஐந்தும் பறக்கும் விருகம்*
*பருவூசி ஐந்தும் பனித்தலைப் பட்டாற்*
*பருவூசிப் பையும் பறக்கின்ற வாறே.*

பருமையான ஊசிபோன்ற ஐந்து இந்திரியங்களும் ஒரு பை போன்ற உடம்பினுள் உள்ளன, பறந்து சென்று தீயனவற்றைப் பற்றி உண்ணும் காக்கை போன்றவை இவ்வைந்து இந்திரியங்களுமாகும், ஐந்து இந்திரியங்களும் சிரசின்மேல் பனிப்படலம் போல விளங்கும் ஒளியில் தலைப்பட்டு அமையுமாயின், ஐந்து இந்திரியங்களைக் கொண்ட உடம்பின் நினைவு நீங்கிவிடும்.

*184.* ***கண்ணதுங் காய்கதி ரோனும் உலகினை***
***உண்ணின றளக்கின்ற தொன்றும் அறிகிலார்***
***விண்ணுறு வாரையும் வினையுறு வாரையும்***
***எண்ணுறும் முப்பதில் ஈர்ந்தொழிந் தாரே.***

தண்ணிய சந்திரனும் வெம்மையான சூரியனும், உலகவரின் உடம்பினுள் இருந்து வாழ்நாளை அளந்துகொண்டிருப்பதை யாரும் அறியவில்லை, ஆகாயப் பேறு அடைபவரையும் வினையுள்பட்டு அழிபவரையும், சூரியசந்திரர்கள் முப்பது ஆண்டில் பிரித்துவிடுகின்றனர்.

**185.** ***ஒன்றிய ஈரெண் கலையும் உடனுற***
***நின்றது கண்டு நினைக்கிலர் நீசர்கள்***
***கன்றிய காலன் கருக்குழி வைத்தபின்***
***சென்றதில் வீழ்வர் திகைப்பொழி யாரே.***

பொருந்திய பதினாறு கலைகளும், உடனாய் நிற்றலைக் கண்டும், கீழானவர்கள் கலை வழியே சென்று மேல் விளங்கும் இறைவனைச் சிந்திக்கின்றிலர், சினக்கின்ற கால காலனாகவுள்ள உருத்திரன் மீண்டும் கருப்பையில் வைத்தபின், அதில் போய் மீண்டும் பிறவியல் வீழ்வர், இவர் மனமயக்கம் ஒழியாதவராவர்.

**186.** ***எய்திய நாளில் இளமை கழியாமை***
***எய்திய நாளில் இமையினால் ஏத்துமின்***
***எய்திய நாளில் எறிவ தறியாமல்***
***எய்திய நாளில் இருந்துகண் டேனே.***

பிராசாத நெறியே சென்று சந்திர மண்டலம் விளங்கிய காலத்து, இளமை நீங்காதிருக்கும்போது, துதிப்பாடல்களால் சிவனைப் புகழ்ந்து பாடுங்கள், அவ்வாறு ஏத்திப் பிராண இயக்கம் நடைபெறுவதை உணராமல், அப்பொழுது தியானத்தில் பொரந்தியிருந்து உண்மையை நான் உணர்ந்தேன்.

## 5. உயிர் நிலையாமை

அஃதாவது, உயிர் உடம்பில் நில்லாமை

**187.** ***தழைக்கின்ற செந்தளிர்த் தண்மலர்க் கொம்பில்***
***இழைக்கின்ற தெல்லாம் இறக்கின்ற கண்டும்***
***பிழைப்பின்றி எம்பெரு மானடி ஏத்தார்***
***அழைக்கின்ற போதறி யாரவர் தாமே.***

துளிர்க்கின்ற செம்மையான தளிரையும் குளிர்ச்சியான மலரையும் உடைய பூங்கொம்பிலே, தோற்றுகின்றவையெல்லாம் சருகாக மாறுதலைக் கண்டும், தவறுதலின்றி உயிருள்ள போதே இறைவனது திருவடியை ஏத்த மாட்டார்கள், அவர்கள் எமனிடமிருந்து அழைப்பு வந்தபோது இறைவனை ஏத்துவதற்கு அறிய மாட்டாதவராவர்.

**188.** ***ஐவர்க் கொருசெய் விளைந்து கிடந்தது***
***ஐவரும் அச்செய்யைக் காத்து வருவர்கள்***
***ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்***
***ஐவரும் அச்செய்யைக் காவல்விட் டாரே.***

பிரமனாதி ஐவர்க்கும் தொழில் செய்வதற்கு உடம்பாகிய ஒரு நிலம் விளைந்து கிடந்தது, ஐவர்களும் அவ்வுடம்பினை ஓம்பி உயிர்க்கு வினைப்போகத்தை ஊட்டி வருவார்கள், இவர்களுக்குத் தலைவனாகிய சிவனிடமிருந்து வினைநுகர்வு முடிவில் இறுதிச் சீட்டு வருதலும், இவர்கள் அவ்வுடம்பாகிய விளை புலத்தை ஓம்பாது கழிந்தனர்.

**189.** ***மத்தளி ஒன்றுள தாளம்இ ரண்டுள***
***அத்துள்ளே வாழும் அரசனும் அங்குளன்***
***அத்துள்ளே வாழும் அரசன் புறப்பட்டால்***
***மத்தனி மண்ணாய் மயங்கிய வாறே.***

மண்ணாலாகிய உடம்பு ஒன்று உண்டு, அதில் உச்சுவாச நிச்சுவாசமாகிய தாளங்கள் இரண்டு உள்ளன, அதனுள் வாழ்கின்ற சீவனாகிய அரசனும் அங்கு வீற்றிருக்கின்றான், அங்குள்ள சீவன் உடம்பை விட்டு நீங்கினால், கோயிலாகிய உடம்பு மீண்டும் மண்ணாய்விட்டது.

**190.** ***வேங்கட நாதனை வேதாந்தக் கூத்தனை***
***வேங்கடத் துள்ளே விளையாடு நந்தியை***
***வேங்கடம் என்றே விரகறி யாதவா***
***தாங்கவல் லாருயிர் தாமறி யாரே.***

சிரசின்மேல் ஈசான திக்கில் விளங்குபவனும், வாக்கு உருவமாக இருந்து கொண்டு நடிப்பவனும், வெந்து போகின்ற உடம்பினுள்ளே விளையாடும் நம் தீயாகவுள்ளவனுமாகிய இறைவன், அழிகின்ற உடம்பாயுள்ளான் என்ற தன்மை அறியாதவர், உடம்பினைத் தாங்குகின்ற அருமையான சீவனையும் அறியாதவராவர்.

**191.** ***சென்றுணர் வான்திசை பத்துந் திவாகரன்***
***அன்றுணர் வால்அளக் கின்ற தறிகிலர்***
***நின்றுண ரார்இந் நிலத்தின் மனிதர்கள்***
***பொன்றுணர் வாரிற் புணர்க்கின்ற மாயமே.***

சிவசூரியன் உடம்பில் கீழும் மேலும் சூழவுள்ள எட்டுத் திசைகளிலும் சென்று அறிவான், அவன் உணர்வுமயனாக இருந்து உடம்பில் வியாபித்து அறிதலை உலகவர் அறியவில்லை, இந்நிலவுலகில் வாழ்கின்ற மக்கள், நான் என்னும் அகங்காரம் கெட்ட ஞானியரிடம் அவன் கலக்கின்ற மாயத்தன்மையும் உணரமாட்டார், என்னே அறியாமை!

*192. மாறு திருத்தி வரம்பிட்ட பட்டிகை*
*பீறு மதனைப் பெரிதுணர்ந் தாரிலை*
*கூறுங்க கருமயிர் வெண்மயி ராவது*
*ஈறும் பிறப்புமொ ராண்டெனும் நீரே.*

சிக்கல் அறுத்து ஒழுங்குபடுத்தி நெய்யப்பெற்ற பட்டாடை கிழிந்து ஒழியும், அவ்வழியுந் தன்மையை உலகவர் நன்றாக உணரவில்லை, அது போன்று கூறப்பெறுகின்ற கரியமயிர் நரைமயிராவது, பூமியில் இறப்பதும் சிறுபொழுது தாம் என்று நீவிர் உணருங்கள்.

*193. துடுப்பிடு பானைக்கும் ஒன்றே அரிசி*
*அடுப்பிடு மூன்றிற்கும் அஞ்செரி கொள்ளி*
*அடுத்தெறி யாமற் கொடுமின் அரிசி*
*விடுத்தன நாள்களும் மேற்சென் றனவே.*

சுழுமுனையாகிய அகப்பை இடம் பெற்ற உடம்பாகிய பானைக்கும் விந்துவாகிய அரிசி ஒன்றேயாம், உடம்பினுள் சோம சூரியக்கினியாகிய அடுப்புக்குப் பிராணன் முதலிய ஐவகை வாயுக்களும் விறாகும், அடுத்து வீணாக்காமல் விந்து சக்தியைக் கொடுத்து மதியமுதத்தைப் பெறுங்கள், வரையறுக்கபெற்ற நாள்கள் வீணாகக் கழிகின்றனவே!

*194. இன்புறு வண்டிங் கினமலர் மேற்போய்*
*உண்பது வாச மதுபோல் உயிர்நிலை*
*இன்புற நாடி நினைக்கிலும் முன்றொளி*
*கண்புற நின்ற கருத்துள்நில் லானே.*

இன்பத்தை நாடுகின்ற வண்டுக் கூட்டமான மலர்களின் மேல் சென், மணம் நிறைந்த தேனை உண்பது போல, சீவன் அகத்தாமரையிலும் இன்பத்தை நாடி நினைத்தாலும், சோம சூரியாக்கினியாகிய ஒளியில் விளங்கும் சிவன் புறத்தே செல்லும் மனத்தில் விளங்கமாட்டான்.

*195. ஆம்விதி நாடி அறஞ்செய்மின் அந்நிலம்*
*போம்விதி நாடிப் புனிதனைப் போற்றுமின்*
*நாம்விதி வேண்டும் தென்சொலின் மானிடர்*
*ஆம்விதி பெற்ற அருமைவல் லார்க்கே.*

பிறவியில் இன்பம் ஆகின்ற நெறியை விரும்பி ஒழுக்கத்தில் நில்லுங்கள், இனி மேலாம் நிலம் அல்லது ஒளிமண்டலத்தை விரும்பி இறைவனை ஏத்துங்கள், மனிதராய்ப் பிறக்கும் நல்லூழைப் பெற்ற அருமையானவர்க்கு, சொல்லப்போனால் விதியாகக் கூற வேண்டியது என்ன உள்ளது?

*196. அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்*
*வெவ்விய னாகிப் பிறர்பொருள் வவ்வன்மின்*
*செவ்விய னாகிச் சிறந்துண்ணும் போதொரு*
*தவ்விக்கொ டுண்மின் தலைப்பட்ட போதே.*

வஞ்சனை பேசி அறம் அழிய நடவாதீர்கள், கொடியோராகிப் பிறர் பொருளைக் கவராதீர்கள், செம்மையுடையோனாகிச் சிறப்பாக உண்ணும்போது, யாரேனும் நாடி வரின் ஓர் அகப்பை உணவு கொடுத்துப் பின் உண்ணுங்கள்.

## 6. கொல்லாமை

அஃதாவது ஓர் உயிரை உடம்பினின்றும் பிரிக்கலாம்.

*197. பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்*
*மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்*
*நற்றார் நடுக்கற்ற தீபமுஞ் சித்தமும்*
*உற்றாரும் ஆவி அமர்ந்திடம் உச்சியே.*

பற்றுக்கோடாகிய சிறந்த குருவின் பூசைக்கும், பல வகை மலராக உள்ளது கொல்லாமையாகும், கண் மலரின் ஒளியே நல்ல மாலையாகும், அசைவற்ற மனமே சிறந்த தீபமாகும், இவையனைத்துங் கொண்டு பூசிக்கின்ற உயிர் விளங்கும் இடம் சிரசின் உச்சியாகும்.

*198. கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை*
*வல்லடிக் காரர் வலிக்கயிற் றாற்கட்டிச்*
*செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை*
*நிலலிடும் என்று நிறுத்துவம் தாமே.*

கொல் என்றும் குத்து என்றும் சொல்லிய விலங்கையொத்த மக்களை, காலனது ஏவலர் வலிமையான கயிற்றாற்கட்டி, 'செல்' என்றும், 'நில்' என்றும் அதட்டி, அனல் கக்குகின்ற நரகத்தில் நெடுங்காலம் நிற்க என்று ஆணையிடுவர்.

## 7. புலால் மறுத்தல்

அஃதாவது, புலால் உண்ணாமை.

*199. பொல்லாப் புலாலை நுகரும் புலையரை*
*எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்*
*செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்*
*மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே.*

பொல்லாத புலால் உணவை உண்ணும் கீழ்மக்களை, யாவரும் காணும் வண்ணம் எமதூதர்கள், கறையானைப் போன்று பற்றி அரிந்துப் பின் அனல் கக்குகின்ற நரகத்தில், முதுகைக் கீழ்ப்புறமாகக் கிடத்தி வைப்பார்.

*200. கொலைய களவுகட் காமம் பொய்கூறல்*
*மலையாள பாதக மாம்அவை நீக்கித்*
*தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ் சார்நதோர்க்*
*நிலையாம் இவைஞானா னந்தத் திருத்தலே.*

கொலை, களவு, கள், காமம், பொய் பேசுதல் ஆகியவை, பஞ்சமாபாதகங்களாகும், அப்பாவங்களை நீக்கி, சிரசின்மேல் திருவடி சூடி இன்பம் அடைந்தோர்க்கு, இப்பாவங்களும் அவற்றால் வரும் துன்பங்களும் இல்லையாம், இவர்கள் பேரின்பத்தில் திளைத்திருத்தலும் ஆகும்.

## 8. பிறன்மனை நயவாமை

அஃதாவது, பிறன் மனைவியை விரும்பாமை.

*201. ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே*
*காத்த மனையாளைக்*

அன்புடைய மனைவி வீட்டில் இருக்கவும், பிறரால் காக்கப்பட்ட மனைவியை விரும்பும் காமுகர், வீட்டில் காய்த்துப் பழுத்துள்ள பலாவின் கனியை உண்ணாமல், காட்டில் பழுத்துள்ள ஈச்சம்பழத்தைப் பெறத் துன்பப்படுவது போலாம்.

*202. திருத்தி வளர்த்ததோர் தேமாங் கனியை*
*அருத்தமென் றெண்ணி அறையிற் புதைத்துப்*
*பொருத்தமி லாத புளிமாங் கொம்பேறிக்*
*கருத்தறி யாதவர் காலற்ற வாறே.*

செப்பமாக வளர்த்த மரத்தினின்றம் பெற்ற இனிய மாம்பழத்தை, சேமிப்புப் பொருளாக எண்ணி அறையில் வைத்துவிட்டு, தகுதியில்லாத புளியம்பழத்துக்காகப் புளியங்கிளையில் ஏறி, ஆலோசனையில்லாதவர் பிராண சத்தி குறைவுற்று வருந்துகின்றாரே!

*203. பொருள்கொண்ட கண்டனும் போதத்தை யாளும்*
*இருள்கொண்ட மின்வெளி கொண்டுநின் றோரும்*
*மருள்கொண்ட மாதர் மயலுறு வார்கள்*
*மருள்கொண்ட சிந்தையை மாற்றகில் லாரே.*

பொருளில் பற்றுடையோரும், அறிவை மறைத்து ஆளுகின்ற அறியாமையாகிய இருளில் தோன்றிய மின்வெளி போன்ற சிறு அறிவைப் பெரிதென்று மதித்திருப்போரும், மருண்ட பார்வை உடைய பெண்ணிடம் மயக்கம் கொள்வார்கள், அவ்வாறு மயங்கிய மனத்தை மாற்ற முடியாதவராவர்.

## 9. மகளிர் இழிவு

அஃதாவது, பொது மகளிர் இழிவு.

*204.* ***இலைநல வாயினும் எட்டி பழுத்தாற்***
***குலைநல வாங்கனி கொண்டுண லாகா***
***முலைநலங் கொண்டு முறுவல்செய வார்மேல்***
***விலகுறு நெஞ்சினை வெய்துகொள் ளீரே.***

இலை முதலியவற்றால் அழகாயுள்ள எட்டிமரம் குலையாகப் பழுத்திருந்தாலும், அக்குலையில் கவர்ச்சியுடையதாகிய பழத்தைப் பறித்து உண்ணலாகாது, அது போல, முலை நலத்தினால் கவர்ச்சியைக் காட்டிப் புன்முறுவல் செய்வார்மேல் அவரது கவர்ச்சியில் ஈடுபடாது விலகிவிட வேண்டும், அஉவாறு அவர்பால் செல்லும் மனத்தினையும் கடிய வேண்டும்.

*205.* ***மனைபுகு வார்கள் மனைவியை நாடில்***
***சுனைபுகு நீர்போற் சுழித்துடன் வாங்குங்***
***கனவது போலக் கசிந்தெழும் இன்பம்***
***நனவது போலவும் நாடவொண் ணாதே.***

பிறர்மனை செல்வோர் அம்மனைக்குரிய மாதரை நாடினால், மலைச்சுனையில் புகுகின்ற நீர் மூழ்கு வாரைச் சுழிக்குள் சிக்க வைத்தல் போல, கனவு போல அம்மாதர் மாட்டுச் சிறிது சுரக்கின்ற அன்பை, நனவு போல உண்மையானது என்று விரும்புதல் கூடாது.

*206.* ***இயலுறும் வாழ்க்கை இளம்பிடி மாதர்***
***புயலுறும் புல்லின் பூணர்ந்தவ ரேயினும்***
***மயலுறும் வானவர் சாரஇரும் என்பார்***
***அயலுறப் பேசி அகன்றொழிந் தாரே.***

அழகு பொருந்திய வாழ்க்கையுடைய இளம் பெண்யானையை ஒத்த பெண்கள், மழையைக் கண்ட புல் போலத் தளிர்த்திருக்க போதிலும், மயங்கிய தேவரையொப்பார் வந்து பொருந்த முன்னமே புணர்ந்த வரை வெளியே இரும் என்று சொல்வார், மேலும் குறிப்புமொழியால் வெளியேறச் சொல்லி நீங்கிப் போவர்.

*207.* ***வையகத் தேமட வாரொடுங்க கூடியென்***
***மெய்யகத் தோரும் வைத்த விதியது***
***கையகத் தேகரும் பாலையின் சாறுகொள்***
***மெய்யகத் தேபெரு வேம்பது வாமே.***

உலகில் மங்கையோடு கூடுவதால் என்ன பயன் விளைந்துவிடும்? மெய்ப்பொருளை அகத்தே உணர்நத் ஞானியரும் விதியாகக் கூறுவது அதுவேயாகும். அம்மங்கையர் கூட்டம் புறத்தே ஆலைக்கரும்பின் சாறு போல உள்ளது, கொள்கலமாகவுள்ள அகத்தே பெரிய வேம்பு போன்றதாம்.

*208.* ***கோழை ஒழுக்கம் குளமூடு பாசியில்***
***ஆழ நடுவர் அளப்புறு வார்களைத்***
***தாழத் துடக்கித் தடுக்ககில் லாவிடில்***
***பூழை நுழைந்தவர் போகின்ற வாறே.***

சுக்கிலத்தை மாதரின் பாசி படித்த கருக்குழியில், ஆழ நடுவராய் இன்புறுவார்களை, தடைபடுமாறு பிணித்துத் தடுக்காவிட்டால், மறைமுகமாகச் செல்லும் சிறுவாயிலின் நுழைந்தாவது போய் அழிந்துவிடுவர்.

## 10. நல்குரவு

நல்குரவு - வறுமை.

*209.* ***புடைவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை***
***அடையப் பட்டார்களும் அன்பில ரானார்***
***கொடையில்லை கோளில்லை கொண்டாட்ட மில்லை***
***நடையில்லை நாட்டில் இயங்குகின் றார்கட்கே.***

உடுத்திய ஆடை கிழிந்து பயனற்றது போல வறுமையுடையோர் வாழ்க்கையும் பயனற்றுப்போய்விட்டது, அடையப்பட்ட சுற்றத்தார்களும் அன்பின்றி விலகிவிட்டார், கொடுக்கல் வாங்கல் ஒன்றும் இல்லை, உற்சாகம் இல்லை, நாட்டில் இருப்பவராயினும் நாட்டோடு ஒட்டிய கம்பீர நடையில்லை.

*210.* *பொய்க்குழி தூர்ப்பான் புலரி புலருதென்*
*றக்குழி தூர்க்கும் அரும்பண்டம் தேடுவீர்*
*எக்குழி தூர்த்தும் இறைவனை ஏத்துமின்*
*அக்குழி தூரும் அழுக்கற்ற போதே.*

பொழுது விடிகின்றதே என்று வயிற்றை நிரப்புவான் வேண்டி, அவ்வாழ்வுக்கு தேவைப்படும் அருமையான பொருள்களைத் தேடுவார்களே! எக்குழியை நிரப்பினாலும் இறைவனது பொருள்சேர் புகழைப் பாடுங்கள், பிறவிக்குக் காரணமாகிய வினை நீங்கினால் வயிற்றுக்குழி நிரம்பிவிடும்.

*211.* *கற்குழி தூரக் கனகமுந் தேடுவர்*
*அக்குழி தூர்க்கை யாவர்க்கும் அரியது*
*அக்குழி தூர்க்கும் அறிவை அறிந்தபின்*
*அக்குழி தூரும் அழுக்கற்ற வாறே.*

உலகவர் வயிற்றுக்குழியை நிரப்புவதற்குப் பொன்னைத் தேடுவார்கள், அவ்வயிற்றுக் குழியைக் குறையாது நிரப்புவது யாவர்க்கும் கடினமானது, அக்குழியைத் தூர்க்கும் திருவடிஞானம் பெற்ற பின், பிறவிக்குக் காரணமான வினையும் நீங்கி, அவ்வயிற்றுப்பிணியும் நீங்கும்.

*212.* *தொடர்ந்தெழு சுற்றம் வினையினுந் தீய*
*கடந்ததோர் ஆவி கழிவதன் முன்னே*
*உடந்தொரு காலத் துணர்விளக் கேற்றித்*
*தொடர்ந்துநின் றவ்வழி தூர்க்கலு மாமே.*

பிறவி தோறும் தொடர்ந்து வருகின்ற சுற்றங்கள் வினையைக் காட்டிலும் தீமை செய்வன, வாழ்நாளைக் கடந்து உயிர் உடலை விட்டு நீங்குவதற்கு முன்னே, உலகப் பொருளைவிட்டு மாறுபட்டு உண்மைப் பொருளை நாடி, நீங்காதிருந்து பிறவிக் குழியைத் தூர்ப்பதோடு பசிப்பிணியையும் போக்கலாம்.

*213.* *அறுத்தன ஆறினும் ஆனின மேவி*
*அறுத்தனர் ஐவரும் எண்ணிலி துன்பம்*
*ஒறுத்தன வல்வினை ஒன்றல்ல வாழ்வை*
*வெறுத்தனன் ஈசனை வேண்டிநின் றானே.*

ஆறு அத்துவாவின் வழியாக உயிர்க்கூட்டம் வினைகளை ஈட்டின, மெய் முதலிய ஐம்பொறிகளும் சுவை முதலிய பொருள்களின் மேல் சென்று உயிருக்கு எண்ணற்ற துன்பங்களைக் கொடுத்தன, பல கொடிய வினைகள் வாழ்க்கையை வேதனைப்படுத்தின, வாழ்க்கையை வெறுத்த வறுமையாளன் வறுமை நீங்க ஈசனை வேண்டியிருந்தான்.

## 11. அக்கினி காரியம்

அக்கினி காரியம் - தீ ஓம்புதல்.

*214.* *வசையில் விழுப்பொருள் வானும் நிலனுந்*
*திசையுந் திசைபெறு தேவர் குழாமும்*
*விசையம் பெருகிய வேத முதலாம்*
*அசைவிலா அந்தணர் ஆகுதி வேட்கிலே.*

குற்றமில்லாத மேன்மையான வானத்தில் வாழ்பவரும் நிலத்தில் வாழ்பவரும், திசைகளில் வாழ்பவர்களும் திசைகளுக்குரிய திக்குப்பாலகர்களும், வேதத்தை முதலாகக் கொண்டு அந்தணர் வேள்வி செய்யின், நலமுறுவார்கள்.

*215.* *ஆகுதி வேட்கும் அருமறை அந்தணர்*
*போகதி நாடிப் புறங்கொடுத் துண்ணுவர்*
*தாம்விதி வேண்டித் தலைப்படு மெய்ந்நெறி*
*தாமறி வாலே தலைப்பட்ட வாறே.*

வேள்வி பினைச் செய்யும் வேதமோதும் அந்தணர், சுவர்க்கத்தை விரும்பி அக்கினிகாரியம் செய்து தானம் கொடுத்து உணவை உட்கொள்வர், தங்களுடைய விதியைத் தாங்களே நிச்சயம் செய்யும் மெய்ந்நெறியை உணர்ந்தவர், தங்களுடைய அறிவைச் சிரசின்மேல் செலுத்தி வாழ்வர்.

*216.* *அணைதுணை அந்தணர் அங்கியுள் அங்கி*
*அணைதுணை வைத்ததன் உட்பொருளான*
*இணைதுணை யாமத் தியங்கும் பொழுது*
*துணையணை யாயதோர் தூய்நெறி யாமே.*

இல்லறத்திலுள்ள அந்தணர் புறத்தே ஓம்பும் அக்கினியின் தத்துவத்தை அகத்தே உணர்ந்து மனைவியோடு கூடிச் செய்து, அதன் உண்மைப் பொருளை உணர்ந்து சிவசத்தியாக எண்ணி யாமத்தில் இக்கிரியை செய்வதே, பொருந்துகின்ற துணையான மேன்மையான ஒரு நெறியாகும்.

*217.* *போதிரண் டோதிப் புரிந்தருள் செய்திட்டு*
*மாதிரண்டாகி மகிழ்ந்துட னேநிற்குந்*
*தாதிரண் டாகிய தண்ணம் பறவைகள்*
*வேதிரண் டாகி வெறிக்கின்ற வாறே.*

ஆண், பெண் சேர்க்கையை விரும்பி அருளை எண்ணிப் புரிந்தால், குண்டலினி விளங்கி மேலேறியும் சிற்சத்தி இருள் நீங்கி ஒளியாயும் விளங்கும், இந்நிலை எய்தாது சுக்கில சுரோணிதக் கலப்பால் விளைந்த ஆணும் பெண்ணுமாகிய பறவைகள், மாற்றம் அடைந்து இரண்டும் மயக்கத்தை அடைகின்றன.

*218.* *நெய்நின் றெரியும் நெடுஞ்சுட சென்று*
*மைநின் றெரியும் வகையறி வார்கட்கு*
*மைநின் றவிழ்தரு மத்தின மாம்என்றுஞ்*
*செய்நின்ற செல்வம் தீயது வாமே.*

ஆண், பெண் கூட்டுறவினால் உண்டாகும் உணர்வோடு மேலே சென்று, புருவ மத்தியில் விளங்கும் சுடரின் தன்மையை அறிவார்க்கு, மல நீங்குதலாகிய அந்நாள் நன்னாளாம், எப்போதும் உடலில் நிலைபெற்ற செல்வமாகிய சிவன் அவ்வக்கினியேயாம்.

*219.* *பாழி அகலும் எரியுந் திரிபோலிட்*
*டூழி அகலும் உறுவினை நோய்பல*
*வாழிசெய் தங்கி உதிக்க அவைவிழும்*
*வீழிசெய் தங்கி வினைசுடு மாமே.*

யோனி குண்டத்துள் உள்ள அக்கினியைத் தீப்பந்தம்போல் மேலெழும்படி செய்தால், அடைகின்ற வினைகளும் நோய்களும் முடிவு எய்தி நீங்கும், கீழேயுள்ள அக்கினி மேலே நிலைபெற்றால் வினை முதலியவை கெடும், அவற்றைத் தாங்கியுள்ள வினைகளைக் சுட்டு மேலும் அவை ஏற்படாமல் காக்கும்.

*220.* *பெருஞ்செல்வங் கேடென்று முன்னே படைத்த*
*வருஞ்செல்வம் தந்த தலைவனை நாடும்*
*வருஞ்செல்வத் தின்பம் வரவிருந்த தெண்ணி*
*அருஞ்செல்வத் தாகுதி வேட்கநின் றாரே.*

பொன்னும் மணியும் கேட்டினைத் தரும் முன்னே அருளிச்செய்த, அருமையான ஞானச் செல்வத்தை அளித்த தலைவனாகிய சிவனை நாடுங்கள், மேலான சிவாக்கினி சிரசின் மேல் உதிப்பதை நினைந்து, ஞானச்செல்வத்தை நாடி அக்கினி காரியம் செய்கின்றார்கள்.

*221.* *ஒண்சுட ரானை உலப்பிலி நாதனை*
*ஒண்சுட ராகிஎன் றுள்ளத் திருக்கின்ற*
*கண்சுட ரோன்உல கேழுங் கடந்தஅத்*
*தண்சுட ரோமத் தலைவனு மாமே.*

ஒளி வடிவானவனும், அழிவில்லாத தலைவனும், ஒளி மிக்க சுடராகி என் உள்ளத்தில் எழுந்தளியிருக்கின்ற கண்ணொளியானவனும், ஏழு உலகங்களையும் கடந்த அக்குளிர்ந்த சுடராகியவனும் ஆகிய சிவன், ஓமத்லைவனாகிய இயமானனும் ஆவான்.

*222.* *ஓமத்துள் அங்கியின் உள்ளுளன் எம்மிறை*
*ஈமத்துள் அங்கி இரதங்கொள் வானுளன்*
*வேமத்தள் அங்கி விளைவு வினைக்கடல்*
*கோமத்துள் அங்கி குரைகடல் தானே.*

உடலின் சகல அக்கினி காரியத்துக்கும் சிவன் மறைந்திருந்து உதவுகிறான், அவன் இறந்த பிறகு சாரமாகிய சூக்கும உடலிலும் பொருந்தி விளங்குவான், நெய்யப்பெற்ற ஆடை உரம் பெறுவது போல் வாசனா ரூபமான வினைகள் சிக்குண்டு கடல்போல் பெருகி விடுகின்றன. ஆன்மா சிவத்தை நோக்கிச் சிந்தனையைக் கடைவதாலே சப்திக்கின்ற நாத ஒலி உண்டாகி வினை கெடும்.

**223.** *அங்கி நிறுத்தும் அருந்தவர் ஆரணத்*
*தங்கி இருக்கும் வகையருள் செய்தவர்*
*எங்கும் நிறுத்தி இளைப்பப் பெரும்பதி*
*பொங்கி நிறுத்தும் புகழது வாமே.*

அக்கினியைச் சிரசுக்குக் கொண்டு செல்லும் திறமுடையவர், வைதீகாக்கினியைக் காருகபத்தினியோடு கூட வளர்த்தவராவர், மறுமையில் பிரமலோகம் முதலியவற்றில் தங்கி இளைப்பாறவும், இன்மையில் மேல் ஓங்குகின்ற புழும் அவர்க்கு உண்டாகும்.

## 12. அந்தணரொழுக்கம்

அஃதாவது, அந்தணர் ஒழுகும் முறை,

**224.** *அந்தண ராவோர் அறுதொழில் பூண்டுளோர்*
*செந்தழல் ஓம்பிழுப் போதும் நியமஞ்செய்*
*தந்தவ நற்கரு மத்துநின் றாங்கிட்டுச்*
*சந்தியும் ஓதிச் சடங்கறுப் போர்களே.*

அந்தணராகிய அறவோர் பிறப்பை அறுக்கும் தொழிலையுடையவர், முன்னே சொன்னவாறு அக்கினி காரியம் செய்து, மூன்று வேளைகளிலும் தவறாது தங்களுக்குரிய தவமாகிய கல்ல செயலைச் செய்துவிட்டு, ஒத்து எண்ணிச் சடங்கு செய்வோராவர்.

**225.** *வேதாந்தங் கேட்க விருப்பொடு முப்பதப்*
*போதாந்த மான பிரணவத் துன்புக்கு*
*நாதாந்த வேதாந்த போதாந்த நாதனை*
*ஈதாந்தம் எனாதுகண் டின்புறு வோர்களே.*

வேதத்தின் முடிவான உபநிடதத்தின் உண்மையை அறிய, விருப்பத்தோடு தத்துவமசி என்ற முப்பது அறிவின் முடிவான ஓங்காரத்துள் பொருந்தி, நாதம் கடந்ததாய், உபநிடதத்தின் உச்சியாய் அறிவுக்கு அப்பாலாய் விளங்கும் தலைவனை, இதுதான் முடிவு என்று எண்ணாது முப்பதத்தையும் கடந்து துரிய நிலையில் விளங்குவோராவர்.

**226.** *காயத் திரியே கருதுசா வித்திரி*
*ஆயதற் குவப்பர் மந்திரமாங் குன்னி*
*நேயத் தேரேறி நினைவுற்று நேயத்தாய்*
*மாயத்துள் தோயா மறையோர்கள் தாமே.*

காயத்திரியாய்க் கருதுகின்ற சூரியனாகிய சாவித்திரியை, அதற்குரிய மந்திரத்தை எண்ணிச் செபிக்க அந்தணர் விரும்புவர், அன்பாகிய தேரில் ஏறிச் சென்று சிவமாகிய நேயப் பொருளோடு பொருந்தியவராய், தனுகரண புவன போகங்களாகிய மாயா காரியங்களை விரும்பாது வென்று விளங்குவர்.

**227.** *பெருநெறி யான பிரணவம் ஓர்ந்து*
*குருநெறி யாலுரை கூடிநால் வேதத்*
*திருநெறி யான கிரியை யிருந்து*
*சொரூபம தானோர் துகளில்பார்ப் பாரே.*

மூத்தி நெறியான பிரணவத்தைத் தெளிந்து, குரு உபதேசம் பெற்று, மகாவாக்கியம் உணர்த்தும் அந்துவித நெறியில் அகவழிபாட்டில் இருந்து, பிரம சொரூபம் ஆயினோல் குற்றமற்ற அந்தணர்கள்.

**228.** *சத்திய முந்தவம் தான்அவன் ஆதலும்*
*எய்த்தரும் இந்தியம் ஈட்டியே வாட்டலும்*
*ஒத்த உயிர்கள் உண்டா யுணர்வற்றுப்*
*பெத்தம் அறுத்தலு மாகும் பிரமமே*

மெய்ப் பொருளை அகத்தில் நோக்கித் தற்போதம் இழந்து, இளைப்பினைத் தரும் இந்திரியங்களைப் புலன்களின் வழிச் செல்லாது தடுத்தும், இருவினை ஒத்த உயிர்களாய் ஞானம் பெற்று, பந்தத்தை நீக்கிப் பிரமம் ஆவர்.

**229.** *வேதாந்தம் கேட்க விரும்பிய வேதியர்*
*வேதாந்தம் கேட்டுந்தம் வேட்கை ஒழிந்திலர்*
*வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடம்*
*வேதாந்தங் கேட்டவர் வேட்கைவிட் டாரே.*

வேத முடிவான உபநிடத்தை அறிய விரும்பிய அந்தணர், வேதாந்தத்தைக் கேட்டும் தம் ஆசையை விட்டாரில்லை, ஆசையை விட்ட இடமே வேதத்தின் முடிவாம், வேதாந்தத்தின் பொருளை உணர்ந்து கேட்டவர் ஆசையை விட்டவராவார்.

*230.* ***நூலுஞ் சிகையும் நுவலிற் பிரமமோ***
***நூலது கார்ப்பாச நுண்சிகை கேசமாம்***
***நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்***
***நூலது அந்தணர் காணும் நுவலிலே.***

சொல்லுமிடத்துப் பூணூலை அணிந்து சிகை வைத்திருந்தால் அந்தண்மை ஆகுமோ? பூணூல் பருத்திப் பஞ்சு, சிறிய சிகை உரோமமாகும், இடைகலை, பிங்கலை சுழுமுனை ஆகிய மூன்று நாடிகளையும் ஒன்றர்க்கி உணர்வதே மறை முடிவு, அதன் பயன் பிரமநாடி சிறந்து, சிரசில் ஞானம் விளங்கும், சொல்லுமிடத்துப் பூணூலைத் தரித்த அந்தணர் உணர்வார்.

*231.* ***சத்தியம் இன்றித் தனிஞானந் தானின்றி***
***ஒத்த விடயம்விட் டோரும் உணர்வின்றிப்***
***பத்தியும் இன்றிப் பரன்உண்மை யின்றிப்***
***பித்தோறும் மூடர் பிராமணர் தாமன்றே.***

மெய்ப்பொருள் அறிவின்றி, தன்னை உணரும் ஞானமும் இன்றி, மனத்தோடு பொருந்திய விடய வாசனைகளை நீத்து உண்மையை உணருகின்ற உணர்வுமின்றி, மெய்யான பத்தியுமின்றி, மேலான பொருள் ஒன்று உண்டு என்ற நினைவின்றி, அறியாமை நிறைந்த மூடர் அந்தணராவாரோ, ஆகமாட்டார்.

*232.* ***திருநெறி யாகிய சித்த்சித் தின்றிக்***
***குருநெறி யாலே குருபதஞ் சேர்ந்து***
***கரும நியமாதி கைவிட்டுக் காணும்***
***துரிய சமாதியாம் தூய்மறை யோர்க்கே.***

மேன்மையான பிரணவ நெறியில் அறிவு அறியாமையின்றி, குரு உபதேசத்தினாலே திருவடியைப் பொருந்தி, பிரணவ நெறியில் செல்வதால் புறக்கிரியைகளை விட்டிருக்கும், தூய்மையான அந்தணர்க்கு ஒளியுடன் பொருந்தி நிற்றல் உண்டாம்.

*233.* ***மறையோ ரவரே மறையவ ரானால்***
***மறையோர்தம் வேதாந்த வாய்மையில் தூய்மை***
***குறையோர்தன் மற்ள்ள கோலா கலமென்***
***றறிவோர் மறைதெரிந் தந்தண ராமே.***

வேதங்களைப் பொருளுணர்ந்து ஓதுபவரே அந்தணராவார், ஆனால் மறைபவரது வேதாந்தம் உண்மையாகத் தூய்மையுடையது, வேதமல்லாத மற்றைய குறையுடைய நூல்களைக் கற்றல் ஆரவாரத்துக்கேயாம் என்று, அறிந்து ஓதுக்குபவர் மறைபோதிய அந்தணராவார்.

*235.* ***அந்தண்மை பூண்ட அருமறை அந்தத்துச்***
***சிந்தைசெய் அந்தணர் சேரும் செழும்புளி***
***நந்துதல் இல்லை நரபதி நன்றாகும்***
***அந்தியும் சந்தியும் ஆகுதி பண்ணுமே***

எல்லா உயிர்களிடத்தும் அருள் உள்ளங்கொண்ட, அருமையான வேத முடிவாகிய சிவத்தை இடைவிடாது நினைக்கும் அந்தணர், அடைகின்ற வளமான பூமி, வளமை குன்றுதல் இல்லை, அந்நாட்டு அரசனும் நல்லவனாவான், காலை மாலையாகிய இரு வேளைகளிலும் ஆகுதி செய்வார்கள்.

*235.* ***வேதாந்த ஞானம் விளங்க விதியிலோர்***
***நாதாந்த போதம் நணுகிய போக்கது***
***போதாந்த மாம்பரன் பாற்புகப் புக்கதால்***
***நாதாந்த முத்தியுஞ் சித்தியும் நண்ணுமே.***

வேதாந்த நெறியில் நிராசையாக நின்று ஞானம் அடைய ஊழின்றியவர், நாதாந்த முத்திபதம் எய்துவர், அறிவின் முடிவாம் ஞானம் உண்டாகிப் பரத்தைச் சேர்ந்து அடைந்தால் நாதாந்த முத்தியோடு இவ்வுலகில் சித்திகளும் பெறுவர்.

*236.* ***ஒன்றும் இரண்டும் ஒருங்கிய காலத்து***
***நன்றும் இருந்தும் நலம்பல பேசினும்***
***வென்று விளங்கும் விகிர்தனை நாடுவர்***
***சென்று வணங்கும் திருவுடை யோரே.***

பிராணனும் உச்சுவாச நிச்சுவாசங்களும் அடங்கிய காலத்து, மகிழ்ச்சியாக இருந்து நன்மையே பல பேசிக்கொண்டிருந்தாலும், மேலான முத்தியைப் பெறும் செல்வர்கள், யாவற்றையும் கடந்து விளங்கும் சிவத்தையே நாடுவர்.

*237.* ***தானே விடும்பற் றிரண்டும் தரித்திட***
***நானே விடப்படு மேதொன்றை நாடாது***
***பூமேவு நான்முகன் புண்ணியப் போகனாய்***
***ஓமேவு ஓராகுதிஅவி உண்ணவே.***

இறைவனை எண்ணிட அகப்பற்று புறப்பற்று ஆகிய இரண்டும் தானே நீங்கும், அகங்காரம் அறுபட்டுவிடும், பின்னர் எது ஒன்றையும் தேடாது, பூவிலே பொருந்திய பிரமனைப் போலப் புண்ணியத்தை விரும்பியவனாய், ஆகுதி செய்யப்படும் அவியை உண்ணவே பிரணவம் பொருந்தும்.

## 13. இராசதோடம்

இராசதோடம் - அரசனுக்குரிய குற்றம்.

*238.* ***கல்லா அரசனுங் காலனும் நேரொப்பர்***
***கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்***
***கல்லா அரசன் அறம்ஓரான் கொல்லென்பான்***
***நல்லாரைக் காலன் நணுகநில் லானே.***

கல்வியறிவு இல்லாத அரசனும் இயமனும் ஒருங்கு வைத்து எண்ணப்படுவர், ஆனால், கல்வியறிவில்லாத அரசனைக் காட்டிலும் இயமன் மிகவும் நல்லவன், கல்வியில்லாத அரசன் அறத்தின் வழி ஆராயாமல் கொல் என்று ஆணையிடுவான், அறத்தின் வழி நிற்கும் நல்லவரை இயமன் நெருங்கமாட்டான்.

*239.* ***நாள்தோறும் மன்னவன் நாட்டில் தவநெறி***
***நாள்தோறும் நாடி அவநெறி நாடானேல்***
***நாள்தோறும் நாடு கெடமூட நண்ணுமால்***
***நாள்தோறுஞ் செல்வம் நரபதி குன்றுமே.***

நாள்தோறும் அரசன் தன் நாட்டில், நன்னெறியினை முறையாக ஆராய்ந்து, அவன் நீதி முறைமையைச் செய்யாவிடின், நாள்தோறும் நாட்டில் வளம் குன்ற, நாட்டு மக்களிடையே அறியாமை பொருந்தும், நாள்தோறும் அரசனது செல்வமும் குறைந்து கொண்டே வரும்.

*240.* ***வேடநெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்***
***வேட நெறி நிற்போர் வேடம்மெய் வேடமே***
***வேட நெறி நில்லார் தம்மை விறல்வேந்தன்***
***வேட நெறி செய்தால் வீடது வாகுமே.***

வேடத்துக்குரிய நெறியில் அகமும் புறமும் ஒத்துநில்லாதார் வேடத்தை மட்டும் பூண்டுகொண்டு என்ன பயன்? ஆனால் வேடத்துக்குரிய நெறியில் பொருந்தி வாழ்பவரது வேடம் உண்மையான வேடமாகும், வேடத்துக்குரிய நெறியில் நில்லாதவரை வலிமை மிக்க அரசன், தண்டனை முதலியவற்றால் வேடத்துக்குரிய நெறியில் நிற்கச் செய்தால் அது வீடு பேற்றை அளிக்கும் வழியாகும்.

*241.* ***மூடங் கெடாதோர் சிகைநூல் முதற்கொள்ளில்***
***வாடும் புவியும் பெருவாழ்வு மன்னனும்***
***பீடொன் றிலனாகும் ஆதலாற் பேர்த்துணர்ந்***
***தாடம் பரநூற் சிகையறுத் தால்நன்றே.***

அறியாமை கெடாதவர் சிகை, பூணூல் முதலிய வேடங்களைக் கொண்டால், மண்ணுலகத்தில் உள்ளவர் வாடுவர், பெருவாழ்வுவ வாழ்கின்ற அரசனும் பெருமை இல்லாதவனாவான், ஆதலால் வேடத்தின் உண்மையை மீண்டும் ஆராய்ந்து அறிந்து, ஆடம்பரமாக அணியும் பூணூலையும் சிகையையும் களைந்துவிடுதல் நாட்டுக்கும் அரசனுக்கும் நன்மையாம்.

*242.* ***ஞானமி லாதார் சடைசிகை நூல்கண்ணி***
***ஞானிகள் போல நடிக்கின் றவர்தம்மை***
***ஞானிக ளாலேநரபதி சோதித்து***
***ஞானமுண் டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே.***

ஞானத்தை அடையாதவர் சடையும் சிகையும் பூணூலும் பெற்று, ஞானிகளைப் போல நடிக்கின்றவர்களை, ஞானிகளைக் கொண்டே இவரது உண்மையினை அரசன் சோதித்து, ஞானம் பெறும்படி செய்தால் நாட்டுக்கே நன்மை உண்டாகும்.

*243.* ***ஆவையும் பாவையும் மற்றற வோரையும்***
***தேவர்கள் போற்றுந் திருவேடத் தாரையுங்***
***காவலன் காப்பவன் காவா தொழிவனேல்***
***மேவும் மறுமைக்கு மீளா நரகமே.***

பசுவையும் மகளிரையும் மற்றும் அறநெறியில் நிற்பவரையும், தேவரும் வணங்கத்தக்க உண்மையான வேடத்தாரையும், அரசன் காத்தற்கு உரியவன், அவன் காக்கவில்லையாயின், அவன் மறுமையில் நித்திய நரகத்தை அடைவான்.

*244. திறந்தரு முத்தியுஞ் செல்வமும் வேண்டின்*
*மறந்தும் அறநெறியே ஆற்றல் வேண்டுஞ்*
*சிறந்தநீர் ஞாலஞ் செய்தொழில் யாவையும்*
*அறைந்திடில் வேந்தனுக் காறிலொன் றாமே.*

மேன்மையான மறுமைக்குரிய முத்தியும் இம்மைக்குரிய செல்வமும் வேண்டினால், அரசன் எப்போதும் நாட்டில் அறத்தையே நிலை நாட்டவேண்டும், சிறந்த கடலால் சூழப்பெற்ற உலகில் வாழ்கின்ற மக்கள் ஆகியோர் செய்கின்ற நல்வினை தீவினைப்பயன் யாவும், சொல்லப்புகின் அரசனுக்கு நன்மையோடு தீமையினும் ஆறில் ஒரு பங்கு உண்டாகும்.

*245. வேந்தன் உலகை மிகநன்று காப்பது*
*வாய்ந்த மனிதர்கள் அவ்வழி யாநிற்பர்*
*பேர்ந்திவ் வுலகைப் பிறர்கொள்ளத் தாங்கொள்ளப்*
*பாய்ந்த புலியன்ன பாவகத் தானே.*

அரசன் உலகைக் காப்பது மிக நன்றாய் இருக்கிறது! அங்குள்ள மக்களும் அரசனைப் போன்றே இருப்பர். மாறு கொண்டு இவனது நாட்டைப் பிற நாட்டான் கைப்பற்றவும், பிற நாட்டைத் தான் போரிட்டுக் கைப்பற்றவும், இவன் விளைவறியாது பாய்கின்ற புலி போன்ற கொடியவனாவான்.

*246. கால்கொண்டு கட்டிக் கனல்கொண்டு மேலேற்றிப்*
*பால்கொண்டு சோமன் முகம்பற்றி உண்ணாதோர்*
*மால்கொண்டு தேறலை உண்ணும் மருளரை*
*மேல்கொண்டு தண்டஞ்செய் வேந்தன் கடனே.*

பிராணனது இயக்கத்தைத் தடுத்து, மூலாதாரத்திலுள்ள மூலக்கனலைச் சிரசின் மேல் செலுத்தி, அங்குக் காணும் பால்போன்ற வெண்ணிற ஒளியைக் கொண்டு, மதிமண்டலம் அறிந்து அங்கு உண்டாகும் ஆனந்தத் தேனைப் பருகாதவராய், ஆனந்தம் விளைக்கும் என்று மயக்கங்கொண்டு கள்ளினை உண்ணும் மருட்சியாளரை, மேலும் இப்பழக்கத்துக்கு ஆளாகாதபடி செய்தல் அரச தர்மமாகும்.

*247. தத்தஞ் சமயத் தகுதிநில் லாதாரை*
*அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி*
*எத்தண் டமுஞ்செயும் அம்மையில் இம்மைக்கே*
*மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே.*

தத்தமக்குரிய சமய நெறியில் நில்லாதவர்களை, சிவன் அருளிய ஆகம முறைப்படி, அப்பெருமான் மறுபிறப்பில் எத்தகைய தண்டனையைக் கொடுத்துத் திருந்தும், இப்பிறப்பிலேயே தக்க தண்டனை கொடுத்துத் திருத்துவது அரசனது கடமையாகும்.

## 14. வானச் சிறப்பு

அஃதாவது, மழையின் பெருமை.

*248. அமுநூறு மாமழை நீரத னாலே*
*அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றுங்*
*கமுகூறு தெங்கு கரும்பொடு வாழை*
*அமுதூறுங் காஞ்சிரை ஆங்கது வாமே.*

அமுதத்தைப் போன்று வளப்பத்தைத் தருகின்ற மழைப்பெருக்கால், சுவையையுடைய பல மரங்கள் உலகத்தின்மேல் உண்டாகும், பாக்கு, இளநீரையுடைய தென்னை, கரும்பு, வாழை, அமுது அளிக்கும் சமாதி நிலைக்கான எட்டி முதலியன உண்டாகும்.

*249. வரையிடை நின்றிழி வான்நீர் அருவி*
*உரையில்லை உள்ளத் தகத்துநின் றூறு*
*நுரையில்லை மாசில்லை நுண்ணிய தெண்ணீர்*
*கரையில்லை எந்தை கழுமணி யாறே.*

சிரசாகிய மலையினின்றும் பெருகிவரும் ஒளிமயமான ஆகாய கங்கையை, உரைப்பதற்கு உரையில்லை, அது மனமண்டலத்தில் அன்பினால் ஊறும், பிருதிவிக்கலப்பின்மையால் நுரை இல்லை, அழுக்கில்லையாதலின் தெளிந்த தன்மையுடைய நீர், எந்தையாகிய பாவங்களைப் போக்குகின்ற ஆறு அகண்டமாதலின் கரையில்லை.

## 15. தானச் சிறப்பு

அஃதாவது, பிறர்க்கு இயன்ற அளவு கொடுத்தலின் பெருமை.

*250. ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்*
*பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்*
*வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்*
*காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே.*

யாவராயினும் கொடுங்கள், அவர் உயர்ந்தோர் இவர் தாழ்ந்தோர் என்று கருதாதீர், வருவிருந்து பார்த்திருந்து உண்ணுங்கள், பழமையைப் போற்றாதீர்கள், இம்மை மறுமையில் விருப்பம் உடையவரே! மிக விரைந்து உண்ண வேண்டா, காகங்கள் உண்ணும் காலத்தில் பிற காகங்களை அழைத்து உண்பதை அறியுங்கள்.

## 16. அறஞ்செய்வான் திறன்

அஃதாவது, இல்லையென்னாது ஈவாரது தன்மை.

*251. தாமறி வாரண்ணல் தான்பணி வாரவா*
*தாமறி வாரறந் தாங்கி நின் றாரவர்*
*தாமறி வார்சில தத்துவ ராவர்கள்*
*தாமறி வார்க்குத் தமர்பர னாமே.*

தம்மை அறிவார் இறைவன் திருவடியை வணங்குபவராவர், தம்மை அறிபவரே அறம் செய்யும் நெறியில் நின்றவராவர், தம்மை அறிபவரே உண்மையை உணர்பவராவர், தம்மை அறிவார்க்கு இறைவனே உறவினனாக உள்ளான்.

*252. யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை*
*யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை*
*யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி*
*யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.*

உண்ணுவதற்கு முன்னே இறைவனுக்குப் பச்சிலை கொண்டு பூசித்தல் யாவர்க்கும் ஆகும், அவ்வாறே பசுவுக்கும் ஒரு வாயளவு புல் கொடுத்தல் யாவர்க்கும் ஆகும், அதேபோல் உண்பதற்கு முன்னே சிறிதளவு பிறர்க்குக் கொடுத்தல் ஆகும், இல்லையெனில் பிறர் மனம் நோகாதவாறு இனிமையாகப் பேசுதல் யாவர்க்கும் ஆகும்.

*253. அற்றுநின் றாருண்ணும் ஊணே அறனென்னுங்*
*கற்றன போதங் கமழ்பவர் மானிடர்*
*உற்றுநின் றாங்கொரு கூவற் குளத்தினிற்*
*பற்றிவந் துண்ணும் பயன் அறி யாரே.*

இருவகைப் பற்றும் அற்று நின்ற சிவஞானியாருக்கு அளிக்கும் உணவே அறம் என்று நூல்கள் கூறும், கல்வியால் உண்டான அறிவு விளங்கும் மனிதர்கள், பார்த்திருந்து, ஆங்கு ஒரு கூவல் குளத்தினில், கிணற்றங்கரையிலோ குளத்துங்கரையிலோ தங்கியுள்ள சிவஞானியரை அழைத்து வந்து உண்பிக்கும் பயன் அறியவில்லையே!

*254. அழுக்கினை ஓட்டி அறிவை நிறையீர்*
*தழுக்கிய நாளில் தருமமுஞ் செய்வீர்*
*விழித்திருந் தென்செய்வீர் வெம்மை பரந்த*
*விழிக்கவன் றென்செய்வீர் ஏழைநெஞ் சீரே.*

அறம் செய்யா உள்ளத்தை உடையோரே! காமம் வெகுளி மயக்கம் ஆகிய அழுக்கினை அகற்றி அறிவினைப் பெருக்கவில்லையே, செல்வம் தழுவிய நாளில் அறமும் செய்யவில்லை, உலக நோக்கில் காலத்தைக் கழித்து என்ன செய்யப் போகின்றீர், இவ்வுடல் எரிந்து அழியும் போது அறஞ்செய்யாது காத்தவை என்ன ஆகும்? (சிந்தியுங்கள்).

*255. தன்னை அறியாது தானல என்னாதிங்*
*கின்மை அறியா திளையரென் றோராது*
*வன்மையில் வந்திடுங் கூற்றம் வருமுன்னந்*
*தன்மையின் நல்ல தவஞ்செய்யு மீரே.*

சர்வ வல்லமையுடன் உயிரை உடலினின்றும் பிரிக்கும் காலன், உன்னுடைய நிலைமை அறியாது, நீ நல்லவன் என்றும் கருதாது, இங்கு உனக்குற்ற வறுமையும் உணராது, நீ வயதில் இளையவன் என்று கருதிடாது, நீர் காலன் வந்து உயிரைக் கொண்டுபோவதற்கு முன் உடலை நிலைபேறாகச் செய்யும் நல்ல தவத்தினைச் செய்யும்.

*256. துறந்தான் வழிமுதல் சுற்றமும் இல்லை*
*இறந்தான் வழிமுதல் இன்பமும் இல்லை*
*மறந்தான் வழிமுதல் வந்திலன் ஈசன்*
*அறந்தான் அறியும் அளவறி யாரே.*

துறந்தோர்க்கு இவ்வுலகில் ஒருவித உறவும் இல்லை, இறந்தவர்க்கு இவ்வுலகப் பொருள்களினால் எவ்வித இன்பமும் இல்லை, இம்மையில் அறஞ்செய்யாது மறந்தவர்க்கு வழித்துணையாக ஈசன் வருவதில்லை, இம்முத்தைறத்தினரும் அறத்தினைச் செய்யும் முறையை அறியமாட்டார்.

*257. தான்தவஞ் செய்வதாஞ் செய்தவத் தவ்வழி*
*மான் தெய்வ மாக மதிக்கும் மனிதர்கள்*
*ஊன்தெய்வ மாக உயிர்க்கின்ற பல்லுயிர்*
*நான்தெய்வ மென்று நமன்வரு வானே.*

அறிவையே தெய்வமாகக் கருதும் மனிதர்கள், முற்பிப்பில் செய்த தவத்தின் வழி தாம் தவம் செய்து மேன்மையடைவர், உடம்பே தெய்வமென்று கருதி வாழ்கின்ற உயிர்க்கூட்டம், நான் தெய்வமென்று இயமன் வருவதை அறியாது அழிவர்.

*258. தினைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி*
*இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு*
*கிளைக்குந் தனக்கும்அக் கேடில் புகழோன்*
*விளைக்கும் தவம் அறம் மேற்றுணை யாமே.*

நம்மை ஆழ்த்துகின்ற வினையாகிய கடலிலிருந்து கரையேறுவதற்குரிய தோணியாக இருந்து, நமக்கும் நமது சுற்றத்தார்க்கும் களைப்பினைப் போக்கிக் காக்கும் இருவழிகள் உள்ளன, அவை அழியாப் புகழினையுடைய அச்சிவத்தினைப் பற்றி நின்று ஆற்றப்பெறும் தவம் ஒன்று, இவ்வாழ்க்கை பற்றி நின்று செய்யும் அறம் மற்றொன்று, இவையே மறுமைக்குத் துணையாவன.

*259. பற்றது வாய்நின்ற பற்றினைப் பார்மிசை*
*அற்றம் உரையான் அறநெறிந் கல்லது*
*உற்றுங்க ளால்ஒன்றும் ஈந்தது வேதுணை*
*மற்றண்ணல் வைத்த வழிகொள்ளு மாறே.*

பற்றுக்கோடு அதுவேயாய் நின்ற மெய்பொருளை, உலகில் குறை கூறாதவனாய், அறநெறி அல்லது பிற நெறியில் செல்லாது பொருந்தி, நீங்கள் பிறர்க்குக் கொடுத்த ஒன்றுமே துணையாகும், அதுவே சிவம் வைத்த முத்தியடைவதற்குரிய வழியுமாகும்.

## 17. அறஞ்செயான் திறம்

அஃதாவது, தருமம் செய்யாதவாறு இயல்பு.

*260. எட்டி பழுத்த இருங்கனி வீழ்ந்தன*
*ஒட்டிய நல்லறஞ் செய்யா தவர்செல்வம்*
*வட்டி கொண் டீட்டியே மண்ணின் முகந்திடும்*
*பட்டிப் பதகர் பயன்அறி யாரே.*

பொருந்திய நல்ல அதங்களைச் செய்யாதவரது செல்வம், எட்டி மரத்தினது பெரிய பழம் பழத்து வீழ்ந்து பயன்படாது கிடந்தது போலாம், வட்டி வாங்கி ஈட்டி உலகில் பிறர் பொருளைக் கவர்ந்திடும், வஞ்சனையுடைய பாதகர்கள் செல்வத்தின் பயனை அறியாதவராவர்.

*261. ஒழிந்தன காலங்கள் ஊழியும் போயின*
*கழிந்தன கற்பனை நாளுங் குறுகிப்*
*பிழிந்தன போலத்தம் பேரிடர் ஆக்கை*
*அழிந்தன கண்டும் அறம்அறி யாரே.*

பல ஆண்டுகள் கழிந்தன, பலப்பல ஊழியும் சென்றன, எத்தனையோ மனக்கோட்டைகள் தகர்ந்தன, வாழ்நாளும் குறைந்து, சத்து நீங்கின சக்கை போலவுள்ள துன்பத்தைத் தருகின்ற தம் உடம்பு, பயனற்று அழிவதைப் பார்த்தும் உலகினர் அறத்தின் மேன்மையினை அறியாது உள்ளனரே!

*262. அறம்அறி யார்அண்ணல் பாதம் நினையுந்*
*திறம்அறி யார்சிவ லோக நகர்க்குப்*
*புறம்அறி யார்பலர் பொய்மொழி கேட்டு*
*மறம்அறி வார்பகை மன்னிநின் றாரே.*

உலகில் பலர் அறம் இன்னதென்று அறிகிலர், அறத்தின் பயனாக விளங்கும் இறைவன் திருவடியை எண்ணும் முறைமையையும் அறியவில்லை, சிவநகருக்குப் பக்கமாகிய சொக்காதி நிலைகளையும் அறியார், உலோகாயதர் போன்றோர் கூறும் பொய் மொழி கேட்டு இவ்வுலகப் பொருளை விரும்பிப் பாவ காரியங்களைச் செய்வார், அதனால் பிறப்பு இறப்பாகிய பகையைப் பொருந்தி நின்றார்கள்.

*263.* ***இருமலுஞ் சோகையும் ஈளையும் வெப்புக்***
***தருமஞ்செய் யாதவர் தம்பால தாகும்***
***உருமிடி நாக முரோணி சுழலை***
***தருமஞ்செய் வார்பக்கம் தாழகி லாவே.***

இருமலும் சோகையும் கோழையும் சுரமும் ஆகியவை, தருமம் செய்யாதவரைச் சென்று அடையும், மரணம் விளைக்கும் மின்னலும் இடியும் பாம்புக்கடியும் தொண்டை நோயும் வயிற்றுக்கட்டியும் ஆகியவை, தருமம் செய்பவர் பக்கம் அணுகா.

*264.* ***பரவப் படுவான் பரமனை ஏத்தார்***
***இரவலர்க் கீதலை யாயினும் ஈயார்***
***கரகத்தால் நீராட்டிக் காவை வளர்க்கார்***
***நரகத்தில் நிற்றிரோ நல்நெஞ்சி னீரே.***

உலோகாயத மதத்தின் போதனையால் தம் புகழை விரும்பி நிற்பார் இறைவனை வழிபட மாட்டார், இனி, தம்மை நோக்கி வந்து யாசித்தவர்களுக்குச் சிறிதும் கொடுக்கமாட்டார், வழிப் போக்கர் தங்கச் சீரப்பிரயாசை கொண்டு குடத்தினால் நீர் விட்டுச் சோலைகளை வளர்க்கவும் செய்யார், இத்தகைய நல்ல எண்ணம் கொண்டவர்களே! நரகத்தில் நிலையான வாசம் விரும்பியுள்ளீர்களோ?

*265.* ***வழிநடப் பாரின்றி வானோர் உலகய்***
***கழிநடப் பார்நடந் தார்கரும் பாரு***
***மழிநடக் கும்வினை மாசற வோட்டிட்***
***டொழிநடப் பார்வினை ஓங்கிநின் றாரே.***

அறவழியில் நடப்பவராக இல்லாமல், தேவருலக இன்பம் நீங்கும் வண்ணம் தீயவழியில் நடப்பவர், இருள் சூழ்ந்த உலகமாகிய நரகத்தில் நடப்பவராவர், காமம் வெகுளி மயக்கம் ஆகிய குற்றங்களைக் களைந்து, அவற்றினின்றும் நீங்கிச் சன்மார்க்கத்தில் நிற்பவர் வினைகடந்து நின்றவராவர்.

*266.* ***கனிந்தவர் ஈசன் கழலடி காண்பர்***
***துணிந்தவர் ஈசன் துறக்கம தாள்வர்***
***மலிந்தவர் மாளுந் துணையுமொன் றின்றி***
***மெலிந்த சினத்தினுள் வீழ்ந்தொழில் தாரே.***

எல்லா உயிர்களிடத்தும் கருணை காட்டுபவர் இறைவனது திருவடியைக் காண்பர், விரக்தி கொண்டு உலகினை விட்டுத் துணிவுடன் தவம் செய்தவர் சாயுச்சிய நிலையை அடைவர், உலக நிலையில் நின்று அறனல்லவை செய்பவர் வழித்துணையாகிய இறைவன் அருளின்றி மாள்வர், காலனுடைய சினத்துக்கு ஆளாகிப் பயத்தைத் தரும் நரகில் வீழ்ந்து அழிவர்.

*267.* ***இன்பம் இடரென் றிரண்டுற வைத்தது***
***முன்பவர் செய்கையி னாலே முடிந்தது***
***இன்பம் அதுகண்டும் ஈகிலாப் பேதைகள்***
***அன்பிலார் சிந்தை அறம்அறி யாரே***

உலகில் இன்பமும், துன்பமும் ஆகிய இரண்டும் பொருந்தியிருப்பது, முற்பிறப்பில் அவரவர் செய்த அற்செயலுக்கும், மறச்செயலுக்கும் ஏற்ப அமைந்ததாகும், அறத்தினால் இன்பம் அடைதலைக் கொண்டு வைத்தும், கொடுப்பது அறியாப் பேதைகள் அன்பில்லாத சிந்தையுடையராய், அறத்தினை அறியமாட்டார்.

*268.* ***கெடுவது மாவதுங் கேடில் புகழோன்***
***நடுவல்ல செய்தின்ப நாடவும் ஒட்டான்***
***இடுவதும் ஈவதும் எண்ணுமின் இன்பம்***
***படுவதும் செய்யிற் பசுவது வாமே.***

கேட்டினையும் ஆக்கத்தையும் ஊட்டச் செய்கின்ற கேடில்லாத இறைவன், நேர்மையற்ற செயலைச் செய்து இன்பம் பெற அனுமதிக்கவும் மாட்டான், ஆகவே, தக்கார்க்கு இடுதலையும் வறியார்க்கு ஒன்று ஈதலையும் நினையுங்கள், பிறர் இன்பம் கெடும்படியாக நடப்பது மிருகத்தனமாகும்.

*269.* ***செல்வங் கருதிச் சிலர்பலர் வாழ்வெனும்***
***புல்லறி வாளரைப் போற்றிப் புலராமல்***
***இல்லங் கருதி இறைவனை ஏத்துமின்***
***வில்லி இலக்கெய்த விற்குறி யாமே.***

சிலருக்கும் பலருக்கும் வாழ்வு தருகிறோம் எனத் தருக்கும் அற்ப அறிவுடையாரை, அவரது அழிகின்ற செல்வத்தைக் கருதி வாழ்த்தி வாடாமல், அழியாத செல்வமாகிய வீடுபேற்றினை அளிக்கும் இறைவனைக் கருதி வாழ்த்துங்கள், வில்லாளன் எய்த அன்பு இலக்கினைத் தவறாது அடையவது போல உங்கள் வறுமையைத் தவறாது போக்கி இன்பம் தருவான்.

## 18. அன்புடைமை

அஃதாவது, இறைவன்பால் கொள்ளும் அன்பை உடைமை.

*270.* ***அன்பு சிவம்இரண் டென்பர் அறிவிலார்***
***அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்***
***அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்***
***அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.***

அனுபவமில்லாதவர் அன்பாகிய சத்தியும் சிவமாகிய அறிவும் இரண்டும் பொருள் என்பர். அன்பின் முதிர்வினால் சிவமாகிய அறிவு விளங்கும் என்பதை உயர்ந்தோர் தாழ்ந்தோராகிய எல்லோரும் உணர்வதில்லை, அன்புதான் சிவத்தை விளங்கும்படி செய்கிறது என்பதை எல்லோரும் உணர்ந்த பின், அன்பே வடிவாய் சிவமாந்தன்மை எய்தியிருந்தார்.

*271.* ***பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்***
***மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை***
***துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்***
***பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே.***

பொன்னிலும் பிரகாசமுடைய புலித்தோலைப் போன்ற மஞ்சள் ஒளியில் விளங்குபவன், பளிச்சென்று பிரகாசிக்கும் சிற்றொளியையுடைய பிறையானது, பொருந்தியிருக்க வெண்ணீற்று ஒளியில் விளங்கும் கூத்தனுக்கு, என்னுடைய பேரன்பு கலந்திருந்தது.

*272.* ***என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்***
***பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினுந்***
***அன்போ டுருகி அகங்குழை வார்க்கனறி***
***என்போன் மணியினை யெய்த ஒண் ணாதே.***

எலும்பையே விறகாகக் கொண்டு உடம்பின் தசையை அறுத்து, நெருப்பிலிட்டுப் பொன்னைப் போலக் காய்ச்சி வறுத்தாலும், அன்போடு உருகி மனம் நெகிழ்வார்க்கல்லது, என்னைப் போல இறைவனை அடைய முடியாது.

*273.* ***ஆர்வம் உடையவர் காண்பார் அரன்தன்னை***
***ஈரம் உடையவர் காண்பார் இணையடி***
***பாரம் உடையவர் காண்பார் பவந்தன்னைக்***
***கோர நெறிகொடு கொங்குபுக் காரே.***

மிக்க அன்புடையவர் இறைவனை உணர்வர், அன்பினால் உண்டாகும் மனம் நெகிழ்வுடையார் விந்து நாதமாகிய திருவடிகளைச் சிரசில் சூடுவர், சம்சாரமாகிய சுமையைத் தாங்கி வருந்துபவர் பிறவியாகிய சாகரத்தில் உழல்வர், அன்பில்லாத அவர் துன்பமாகிய காட்டகத்தே நெறி அறியாது திண்டாடுவர்.

*274.* ***என்னன் புருக்கி இறைவனை ஏத்துமின்***
***முன்னன் புருக்கி முதல்வனை நாடுமின்***
***பின்னன் புருக்கிப் பெருந்தகை நந்தியுந்***
***தன்னன் பெனக்கே தலைநின்ற வாறே.***

பல பேசி என்ன பயன்? அன்பினால் மனத்தை உருக்கி இறைவனை ஏத்தி வழிபடுங்கள், தலையாய அன்பினால் மனத்தை உருக்கித் தலைவனை நாடுங்கள், அவ்வாறு நாடிய எனக்குப் பெருமையுடைய குருநாதனும் பாசத்தைப் போக்கி, தனது கருணையை என்னிடத்துக் காட்டும் வகை இவ்வாறாம்.

*275.* ***தானொரு கால்ஞ் சயம்புவென் றேத்தினும்***
***வானொரு காலம் வழித்துணை யாய்நிற்குந்***
***தேனொரு பால்திகழ் கொன்றை அணிசிவன்***
***தானொரு வண்ணம்என் அன்பில்நின் றானே.***

சிவன் தானே ஒருவனாய் நின்று நாளில் 'சுயம்பு' என்று எண்ணி வழிபடின், வானத்தில் ஒரு காலத்தில் பொருந்தி வழிபடுவார்க்கு உற்ற துணையாய் இருக்கும், தேனையொத்த இன்பந்தரும் சத்தியை ஒரு பக்கத்தில் உடையவனாகப் பொன்னொளியில் விளங்கும் சிவன், தானே ஒரு நிறத்தைப் பெற்று எனது அன்பு வலையில் அகப்பட்டு நின்றான்.

*276. முன்படைத் தின்பம் படைத்த முதலிடை*
*அன்படைத் தெம்பெரு மானை அறிகிலார்*
*வன்படைத் திந்த அகலிடம் வாழ்வினில்*
*அன்படைத் தான்தன் அகலிடத் தானே.*

உலகினைப் படைத்து எல்லா இன்பங்களையும் அமைத்தருளிய இறைவனிடம், அன்பினைச் செலுத்தி எல்லா உயிர்க்கும் தலைவனாகிய இறைவனை அறியாது கெடுகின்றனர், உறுதியைத் தந்து இவ்வுலக வாழ்வில், அன்பைப் படைத்த பெருமான் அகண்ட உலகமாகவும் உள்ளான்.

*277. கருத்தறு செம்பொன்செய் காய்கதிர்ச் சோதி*
*இருத்தியும் வைத்தும் இறைவன்என் றேத்தியும்*
*அருத்தியுள் ஈசனை யாரருள் வேண்டில்*
*விருத்தி கொடுத்திடும் விண்ணவர் கோனே.*

கருத்திலே பொருந்துகின்ற உருக்குமுகத்துப் பிரகாசிக்கும் செம்பொன்னைப் போன்ற சோதி வடிவானவனை, நினைத்தும் அமைத்து வைத்தும் அவனையே 'தலைவ' என்று ஏத்தியும், உள்ளத்தில் அன்புகொண்டு அவனை யார் அருள் வேண்டினாலும், தேவர் தலைவனாகிய அப்பெருமான் அவ்வொளியில் நின்று சிவவொளியைப் பெருகச் செய்வான்.

*278. நித்தலும் துஞ்சும் பிறப்பையுஞ் செய்தவன்*
*வைத்த பரிசறிந் தேயு மனிதர்கள்*
*இச்சையு ளேவைப்பர் எந்தை பிரான் என்று*
*நச்சியே அண்ணலை நாடுகி லாரே.*

உயிர்களின் வினைக்கீடாக நாளும் இறப்பையும் பிறப்பையும் அமைத்தவன், வைத்த முறைமையினை அறிந்திருந்த மக்கள், உலக போகத்தில் விருப்பத்தைச் செலுத்தவர், எந்தை எம்பிரான் என்று விரும்பி அண்ணலாகிய சிவனை நாடவில்லை.

*279. அன்பினுள் ளான்புறத் தானுட லாயுள்ளான்*
*முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவன்*
*அன்பிளுள் ளாகிஅமரும் அரும்பொருள்*
*அன்பினுள் ளார்க்கே அணைதுணை யாமே.*

தன்னை அறியும் அறிவு கொண்டவரிடம் அவ்வன்பில் நின்றருளுவான், தன்னில் நிற்பது போலவே பிறரிடம் நிற்பவனும் அவனே, அன்பே உடலாகவுள்ளவன், உலகத்தோற்றத்துக்கு முன்னும் உலக அழிவுக்குப் பின்னும் அழியாது நிற்பவன், ஆத்ம விசாரனை செய்யும் முனிவர்க்கும் அவனே தலைவன், அவனிடம் யாரொருவர் அன்பு கொண்டாரோ அவரிடம் நிலையாகப் பொருந்தும் அரிய பொருளாயுள்ளவன், அன்பின் வழி அணுகுவோர்க்கு அவன் துணையாக இருந்து உய்விப்பான்.

## 19. அன்பு செய்வாரை அறிவன் சிவன்

அஃதாவது, அன்பே சிவமானது என்பதை அறிவாரைச் சிவன் அறிவான்.

*280. இகழ்ந்ததும் பெற்றதும் ஈசன் அறியும்*
*உகந்தருள் செய்திடும் உத்தம நாதன்*
*கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு*
*மகிழ்ந்தன்பு செய்யு மருளது வாமே.*

உயிர்கள் தன் மட்டு அன்பு செய்தலை இகழ்ந்ததையும் மெய்யன்பு கொண்டிருத்தலையும் இறைவன் அறிவான், மேலோனாகிய அத்தலைவன் அதற்கேற்ப மகிழ்ந்து அருள் செய்வான், தன்மாட்டுத் தளிர்த்து வரும் அன்பினைப் புரிய வல்லார்க்கு, மகிழ்ச்சி கொண்டு அன்பு செய்யும் அளவுக்கு அருளை வழங்குவான்.

*281. இன்பப் பிறவிக் கியல்வது செய்தவன்*
*துன்பப் பிறவித் தொழில்பல என்னினும்*
*அன்பிற் கலவிசெய் தாதிப் பிரான்வைத்த*
*முன்பப் பிறவி முடிவது தானே.*

மக்கள் பேரின்பம் அடையப் பிறவியில் இயல்பான பல சாதனைகளைக் கொடுத்த இறைவன், துன்பம் நிறைந்த பிறப்பில் இவர் எத்தொழிலைச் செய்தாலும், செலுத்துகின்ற அன்பில் கலக்க, ஆதியாகிய பெருமான் முன்னே அமைத்துக்கொடுக்க, பிறவியானது முடிவடையும்.

282. *அன்புறு சிந்தையின் மேலெழும் அவ்வொளி*
*இன்புறு கண்ணியொ டேற்க இசைந்தன*
*துன்புறு கண்ணியைந் தாடுந் துடக்கற்று*
*நண்புறு சிந்தையை நாடுமின் நீரே.*

அன்பு பொருந்திய சிந்தையின் மேல் விளங்கும் சிவமாகிய ஒளி, இன்பம் வழங்குகின்ற கண்ணையுடைய இச்சத்தியோடு அன்பரை ஏற்று அருள் புரியத் திருவுளங்கொள்வான், அவ்வாறு ஏற்கத் திருவுளங்கொண்டமையின் வலை போன்ற ஐம்பொறிகளின் தொடர்பு அறுபட்டு நீங்கும், அப்பொழுது நன்மை பெற்ற சிந்தையை நீங்கள் இறைவன்பால் தொடர்பு கொண்டு துன்புறு கண்ணியை அகற்றி நில்லுங்கள்.

283. *புணர்ச்சியுள் ஆயிழை மேல்அன்பு போல*
*உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்கவல் லாருக்*
*குணர்ச்சியில் லாது குலாவி உலாவி*
*அணைத்தலும் இன்பம் அதுவிது வாமே.*

சிற்றின்பத்தில் மகளிர்மேல் வைத்த அன்பு போல, சிரசின்மேல் உதிக்கும் பரிச உணர்வில் மனம் பதிவுண்டு இருக்க வல்லாருக்கு, உணர்வு கெட்டு நாதத்தோடு பொருந்தித் துவாதசாந்த வெளிக்குச் சென்று கூடலும், அங்குப் பெறும் பேரின்பம் இங்குப் பெற்ற சிற்றின்பம் போல இருக்கும்.

284. *உற்றுநின் றாரொடு மத்தகு சோதியைச்*
*சித்தர்கள் என்றுந் தெரிந்தறி வார்இல்லை*
*பத்திமை யாலே பணிந்தடி யார்தொழ*
*முத்தி கொடுத்தவர் முன்புநின் றானே.*

முன்மந்திரத்தில் கூறிவாறு பேரின்பத்தில் திளைத்திருந்தாரோடும் விளங்கும் சோதியாகிய இறைவனை, சித்திகளை உடையவர் என்று ஆராய்ச்சியினால் அறிந்துவிட முடியாது. ஆனால் அடியார்கள் பத்தியோடு அவனருளாலே அவனை வணங்க, அவர்கட்கு வீடு பேற்றை அளித்து அவர்கள் முன்பு விளங்கித் தோன்றினான்.

285. *கண்டேன் கமழ்தரு கொன்றையி னான் அடி*
*கண்டேன் கரியுரி யான்றன் கழலினை*
*கண்டேன் கமல மலர்உறை வானடி*
*கண்டேன் கழலதென் அன்பினுள் யானே.*

வாசனை தரும் கொன்றைப் பூப்போன்ற மஞ்சள் ஒளிக்கிரணத்தை உடையவனைக் கண்டேன், காரிருளாகிய ஆணவமான யானையைக் கிழித்தவனுடைய திருவடிகளைக் கண்டேன், மூலாதாரம் கமலத்தில் விளங்குபவனைக் கண்டேன், எனது அன்பில் அவனது திருவடிகள் விளங்குவதாக நான் கண்டேன்.

286. *நம்பனை நானா விதப்பொரு ளாகுமென்*
*றும்பரில் வானவர் ஓதுந் தலைவனை*
*இன்பனை இன்பத் திடைநின் றிரதிக்கும்*
*அன்பனை யாரும் அறியகி லாரே.*

நம்பத்தகுந்தவனும், எல்லாப் பொருளாகவும் உள்ளான் என்று, வானுலகில் தேவர்கள் போற்றும் தலைவனும், இன்ப வடிவானவனும், சீவர்களது இன்பத்தில் பொருந்தி மகிழ்கின்ற அன்பு வடிவானவனும் ஆகிய இறைவன், யாரும் அறிய முடியவில்லை.

287. *முன்பு பிறப்பும் இறப்பும் அறியாதார்*
*அன்பில் இறைவனை யாம்அறி வோம்என்பர்*
*இன்பப் பிறப்பும் இறப்பும் இலான்நந்தி*
*அன்பி லவனை அறியகி லாரே.*

நந்தியாகிய இறைவன் இன்பத்தால் வந்த பிறப்பும் இறப்புமில்லாதவன், முன்பு அவனை வணங்கிப் பிறப்பு இறப்பு அறியாத ஞானியர், "அன்பினால் இறைவனை வழிபட்டு நாங்கள் அவனை உணர்ந்திருக்கின்றோம்" என்பர். அங்ஙனமிருந்தும் ஏனையோர் அவனை உணர்ந்து பிறப்பு இறப்பைப் போக்கிக் கொள்ள அறியவில்லையே !

288. *ஈசன் அறியும் இராப்பக லுந்தன்னைப்*
*பாசத்துள் வைத்துப் பரிவுசெய் வார்களைத்*
*தேசுற் றிருந்து செயலற் றிருந்திடில்*
*ஈசன்வந் தெம்மிடை ஈட்டிநின் றானே.*

இரவும் பகலும் இடைவிடாது அவனை அன்பினுள் வைத்துப் போற்றுவார்களை, இறைவன் அறிவான், ஆதலால் நாம் ஒளிபெற்று ஒளியில் நின்று நமக்கென ஒர செயலின்றியிருப்பின், இறைவன் எழுந்தருளி வந்து நம்மிடை பிரிப்பின்றி உடனுறைவான்.

*289.* *விட்டுப் பிடிப்பதென் மேதகு சோதியைத்*
*தொட்டுத் தொடர்வன் தொலையாப் பெருமையை*
*எட்டுமென் னாருவி ராய்நின்ற ஈசனை*
*மட்டுக் கலப்பது மஞ்சன மாமே.*

மேலாகிய ஒளி வடிவாகிய இறைவனை விடுவதும் மீண்டும் பிடிப்பதும் எதற்காக, அவனைச் சிக்கெனப் பற்றிக் கொண்டு அவன் வழியே நான் செல்வேன், அங்ஙனம் எல்லையில்லாப் பெருமையைப் பெறுவேன், எனது உயிருக்குயிராய்க் கலந்து நின்ற இறைவனை, இனிமையாகக் கலப்பதே நீராடலாகும்.

## ௨0. கல்வி

கல்வியாவது, சிவானுபவத்தைத் தரும் கல்வி.

*290.* *குறிப்பறிந் தேனுடல் உயிரது கூடிச்*
*செறிப்பறிந் தேன்மிகு தேவர் பிரானை*
*மறிப்பறி யாதுவந் துள்ளம் புகுந்தான்*
*கறிப்பறி யாமிருங் கல்விகற் றேனே.*

உடல் வந்த காரணத்தை அறிந்தேன். உயிர் அந்த உடலோடு பொருந்திச் செறிந்துள்ளதை அறிந்தேன், அதனால் தேவதேவனாகிய இறைவனும் எவ்விதமான தடையுமின்றி என் மனத்தைத் தனக்கு இடமாக்கிக்கொண்டான், உவர்த்தலில்லாத மிகுகின்ற அனுபவ அறிவைப் பெற்றேன்.

*291.* *கற்றறி வாளர் கருதிய காலத்துக்*
*கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு*
*கற்றறி வாளர் கருதி உரைசெய்யுங்*
*கற்றறி காட்டக் கயலுள வாக்குமே.*

உண்மைக் கல்வி கற்றவர் சிந்தித்துப் பார்க்கும்போது, அவர்கள் கருத்தில் ஞானக் கண் புலனாகிறது, அவர்கள் அவ்வாறு புலனாகும் உண்மையைச் சிந்தித்துப் பிறர்க்கு உரைப்பர், கல்தூண் போன்று சலனமற்றிருந்து பிறருக்கு உணர்த்தி அவர்களது ஞானக்கண்ணை விளங்கும்படி செய்வர்.

*292.* *நிற்கின்ற போதே நிலையுடை யான்கழல்*
*கற்கின்ற செய்மின் கழிந்தலும் பாவங்கள்*
*சொற்குன்றல் இன்றித் தொழுமின் தொழுதபின்*
*மற்றொன் றிலாத மணி விளக் காமே.*

எடுத்த உடலில் உயிருள்ள போதே உடல் நிலையாமையை உணர்ந்து உயிர்க்கு உறுதி பயக்கும் நிலையான பொருளான இறைவனுடைய ஞானத்தைப் பெற முயலுங்கள், உங்களுடைய பாவங்கள் நீங்கிவிடும், சொல்லில் வழுவின்றி இறைவனை ஏத்துங்கள், அவ்வாறு ஏத்தினால் ஒப்பிட்டுக் கூறமுடியாத சுய சோதியான சிவன் விளங்கித் தோன்றுவான்.

*293.* *கல்வி யுடையார் கழிந்தோடிப் போகின்றார்*
*பல்லி யுடையார் பரம்பரிந் துண்கின்றார்*
*எல்லியுங் காலையும் ஏத்துமி னிறைவனை*
*வல்லியுள் வாதித்த காயமு மாமே.*

உண்மையில் பிரணவ அறிவில்லாத உலகியல் கல்வி கற்றவர்கள் பிரணவத்தினின்றும் விலகிய வழியில் செல்கின்றனர், உலகியல் பற்றுடையோர் குண்டலியின் ஆற்றலைப் பெருக்காது வீணாக்குகின்றனர், இரவும் பகலும் இறைவனை நினைத்து வழிபாடு செய்யுங்கள், இரசவாதம் செய்யப் பெற்ற பொன்போலக் குண்டலினி ஆற்றலால் அழியா உடல் (பிரணவ தேகம்) அமையும்.

*294.* *துணையது வாய்வருந் தூயநற் சோதி*
*துணையது வாய்வருந் தூயநற் சொல்லாந்*
*துணையது வாய்வருந் தூயநற் கந்தந்*
*துணையது வாய்வருந் தூயநற் கல்வியே.*

இறை வழிபாடு செய்வார்க்குத் தூய்மையான சோதி துணையாக வரும், நல்ல பிரணவம் அவர்களுக்குத் துணையாக விளங்கும், சுக்கிலம் கெடாது தூய்மையுற்று உடலுக்கு உறுதுணையாய் ஒளியாகி நிற்கும், பிரணவக் கல்வியே பிறவியில் துணையாய் இருந்து வீடுபேற்றை அளிக்கும்.

***295.*** ***நூலொன்று பற்றி நுனியேற மாட்டாதார்***
***பாலொன்று பற்றினாற் பண்பின் பயன்கெடுங்***
***கோலொன்று பற்றினாற் கூடாப் பறவைகள்***
***மாலொன்று பற்றி மயங்குகின் றார்களே.***

உடம்பிலுள்ள சுழுமுனை நாடியைப் பற்றிச் சிரசின் உச்சியில் பிரமரந்திரம் செல்லமாட்டாதார், காம விகாரம் கொண்டால் சிவயோகத்தின் பயன் கிட்டாது கெடுவர், முதுகந்தண்டைப் பற்றிச் சிரசின்மேல் சென்றவரிடம் இந்திரியங்கள் சேட்டை செய்யா, இதனை அறியாது கீழேயுள்ள தத்துவங்களின் இயல்பில் மயங்கி நன்மை அறியாமல் கெடுகின்றனர்.

***296.*** ***ஆய்ந்துகொள் வார்க்கரன் அங்கே வெளிப்படுந்***
***தோய்ந்த நெருப்பது தூயம்மணி சிந்திடும்***
***ஏய்ந்த இளமதி எட்டவல் லார்கட்கு***
***வாய்ந்த மனமல்கு நூலேணி யாமே.***

சுழுமுனையின் மேல் சென்றவர்க்குத் துன்பம் களையும், நாத தத்துவத்தில் வெளிப்படுவான், நாதத்தில் விளங்கும் சிவன் பரிசுத்தமான ஒளியை வீசிக் கொண்டிருக்கும், அவ்வாறு பொருந்திய சந்திரமண்டலம் விளங்கப்பெற்றவர்க்கு, தகுதி வாய்ந்த மனம் பொருந்துகின்ற சுழுமுனை நூலேணியாகும்.

***297.*** ***வழித்துணை யாய்மருந் தாயிருந் தார்முன்***
***கழித்துணை யாங்கற் றிலாதவர் சிந்தை***
***ஒழித்துணை யாம்உம் பராய்உல கேழும்***
***வழித்துணை யாம்பெருந் தன்மைவல் லானே.***

ஞானம் பெற வாயிலாகப் பிறவி நோய்க்கு மருந்தாக இருந்த நூலேணி பற்றியோர் முன்பு, அவ்வாறு பற்றாதவர் கழிக்கப்பட்ட துணையாகும், பெருமையில் சிறந்தவனாகிய சிவபெருமான், சிந்தையின் பழைய நிலையை ஒழிக்கத்தக்க துணையாவான், தேவசொரூபம் பெற்று ஏழுலகங்களுக்குச் செல்லும் வழித்துணையாகவும் உள்ளான்.

***298.*** ***பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின்***
***முற்றது எல்லா முதல்வன் அருள்பெறில்***
***கிற்ற விரகிற் கிளரொளி வானவர்***
***கற்றவர் பேரின்பம் உற்றுநின் றாரே.***

வாழ்வில் பற்றுக் கோடாக ஒரு தெய்வத்தை வழிபட வேண்டில் மேலான சிவபெருமானையே பற்றி வழிபடுங்கள், முழுமுதற்கடவுளாகிய அவனது அருளைப் பெற்றுவிட்டால் எல்லாம் இனிது முடிவு எய்தும், உபாயத்தில் வல்ல மிகுந்த தேசுடைய தேவர்கள், அனுபவக் கல்வியுடையோரைக் காட்டிலும் பேரின்பம் பெற்று நின்றாரோ ? இல்லை.

***299.*** ***கடலுடை யான்மலை யானைந்து பூதத்***
***துடலுடை யான்பல ஊழிதொ றூழி***
***அடல்விடை யேறும் அமரர்கள் நாதன்***
***இடமுடை யார்நெஞ்சத் தில்லிருந் தானே.***

பரந்த கடலைக் தனக்குச் சொந்தமாக உடையவன், அதே போன்று உயர்ந்த மலையையும் உடையவன், ஐம்பூதங்களையும் தனக்குத் திருமேனியாக உடையவன், இப்பூதங்கள் அழிந்து மாறுபடும்போது பல தடவைகளிலும் ஒளியே வடிவான இடபத்தில் விளங்கும் தேவதேவன், தன்னையே நினைத்து தமக்குரிய இடத்தை அமைத்துக் கொண்டவர் உள்ளத்தின் ஒளியில் அவனிருந்தருளுவான்.

## 21. கேள்வி கேட்டமைதல்

கேள்வி கேட்டமைதலாவது, வல்லோர்பால் சென்று, கேட்கத் தக்கனவற்றைக் கேட்டு, மனம் அடங்கியிருத்தல்.

***300.*** ***அறங்கேட்டும் அந்தணர் வாய்மொழி கேட்டும்***
***மறங்கேட்டும் வானவர் மந்திரங் கேட்டும்***
***புறங்கேட்டும் பொன்னுரை மேனியெம் ஈசன்***
***திறங்கேட்டும் பெற்ற சிவகதி தானே.***

நீதிகளைக் கேட்டும், அந்தணர்களது அறிவுரைகளைக் கேட்டும், பாவங்கள் இவையெனக் கூறும் நீதி நூல்களைக் கேட்டும், தேவதோபாசனைக்குரிய மந்திரங்களைக் கேட்டும், பிற சமய நூல் கேட்டும், பொன் என்று உரைக்கப் பெறுகின்ற திருமேனியையுடைய எம்பெருமானது தன்மையினைக் கேட்டும், சிவகதி தானே பெற்றதாம்.

*301. தேவர் பிரானைத் திவ்விய மூர்த்தியை*
*யாவர் ஒருவர் அறிவார் அறிந்தபின்*
*ஓதுமின் கேள்மின் உணர்மின் உணர்ந்தபின்*
*ஓதி உணர்ந்தவர் ஓங்கிநின் றாரே.*

எல்லாத் தேவர்களுக்கும் தலைவனான சிவபெருமானும், ஒளியான திருமேனியை உடையவனும் ஆகிய இறைவனை, எவர் ஒருவர் அறிபவர்? அவ்விதம் ஒளியாக அறிந்தபின் சிவத்தை உணர்த்தும் நூல்களைக் கற்று அறியுங்கள், கற்றோர்பால் அடைந்து உண்மையான பொருளை அறியுங்கள், பின் கற்றவற்றையும் கேட்டவற்றையும் சுய அனுபவத்தில் வைத்து உணருங்கள், சுய அனுபவத்தில் உண்மையை உணர்ந்தவர் நிட்டை கூடிச் சிவத்துடன் பொருந்தி உயர்ந்தோராவர்.

*302. மயன்பணி கேட்பது மாநந்தி வேண்டின்*
*அயன்பணி கேட்பது அரன்பணி யாலே*
*சிவன்பணி கேட்பவர் தேவரு மாவர்*
*பயன்பணி கேட்பது பற்றது வாமே.*

மாட்சிமையுள்ள சிவனை வேண்டினால் திருமால் பணி செய்வான், சிவனுக்குப் பணி செய்தால் பிரமனும் ஏவல் வழி நடப்பான், சிவன் ஆணைவழி நிற்போர் தேவராகவுமாவர், சிவத்தின் ஆணையை அறிந்து பணி செய்தலின் பயன் திருவடிக்கண் நீங்காத பற்றாகும்.

*303. பெருமான் இவனென்று பேசி யிருக்குந்*
*திருமா னிடர்பின்னைத் தேவரு மாவர்*
*வருமா தவர்க்கு மகிழ்ந்தருள் செய்யும்*
*அருமா தவத்தெங்கள் ஆதிப் பிரானே.*

தலைவன் இவனே என்று பேசிக்கொண்டிருக்கின்ற, உண்மை ஞானம் பெற்ற மனிதர்கள் பிறகு தேவராவர், அருமையான மாதவத்தனாகிய எங்கள் சிவபெருமான், மனிதராய்த் தேவராய் மேல்நிலைக்கு எய்திவரும் மேலான தவமுடையார்க்கு உவந்து அருள் செய்வான்.

*304. ஈசன் அருளும் இறப்பும் பிறப்பையும்*
*பேசி யிருந்து பிதற்றி மகிழ்வெய்தி*
*நேதமு மாகும் நிகழொளி யாய்நின்று*
*வாச மலர்க்கந்த மன்னிநின் றானே.*

இறப்பும் பிறப்பும் இறைவன் வினைவழி அருளுவான், இத்தன்மையினை அறிந்து பிறர்க்கு உரைத்தும் தானே பேசியும் களிப்புற்று அன்பு செலுத்தி இருங்கள், அவன் சிவசோதியாய் இருந்து, சுவாதிட்டானமாகிய மலரில் விந்துவாகிய மணத்தில் பொருந்தி அருளிக்கொண்டிருக்கிறான்.

*305. விழுப்பமுங் கேள்வியும் மெய்நின்ற ஞானத்*
*தொழுக்கமுஞ் சிந்தை உணர்கின்ற போது*
*வழுக்கி விடாவிடில் வானவர் கோனும்*
*இழுக்கின்றி எண்ணிலி காலமதாமே.*

சிவனது பெருமையும், அதனைப் பற்றிய கேள்வியும், அக்கேள்வியால் உண்டான ஞான ஒழுக்கமும், மனத்தில் சிந்திக்கின்ற காலத்து, நிலையில்திரியாது அடங்கியிருப்பின், தேவர் தலைவானகிய இறைவனும் குறைவின்றி அளவற்ற காலம் அருள் புரிபவனாவான்.

*306. சிறியார் மணற்சோற்றில் தேக்கிடு மாபோல்*
*செறிவால் அனுபோகஞ் சித்திக்கும் என்னில்*
*குறியாத தொன்றைக் குறியாதார் தம்மை*
*அறியா திருந்தார் அவராவர் அன்றே.*

உலகத்தொடர்பால் இறையனுபவம் உண்டாகும் என்று சொல்வது, சிறு குழந்தைகள் (சிறு வீடு கட்டி) மணலால் சோறு சமைத்து உண்டு மகிழ்வது போலாம், சுட்டியறிய முடியாத சிவனது அகண்ட வியாபகத் தன்மையை உணராதார், தம்முடைய ஆன்ம சொரூபத்தையும் அறியாதவராவர் அல்லவா?

*307. உறுதுணை யாவ துயிரும் உடம்பும்*
*உறுதுணை யாவ துலகுறு கேள்வி*
*செறிதுணை யாவது சிவனடிச் சிந்தை*
*பெறுதுணை கேட்கிற் பிறப்பில்லை தானே.*

உடம்புக்கு உற்ற துணையாக இருப்பது உயிராகும், உயிருக்குத் துணையாக இருப்பது உலகில் ஞானியர்பால் பெறுகின்ற கேள்வியாம், அக்கேள்வியால் சிவனது திருவடியைப் பற்றி எண்ணியிருத்தலே தக்க துணையாகும். இத்தகைய பெறுதற்கரிய துணையைப் பற்றிக் கேட்பின் பிறப்பு இல்லையாகும்.

*308. புகழநின் றார்க்கும் புரா ணன்எம் ஈசன்*
*இகழநின் றார்க்கும் இடும்பைக் கிடமா*
*மகிழநின் றாதியை ஓதி உணராக்*
*கழியநின் றார்க்கொரு கற்பசு வாமே.*

புகழ்ந்து பேசப்பெறுகின்ற பிரமன் விஷ்ணு உருத்திரன் ஆகியோர்க்கும் பழமையானவன் எம் இறைவனாவான், தன்னை இகழ்ந்து கூறுகின்றவர்க்குத் துன்பத்துக்கு இடமாக இருப்பவன், ஆதியாகிய எம் தலைவனை மகிழ்ச்சியுடன் அவனது பெருமையை உணராது விலகி நின்றவர்க்கு, அவன் கல்லில் செதுக்கிய பசுப்போலப் பயன்படமாட்டான்.

*309. வைத்துணர்ந் தான்மனத் தொடும்வாய் பேசி*
*ஒத்துணர்ந்த தான்உரு ஒன்றோடொன் றொவ்வா*
*தக்சுழன் றாணி கலங்கினும் ஆதியை*
*நச்சுணர்ந் தார்க்கே நணுகலு மாமே.*

ஆன்மாக்களிடமாகத் தனது சத்தியைப் பதிப்பித்தருளிய சிவன், அச்சத்தியால் மனத்தோடு வாக்கையும் அவற்றோடு பொருந்தியிருந்து உணர்கின்றான், அவனது வடிவம் ஒன்றுக்கொன்று மாறுபட்டது, எனினும் உடம்பாகிய அச்சிலிருந்து மனத்திட்பமாகிய ஆணி கழன்று உருக்குலைந்த காலத்து, ஆதியாகிய சிவனை விரும்பி நின்றவர்க்கே அவனை நெருங்கி அனுபவிக்கலாகும்.

## ௨௨. கல்லாமை

கல்லாமையாவது, கற்றும் சிவானுபவம் பெறாமை.

*310. கல்லா தவருங் கருத்தறி காட்சியை*
*வல்லா ரெனில்அருட் கண்ணான் மதித்துளோர்*
*கல்லாதார் உண்மைபற் றாநிற்பர் கற்றோருங்*
*கல்லாதார் இன்பங் காணுகி லாரே.*

ஆசிரியர்பால் சென்று முறையாகக் கற்காமல் பண்டைய தவத்தால் அவர்களது கருத்தில் தெய்வக்காட்சியை உணரவல்லராயின், அவர்கள் இறைவன் அருளால் அநுக்கிரகம் செய்யப்பெற்றவராவர், இத்தகையோர் (அனுபவமுடையோர்) உலகைப் பற்றாமல் சிவத்தைப் பற்றி நிற்பர், முறையாகக் கல்வி கற்றோரும் கல்லாதவராகக் கருதப்பட்டவர் பெற்ற சிவானுபவத்தை அடைவதில்லை.

*311. வல்லார்கள் என்றும் வழியொன்றி வாழ்கின்றார்*
*அல்லா தவர்கள் அறிவு பலஎன்பார்*
*எல்லா இடத்தும் உளன்எங்கள் தம்இறை*
*கல்லா தவர்கள் கலப்பறி யாரே.*

சிவத்தின் அருளைப் பெற்றவர்கள் உண்மைநெறி ஒன்று என்று எண்ணி அந்நெறியே வாழ்கின்றார்கள், சிவத்தின் அருளைப் பெறாதவர்கள் உலகில் பல நெறி உள என்று கூறுவர், ஆனால் எங்களது இறைவனே எல்லா நெறியாயும் உள்ளான், கல்லாதவர்கள் இவ்வாறு கலந்திருக்கும் இயல்மை அறியமாட்டார்கள்.

*312. நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து*
*நில்லா குரம்பை நிலையென் றுணர்வீர்கள்*
*எல்லா வுயிர்க்கும் இறைவனே யாயினுங்*
*கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண ணாதே.*

நிலையில்லாதவற்றை நிலையுடையனவாகவும், நிலையில்லாத உடம்பை நிலையுடையதாகவும் நெஞ்சில் எண்ணுபவர்களே! எல்லா உயிர்கட்கும் இறைவனே தாரகமாயினும், உண்மை உணராதார் நெஞ்சில் அறியப்படாதவனாகவே உள்ளான்.

*313. கில்லேன் வினைத்துய ராக்கு மயலானேன்*
*கல்லேன் அரநெறி அறியாத் தகைமையின்*
*வல்லேன் வழங்கும் பொருளே மனத்தினுட்*
*கல்லேன் கழியநின் றாடவல் லேனே.*

இறைவழி நிற்கும் ஆற்றல் இல்லேன், அதனால் வினைத்துயரங்களுக்கு ஆளானேன், சிவத்துடன் பொருந்தி நிற்கும் சிவ நெறியைக் கற்கவில்லை, அறியாமையால் மயக்கம் செய்வனவற்றைப் பயில்பவனாக உள்ளேன், வழங்கும் வள்ளலாகிய பொருமானை மனத்தினுள் தியானிக்க வல்லேனல்லேன், புறம்பே நின்று உலகானுபவத்தில் திளைப்பவனாக நான் உள்ளேன்.

*314. நில்லாது சீவன் நிலையன் றெனவெண்ணி*
*வல்லார் அறத்துந் தவத்துளும் ஆயினார்*
*கல்லா மனித்தா கயவர் உலகினில்*
*பொல்லா வினைத்துயர் போகஞ்செய் வாரே.*

சீவன் எடுத்த உடம்பில் நிலைத்திராது பிரிந்துவிடும் என்ற உண்மையை உணர்ந்து, சிவத்தின் அருளைப் பெற்றவர் தான தருமம் செய்தும் துறவறம் பூண்டும் ஒழுகினார், உலகில் அருளைப் பெறாதவராகிய கீழ் மக்கள், கொடிய வினையால் விளையும் துயரத்தை அனுபவிப்பர்.

*315. விண்ணினின் உள்ளே விளைந்த விளங்கனி*
*கண்ணினின் உள்ளே கலந்தங் கிருந்தது*
*மண்ணினின் உள்ளே மதித்து மதித்துநின்*
*றெண்ணி எழுதி இளைத்துவிட் டாரே.*

பரமாகாயத்தினுள் விளைந்த சிவமாகிய விளங்கனி, கண்ணினுள்ளே கலந்து அவ்விடத்து இருந்தது, உலகியலைப் பெரிதாக மதித்து அதில் வாழ்ந்து கொண்டு, புத்தி யூகத்தால் பலவாறாக இறைநிலையை எழுதி வீணாயினரே !

*316. கணக்கறிந் தார்க்கன்றிக் காணவொண் ணாது*
*கணக்கறிந் தார்க்கன்றிக் கைகூடா காட்சி*
*கணக்கறிந் துண்மையைக் கண்டண்ட நிற்குங்*
*கணக்கறிந் தார்கல்வி கற்றறிந் தாரே.*

ஞான சாதனையை அறிந்தவர்க்கன்றிச் சிவமாகிய விளங்கனியைப் பெற முடியாது, இச்சாதனையை அறிந்தார்க்கன்றிக் காட்சி கிட்டாது, ஞான சாதனையை அறிந்து உண்மைப் பொருளைக் கண்டு பொருந்தி நிற்கும், வித்தையை அறிந்தவர் உண்மையான கல்வி கற்றவராவார்.

*317. கல்லாத மூடரைக் காணவும் ஆகாது*
*கல்லாத மூடர்சொல் கேட்கக் கடன்அன்று*
*கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்*
*கல்லாத மூடர் கருத்தறி யாரே.*

கற்று அனுபவமில்லாத மூடரைக் காணவும் கூடாது, அவரது வார்த்தையைக் கேட்பதும் கடமை ஆகாது, அனுபவமில்லாத மூடரைக் காட்டிலும் எழுத்து வாசனையில்லாதவர் நல்லவராம், அனுபவமில்லாத கருத்தில் இறைவனை உணர மாட்டார்.

*318. கற்றுஞ் சிவஞானம் இல்லாக் கலதிகள்*
*சுற்றமும் வீடார் துரிசறார் மூடர்கள்*
*மற்றும் பலதிசை காணார் மதியிலோர்*
*கற்றன்பில்நிற்போர் கணக்கறிந் தார்களே.*

நூல்களைக் கற்றும் அனுபவ ஞானமில்லாத தீயகுணமுடையோர், தீமையைத் தருவதாகிய ஆணவம் கன்மம் மாயையாகிய சுற்றத்தை விடமாட்டார், இவர்கள் குற்றத்தை அறிந்து நீக்கிக்கொள்ளாத மூடர்களாவார், மேலும் பல திசைகளிலுள்ள அறிஞர்களோடு கூட உண்மை உணரா அறிவிலிகள் ஆவார்கள், ஆனால் சிவஞானம் பெற்றுச் சிவத்தினிடம் அன்பு கொண்டு நிற்போரே கணக்கறிந்தவராவார்.

*319. ஆதிப் பிரான்அம ரர்க்கும் பரஞ்சுடர்*
*சோத அடியார் தொடரும் பெருந்தெய்வம்*
*ஓதி உணரவல் லோம்என்பர் உள்நின்ற*
*சோதி நடத்தும் தொடர்வறி யாரே.*

யாவர்க்கும் தலைவனாகிய முதல்வன் தேவர்க்கும் மங்காத ஒளியாய்த் திகழ்கின்றான், ஒளி பெற்ற அடியார் நாடும் பெரிய கடவுளாய் இருக்கின்றான், அப்பெருமானைக் கற்றறிந்துவிடுவோம் என்று கூறுவார், அவர்கள் உள்ளேயே இருக்கின்ற சோதி எவ்வாறு நடத்திக் கொண்டிருக்கிறது என்பதனை அறியார்கள்.

## 23. நடுவு நிலைமை

நடுவு நிலைமை என்பதற்கு, சிரசின் மேல் விளங்கும் ஒளியில் நிற்றல், நடுவாகிய சுழுமுனையில் நிற்றல், சிவசத்திக்கிடையே நிற்றல், சூரிய சந்திரனாகிய இரு கண்களுக்கு மேல் புருவ நடுவில் நிற்றல், எல்லா உயிர்களிடமும் அந்தண்மை பூண்டு ஒழுகல் எனப் பல பொருளும் பொருந்தும்.

*320.* *நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை*
*நடுவரின் றார்க்கு நரகமும் இல்லை*
*நடுவுநின் றார்நல்ல தேவரு மாவர்*
*நடுவுநின் றார்வழி நானும்நின் றேனே.*

நடுவாகிய சகஸ்ரதளத்தில் விளங்கும் ஒளியை அறிந்து நில்லாதவர்க்கு ஞானம்கிட்டாது, நடுவாகிய சகஸ்கரதள ஒளியில் நிற்போர்க்கு நரகம் கிடையாது, அவ்வாறு நடுவு நின்றார் நல்ல தேவ வடிவு பெறுவர், சம்பிரதாகய முறையில் நடுவு நின்ற அடியார் வழியில் நானும் பயின்று நின்றேன்.

*321.* *நடுவுநின் றான்நல்ல கார்முகில் வண்ணன்*
*நடுவுநின் றான்நல்ல நான்மறை யோதி*
*நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவோர்*
*நடுவுநின் றானல்ல நம்பனு மாமே.*

சகஸ்ரதள ஒளியில் நல்ல மேகவண்ணத்தனாகிய திருமால் நின்றான்,அதில் நான்கு வேதங்களையும் உணர்ந்த பிரமன் இருந்தான், அதிலே சில ஞானிகளாவோரும் இருந்தனர், அதில் யாவரும் நம்பத்தக்க சிவனும் விளங்கி நின்றான்.

*322.* *நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவர்*
*நடுவுநின் றார்சிலர் தேவரு மாவர்*
*நடுவுநின் றார்சிலர் நம்பனு மாவர்*
*நடுவுநின் றாரொடு நானும்நின் றேனே.*

இப்பிறவியிலேயே ஞானிகளாக வேண்டிய சிலரும் சிரசின் மேல் உச்சியில் பொருந்தி இருந்தனர், அவ்வாறு சகஸ்ரதளத்தில் பொருந்தியிருந்தவரில் சிலர் தேவர்களாவார்கள், அவருள் வேறு சிலர் சிவமாந்தன்மை எய்துவர், அவ்வழியிலே நானும் சகஸ்கரதள ஒளியில் நிலைபெற்றுள்ள அடியார் கூட்டத்தோடு கலந்து நின்றேன்.

*323.* *தோன்றிய எல்லாந் துடைப்பன் அவனன்றி*
*என்றுநின் றாரென்றும் ஈசன் இணையடி*
*மூன்று நின் றார்முதல் வன்திரு நாமத்தை*
*நான்றுநின் றார்நடு வாகிநின் றாரே.*

உலகில் தோன்றிய எல்லாவற்றையும் அழிக்க வல்லவன் இறைவனாகிய சிவபெருமான், சகஸ்ரதள ஒளியில் நிற்பவரே எப்போதும் நன்றிக் கடப்பாடு உடையவராக விளங்கினார், அவர் இறைவனது இரு திருவடிகளையும் பெற வேண்டும் என்று முயன்றிருந்தார், மேலும் அவர்கள் முதல்வனது திருநாமத்தைப் பற்றிக்கொண்டு யோக நித்திரையில் இருந்தார்கள்.

## 24. கள்ளுண்ணாமை

அஃதாவது, கள்ளுண்ணலைச் செய்யாமை.

*324.* *கழுநீர் பசுப்பெறிற் கயந்தொறுந் தேரா*
*கழுநீர் விடாய்த்துத்தங் காயஞ் சுருக்கும்*
*முழுநீர்க் கள்ளுண்போர் முறைமை அகன்றோர்*
*செழுநீர்ச் சிவன்றன் சிவானந்தத் தேறலே.*

பசுக்கள் அருந்துவதற்குக் கழுநீரைப் பெற்றால் பிற குளந்தோறும் சென்று நீரைத் தேடி அருந்தா, கழுநீரை விரும்பித் தாகத்தால் களைத்துத் தம்முடைய உடம்பினை வருத்தி இருக்கும், வாழ்வுக்கு வளமையைத் தரும் நீர் சிவானந்தமாகிய மதுவாகும், இம்மதுவை அருந்தாது முழுநீர் மயமான மதுவை உண்பர் ஒழுக்கத்தின் நீங்கியவர், என்னே அறியாமை!

*325.* *சித்த முருக்கிச் சிவமாஞ் சமாதியில்*
*ஒத்துச் சிவானந்த மோவாத தேறலைச்*
*சுத்த மதுவுண்ணச் சிவனாந்தம் விட்டிடா*
*நித்த லிருத்தல் கிடத்தல் கீழ்க்காலே.*

சித்தத்தைச் சிவன்பால் வைத்து உருகச்செய்து, சிவசமாதியில் பொருந்தி, சிவானந்தம் நீங்காத மதுவினை, சுத்த நிலையில் அனுபவிக்கச் சிவானந்தம் நீங்காது, அதை விட்டுச் சிவன் நினைவின்றி நிற்றலும் இருத்தலும் கிடத்தலும் கீழ்நிலை ஆகும்.

*326.* *காமமுங் கள்ளுங் கலதிகட் கேயாகும்*
*மாமல முஞ்சம யத்துள் மயலுறும்*
*போமதி யாகும் புனிதன் இணையடி*
*யோமய ஆனந்தத் தேறல் உணர்வுண்டே.*

காமமும் கள்ளும் கீழ்மக்களுக்கேயாகும், ஆணவ மலமும் சமயத்தை உள்ளவாறு உணராது மயக்கத்தை விளைக்கும் கெட்டுப்போகும் புத்தி உண்டாகும், புனிதன் இணையடி, மேலோர்க்குச் சிவபெருமானது இரு திருவடி இணைப்பால் பெறும் பிரணவ மயமான சிவானந்தத் தேனாகிய உணர்வு உள்ளது.

*327.* *வாமத்தோர் தாமும் மதுவுண்டு மாள்பவர்*
*காமத்தோர் காமக் கள்ளுண்டே கலங்குவர்*
*ஓமத்தோர் உள்ளொளிக் குள்ளே உணர்வர்கள்*
*நாமத்தோர் அன்றே நணுகுவர் தாமே.*

சத்தி வழிபாட்டினர் தேவிக்குத் திருப்தி செய்வதாய்க் கூறித் தாங்கள் மது உண்டு அழிபவராவர், காம வாழ்வில் உள்ளோர் காமமாகிய போதையிலிருந்தே கலங்கி நிற்பர், மகாதேவா என்னும் ஓமத்தைச் செய்வோர் சிரசின்மேல் வெளிப்படும் ஒளிக்குள்ளே தமது உணர்வை நிறுத்தி மகிழ்ந்திருப்பர், சிவநாம மகிமையை அறிந்தனுபவிப்பவர் அப்பொழுதே சிவனை அணுகும் இன்பம் பெறுவர்.

*328.* *உள்ளுண்மை ஓரார் உணரார் பசுபாசம்*
*வள்ளன்மை நாதன் அருளினின் வாழ்வுறார்*
*தெள்ளுண்மை ஞானச் சிவயோகஞ் சேர்வுறார்*
*கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறி யாரே.*

வேதாகமம் உணர்த்தும் உண்மையை விளங்கமாட்டாதார் பசு பாசம் பதி ஆகியவற்றை அறிய மாட்டார், அவர் விரும்பிவற்றையெல்லாம் அளிக்கும் சிவபெருமானது அருளைத் துணையாகக் கொண்டு வாழமாட்டார், தெளிந்த உண்மையான சிவயோகத்தில் அவர் நிலைபெறமாட்டார், புறத்தேயுள்ள நீர்க்கள்ளை அருந்துவோர் உண்மையை உணரமாட்டார்.

*329.* *மயக்குஞ் சமய மலமன்னு மூடர்*
*மயக்கு மதுவுண்ணு மாமூடர் தேரார்*
*மயக்குறு மாமாயை மாயையின் வீடு*
*மயக்கில் தெளியின் மயக்குறும் அன்றே.*

மயங்கச் செய்கின்ற சமயக் குற்றங்களைப் பொருந்திய மூடர்கள், சமயத்தின் பேரால் மயக்கத்தைத் தருகின்ற மதுவினை அருந்துவார்கள், இப்பெரிய மூடர்கள் நல்ல வழியைப் ஆராய்ந்தறியார்கள், மயக்கத்தைக் கொடுக்கின்ற மகாமாயையும் மாயையின் இருப்பிடமாகும். மயக்கத்தினின்றும் தெளிந்தாலும் வாமாசார வழிபாடு மீண்டும் மயக்கத்தைத் தருமே தவிர சிவானந்தத்தை நல்காது.

*330.* *மயங்குந் தியங்குங் கள்வாய்மை அழிக்கும்*
*இயங்கும் மடவார்தம் இன்பமே எய்தித*
*முயங்கும் நயங்கொண்ட ஞானத்து முந்தார்*
*இயங்கும் இடையறா ஆனந்தம் எய்துமே.*

உண்டாரை மயங்கச் செய்வதும் மாண்டாரை நினைந்து கவலச் செய்வதும் ஆகிய கள் உண்மையை அழிக்கும், இயங்கிக் கொண்டிருக்கிற பெண்ணின்பதை நாடி அடையத் தூண்டும், இங்ஙனமாகிய கள்ளை உண்பார் நல்ல ஞானத்துத் தலைபட்டார், அவர்களுக்கு என்றும் இடையறாது விளங்கும் சிவானந்தத்தேறல் கிட்டுமோ? கிட்டாது.

*331.* *இராப்பகல் அற்ற இடத்தே இருந்து*
*பராக்கற ஆனந்தத் தேறல் பருகார்*
*இராப்பகல் அற்ற இறையடி இன்பத்*
*திராப்பகல் மாயை இரண்டிடத் தேனே.*

இரவு பகல் என்ற பேதமற்று தன்னை மறந்த சாக்கிராதீத நிலையில் இருந்து, வேறு எண்ணமற்றுச் சிவானந்தத் தேனை உலகவர் அருந்தமாட்டார், இரவும் பகலும் இல்லாத திருவடி இன்பத்தில் திளைத்து, இரவும் பகலும் உள்ள அசுத்தமாயை, சுத்தமாயை இரண்டையும் அகற்றி நின்றேன்.

*332.* *சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள்ளுண்பர்*
*சத்தி அழிந்தது தம்மை மறத்தலால்*
*சத்தி சிவஞானந் தன்னில் தலைப்பட்டுச்*
*சத்திய ஞானஆ னந்தத்தில்ர சார்தலே.*

சத்தியை அடைய விரும்பிச் சாக்த மதத்தினர் (வாமத்தோர்) மதுவை உண்பர், மதுவுண்டு தம்மை மறந்திருத்தலால் அவரது அறிவுச் சத்தி கெடுகிறது, சத்தி என்பது சிவஞானத்தை அறிந்து அதில் நிலைபெற்று, சத்திய ஞானானந்தத்தை அடைதலாம்.

*333.* *சத்தன் அருள்தரிற் சத்தி அருளுண்டாஞ்*
*சத்தி அருள்தரிற் சத்தன் அருளுண்டாஞ்*
*சத்தி சிவமாம் இரண்டுந்தன் னுள்வைக்கச்*
*சத்தியும் எண்சித்தித் தன்மையு மாமே.*

சத்தியையுடையவனாகிச் சிவன் அருள் புரிந்தால் சத்தியின் அருள் கிட்டும்; சத்தி அருள் புரிந்தால் சிவனது அருளுண்டாகும், சத்தி சிவமாகிய இரண்டும் விளங்கும் விந்து நாதங்களை உணர்ந்து பொருந்தியிருக்க, அவர்களுக்குச் சத்தி வடிவம் உண்டாகி அட்டமா சித்திகளும் தாமே வந்தடையும்.

*334.* *தத்துவம் நீக்கி மருள்நீக்கித் தானாகிப்*
*பொய்த்தவம் நீக்கிமெய்ப் போகத்துட் போக்கியே*
*மெய்த்த சகமுண்டு விட்டுப் பரானந்தச்*
*சித்திய தாக்குஞ் சிவானந்தத் தேறலே.*

சிவானந்தமாகிய தேன், முப்பத்தாறு தத்துவங்களையும் கடக்கச்செய்து, தத்துவங்களே தான் என்று மயங்கின அறிவை நீக்கிச் சிவமாய், உபாயத்தால் அடையலாம் என்று எண்ணிச் செய்யப்பெறும் பொய்த்தவங்களினின்றும் நீக்கியருளி, உண்மையான சிவபோகத்துள் செலுத்தி, உண்மையாய்த் தோன்றிய உலகம் இல்லாதொழியும்படி செய்து, மேலான ஆனந்தம் சிந்திக்கும்படி செய்யும்.

*335.* *யோகிகள் கால்கட்டி ஒண்மதி ஆனந்தப்*
*போத அமுதைப் பொசித்தவர் எண்சித்தி*
*மோகியர் கள்ளுண்டு மூடராய் மோகமுற்*
*றாகும் மதத்தால் அறிவழிந் தாரே.*

சிவயோகியர் பிராணனை வசப்படுத்தி, சந்திர மண்டலத்தில் சிவானந்தத்தை நல்கும் ஞானாமிர்தத்தை அருந்துபவர், அட்டமாசித்திகளை விரும்புவர் கள்ளினைக் குடித்து, மூடராக ஆசைப்பட்டு உண்டாகும் பற்றினால் உள்ள அறிவையும் இழந்தார்கள்.

*336.* *உண்ணீர் அமுத முறுமூ றலைத்திறந்*
*தெண்ணீர் குரவன் இணையடித் தாமரை*
*நண்ணீர் சமாரியி னாடி நீ ரானலங்*
*கண்ணாற் றொடேசென்று கால்வழி காணுமே.*

மரணத்தை மாற்றும் ஒளி ஊற்றைத் திறந்து அனுபவிக்க மாட்டீர், சிவகுருவின் திருவடியை எண்ணி நிற்க மாட்டீர், சமாதியில் சிவசோதியை விரும்பிப் பொருந்த மாட்டீர், அருள்நீர்ப் பெருக்கால் நன்மை தரும் கண்ணின் காரியமாகிய ஒளி நெறி பற்றிச் சென்று, பிராணன் செல்லும் வழியை (சுழுமுனை வழியை) அறியுங்கள்.

## இரண்டாம் தந்திரம்

## 1. அகத்தியம்

அகத்து + இயம் = அகத்தியம் - உடம்பில் விளங்கும் நாதம். இயம் என்றால் ஒலி, சொல், பறை, வீணை, இசை என்று பல பொருள்படும். பல்லியம், வாச்சியம் என வழங்குவது காண்க. இனி வாக்கை அக்கினி என்று உபநிஷத்து கூறும். அந்த அக்கினி உடம்பைத் தாங்கிக் கொண்டும் உண்பதைச் சீரணித்துக் கொண்டு உள்ளது என்க. இதன் சொரூபம் நாதமாகும்.

*337.* *நடுவுநில் லாதிவ் வுலகஞ் சரிந்து*
*கெடுகின்ற தெம்பெரு மானென்ன ஈசன்*
*நடுவுள அங்கி அகத்திய நீபோய்*
*முடுகிய வையத்து முன்னிரென் றானே.*

எவ்வுயிர்க்கும் நாயகனான இறைவனே! இவ்வுலகில் வாழ்கின்ற சீவர்கள் சுழுமுனை மார்க்கத்தில் பொருந்தி நில்லாது உலக முகமாகக் கீழ்நிலைப்பட்டுப் பிராண சத்தியை இழக்கின்றார்கள் என்று ஆசிரியர் வேண்ட, இறைவன், மூல நடுவிலுள்ள சொரூபமான நாதமே நீ சென்று, விரைந்து கெடுகின்ற சீவரது சிரசின் முன் பக்கமாகப் பொருந்திக் காப்பாயாக என்றருளினான்.

*338.* *அங்கி உதயம் வளர்க்கும் அகத்தியன்*
*அங்கி உதயஞ்செய் மேல்பா லவனொடு*
*மங்கி உதயஞ்செய் வடபால் தவமுனி*
*எங்கும் வளங்கொள் இலங்கொளி தானே.*

அக்கினி கலையின் சொரூபமாகிய நாதத்தைச் சிரசின் முன்பக்கம் விளங்கச் செய்யும் சாதகனாகிய அகத்தியன், அதனைப் பின்புறம் பிடரிப்பக்கம் விளங்கச் செய்பவனாய், அது பரவிச் சிரசின் இடப் பக்கம் விளங்கும் தவமுனியாகி, சிரசு எங்கும் நிறைகின்ற வளப்பம் மிக்க ஒளியாவான்.

## 2. பதிவலியில் வீரட்டம் எட்டு

பதி-இறைவன், வலியில் வீரட்டம் - வீரத்தால் அட்ட இடம், அஃதாவது, இறைவன் மறக்கருணை காட்டி ஆட்கொண்ட எட்டு இடங்கள் என்க, இவற்றை அட்ட வீரஸ்தானம் என்பர். அவை திருவதியை, திருக்கடவூர், திருக்கொறுக்கை, வழுவூர், திருக்கேவாலூர், திருப்பறியலூர், திருக்கண்டியூர், திருவிற்குடி என்பனவாம், இங்கு நடந்தனவாகவுள்ள புராணக் கதைகளுக்கு ஆசிரியர் தத்துவ விளக்கம் கொடுத்தருளுகிறார்.

*339.* *கருத்துறை அந்தகன் தன்போல் அசுரன்*
*வரத்தின் உலகத் துயிர்களை எல்லாம்*
*வருத்தஞ்செய் தானென்று வானவர் வேண்டக்*
*குருத்துயர் சூலங்கைக் கொண்டுகொன் றானே.*

சீவர்களது கருத்திலே இருக்கின்ற அந்தகன் போன்ற அறியாமையாகிய அசுரன், உயர்ந்த உலகத்திலுள்ள உயிர்களையெல்லாம், துன்பம் செய்கிறான் என்று தேவர்கள் இறைவனை வேண்ட, அவன் சுடர் விடுகின்ற ஞானமாகிய சூலத்தைக் கொண்டு அறியாமையாகிய அசுரகளை அழித்தருளினான்.

*340.* *கொலையிற் பிழைத்த பிரசா பதியைத்*
*தலையைத் தடிந்திட்டுத் தானங்கி யிட்டு*
*நிலையுல குக்கிவன் வேண்டுமென் றெண்ணித்*
*தலையை யரிந்திட்டுச் சந்திசெய் தானே.*

சுவாதிட்டானச் சக்கரத்தில் விந்து நாசம் செய்துகொண்டிருந்த பிரமனை, விந்து நீக்கம் செய்வதைத் தடுத்து இறைவன் அக்கினி காரியத்தால் சீவர்கள் விந்து செயம் பெறுமாறு செய்து, உலகம் நிலைபெறப் பிரமனது சிருட்டியும் வேண்டும் என்று கருதி, அவனது சேட்டையை நீக்கி உலக இன்பத்துக்குப் பொருந்துமாறு அருளினான்.

*341.* *எங்கும் பரந்தும் இருநிலந் தாங்கியுந்*
*தங்கும் படித்தவன் தாளுணர் தேவர்கள்*
*பொங்கும் சினத்துள் அயன்தலை முன்னற*
*அங்(கு)அச் சுதனை உதிரங்கொண் டானே.*

எங்கும் வியாபித்தும் அகன்ற உலகுக்கு ஆதாரமாயிருந்தும், எல்லாம் சென்று ஒடுங்குவதற்கு இடமாயுள்ள இறைவனது திருவடியை உணர்ந்த பக்குவப்பட்ட சீவர்கள், போகம் செய்யும் காலத்து பிரமனின் சேட்டை கெட, மணிபூரகத்திலிருந்து கொண்ட கவர்ச்சியைத் தந்துகொண்டு இருக்கும் திருமாலினது கவர்ச்சியைப் போக்கியருளினான்.

*342.* *எங்கும் கலந்துமென் உள்ளத் தெழுகின்ற*
*அங்க முதல்வன் அருமறை யோதிபாற்*
*பொங்குஞ் சலந்தரன் போர்செய்ய நீர்மையின்*
*அங்கு விரற்குறித் தாழிசெய் தானே.*

என்னுடைய உயிரில் விளங்கும் உடம்புக்கு நாயகனும், நாத தத்துவத்துக்குரிய சதாசிவ மூர்த்தியுமானவனிடத்து, நீரை முகமாகவுடைய அபானனாகிய சலந்தராசுரன் கீழ்நோக்குதலாகிய போரினைச் செய்ய, அவ்வாறு அது கீழ்நோக்காது யோக சாதனையால் மேற்சென்று கலந்து சகஸ்ரதளம் வட்டமாக விரியுமாறு சீவர்களுக்குப் பெருமாள் அருள் புரிந்தான்.

*343.* *அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்*
*முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்*
*முப்புர மாவது மும்மல காரியம்*
*அப்புரம் எய்தமை யாரறி வாரே.*

நீரை அணிந்துள்ள சிவந்த சடையினையுடைய பழமையானவன், மூன்று கோட்டைகளை அழித்தான் என்று கூறுவார்கள் அறிவில்லாதவர்கள், மூன்று கோட்டைகளை அழித்தலாவது ஆணவம் கன்மம் மாயையாகிய மூன்று மலங்களை அழித்தலாம், அவ்வாறு அக்கோட்டையை அழித்ததை யாரோ அறியவல்லார்?

*344.* *முத்தீக் கொளுவி முழங்கெரி வேள்வியுள்*
*அத்தி யுரியர னாவ தறிகிார்*
*சத்தி கருதிய தாம்பல தேவரும்*
*அத்தீயின் உள்ளெழுந் தன்று கொலையே.*

மூன்று தீயினை எழுப்பி நாதத்தை வெளிப்படுத்தும் அக்கினி காரியத்துள், யானை போன்ற காரிருளைக் கிழித்து வெளிப்படும் ஒளி இறைவனாக ஆகின்றதையாரும் அறியவில்லை, குறி குணம் கூடிய பல தேவர்களும், அத்தீயில் சிவன் வெளிப்பட்ட போது மறைந்து ஒழிந்தனர்.

*345.* *மூலத் துவாரத்து மூளும் ஒருவனை*
*மேலைத் துவாரத்து மேலுற நோக்கிமுற்*
*காலுற்றுக் காலனைக் காய்ந்தங்கி யோகமாய்*
*ஞாலக் கடவூர் நலமாய் இருந்ததே.*

மூலாதாரத்திலிருந்து சுழுமுனை நாடி வழியாகக் கிளம்பி மேலெழுகின்ற மூர்த்தியை, பிரமரந்திரமாகிய மேல் துவாரத்தில் ஊர்த்துவ திருஷ்யால் பார்த்து, சுழு முனையில் பொருந்தி எமனை வெகுண்டு, அக்கினி காரியம் செய்தால், உடம்பாகிய உலகைக் கடந்து சகஸ்ரதளமாகிய ஊரில் அழியாதிருக்கலாம்.

*346.* *இருத்த மனத்தை இசைய இருத்தி*
*பொருந்தி யிலிங்க வழியது போக்கி*
*திருந்திய காமன் செயலழிந் தங்கண்*
*அருந்தவ யோகங் கொறுக்கை அமர்ந்ததே.*

நலமாயிருந்த மனத்தைச் சிவனோடு சேர்த்து வைத்து, குறிவழி செல்லாது தடுத்து, தீமை செய்யாதவாறு விந்து நீக்கமாகிய காமனது செயலைக் கெடுத்து, அவ்விடத்து வாழ்க்கைத்துணைவியுடன் பொருந்தியிருந்ததே கொறுக்கை இருந்ததாகும்.

## 3. இலிங்க புராணம்

இலிங்கமாவது, தோற்ற ஒடுக்கங்களுக்குக் காரணமாகிய அருட்குறி. புராணமாவது, அதன் பழமை.

*347.* *அடிசேர் வன் என்னஎம் ஆதியை நோக்கி*
*முடிசேர் மலைமக னார்கமக ளாகித்*
*திடமார் தவஞ்செய்த தேவர் அறியப்*
*படியார அர்ச்சித்துப் பத்திசெய் தாளே.*

சிவபெருமானது திருவடியைச் சென்று அடைவேன் என்று சத்தியானவன் அவனையே நோக்கி, சரீரத்தின் உச்சியாகிய சிரசில் விளங்கும் சிற்சத்தியாகி, சிவனை அடைய உறுதியான தவத்தைப் புரிந்து, ஒளிமண்டலவாசிகள் காண, முறையாக அருச்சனை புரிந்து வழிபட்டான்.

*348.* *திரிகின்ற முப்புரஞ் செற்ற பிரானை*
*அரியனென் றெண்ணி அயர்வுற வேண்டா*
*புரிவுடை யாளர்க்குப் பொய்யலன் ஈசன்*
*பரிவொடு நின்று பரிசறி வானே.*

திரிந்து கொண்டிருக்கின்ற மும்முலக் கோட்டையை அழித்த பெருமானை, அடைவதற்கு அருமையானவன் என்று நினைத்து சோர்ந்துபோக வேண்டா, அவ்விறைவன் அன்புடையார்க்குப் பொய்யானவன் அல்லன், அவன் சீவகர்களிடம் கருணையோடு பொருந்திக் தகுதி நோக்கி அருள் புரிவான்.

*349. ஆழி வலங்கொண் டயன்மால் இருவரும்*
*ஊழி வலஞ்செய்ய ஒண்சுட ராதியும்*
*ஆழி கொடுத்தனன் அச்சுதற் கவ்வழி*
*வாழி பிரமற்கும் வாள்கொடுத் தானே.*

சுவாதிட்டான மணிபூரகச் சக்கரங்களிலே இடங்கொண்ட பிரமனும் திருமாலுமாகிய இருவரும், முறையாக மூலாதாரத்தைச் சுற்றி வர அங்கு ஒளி மயமாக விளங்கும் உருத்திரமூர்த்தியும், அம்முறையே திருமாலுக்குச் சகஸ்ரதளச் சக்கரத்தில் விளங்க அருள் செய்தான், சுவாதிட்டானத்திலிருந்து உற்பத்தியைப் பெருக்காது மேலே சென்ற பிரமனுக்கும் ஒளியினை நல்கினான்.

*350. தாங்கி இருபது தோளுந் தடவரை*
*ஓங்க எடுத்தவன் ஒப்பில் பெருவலி*
*ஆங்கு நெரித்தம ராவென் றழைத்தபின்*
*நீங்கா அருள்செய்தான் நின்மலன் தானே.*

இந்திரியங்களும் புலன்களுமாகிய இருபது தோள்கும் தாங்கி, விசாலமான மலையைத் தன் முயற்சியால் எடுத்த புருஷனாகிய இராவணனது ஒப்பில்லாத ஆற்றலை, அவ்விடத்து அழித்துத் தன் சிறுமை உணர்ந்து தேவா காப்பாற்று என்று அவன் வேண்டிய பின், நீங்காத பத்தியை நிலை பெறுமாறு செய்தான் அனாதிமலரகிதனான சிவபெருமான்.

*351. உறுவ(து) அறிதண்டி ஒண்மணற் கூட்டி*
*அறுவகை ஆன்ஐந்தும் ஆட்டத்தன் தாதை*
*செறுவகை செய்து சிதைப்ப முனிந்து*
*மறுமழு வால்வெட்டி மாலைபெற் றானே.*

தனக்கு உறுவதைக் காரண காரியத்தோடு அறியவல்ல சீவனாகிய சண்டீசன், வெண்மையான ஒளியாகிய மணலைச் சேர்த்து, பிறவி அறும் வகையில் ஞானேந்திரியமாகிய ஐந்தும் பசுக்களையும் புறப்புலன்களில் மேயாது தடுக்க, மாயையால் உண்டான உடம்பாகிய தந்தை பொறாது பகைக்கொண்டு கெடுக்க, வெகுண்டு அக்கினி கலையாகிய வாளால் இடைபிங்கலையாகிய இரு கால்களையும் தொழிற்படாமல் செய்து சிவத்தொண்டன் ஆயினான்.

*352. ஓடிவந் தெல்லாம் ஒருங்கிய தேவர்கள்*
*வாடி முகமும் வருத்தத்துத் தாஞ்சென்று*
*நாடி இறைவா நமஎன்று கும்பிட*
*ஈடில் புகழோன் எழுகவென் றானே.*

மனம் ஒருமைப்பட்ட தேவர்கள் எல்லோரும் சிவபெருமானிடம் ஓடி வந்து, முக வாட்டத்துடன் வருத்தத்தோடு சரணடைந்து நாடி, இறைவனே போற்றி என்று வணங்க, ஒப்புயர்வற்ற புகழையுடைய சிவபெருமான் எழுந்து மேலே வந்து சேருங்கள் என்றருளினான்.

## 4. தக்கன் வேள்வி

தக்கன் வேள்வியாவது, ஆண், பெண் கூட்டுறவாகும். சிவபெருமானை நினைத்து செய்யாமையால் விந்து செயமாகிய பயனைப் பெறாது கூட்டுறவாகிய வேள்வி சிதைந்தது.

*353. தந்தை பிரான்வெகுண் டான்தக்கன் வேள்வியை*
*வெந்தழல் ஊடே புறப்பட விண்ணவர்*
*முந்திய பூசை முடியார் முறைகெட்டுச்*
*சிந்தினர் அண்ணல் சினஞ்செயத் போதே.*

ஆண் பெண் கூட்டுறவாகிய தக்க யாகத்தைச் சிவபிரான் தன்னை நினையாமல் செய்தமையால் கோபம் கொண்டான், காமாக்கினியால் தகிக்கப்பட்டு விந்து நீக்கம் உண்டாக, தேவர்கள் எண்ணியவாறு விந்து செயமாகிய பூசையின் பயனைப் பெறவில்லை, பெருமான் வெகுண்டவுடனே தேவ காரியச் சிதைவு உண்டாகி அவர்கள் வெளியேறினர்.

*354. சந்தி செயக்கண் டெழுகின் றரிதானும்*
*எந்தை இவனல்ல யாமே உலகினில்*
*பந்தஞ்செய் பாசத்து வீழ்ந்து தவஞ்செய்ய*
*அந்தமி லானும் அருள்புரிந் தானே.*

ஆண் பெண் சேர்க்கையைச் செய்வதற்குத் தருக்கி எழுகின்ற திருமாலும், உலகினில் படைக்கின்றவன் சிவனல்ல, நாமேதான் என்றான், அதனால் கட்டினை விளைவிக்கின்ற பாசக்கடலில் ஆழ்ந்து வருந்திய பின் சிவனை நோக்கித் தவம் புரிய, முடிவில்லாத பெருமானும் விஷ்ணுதத்துவம் மேலே விளங்கும்படி அருள் செய்தான்.

*355. அப்பரி சேயய னார்பதி வேள்வியுள்*
*அப்பரி சேயங்கி அதிசய மாகிலும்*
*அப்பரி சேயது நீர்மையை யுள்கலந்*
*தப்பரி சேசிவன் ஆலிக்கின் றானே.*

முன்னே முறையே பிரமனும் காம காரியமாகிய தக்க யாகத்துக்குத் தானே தலைவனெனத் தருக்கினான், அதனால் காமாக்கினி மூண்டெழுந்த போதிலும், அவ்வகையே அதன் தன்மையில் பொருந்தி, சிவபெருமான் முறையாக ஆரவாரத்தோடு விளங்குகின்றான்.

*356. அப்பரி சேஅயன் மால்முதல் தேவர்கள்*
*அப்பரி சேயவ ராகிய காரணம்*
*அப்பரி சங்கி யுளநாளும் உள்ளிட்*
*டப்பரி சாகி அலர்ந்திருந் தானே.*

அவ்வண்ணம் பிரமன், திருமால் முதலிய தேவர்கள், அத்தன்மையைப் பெற்றதற்குக் காரணம் சிவபெருமானேயாம், அவ்வாறு அக்கினி கலை உள்ளே விளங்கும் வரை, அவ்வக்கினி கலையில் சிவபெருமான் நீக்கமற நிறைந்து விளங்கியிருந்தான்.

*357. அலர்ந்திருந் தானென் றமரர் துதிப்பக்*
*குலந்தரும் கீழங்கி கோளுற நோக்கிச்*
*சிவந்த பரமிது சென்று கதவ*
*உவந்த பெருவழி ஓடிவந் தானே.*

அமரர்கள் எல்லாம் ஆகாய பூத நாயகனான சிவபெருமானே எங்கும் நீக்கமற நிறைந்துள்ளான் என்று உணர்ந்து வேண்ட, ஆறு ஆதாரங்களில் கீழான மூலாதாரத்திலுள்ள அக்கினி கலை சுழுமுனை வழியாக மேலெழ, சிவந்த மேலான ஒளியானது சகஸ்ரதளத்தைச் சென்று பற்ற, இதுவே வழிபடும் மகிழ்ச்சிக்குரிய பெருவழி என்று சிவன் விரைந்து வந்தருளினான்.

*358. அரிபிர மன்தக்கன் அருக்க னுடனே*
*வருமதி வாலை வன்னிநல் இந்திரன்*
*சிரமுக நாசி சிறந்தகை தோள்தான்*
*அரனருள் இன்றி அழிந்தநல் லோரே.*

திருமால் பிரமன் தக்கன் சூரியனுடன், வருகின்ற சந்திரன் நாமகள் அக்கினி நல்ல இந்திரன் ஆகியோர், சிரம் முகம் மூக்கு கை தோள் ஆகியவற்றை, சிவனருள் பொருந்தாமையால் இழந்து பின் நல்லோராயினர்.

*359. செவிமந் திரஞ்சொல்லுஞ் செய்தவத் தேவர்*
*அவிமந் திரத்தின் அடுக்கலை கோவிச்*
*செவிமந் திரஞ்செய்து தாமுற் நோக்குங்*
*குவிமந் திரங்கொல் கொடியது வாமே.*

செபிக்கத்தக்க மந்திரங்களைச் சொல்லிச் சிவனருள் பெற்ற தேவர்கள், வாயிட்டுக் கூற முடியாத பிரணவத்தால் மூலாதாரத்திலுள்ள அக்கினியைத் தூண்டி, நாதம் உண்டாகச் செய்து தாம் பொருந்த நோக்கும், மனத்தை ஒருமைப்படுத்தும் மகாமந்திரம் கொடுமையானது ஆகுமா? ஆகாது.

*360. நல்லார் நவகுண்டம் ஒன்பதுங் இன்புறப்*
*பல்லார் அமரர் பரிந்தருள் செய்கென*
*வில்லார் புரத்தை விளங்கெரி கோத்தவன்*
*பொல்லா அசுரர்கள் பொன்றும் படிக்கே.*

நல்லாரது உடம்பிலுள்ள ஒன்பது துவாரங்களாகிய குண்டங்களும் சிறந்து இன்புற, பல தேவர்கள் அடியேங்கட்கு இரங்கி அருள் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொள்ள, கொடிய அரசர் அழியும் வண்ணம், பிரணவமாகிய வில்லினால் ஆணவாதி மும்மலங்களை எரித்து அருளினான்.

சினந்து பின்னர் அருள் புரிந்த நாத சொரூபியான சிவபெருமானே, தன்னை நிலையாது இயற்றிய காமவேள்வியை அழியுமாறு செய்தான், ஆனால் இன்ப வடிவமாகிய அப்பெருமானை அன்பு செலத்தி அடைய வேண்டும். அதனால் நூல் வல்லார் கூறும் மயக்க நெறி பற்றிக் கலங்காதே.

## 5. பிரளயம்

பிரளயம் என்பது, அழிவு என்று பொருள், அழிவினைச் செய்து அருளுபவன் சிவன் என்பது இங்குக் கூறப்பெறும்.

***362.*** *கருவரை மூடிக் கலந்தெழும் வெள்ளத்*
*திருவருங் கோவென் றிகல இறைவன்*
*ஒருவனும் நீருற ஓங்கொளி யாகி*
*அருவரை யாய்நின் றருள்புரிந் தானே.*

கருவிடும் எல்லையை மூடிக்கொண்டு எழுகின்ற மணிபூரகத்திலுள்ள நீர் மண்டலத்தில், பிரம விஷ்ணுக்களாகிய இருவரும் தம்முள் மாறுபட, மணிபூரகத்தானத்திலுள்ள அறிவு மயமான சூரியன் மேலெழுந்து சிவசூரியனாகி, அருமையான உச்சியின் மேல் நின்று இருவருக்கும் அருள் புரிந்தான்.

***363.*** *அலைகடல் ஊடறுத் தண்டத்து வானோர்*
*தலைவன் எனும்பெயர் தான்தலை மேற்கொண்*
*டுலகார் அழற்கண் டுள்வீழ தோடி*
*அலைவாயில் வீழாமல் அஞ்சலென் றானே.*

சிவன் கடல் பிரதேசமாகிய மணிபூரகத்தினின்றும் பிளந்துகொண்டு, அண்டத்தின் எல்லையை அடைந்து சகல தத்துவ நாயகர்களுக்கும் தானே தலைவன் என்ற பெயரை வகிக்கும் திறனுடையவனாகி, உலகிலுள்ளோர் காமாக்கினியில் வீழாது தான் சென்று, துன்பமாகிய அலை மோதும் பிரபஞ்சத்தில் அழுந்தாமல் காத்து அஞ்சேல் என்று அருள் செய்தான்.

***364.*** *தண்கடல் விட்ட தமரருந் தேவரும்*
*எண்கடல் சூழெம் பிரானென் றிறைஞ்சுவர்*
*விண்கடல் செய்தவர் மேலெழுந் தப்புறங்*
*கண்கடல் செய்யுங் கருத்தறி யாரே.*

குளிர்ச்சி பொருந்திய மணிபூரகமாகிய கடலினைக் கடந்த அறிவு மயமான சூரியனை, அமரத்துவம் பெற்றோரும் ஒளிமண்டல வாசிகளும், சிரசின்மேல் எட்டுத் திக்கும் கடல் போன்று பரந்து விளங்கும் ஒளி மயமான சிவன் என்று வணங்கி ஏத்துவர், ஆகாயத்தைக் கடல்போன்று செய்த அப்பெருமான் சிரசின் மேலும் சென்று, அகக்கண்ணுக்குப் பரவெளியாகக் காட்சி தருவதை அவர்கள் அறியமாட்டார்கள்.

***365.*** *சமைக்கவல் லானைச் சயம்புவென் றேத்தி*
*அமைக்கவல் லாரிவ் வுலகத்து ளாரே*
*திகைத்ததெண் ணீரிற் கடலொளி ஓசை*
*மிகைக்கொள் அங்கி மிகாமைவைத் தானே.*

எல்லாத் தத்துவங்களையும் படைப்பவனை, தனக்கு ஒரு படைப்பவன் இல்லாதவன் என்று துதித்து, தங்களிடம வியாபகப்படும் முறையில் அமைத்துக் கொள்பவர் இவ்வுலகத்திலுள்ளவரே ஆவர், பொங்கிய நீரில் கடலொலி போன்ற நாதம், மேம்பட்டுப் பரவக் காமாக்கினியை மிகாதவாறு அச்சுயம்புமூர்த்தி வைத்தான்.

***366.*** *பண்பழி செய்வழி பாடுசென் றப்புறங்*
*கண்பழி யாத கமலத் திருக்கின்ற*
*நண்பழி யாளனை நாடிச்சென் றச்சிரம்*
*விண்பழி யாத விருத்திகொண் டானே.*

பண்பினைக் கெடுக்கின்ற காமச் செயலாகிய வழிபாட்டினைச் செய்து கொண்டு, சுவாதிட்டானச் சக்கரத்திலிருக்கின்ற, நட்பைக் கொடுக்கின்ற பிரமனைத் தேடியடைந்து, அவனது சிரமானது ஆகாயத்தைப் பழிக்காதவாறு பிரசாவிருத்தியாகிய சேட்டையினை ஏற்றுருளினான்.

## 6. சக்கரப்பேறு

சக்கரம்-ஆணை, பேறு-செல்வம், சக்கரப் பேறாவது, ஆணையால் பெற்ற செல்வம் ஆகும். சிவபெருமானிடம் திருமால் சக்கரம் பெற்ற வரலாற்றின் தத்துவம் இங்குக் கூறப்பெறும்.

***367.*** *மால்போ தகனென்னும் வண்மைக்கிங் காங்காரங்*
*கால்போதங் கையினோ டந்தரச் சக்கர*
*மேல்போக வெள்ளி மலைஅம ராபதி*
*பார்போக மேழும் படைத்துடை யானே.*

மயக்கத்தைத் தருபவன் என்னும் உணர்வாகிய விஷ்ணு தத்துவத்துக்கு, இவ்விடத்து உலகானுபவம் அறுபட, அழகிய சுழுமுனை வழியாக மணிபூரகத்திலுள்ள உணர்வு சகஸ்ரதளமாகிய வட்டத்தை அடைய, வெள்ளொளியில் விளங்கும் தேவாதி தேவனாக, பூமி முதலாக ஏழுலக இன்பங்களையும் படைத்து அவற்றை அளிப்பவனாக விளங்குகின்றான்.

***368.*** ***சக்கரம் பெற்றுநல் தமோ தரன்தானும்***
***சக்கரந் தன்னைத் தரிக்கவொண் ணாமையால்***
***மிக்கரன் தன்னை விருப்புடன் அர்ச்சிக்கத்***
***தக்கநற் சத்தியைத் தான்கூறு செய்ததே.***

முற்கூறிய சக்கரத்தைப் பெற்றுக் குடர் விளக்கம் செய்த திருமாலாகிய தாமோதரனும், பெற்ற சக்கரத்தைத் தாங்க முடியாமல், மேலான சிவபெருமானை விருப்பத்துடன் வழிபாடு செய்ய, தனது வியாபக சத்தியை ஒரு கூறு செய்தளித்துத் தாங்கும்படி செய்தான்.

***369.*** ***கூறது வாகக் குறித்துநற் சக்கரங்***
***கூறது செய்து கொடுத்தனன் மாலுக்குக்***
***கூறது செய்து கொடுத்தனன் சத்திக்குக்***
***கூறது செய்து தரித்தனன் கோலமே.***

பகிர்ந்து கொடுப்பதற்காக அமைத்து, நல்ல சக்கரத்தைத் திருமாலுக்கு ஒரு பகுதியைக் கொடுத்தான், அவ்வாறே தனது சத்திக்கும் பகிர்ந்து கொடுத்தான், இவ்வாறு பகிர்ந்து திருமாலுக்கும் சத்திக்கும் தனது திருமேனியைத் தந்தருளினான்.

***370.*** ***தக்கன்றன் வேள்வி தகர்த்தநல் வீரர்பால்***
***தக்கனறன் வேள்வியில் தாமோதரன் தானுஞ்***
***சக்கரம் தன்னைச் சசிமுடி மேல்விட***
***அக்கி உமிழ்ந்தது வாயுக் கரத்திலே.***

பிரசாவிருத்திக் கிரியையாகிய தக்கனது யாகத்தை அழித்தருளிய வீரபத்திரர்மேல், அவ்வேள்வியில் திருமாலும், ஆணையாகிய சக்கரத்தை அவ்வீரனது பிறை முடியில் செலுத்த, காம வாயுவின் வேகத்தால் அக்கினி சத்தியாகப் பயன்கிட்டாது போயிற்று.

எலும்பும் கபாலமும் என்பன எலும்பும் மண்டை ஓடும் ஆம். ஆனால், அவை உருவத்தையும் அறிவையும் குறிப்பன. பிரம விஷ்ணுகள் எலும்புகளைச் சிவன் அணிந்துள்ளான் என்பதன் தத்துவம் உணர்த்தப்பெறுகிறது.

***371.*** ***எலும்புங் கபாலமும் ஏந்தி எழுந்த***
***வலம்பன் மணிமுடி வானவ ராதி***
***எலும்புங் கபாலமும் ஏந்தில னாகில்***
***எலும்புங் கபாலமும் இற்றுமண் ணாமே.***

பேரூழிக் காலத்தில் எலும்பையும் மண்டையோட்டையும் ஏந்திக்கொண்டு எழுந்த சிவன், மணிமுடி தரித்த திருமால் முதலிய தேவரது, உருவமாகிய எலும்பையும் அறிவாகிய மண்டையோட்டையும் சூக்குமத்தில் தாங்கவில்லையெனில், பிறவிக்கு வரும்போது மக்களது பழைய உருவமும் அறிவும் தொடர்பின்றிப் போகும்.

## 8. அடிமுடி தேடல்

அடிமுடி தேடலாவது, சிவனது அடியையும் முடியையும் தேடல், சிவன் சோதிப் பிழம்பாதலின் அடியையும், முடியையும் ஆணவத்தோடும் ஆசையோடும் சென்று வழிபட்ட பிரம விஷ்ணுக்களால் காண முடியாதது என்பது இப்பகுதியில் விளக்கியவாறு.

***372.*** ***பிரமனும் மாலும் பிரானேநான் என்னப்***
***பிரமன்மால் தங்கள்தம் பேதைமை யாலே***
***பரமன் அனலாய்ப் பரந்துமுன் நிற்க***
***அரனடி தேடி அரற்றுகின் றாரே.***

பிரமனும் திருமாலும் சிவ வியாபகத்துப்பட்டிருந்தும் தங்கள்து அறியாமையால், அவ்விருவரும் தாங்களே தலைவர் என்று அகங்கரிக்க, மேலான சிவன் சோதிப் பிழம்பாய் முன்னே தோன்றவும், அப்பேரொளியாகிய சிவனது அடியையும் முடியையும் உணராது தேடுவாராயினர்.

***373.*** ***ஆமே மூலகுற நின்றஎம் அண்ணலுந்***
***தாமே மூலகில் தழல்பிழம் பாய்நிற்கும்***
***வானே மூலகுறும் மாமணி கண்டனை***
***நானே அறிந்தேன் அவன் ஆண்மை யாலே.***

ஆகின்ற ஏழுலகங்களும் பொருந்துமாறு விளங்கிய எம் தலைவனும், தாமே ஏழு உலகிலும் நிறைந்து அக்கினி வடிவில் வியாபித்துள்ளான், ஆகாய பூதத்தில் ஏழு உலகிலும் விளங்கும் நீலகண்டனை, அவனது அருளால் ஒன்றுபட்டுப் பிரம விஷ்ணுக்களால் காண மாட்டாதவனை நான் அறிந்தேன்.

*374.* ***ஊனால் உயிராய் உணர்வங்கி யாய்முன்னஞ்***
***சேணாய்வா னோங்கித் திருவுருவாய் அண்டத்***
***தாணுவும் ஞாயிறுந் தண்மதி யுங்கடந்***
***தாண்முழு தண்டமு மாகிநின் றானே.***

சிவபெருமானாய் உடம்பாய் உயிராய் அதனுள் நின்ற உணர்வாய்ப் அக்கினியாய், பிரம விஷ்ணுக்களாலும் அறியாத காலத்துத் தூரப் பொருளாய் ஆகாயமளவும் ஓங்கி விளங்கும் சோதி உருவாய், அண்டங்களுக்கு ஆதாரமான ஸ்தம்பத்தையும் அவற்றைச் சுற்றிவரும் சூரிய சந்திரனையும் கடந்து, ஆளுகின்ற அண்டங்கள் முழுமையுமாக விளங்கி நின்றான்.

*375.* ***நின்றான் நிலமுழு தண்டத்துள் நீளியன்***
***அன்றே யவன்முடி வஞ்சின ராய்ந்தது***
***சென்றார் இருவர் திருமுடி மேற்செல***
***நன்றாங் கழலடி நாடவொண் ணாதே.***

நிறைந்து நின்ற சிவன் சர்வ அண்டங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டு தான் உயர்ந்து நின்றனன், சிவன் பேரொளியாக நீண்டு நின்ற காலத்து அவனது திருமேனியைக் கண்டு அஞ்சினவராய், அச்சோதியை ஆராயச் சென்ற பிரம விஷ்ணுக்களாகிய இருவரும், சிவனது திருமுடியானது ஆராயுத்தோறும் வளர்ந்துகொண்டே மேற்செல்ல, நன்மை தருவதாகிய அச்சிவனது அருளைப் பெறாதவராயினார்.

*376.* ***சேவடி ஏத்துஞ் செறிவுடை வானவர்***
***மூவடி தாவென்றானும் முனிவரும்***
***பாவடி யாலே பதஞ்செய் பிரமனுந்***
***தாவடி யிட்டுத் தலைப்பெய்து மாறே.***

செம்மையான திருவடியைப் புகழ்கின்ற கூட்டமான தேவரும், மூன்று அடி தா என்று மாபலியிடம் கேட்ட திருமாலும் முனிவரும், கீதவடிவான மந்திரங்களைக் கொண்டு விரும்பியதைச் செய்யலாமென்ற பிரமனும், சுற்றி அலைந்து அவனைச் சேர முடியுமா? முடியாது.

*377.* ***தானக் கமத் திருந்த சதுமுகன்***
***தானக் கருங்கடன் வாழித் தலைவனும்***
***ஊனத்தின் உள்ளே உயிர்போல் உணர்கின்ற***
***தானப் பெரும்பொருள் தன்மைய தாமே.***

சுவாதிட்டானச் சக்கரத்திலுள்ள நான்முகனும், மணிபூரகத் தானமாகிய கருமையான கடலில் வாழ்கின்ற திருமாலும், ஊன் பொதிந்த உடம்பினுள்ளே உயிர்போல் உடனாய் உணர்கின்ற, முன்மூளை பின்மூளையாகிய தானங்களில் அதிட்டித்துள்ள சதாசிவ மூர்த்தியாகுமா? ஆகாது.

*378.* ***ஆலிங் கனஞ்செய் தெழுந்த பரஞ்சுடர்***
***மேலிங்ஙன் வைத்ததோர் மெய்ந்நெறி முன்கண்***
***டாலிங் கனஞ்செய் துலகம் வலம்வருங்***
***கோலிங் கமைஞ்சருள் கூடலு மாமே.***

எல்லாவற்றிலும் கலந்தெழுகின்ற மேலான சுடர்ப்பொருள், ஆன்மாக்களின் உய்திக்காக இங்கே அமைக்கப்பெற்ற உண்மை நெறியை அறிந்து, எல்லாத் தத்தவங்களிலும் கலந்தும் கடந்தும் நிற்கின்ற, மேலான பஞ்ச சாதாக்கியத்தின் அருளைப் பெறலாம்.

*379.* ***வான்கொடுத் தானை வழிபட்ட தேவர்கள்***
***ஆன்கொடுத் தெம்போல் அரனைஅறிகிலர்***
***ஆள்கொடுத் தின்பங் கொடுத்துக் கோளாகத்***
***தாள்கொடுத் தானடி சாரகி லாரே.***

தமக்கு ஒளியைக் கொடுத்த சிவபெருமானை வணங்கிய தேவர்கள், அடிமையாகக் கொடுத்து எம்மைப்போல் இறைவனை அறியவில்லை, தன்னையே எமக்கு ஆளாகக் கொடுத்தும் சிவபோகத்தை அருளியும், நாங்கள் உய்தி பெறும் வண்ணம் வலிமையான திருவடியைத் தந்தருளிய இறைவனைப் பொருந்தாதவராயினர்.

*380.* ***ஊழி வலஞ்செய்தங் கோரும் ஒருவற்கு***
***வாழி சதுமுகன் வந்து வெளிப்படும்***
***வீழித் தலைநீர் விதித்தது தாவென***
***ஊழிக் கதிரோன் ஒளியைவென் றானே.***

ஊழியைச் செய்கின்ற உருத்திரமூர்த்தியை ஆராய்ந்தறிகின்ற சிவனுக்கு, பிரம பட்டத்தோடு வாழ்கின்ற இப்பிரமன் வெளிப்பட்டு நின்று, விரும்பப்படுகின்ற என்னுடைய சிரசில் தாங்கள் விதிக்கும் கட்டளையைத் தாரும் என்று பிரமன் வேண்ட, ஊழியைச் செய்கின்ற சிவன் பேரொளிப் பிழம்பாய்ப் விளங்கி நின்று சிருட்டித் தொழிலை அருளினான்.

## 9. சர்வ சிருஷ்டி

சர்வ சிருஷ்டி என்பது, எல்லாவற்றையும் படைத்தல் என்றபடி, சர்வ சங்கார காலத்தில் எல்லாவற்றையும் ஒடுக்கிய சிவனே மீண்டும் அம்முறையே படைப்பான் என்பது இங்குக் கூறப்பெறும்.

*381.* ***ஆதியோ டந்தம் இலாத பராபரம்***
***போதம தாகப் புணரும் பராபரை***
***சோதி யதனிற் பரந்தோன்றத் தோன்றுமாந்***
***தீதில் பரையதன் பால்திகழ் நாதமே.***

முதலும் முடிவும் இல்லாத மேலான பரம்பொருள், அறிவு மயமாகப் பிரிப்பின்றியுள்ள பராபரையான சோதியினிடம், பரன்தோன்றத் தீமையில்லாத பரை தோன்றும், அப்பரையினிடமாக விளங்குகின்ற நாதம் தோன்றும்.

*382.* ***நாதத்தில் விந்துவும் நாதலிந்த துக்களில்***
***நீதற் றகம்வந்த சிவன்சத்தி என்னவே***
***பேதித்து ஞானங் கிரியை பிறத்தலால்***
***வாதித்த விச்சையில் வந்தெழும் விந்துவே.***

முற்கூறிய நாதத்திலிருந்து விந்துவும், சுத்த மாயையில் தோன்றிய விந்துக்களில், சிவன் என்றும் சத்தி என்றும் பிரிந்து, ஞானம் என்றும் செயல் என்றும் முறையே உண்டாதலால், உலகைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற சங்கற்பமாகிய இச்சை காரணமாக அனைத்தும் சுத்தமாயையினின்றும் தோன்றுவனவாம்.

*383.* ***இல்லது சத்தி இடந்தனில் உண்டாகிக்***
***கல்லொளி போலக் கலந்துள் ளிருந்திடும்***
***வல்லது ஆக வழிசெய்த அப்பொருள்***
***சொல்லது சொல்லிடில் தூராதி தூரமே.***

தத்துவங்கள் தோன்றுவதற்கு இடமாகிய சத்தி பராசத்தியினிடமாகத் தோன்றி, நவரத்தினம் போன்ற பிரகாசத்துடன் ஆன்மாவில் கலந்து வியாபகமாய் இருக்கும், ஆற்றலோடு தொழில் செய்கின்ற அச்சத்தியின் பெருமையைக் கூறப்புகின், அளவிடற்பாலதாகும்.

*384.* ***தூரத்திற் சோதி தொடர்ந்தொரு சத்தியாய்***
***ஆர்வத்து நாதம் அணைந்தொரு விந்துவாய்ப்***
***பாரச் சதாசிவம் பார்முதல் ஐந்துக்கும்***
***சார்வந்து சத்திஓர் சாத்து மானாமே.***

எண்ணத்துக்கு அப்பாற்பட்ட சிவசோதி எண்ணத்துக்குட்பட்டு வரும் சத்தியாய், இச்சை காரணமாக உண்டாகிய நாதத்தைப் பொருந்திய விந்துவாய், ஐந்தொழில் பாரத்தினை ஏற்று நடத்தும், சதாசிவமூர்த்தி நிலம் நீர் தீ காற்று ஆகாயம் ஆகிய ஐந்துக்களும், சார்வாகிய சத்தியாகவும் ஒப்பற்ற சத்தியை உடையவனாகவும் உள்ளான்.

*385.* ***மானின்கண் வானாகி வாயு வளர்ந்திடும்***
***கானின்கண் நீருங் கலந்து கடினமாய்த்***
***தேனின்கண் ஐந்துஞ் செறிந்தைந்து பூதமாய்ப்***
***பூவின்கண் நின்று பொருந்தும் புவனமே.***

அசுத்தமாயையினின்றும் ஆகாயமாகிக் காற்றுத் தோன்றி வளர்ந்திடும், நெருப்பினின்றும் நீரும் பொருந்திக் கடினத் தன்மையுடைய நிலமாய், பஞ்சீகரண நியாயத்தில் ஒன்றில் ஐந்து தன்மைகளும் கலந்து ஐம்பெரும் பூதங்களாய், பூ என்ற வியாகிருதியில் பிரபஞ்சம் உண்டாகும்.

*386.* ***புவனம் படைப்பான் ஒருவன் ஒருத்தி***
***புவனம் படைப்பார்க்குப் புத்திரர் ஐவர்***
***புவனம் படைப்பாலும் பூமிசை யானாய்***
***புவனம் படைப்பானப் புண்ணியன் றானே.***

பிரபஞ்சத்தைப் படைத்தருளுவது சிவசத்தியாகும், அவர்கட்குப் பிரமன் விஷ்ணு உருத்திரன் மகேசுவரன் சதாசிவன் ஆகிய ஐவர்கள் புத்திரர் ஆவர், அவ்வாறு படைக்கும் சிவசத்தி சொரூபமான பொருளே நான்முகனாய், பிரபஞ்சத்தைப் படைத்து இதம் செய்யும் புண்ணிய மூர்த்தியாகும்.

*387. புண்ணியன் நந்தி பொருந்தி உலகெங்கும்*
*தண்ணிய மானை வளர்ந்திடுஞ் சத்தியுஞ்*
*கண்ணியல் பாகக் கலவி முழுதுமாய்*
*மண்ணியல் பாக மலர்ந்தெழு பூவிலே.*

சிவன் அறிவு மயமாய் எல்லாப் புவனங்களிலும் பொருந்தி, குளிர்ச்சி பொருந்திய மாயா காரியப் பொருளைக் காத்தருளுவர், சத்தியும் கண்ணோட்டமுடன் (இரக்கம்) எல்லாவற்றும் கலந்து, தாங்குந் தன்மையைதாய் வியாகிருதியில் விரிந்து எழுவான்.

*388. நீரகத் தின்பம் பிறக்கும் நெருப்பிடை*
*காயத்திற் சோதி பிறக்கும்அக் காற்றிடை*
*ஓர்வுடை நல்லுயிர்ப் பாதம் ஒலிசத்தி*
*நீரிடை மண்ணின் நிலைப்பிறப் பாமே.*

நீர்ப்பிரதேசமான மணிபூரகத்தில் புருஷனுக்கு இன்பம் உண்டாகும்,அக்கினி விளங்கும் அநாகதமாகிய நெஞ்சினுள் ஒளி வீசும் கிரணங்கள் உண்டாகும், அவ்வாயு விளங்கும் விசுத்தியில் ஆராயத்தக்க உயிர்ப்பு நிலை பெற்றிருக்கும், ஆகாய பூத குணமாகிய நாதம் சத்தியைத் தந்துகொண்டிருக்கும், நீர் மண் இடையேயுள்ள சுவாதிட்டானமே உற்பத்திக்குரிய இடமாகும்.

*389. உண்டுல கேழும் உமிழ்ந்தான் உடனாகி*
*அண்டத் தமரர் தலைவனும் ஆதியுங்*
*கண்டத் சதுமுகக் காரணன் தன்னொடும்*
*பண்டிவ் வுலகம் படைக்கும் பொருளே.*

உலகம் எழினையும் உண்டு உமிழ்ந்த திருமால் உடனாய், எல்லா அண்டங்களில் வாழும் தேவர்களுக்குத் தலைவனும் முன்னோனுமாகிய சிவபெருமான், உலகினைப் படைக்கும் நான்முகனோடும், பழமையாகிய இவ்வுலகம் படைக்கின்ற மெய்ப்பொருளாகும்.

*390. ஓங்கு பெருங்கடல் உள்ளுறு வானொடும்*
*பாங்கார் கயிலைப் பராபரன் தானும்*
*வீங்குங் கமல மலர்மிசை மேலயன்*
*ஆங்குயிர் வைக்கும் அதுவுணர்ந் தானே.*

பெருகுகின்ற கடற்பிரதேசமாகிய மணிபூரகத்திலுள்ள திருமாலுடன், சிரசின் மேல் அழகான வெள்ளொளியில் விளங்கும் பராபரனாகிய சிவபெருமானும், பூரிக்கின்ற சுவாதிட்டானச் சக்கரத்திலிருக்கின்ற பிரமன், அவ்விடத்து உடம்போடு உயிரைப் புணர்த்துகின்ற தன்மையை உணர்ந்திருந்தான்.

*391. காரணன் அன்பிற் கலந்தெங்கும் நின்றவன்*
*நாரணன் நின்ற நடுவுட லாய்நிற்கும்*
*பாரணன் அன்பிற் பதஞ்செய்யும் நான்முகன்*
*ஆரண மாய்உல காயமர்ந் தானே.*

சிருட்டி காரணனாகிய சிவபெருமான் அன்பினால் எல்லாப் பொருளோடும் கலந்திருப்பவன், திருமாலாய் உடம்பின் நடுப்பாகமாகிய உந்திக்கமலத்தில் இருப்பான், அவனே புவனங்களை அன்பில் சிருட்டி செய்யும் நான்முகனாய் உள்ளான், அப்பெரமானே சொற்பிரபஞ்சமாயும் பொருட்பிரபஞ்சமாயும் உள்ளான்.

*392. பயன்எளி தாம்பரு மாமணி செய்ய*
*நயன்எளி தாகிய நம்பன்ஒன் றுண்டு*
*அயன்ஒளி யாயிருந்த தங்கே படைக்கும்*
*பயனெளி தாம்வய ணந்தெளிந் தேனே.*

எல்லாப் பயன்களையும் எளிமையாக நல்கும் பெரிய மாணிக்கத்தை விளங்கச் செய்ய, நன்மை தரும் சிவன் ஒருவன் உளன், அப்பெருமான், பிரமனுக்கு ஒளியை நல்கிப் படைத்தல் தொழிலை மூலாதாரத்திலிருந்து செய்கிறான், அவன் துணைகொண்டு பயனை எளிமையாக அடையும் காரணத்தை அறிந்தேன்.

*393. போக்கும் வரவும் புனிதன் அருள்புரிந்*
*தாக்கமுஞ் சிந்தைய தாகின்ற காலத்து*
*மேக்கு மிகநின்ற எட்டுத் திசையொடுந்*
*தாக்குங் கலக்குந் தயாபரன் தானே.*

அழிப்பும் படைப்பும், சிவனருளால் நிகழும் காப்பும் ஆகிய முச்செயல்களையும் நினைக்கின்ற காலத்தில், சிரசைச் சூழவுள்ள எட்டுத் திசைகளிலும், மூலாதாரத்தினின்றும் மேலே வந்த செவ்வொளி மோதிப் பரவும்.

*394.* *நின்றுயி ராக்கும் நிமலன்என் னாருயிர்*
*ஒன்றுயி ராக்கும் அளவை உடலுற*
*முன்துய ராக்கும் உடற்குத் துணையதா*
*நன்றுயிர்ப் பானே நடுவுநின் றானே.*

உலகுயிர்களோடு பொருந்தி நின்று பக்குவம் செய்யும் மலமில்லாத சிவன், என்னுடைய அருமையான உயிருக்கு வளமாந் தன்மையைச் செய்து என் உடம்பில் பொருந்தி, முன்னே துன்பத்தைக் கொடுத்த உடம்புக்குத் துணையாய், நடுநாடியின் உச்சியில் உயிர்ப்பாய் நன்மை செய்துகொண்டிருக்கின்றான்.

*395.* *ஆகின்ற தன்மையின் அக்கணி கொன்றையன்*
*வேகின்ற செம்பொனின் மேலணி மேனியன்*
*போகின்ற சீவன் புகுந்துட லாய்உளன்*
*ஆகின்ற தன்மைசெய ஆண்டகை யானே.*

பிரபஞ்சம் உண்டாதற்பொருட்டுப் பாம்பை அணிந்த கொன்றை வேந்தனும், உருகுகின்ற சிவந்த பொன் போன்ற மேலான அழகிய திருமேனியையுடையவனும் ஆகிய சிவன், பிறவிக்குச் செல்கின்ற சீவன் வாழும் உடலாயும் உள்ளான், அவன் சீவனைச் சிவமாக்கி ஆளுகின்றவனாவான்.

*396.* *ஒருவன் ஒருத்தி விளையாடல் உற்றார்*
*இருவர் விளையாட்டும் எல்லாம் விளைக்கும்*
*பருவங்கள் தோறும் பயன்பல வான*
*திருவொன்றிற் செய்கை செகமுற்று மாமே.*

ஒருவனாகிய சிவனும் ஒருத்தியாகிய சத்தியும் விளையாடல் செய்தார்கள், அவ்விருவரது விளையாட்டு எல்லாம் செய்யவல்லது, சூரியகதி மாறுபாட்டால் உண்டாகும் பருவ காலங்களுக்கேற்ப விளையும் பயன்களும் உலகில் வேறாக இருக்கும், அதே போன்று அருட்பதிவின் மாறுபாட்டால் உண்டாகும் பக்குவத்துக்கு ஏற்ப விளையும் பயன்களும் உலகில் வேறுபடும்.

*397.* *புகுந்தறி வான்புவ னாபதி அண்ணல்*
*புகுந்தறி வான்புரி சக்கரத் தண்ணல்*
*புகுந்தறி வான்மலர் மேலுறை புத்தேள்*
*புகுந்தறி யும்முடிக் காகிநின் றாரே.*

புவனங்களுக்கு அதிபதியான உருத்திரனிடம் புகுந்து உலகை அழிக்கின்ற செயலைச் சிவன் அறிவான், அவன் பந்தங்களால் சுற்றப்பட்ட உலகினைத் திருமாலிடம் பொருந்திக் காக்கின்ற செயலை அறிவான், சுவாதிட்டான மலர்மேல் உறைகின்ற பிரமனிடம் பொருந்திச் சிருஷ்டித் தொழிலையும் அவன் அறிவான், அவ்வாறு அறிகின்ற சிவனது ஆட்சிக்கு அடங்கியே அவரவர் தொழில்களைத் செய்கின்றனர்.

*398.* *ஆணவச் சத்தியும் ஆம்அதில் ஐவருங்*
*காரிய காரண ஈசர் கடைமுறை*
*பேணிய ஐந்தொழி லால்விந்து விற்பிறந்(து)*
*ஆணவம் நீங்கா தவரென லாகுமே.*

ஆணவமலத்தை உடையவராகிய பிரமனாகி ஐவரும், தகுதிபற்றி மேலுள்ளவர் காரண ஈசர் என்றும் கீழுள்ளவர் காரிய ஈசர் என்று சொல்லப்பெறுவர், இறைவன் விரும்பியவண்ணம் நடைபெறும் ஐந்தொழிலால் சுத்த மாயையில் தோன்றி, ஆணவ மலம் முற்றிலும் நீங்காதவர்கள் என்றே சொல்லப் பெறுவர்.

*399.* *உற்றமுப் பாலொன்று மாயாள் உதயமா*
*மற்றைய மூன்று மாயோ தயம்விந்த*
*பெற்றவன் நாதம் பரையிற் பிறத்தலால்*
*துற்ற பரசிவன் தொல்வினை யாட்டிதே.*

மாயையாகிய சத்தி ஒன்றாயினும் அது சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என மூன்றாக உள்ளது, ஏனைய சாதாக்கியம், மகேசுவரம், சுத்தவித்தை ஆகிய மூன்றும் சுத்தமாயையின் காரியமாகும், விந்தவைப் பெற்ற நாதமானது பரையினின்றும் தோன்றுவதால், பரையோடு சிவனது பழமையான விளையாட்டே இச்சிருஷ்டி முதலியனவாகும்.

*400.* *ஆகாய மாதிசதாசிவ ராதியென்*
*போகாத சத்தியுட் போந்துடன் போந்தனர்*
*மாகாய ஈசன் அரன்மால்பிரமனாம்*
*ஆகாயம் பூமி காண அளித்தலே.*

ஆகாயம் முதலிய ஐம்பூதங்களை இயக்கும் சதாசிவர் முதலிய ஐவரும், என்றும் உள்பொருளாகிய மாயா சத்தியுள் பொருந்தி என் உடம்பிலும் உயிரிலும் தொழில் புரியகின்றனர், பெருமை பொருந்திய சதாசிவமூர்த்தியான்வர் உருத்திரன் விஷ்ணு பிரமன் ஆகியோராய், விண்ணும் மண்ணும் ஆகிய உலகங்கள் தோன்றும்படி செய்வார்.

*401. அளியார் முக்கோணம் வயிந்தவந் தன்னில்*
*அளியார் திரிபுரை யாம்அவன் தானே*
*அளியார் சதாசிவ மாகி அமைவான்*
*அளியார் கருமங்கள் ஐந்துசெய் வாளே.*

கருணை நிரம்பிய முக்கோணப் பீடத்தில் விந்துவினில் (மையப்புள்ளியில்) விளங்கும். கருணையுள்ளமும் மண்டல நாயகியுமான அவளே, அநுக்கிரகம் புரியும் சதாசிவமூர்த்தியாகிப் பொருந்தியிருப்பாள், அவளே அருளோடு கூட ஐந்தொழில்களையும் சீவகர்கள்மாட்டுச் செய்பவளாவாள்.

*402. வாரணி கொங்கை மனோன்மணி மங்கலி*
*காரணி காரிய மாகக் கலந்தவள்*
*வாரணி ஆரணி வானவர் மோகினி*
*பூரணி போதாதி போதமு மாமே.*

கச்சணிந்த தனங்களையுடைய சதாசிவநாயகி, மங்கலப் பொருளாயும், எல்லாவற்றுக்கும் காரணமாயும் படைத்தலாகி செயலில் கலந்தவளாயும் உள்ளாள், அவளே பிரணவ சொரூபியாயும் வேதப்பொருளாயும் தேவரை மயக்கும் திரோதான சத்தயாயும், பூரணமாய், சந்திர ஞானமும் அனுபவ ஞானமும் உடையவளாயும் உள்ளான்.

*403. நின்றது தானாய் நிறைந்த மகேசுவரன்*
*சென்றங் கியங்கும் அரன்றிரு மாலவன்*
*மன்றது செய்யும் மலர்மிசை மேலயன்*
*என்றிவ ராக இசைந்திருந் தானே.*

சதாசிவரோடு பிரிப்பற்று நின்ற மகேசுரன், கீழே சென்று அங்குத் தொழில் செய்யும் உருத்திரனாகவும் திருமாலாகவும், ஸ்திரீபுருஷ சேர்க்கையைச் செய்கின்ற சுவாதிட்டானச் சக்கரத்திலுள்ள பிரமன் முதலியோராகவும், ஒன்றுபட்டிருந்தான்.

*404. ஒருவனு மேலஉல கேழும் படைத்தான்*
*ஒருவனு மேலஉல கேழும் அளித்தான்*
*ஒருவனு மேலஉல கேழும் துடைத்தான்*
*ஒருவனு மேஉல கோடுயிர் தானே.*

சிவனாகிய ஒருவனே (சதாசிவன் என்ற பதியாகிக்) காரியக் கடவுளரோடு பொருந்தி ஏழுலகங்களையும் படைக்கிறான், அவ்வாறே அவன் ஏழுலகங்களையும் காக்கிறான், அப்பெருமானே ஏழுலகங்களையும் ஒடுக்குகிறான், அவனே உலகமாகவும் உயிராகவும் உள்ளான்.

*405. செந்தா மரைவண்ணன் தீவண்ணன் எம்இறை*
*மஞ்சார் முகில் வண்ணன் மாயஞ்செய் பாசத்தும்*
*கொந்தார் குழலியர் கூடிய கூட்டத்தும்*
*மைந்தார் பிறவி யமைத்துநின் றானே.*

செந்தாமரை நிறம் போன்ற தழல் நிறத்தையுடைய எமது தலைவனாகிய உருத்திரன், மேகம் போன்ற நிறமுடைய திருமால் மயக்கம் செய்கின்ற உலக பந்தத்தும், பூங்கொத்துகளை அணிந்த மாதரது கூட்டத்தும் பொருந்தி, வலிய உலகோற்பத்தியை அமைத்தருளுகின்றான்.

*406. தேடும் திசைஎட்டுஞ் சீவன் உடல்உயிர்*
*கூடும் பிறவிக் குணஞ்செய்த மாநந்தி*
*ஊடு மவர்தம் முள்ளத்து ளேநின்று*
*நாடும் வழக்கமும் நான்அறிந் தேனே.*

எட்டுத் திசையிலும் தேடி அலைகின்ற சீவனுக்கு, உடம்போடு உயிர் கூடிப் பிறக்கும்படி அமைந்த சிவபெருமான், கன்னியரும் காளையருமாக இருந்து ஊடுகின்றவரது உள்ளத்தில் எழுத்தருளி நின்று, விருப்பம் செய்கின்ற வழக்கத்தையும் நான் அறிந்தேன்.

*407. ஓராய மேஉல கேழும் படைப்பதும்*
*ஓராய மேஉல கேழும் அளிப்பதும்*
*ஓராய மேஉல கேழும் துடைப்பதும்*
*ஓராய மேஉல கோடுயிர் தானே.*

சிவசத்திக் கூட்டமே ஏழுலகங்களைப் படைப்பதும், அக்கூட்டமே ஏழுலங்களையும் காத்து நிற்பதும், அதுவே ஏழுலங்களை அழிப்பதும், அக்கூட்டமே உலகோடு உயிரை இணைத்து நிற்பதுமாகும்.

*408. நாதன் ஒருவனும் நல்ல இருவருங்க*
*கோது குலந்தொடுங் கூட்டிக் குழைத்தனர்*
*ஏது பணியென் றிசையும் இருவருக்*
*காதி இவளே அருளுகின் றானே.*

நாதனாகிய சிவபெருமான் ஒருவனும், சீவர்களுக்கு நன்மையைச் செய்கின்ற மகேசுவர சிதாசிவரும், சுத்த மாயை, அசுத்த மாயை ஆகிய இரண்டிலும் ஒளி மண்டலத்திலிருந்து காரண நிலையை அமைக்கின்றனர், அவ்வாணைவழி என்ன தொழில் செய்ய வேண்டும் என்று விரும்பி நிற்கும் பிரம்ம விஷ்ணுக்களுக்கு, ஆதியான சிவனே ஆற்றலை அளிக்கின்றான்.

*409. அப்பரி செண்பத்து நான்குநூ றாயிரம்*
*மெய்ப்பரி செய்தி விரிந்துயி ராய்நிற்கும்*
*பொய்ப்பரி செய்திப் புகலும் மனிதர்கட்*
*கிப்பரி சேஇருள் மூடிநின் றானே.*

மேலே காட்டிய முறையில் எண்பத்து நான்கு லட்சம் யோனி பேதங்களிலும் உண்மையாகப் பொருந்தி உயிர்க்குயிராய் விளங்குவான், இதனைப் பொய்யானது என்று கூறும் மக்களுக்கு, இத்தன்மையிலேயே ஆணவ வல்லிருளில் ஆழ்த்துகின்றான்.

*410. ஆதித்தன் சந்திரன் அங்கிஎண் பாலர்கள்*
*போதித்த வானொலி பொங்கிய நீர்புவி*
*வாதித்த சத்தாதி வாக்கு மனாதிகள்*
*ஓதுற்ற மாயையின் விந்துவின் உற்றதே.*

சூரியன் சந்திரன் அட்டதிக்குப் பாலர்கள், போதனை செய்யும் நாதம் நிரம்பிய ஆகாயம், வாதனை செய்யும் சத்தம், பரிசம், ரூபம், ரசம் கந்தமாகிய தன்மாத்திரைகள், வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தமாகி கன்மேந்திரியங்கள், மனம் புத்தி சித்தம் அகங்காரமாகிய அந்தக்கரணங்கள் எல்லாம், சொல்லப்பெற்ற மகேசுரர் விளங்கும் விந்த மண்டலத்தில் சூட்சுமமாய் அமைக்கப்பட்டுள்ளன.

## 10. திதி

சிவனது நிலை சிறப்பு நிலை. அவனே உலகுக்கு அருள் புரியும் நிலையில் சதாசிவனாக உள்ளான். சதாசிவ மூர்த்தியே பிரமனாய்ப் படைக்கிறான் என்று முன்னர்க் கூறப்பட்டது.

*411. புகுந்துநின் றான்வெளி யாய்இரு ளாகிப்*
*புகுந்துநின் றான்புகழ் வாய்இகழ் வாகிப்*
*புகுந்துநின் றான்உட லாய்உயி ராகிப்*
*புகுந்தநின் றான்புந்தி மன்னிநின் றானே.*

அநுக்கிரகத்தைச் செய்யும் சதாசிவ மூர்த்தியே வெளியாவும் இருளாகவும் எல்லாவற்றிலும் கலந்துள்ளான், அவனே ஞானியர்க்குப் புகழத்தக்க பொருளாகவும் அஞ்ஞானியர்க்கு இகழத்தக்க பொருளாகவும் உள்ளான், அவன் உடலாகவும் உயிராகவும் உள்ளான், அவ்வாறு கலந்து நின்ற அவனே மஹத் என்ற புத்தி தத்தவத்தில் பொருந்தியிருக்கின்றான்.

*412. தானே திசையொடு தேவரு மாய்நிற்குந்*
*தானே உடலுயிர் தத்துவ மாய்நிற்குந்*
*தானே கடல்மலை யாதியு மாய்நிற்குந்*
*தானே உலகில் தலைவனு மாமே.*

சதாசிவ மூர்த்தியே எல்லாத் திசைகளிலும் வியாபித்துத் தேவர்களால் நிற்பான், அவனே ஆகாயக் கூற்றில் பொருந்தியவனாகையால் உடலாகவும் உயிராகவும் பொருந்தி உடலின் தத்துவத்திலும் உயிரின் தத்துவத்திலும் விளங்குகின்றான், அவனே கடலாகவும் மலையாகவும் இவை போன்ற பிற அசையாதனவற்றிலும் உள்ளான், அதனால் சதாசிவ மூர்த்தியே தலைவனுமாவான்.

*413. உடலாய் உயிராய் உடலகம தாகிக்*
*கடலாய்க் கார்முகில் நீர்பொழி வானாய்*
*இடையாய் உலப்பிலி எங்குந்தா னாகி*
*அடையார் பெருவழி அண்ணல்நின் றானே.*

சிரசின்மேல் பொருந்திய ஒளிமயமான ஆகாயத்தில் விளங்கும் அநுக்கிரக மூர்த்தி, உடலாயும், உலகமிதாகியும், (அவனே) கடலாயும் இருண்ட மேகமாய் மழைநீர் பொழிபவனாயும், இவற்றுக்கு மத்தியில் உள்ளவனாய் அழியாதவனாய் எங்கும் நிறைந்திருப்பவனாய், விளங்கி நின்றானே.

***414.*** ***தேடுந் திசைஎட்டுஞ் சீவன் உடல்உயில்***
***கூடு மரபிற் குணஞ்செய்த மாநந்தி***
***ஊடும் அவர்தம துள்ளத்து ளேநின்று***
***நாடும் வழக்கமும் நான்அறிந் தேனே.***

இம்மந்திரம் 406ம் மந்திரமாகச் சிறு மாற்றத்துடன் வந்துள்ளது.

எட்டுத் திசையிலும் தேடி அலைகின்ற சீவனுக்கு, உடம்போடு உயிர் கூடிப் பிறக்கும்படி அமைந்த சிவபெருமான், கன்னியரும் காளையருமாக இருந்து ஊடுகின்றவரது உள்ளத்தில் எழுத்தருளி நின்று, விருப்பம் செய்கின்ற வழக்கத்தையும் நான் அறிந்தேன்.

***415.*** ***தானொரு காலந் தனிச்சுட ராய்நிற்குந்***
***தானொரு கால்சண்ட மாருத மாய் நிற்குந்***
***தானொரு காலந் தண்மழை யாய் நிற்குந்***
***தானொரு காலந்தண் மாயனு மாமே.***

சதாசிவ மூர்த்தியே உலகை அழிக்கவேண்டும்போது ஒப்பற்ற சூரியனாகி மழை இல்லாமையைச் செய்து அழிப்பான், அவனே சூறாவளிக் காற்றாய் அழிவினைச் செய்வான், அவனே ஒரு சமயம் பெருமழையைப் பெய்வித்துப் பிரளயத்தை உண்டாக்குவான், அவனே ஒரு சமயம் திருமாலாய் இருந்து உலகினைக் காப்பவனாகவும் உள்ளான்.

***416.*** ***அன்பும் அறிவும் அடக்கமு மாய்நிற்கும்***
***இன்பமும் இன்பக் கலவியு மாய்நிற்கும்***
***முன்புறு காலமும் ஊழியு மாய்நிற்கும்***
***அன்புற ஐந்லில் அமர்ந்துநின் றானே.***

முன்னே கூறிய மூர்த்தியே உயிராற்றலில் விளங்கும் அன்பு அறிவு அடக்கம் ஆகிய பண்புகளாய் உள்ளான், இன்பத்துக்ம் இன்பக் கூட்டுறவுக்கும் காரணமாக உள்ளான், அவன் கால எல்லை வகுத்தவனாகவும் அதனை முடிப்பவனாகவும் உள்ளான், அவனே நன்மையைச் செய்ய சுத்த மாயா தத்துவமாகிய நாதம், விந்து, சாதாக்கியம், மகேசுவரம், சுத்தவித்தை ஆகிய ஐந்தில் பொருந்தி ஐம்பூத காரியங்களைச் செய்கிறான்.

***417.*** ***உற்று வனைவான் அவனே உலகினைப்***
***பெற்று வனைவான் அவனே பிறவியைச்***
***சுற்றிய சாலும் குடமுஞ் சிறுதூதை***
***மற்றும் அவனே வனையவல் லானே.***

அப்பெருமானே உலகினை மாயையின்றும் தோன்றச் செய்பவனாவான், அவனே உயிர்களுக்குப் பிறவியைக் கொடுத்தருளுபவன் ஆவான்,பேரண்டமாகிய பெரிய மிடாவும், சிற்றண்டமாகிய குடமும் உடம்பாகிய கலயமும் ஏனையவும், அவன் குயவனைப் போன்று மண்ணாகிய மாயையினின்றும் படைத்தருளுவான்.

***418.*** ***உள்ளுயிர்ப் பாயுட லாகிநின் றான்நந்தி***
***வெள்ளுயி ராகும் வெளியான் இலங்கொளி***
***உள்ளுயிர்க் கும்உணர் வேயுட லுட்பரந்***
***தள்ளுயி ராவண்ணக் தாங்கிநின் றானே.***

நந்தியெம்பெருமான் உள்ளே மூச்சுக்காற்றாய் அது நடைபெறுவதற்குத் துணைபுரிய உடலாயும் உள்ளான். அவன் தத்துவங்களோடு கூடாத உயிர்கள் ஆகாயத்தை இடமாகக் கொண்டு ஒளி மயமாய் விளங்குபவன், எனினும் அவனே உள்ளே அசைவினை உண்டாக்குகிற உணர்வாய் உடலினுள் பரவி, உயிரை வெளியேற்றிவிடாமல் கால எல்லைவரை தொழிற்படுத்திக் கொண்டுள்ளான்.

***419.*** ***தாங்கருந் தன்மையுந் தானவை பல்லுயிர்***
***வாங்கிய காலத்தும் மற்றோர் பிறிதில்லை***
***ஓங்கி எழுமைக்கும் யோகாந்த மவ்வழி***
***தாங்கிநின் றானும்அத் தாரணி தானே.***

அவ்வாறு உயிர்களை உடலை விட்டு நீங்காது தாங்கிய நிலையிலும், தான் பல்லுயிர்களாகிய அவற்றைக் கால எல்லையில் உடம்பினின்றும் பிரித்த நிலையிலும், அவற்றைக் காப்பதற்கு அவனைத் தவிர வேறு எவரும் இல்லை, மேல் வருகின்ற ஏழு பிறப்புக்கும் துரியாதீதமாகிய அந்நிலையில், ஆகாய பூத நாயகனான அச்சதாசிவனே தாங்கிக் கொண்டுள்ளான்.

***420.*** ***அணுகினுஞ் சேயவன் அங்கியிற் கூடி***
***நணுகினும் ஞானக் கொழுந்தொன்று நல்கும்***
***பணிகினும் பார்மிசைப் பல்லுயி ராகித்***
***தணிகினும் மண்ணுடல் அண்ணல்செய் வானே.***

எல்லா உயிரிடத்தும் பொருந்தியிருக்கும் இறைவனைப் புறத்தே சென்று தேடினாலும் அவர்க்குத் தூரமாயிப்பான், அவரவரிடமுள்ள அக்கினி கலையைத் தூண்டி அத்துடன் பிரமரந்திரம் சென்று அணுகினாலும் அவன் அருளை வழங்குவான், உலகின் மீது பல பிறவி எடுத்து இறைவனை வணங்கினாலும், அப்பிறவிதோறும் உயிர்களுக்குச் சேவை செய்தாலும் எம்பெருமான் மேன்மையான உடம்பினைக் கொடுத்தளுவான்.

## 11. சங்காரம்

சங்காரம்-அழித்தல். ஐந்தொழில் அருட்செயல்களில் சங்காரமும் ஒன்றாகும். அழித்தல் இளைப்பாற்றற்பொருட்டாதலின் என்க. சிவனே உருத்திரனாய்ச் சங்காரம் செய்கிறான் என்பது அறிக.

*421. அங்கிசெய் தீசன் அகலிடஞ் சுட்டது*
*அங்கிசெய் தீசன் அலைகடற் சுட்டது*
*அங்கிசெய் தீசன் அசுரரைச் சுட்டது*
*அங்கியல் வீசற்குக் கைஅம்பு தானே.*

அக்கினியைப் பெருகச் செய்து இறைவன் பரந்த உலகத்தை அழித்தருளினான். அதே போன்று அக்கினியால் அவன் அலைகடலை வற்றச்செய்தான், அக்கினியால் இறைவன் அசுரரை அழித்தருளினான், அவ்வக்கினியே இறைவனுக்குக் கையிலே விளங்கும் அம்பாகும்.

*422. இலயங்கள் மூன்றினும் ஒன்றுகற் பரந்த*
*நிலையன் றழிந்தமை நின்றுணர்ந் தேனால்*
*உலைதந்த மெல்லரி போலும் உலகம்*
*மலைதந்த மானிலந் தான்வெந் ததுவே.*

தினப் பிரளயம், மத்தியப் பிரளயம், மகாப்பிரளயம் ஆகிய மூன்றனுள் கற்பத்தின் முடிவில் வரும் பிரளயம் ஒன்றாகும், இவ்வுலகங்களின் நிலை அன்று அழிந்தவற்றை நான் ஞானக்கண்ணால் கண்டேன், கற்ப முடிவில் உலையிலிட்ட அரிசி கீழும். மேலுமாகச் சுழலுவது போல இவ்வுலகம் சுழலும், அப்போது குறிஞ்சி முதலிய பெரிய நிலம் வெந்தொழியும்.

*423. பதஞ்செய்யும் பாரும் பனிவரை எட்டும்*
*உதஞ்செய்யும் ஏழ்கடல் ஓதம் முதலாங்*
*குதஞ்செய்யும் அங்கி கொளுவியா காசம்*
*விதஞ்செய்யும் நெஞ்சில் வியப்பில்லை தானே.*

சீவர்களுக்குப் பக்குவத்தைச் செய்கின்ற பூமியும், பனி நிறைந்த மலை எட்டும், மகிழ்ச்சியை உண்டாக்குகின்ற ஏழு கடல்களின் பெருக்கம் முதலிய எல்லாம், கொதிக்கும்படி செய்கின்ற அக்கினியை மூட்டி, வெட்ட வெளியாக்குவாரது நெஞ்சில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

*424. கொண்டல் வரைநின் றிழிந்த குலக்கொடி*
*அண்டத்துள் ஊறி யிருந்தெண் டிசையாதி*
*ஒன்றின் பதஞ்செய்த ஓம்என்ற அப்புறக்*
*குண்டத்தின் மேல்அங்கி கோலிக்கொண் டானே.*

சிரசின் மேலுள்ள ஒளி மண்டலத்திலிருந்து கீழே இறங்கிய ஆதி சத்தி, உடம்பைச் சுற்றியுள்ள, ஒளிமயமான அண்டகோசத்தில் பொருந்தியிருந்து, திரோதான சத்தியோடு கூடிச்சீலர்களைப் பக்குவப்படுத்தப் பிரணவமாகிய மூலாதாரத்திலுள்ள குண்டத்தின் மேல் எழுகின்ற, அக்கினியை மீண்டும் தன்னோடு ஒடுக்கி கொண்டு சிவபெருமான் விளங்கினான்.

*425. நித்தசங் காரம் உறக்கத்து நீள்முடம்*
*வைத்தசங் காரமுஞ் சாக்கிரா தீதமாஞ்*
*சுத்தசங் காரந் தொழிலற்ற கேவலம்*
*உய்த்தசங் காரம் பரன்அருள் உண்மையே.*

நித்த சங்காரம் என்பது உறக்கத்தில் ஒன்றும் அறியாதிருத்தலாம், அமைத்த சங்காரம் என்பது கருவி கரணங்கள் சுழன்ற நிலையாம், சுத்த சங்காரமாவது செயலின்றி ஒன்றும் விளங்காமல் நிற்கும் நிலை, சிவனருளில் பொருந்தச் செய்வதே உண்மையான சங்காரமாகும்.

*426. நித்தசங் காரம் இரண்டுடல் நீவுதல்*
*வைத்தசங் காரமும் மாயாள்சங் காரமாஞ்*
*சுத்தசங் காரம் மனாதீதந் தோய்வித்தல்*
*உய்த்தசங் காரஞ் சிவனருள் உண்மையே*

நித்த சங்காரமவாது தூல சூக்குமமான இரு உடல்களையும் சீவன் தொட்டுக் கொண்டிருத்தல், இப்படியாக அமைத்த சங்காரம் மாயையைப் பொருந்திய சங்காரமாகும், சுத்த சங்காரம் என்பது மனம் அதீதத்தில் சென்று சேட்டையின்றி இருக்கச் செய்தல், அப்போது சிவனருளில் தோய்விக்கச் செய்தலே உண்மையான சங்காரமாகும்.

*427. நித்தசங்க காரங் கருவீடர் நீக்கினால்*
*ஒத்தசங் காரமும் உடலுயிர் நீவுதல்*
*வைத்தசங் காரங் கேவலம் ஆன்மாவுக்*
*குய்த்தசங் காரம் சிவமாகும் உண்மையே.*

நித்த சங்காரம் பிறவித் துன்பத்தைப் போக்கினால், மனம் கருவிகள் ஒத்த சங்காரத்தில் உடலும் உயிரும் பிரிந்திருக்கும் நிலை உண்டாகும், இவ்வாறு அமைத்து வைத்த சங்காரம் ஆன்மாவுக்குச் சுத்தகேவல நிலையாம், சிவமாந்தன்மை, அளித்த சங்காரமே உண்மைச் சங்காரமாகும்.

*428. நித்தசங் காரமும் நீடினைப் பாற்றுதல்*
*வைத்தசங் காரமு மன்னு மனாதியிற்*
*சுத்தங்க காரமும் தோயாப் பரனருள்*
*வைத்தசங் காரமு நாலா மதிக்கிலே.*

நித்த சங்காரமாவது நீண்ட உறக்கத்தில் வைப்பதாகும், அமைத்து வைத்த சங்காரமும் மனம் முதலிய கரணங்கள் அடங்கியிருக்கும்படி செய்தல், சுத்த சங்காரமுங்கூடக் கருவிகளினின்றும் நீங்கிப் பரனருளில் கூடாதிருத்தலாம், மதித்துச் சொன்னால் கருவிகளின்றும் நீங்கிப் பரனருளில் தோய்ந்து விளங்கும்படி செய்தல் நான்காவது சங்காரமாகும்.

*429. பாழேலு முதலா எழும்பயிர் அப்பயிர்*
*பாழாய் அடங்கினும் பண்டைப் பாழ் பாழாகா*
*வாழாச்சங் காரத்தின் மாலயன் செய்தியாம்*
*பாழாம் பயிராய் அடங்கும் அப் பாழிலே.*

பாழாகிய சிவத்தை முதலாகக் கொண்டு தோன்றும் ஆன்மப் பயிரானது, அது தனுகரணாதிகளோடு கூட்டப்பெற்ற பின் திரும்பவும் அடங்கினாலும் பண்டை நிலை எய்தாது, இது முடிவைத் தாரத சங்காரமாதலின் இச்சீவர்கள் மாலயன் செயலுக்குட்பட்டுப் பிறப்பிறப்பில் உழல்வர், ஆணவமலம் வலிமை கெட்டு வறுத்த வித்துப் போல் பாழும் பயிரானபோது அச்சிவத்தின் வியாபகத்தில் அடங்கியிருக்கும்.

*430. தீயவைத் தார்மின்கள் சேரும் வினைதனை*
*மாயவைத் தான்வைத்த வன்பதி ஒன்றுண்டு*
*காயம்வைத் தான்கலந் தெங்கும் நினைப்பதோர்*
*ஆயம்வைத் தானுணர் வாரவைத் தானே.*

சேர்கின்ற வினைகளைச் சுட்டுவிடுகின்றவண்ணம் சிவன்பால் ஆர்வத்தைப் பெருக்கி நில்லுங்கள், இவ்வாறு அழியும்படி செய்கின்றவன் வாழ்கின்ற இடமாகிய சகஸ்ரதளம் ஒன்றுள்ளது, அவ்விடத்தை உடம்பில் வைத்தான், கலந்து சிந்திப்பதற்கு உடம்பைச் சூழ ஒளிக்கற்றைகளை அமைத்தருளினான், அங்கே உணர்வு பொருந்துமாறு அருளினான்.

## 12. திரோபவம்

திரோபகம் என்பது மறைப்பாகும். மகேசுவரன் சிவனது ஆணையைத் தாங்கிச் சீவர்கள் அறியாவண்ணம் வினை போகங்களை ஊட்டுகின்றான். இவ்வாறு ஊட்டுவித்துச் சீவரது வினையைச் கழித்தலின் இதுவும் அருட்செயலேயாம்.

*431. உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை*
*உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை*
*உள்ளமுந் தானும் உடனே இருக்கினும்*
*உள்ளம் அவனை உருவறி யாதே.*

உயிருக்குயிராக இருக்கும் ஒருவனும், மனமண்டலத்தில் உள்ளே எழுகின்ற பேரொளிப் பிழம்பானவனும், நெஞ்சத்தை விட்டுச் சிறிதும் நீங்காத பெருமானும் ஆகிய ஒப்பற்ற தலைவனை, நெஞ்சத்திலே உடனாய் அவன் விற்றிருப்பினும், நெஞ்சம் மல மறைப்பினால் அப்பெருமான் இன்ன தன்மையன் என்று உணராதாகும்.

*432. இன்பப் பிறவி படைத்த இறைவனுந்*
*துன்பஞ்செய் பாசத் துயருள் அடைத்தனன்*
*என்பிற் கொளுவி இசைந்துறு தோற்றசை*
*முன்பிற் கொளுவி முடிகுவ தாக்குமே.*

இன்பம் பெறுவதற்குரிய பிறவியைத் தந்தருளிய இறைவன், துன்பத்தைத் தருகின்ற பந்தத்தைச் சீவர்களுக்கு அமைத்தருளினான், அவன் சீவர்களை எலும்போடு சேர்த்து, பொருந்திய தோலாலும் தசையாலும் வன்மை பொருந்தப் பண்ணி, தூய்மைப்படுத்தி முத்தியைக் கொடுத்தருளுவான்.

*433. இறையவன் மாதவன் இன்பம் படைத்த*
*மறையவன் மூவரும் வந்துடன் கூடி*
*இறையவன் செய்த இரும்பொறி யாக்கை*
*மறையவன் வைத்த பரிசறி யாரே.*

உருத்திரன் திருமால் இன்பத்தை அமைத்த பிரான் ஆகிய மூன்று பேர்களும் வந்து உடனாக இருந்து, இறைவன் அமைத்துக் கொடுத்த பெருமயுள்ள இயந்திரமான சரீரத்தில், இரகசியமாக அவ்விறைவன் வைத்த தன்மையினை அறியமாட்டார்கள்.

*434. காண்ங்ன்ற கண்ணொளி காதல்செய் யீசனை*
*ஆண்பெண் அலியுரு வாய்நின்ற ஆதியை*
*ஊண்படு நாவுடை நெஞ்சம் உணர்ந்திட்டுச்*
*சேண்படு பொய்கைச் செயலணை யாரே.*

காணுகின்ற கண்ணில் ஒளியாக இருந்து அருள்புரிகிறான் ஈசனும், ஆணாய்ப் பெண்ணாய் அலியாய் விளங்கும் ஆதியாகிய சிவனை, உண்பதற்குப் பயன்படும் நாவின்வழி மனத்தைச் செலுத்தி, சிரசின் மேலுள்ள ஆகாய மண்டலத்தில் உண்டாகிற இயற்கையான தடாகத்தில் உடனுறை தலைப் பொருந்தாராயினர்.

*435. தெருளும் உலகிற்குந் தேவர்க்கும் இன்பம்*
*அருளும் வகைசெய்யும் ஆதிப் பிரானுஞ்*
*சுருளும் சுடருறு தூவெண் சுடருந்*
*இருளும் அறநின் றிருட்டறை யாமே.*

தெளிவுடைய உயிர்களுக்கும் ஒளி மண்டல வாசிகளுக்கும், இன்பத்தை கல்குகின்ற தன்மையைச் செய்யும் ஆதியாகிய சதாசிவனும், சொற்பப் பிரகாசம் பொருந்திய தூவெண் மதியும், இருளும் கெடும்படியாக வல்லிருளாய் இருக்கும் சீவரது அண்டகோசத்தில் மறைப்பினைச் செய்துகொண்டிருப்பான்.

*436. அரைக்கின் றருள்தரும் அங்கங்கள் ஓசை*
*உரைக்கின்ற ஆசையும் ஒன்றோடொன் றொவ்வாப்*
*பரக்கும் உருவமும் பாரகந் தானாய்க்*
*கரக்கின் றவைசெய்த காண்டகை யானே.*

தத்துவங்களும் ஓசை முதலிய தன்மாத்திரைகளும், சொல்லப் பெறுகின்ற ஆசையும், ஒன்றுக்கொன்று வேறுபட்ட பல்வேறு உருவங்களும், உலகம் முழுவதும் தானாய் மறைத்தலைச் செய்கின்ற இறைவனே, மறைப்புச் சத்தியை அருளுவான்.

*437. ஒளித்துவைத் தேனுள் ளுறவுணர்ந் தீசனை*
*வெளிப்பட்டு நின்றருள் செய்திடு மீண்டே*
*களிப்பொடுங் காதன்மை என்னும் பெருமை*
*வெளிப்பட் டிறைஞ்சினும் வேட்சியு மாமே.*

நான் இறைவனை அகத்தே உணர்ந்து போற்றி வைத்த வழிபட்டேன், அப்பெருமான் அப்பொழுதே காட்சியில் வெளிப்பட்டு அருளை நல்குவான், இனி மகிழ்ச்சியோடு அன்பு என்னும் பெருங்குணம் வெளிப்பட்டு, அவனைப் புறத்தே வழிபாடு செய்தாலும் அவனுக்கு விருப்பமாம்.

*438. நின்றது தானாய் நிறைந்த மகேசுரன்*
*சென்றங் கியங்கி யரன்திரு மாலவன்*
*நன்றது செய்யும் மலர் மிசை மேலயன்*
*என்றிவ ராகி இசைந்திருந் தானே.*

எல்லாவற்றையும் தானே மறைத்து நின்ற மகேசுவரன், கீழ் முகங்கொண்டு செயற்பட்டு, உருத்திரன்,திருமால் நன்மையைச் செய்யும் சுவாதிட்டான மலரிலுள்ள பிரமன், என்று மூவரோடும் கலந்திருக்கின்றான்.

*439. ஒருங்கிய பாசத்துள் உத்தம சித்தின்*
*இருங்கரை மேலிருந் தின்புற நாடி*
*வருங்கரை ஓரா வகையினிற் கங்கை*
*அருங்கரை பேணில் அழுக்கற லாமே.*

ஒடுங்கிய பாச நிலையில், சிவனாகிய பெரிய கரையின் மேல் சீவர்கள் இருந்து, ஆன்மானுபவம் விழைந்து, பிறவியாகிய வருங்கரையை நாடாத தன்மையில், சங்கோசையோடு வரும் ஆகாய கங்கையின் கரையைப் பொருந்தினால், மாசினை நீங்கப்பெறலாம்.

*440.* ***மண்ணொன்று தான்பல நற்கல மாயிடும்***
***உண்ணின்ற யோனிகட் கெல்லாம் ஒருவனே***
***கண்ணொன்று தான்பல காணுந் தனைக்காணா***
***அண்ணலும் இவ்வண்ண மாகிநின் றானே.***

மண் ஒன்றே சட்டிபானை முதலிய நல்ல பாத்திரங்களாகும், அது போன்று யோனி பேதங்கட்கெல்லாம் அகத்தேயுள்ள ஒருவனே காரணமாகும், கண்ணாகிய இந்திரியம் புறப்பொருள் பலவற்றைக் கண்டாலும் தன்னைக் காணாது, அதுபோன்று பெருமானும் எல்லா யோனி பேதங்கட்குத் காரணமாயினும் சீவக்காட்சிக்குப் புலப்படாது நிற்பான்.

## 13. அநுக்கிரகம்

அநுக்கிரகம் - அருளல். சிவனது ஆணையைத் தாங்கிச் சதாசிவன் சீவர்களைப் பிறப்பினிற் செலுத்தி மலநீக்கம் பெற அருள்புரிகிறான் என்பது இப்பகுதியில் கூறப்பெறும்.

*441.* ***எட்டுத் திசையும் எறிகின்ற காற்றொடு***
***வட்டத் திரையனல் மாநிலம் ஆகாயம்***
***ஒட்டி உயிர்நிலை என்னும்இக் காயப்பை***
***கட்டி அவிழ்ப்பான் கண்ணுதல் காணுமே.***

எட்டுத் திசையும் வீசுகின்ற காற்றோடு, வட்டமாகச் சூழ்ந்துள்ள கடல், நெருப்பு, பூமி ஆகிய ஐம்பூதங்களையும் ஒன்றுசேர்த்து, உயிர் தங்கும் இடமாகிய உடம்போடு உயிரைச் சேர்த்தும் பிரித்தும் வைப்பான், சதாசிவ மூர்த்தியாவான்.

*442.* ***உச்சியில் ஓங்கி ஒளிதிகழ் நாதத்தை***
***நச்சியே இன்பங்கொள் வார்க்கு நமன்இல்லை***
***விச்சும் விரிசுடர் மூன்றும் உலகுக்குத்***
***தச்சு மவனே சமைக்கவல் லானே.***

சிரசின் மேல் பிரமாந்திரத்தில் நீங்கி விளங்கும் நாதத்தை, விரும்பி இன்பத்தைப் பெறுவார்க்கு இறப்பு இல்லை, மேலான விரிந்த சுடராகவுள்ள அக்கினிசூரியன் சந்திரன் ஆகிய மூன்றையும் உலகினுக்கு, அச்சதாசிவமூர்த்தியே இணைத்துச் சீவர்கள் உய்ய அருள் புரிய வல்லான்.

*443.* ***குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக்***
***குசவன் மனத்துற்ற தெல்லாம் வனைவன்***
***குசவனைப் போல்எங்கள் கோன்நந்தி வேண்டில்***
***அசைவில் உலகம் அதுஇது வரமே.***

குசவன் தண்டச்சக்கரத்தில் பிடித்து வைத்த மண்ணை, அவன் மனத்தில் எண்ணியவாறு செய்வான், குசவனைப் போன்று எங்கள் சதாசிவமூர்த்தி நினைத்தால், சடத்தன்மையுடைய உலகம் சடத்தைவிட்ட ஆன்மாவாக மிளிரும்.

*444.* ***விடையுடை யான்விகிர் தன்மிகு பூதப்***
***படையுடை யான்பரி சேஉல கரக்குங்***
***கொடையுடை யான்குணம் எண்குண மாகுஞ்***
***சடையுடை யான்சிந்தை சார்ந்துநின் றானே.***

ஒளியை வாகனமாவுடையவனாகவும், மாறுபட்ட செயலையுடையவனாகவும், மிகுந்த புவனாபதிகளையுடைவனாகவும் உள்ள சதாசிவமூர்த்தி, தன் விருப்பப்படி உலகைப் படைத்தருளுவான், வேண்டுவோர்க்கு வேண்டுவதே ஈயும் தன்மையுடைய அவன் குணம் எண்குணமாகும், ஒளிக்கிரணங்களை வீசிக்கொண்டிருக்கும் அப்பொருமான் சீலரது சிந்தையில் பொருந்தியிருந்தான்.

*445.* ***உகந்துநின் றேபடைத் தான்உல கேழும்***
***உகந்துநின் றேபடைத் தான்பல ஊழி***
***உகந்துநின் றேபடைத் தான்ஐந்து பூதம்***
***உகந்துநின் றேஉயிர் ஊன்படைத் தானே.***

இறைவன் ஏழுலகங்களையும் விரும்பிப் படைத்தருளினான், அவ்வாறே பல பிரளயங்களை விரும்பிச் செய்தருளினான், நிலம் முதலிய ஐந்து பூதங்களையும் விரும்பித் தோற்றுவித்தருளினான், விரும்பி நின்றே உயிரிலும் உடலிலும் பொருந்திச் சீவகோடிகளுக்கு உதவினான்.

*446.* ***படைத்துடை யான்பண் டுலகங்கள் ஏழும்***
***படைத்துடை யான்பல தேவரை முன்னே***
***படைத்துடை யான்பல சீவரை முன்னே***
***படைத்துடை யான்பர மாகிநின் றானே.***

பழமையாகவே ஏழு உலகங்களையும் சிருட்டி செய்து அவற்றை உடைமையாகக் கொண்டான், அங்குப் பல தேவர்களைப் படைத்து அவர்களை ஆண்டு கொண்டான், அவனே பல சீவர்களைச் சிருட்டிக்கு விடுத்துத் தேவரோடு சம்பந்தப்படுத்தி ஆட்கொண்டான், அவ்வாறு படைத்து ஆட்கொண்ட அவன் தலைவனாக உள்ளான்.

*447. ஆதி படைத்தனன் ஐம்பெரும் பூதம்*
*ஆதி படைத்தனன் ஆசில்பல் ஊழி*
*ஆதி படைத்தனன் எண்ணிலி தேவரை*
*ஆதி படைத்தவை தாங்கிநின் றானே.*

ஆதிசக்தியோடு கூடிய சதாசிவன் ஐம்பெரும் பூதங்களைப் படைத்தருளினான், குற்றமில்லாத பல ஊழிகளை உயிர்களின் நன்மைக்காக அவன் செய்தால், எண்ணற்ற தேவர்களை அவன் சிருட்டிக்கு விட்டான், இவ்வாறு அவன் சிருட்டியைச் செய்ததோடு அவற்றுக்கு ஆதாரமாகவும் இருந்தான்.

*448. அகன்றான் அகலிடம் ஏழுமொன் றாகி*
*இவன்றா னெனநின் றெளியனும் அல்லன்*
*சிவன்றான் பலபல சீவனும் ஆகி*
*நவின்றான் உலகுறு நம்பனு மாமே.*

இறைவன் அகன்ற இடமாகவுள்ள இவ்வுலகம் ஏழுடனும் ஒன்றாகப் பொருந்தியும் இவற்றைக் கடந்தும் உள்ளான், இவ்வாறு இவன் உடனாயிருப்பினும் எளிமையில் காட்சிப்படுபவனல்லன், சிவனே பலவாகவுள்ள சிலரிடம் வியாபித்து, அவனை விரும்பினவர்க்கு அவரவரிடம் பொருந்தி உபதேசம் செய்தருளுவான்.

*449. உண்ணின்ற சோதி உறநின்ற ஒருடல்*
*விண்ணின் றமரர் விரும்பும் விழுப்பொருள்*
*மண்ணின்ற வானோர் புகழ்திரு மேனியன்*
*கண்ணின்ற மாமணி மாபோத மாமே.*

உள்ளே எழுகின்ற சோதியானது உயிர் பொருந்தி நிற்கும் ஓர் உடலாகவும், விண்ணுலகிலுள்ள தேவர்கள் விரும்புகின்ற மேலான பொருளாகவும், மண்ணுலகத்தில் பக்குவம் பெற்ற மேலோர் புகழும் திருமேனியாகவும், கண்ணிலே விளங்குகின்ற மணியாகவும் பெரிய ஞானமாகவும் உள்ளது.

*450. ஆரும் அறியாத அண்டத திருவுருப்*
*பார்முத லாகப் பயிலுங் கடத்திலே*
*நீரினிற் பால்போல் நிற்கின்ற நேர்மையைச்*
*சோரா மற் காணுஞ் சுகம்அறிந் தேனே.*

யாவரும் அறிய முடியாத அண்டத்திலுள்ள திருவுருவை, பூமி முதலாகப் பொருந்திய சரீரத்திலே, நீரினில் பால் கலந்து பால் போல் நிற்கும் தன்மையை, அயர்ச்சியை அடையாமல் பார்த்துக் கெண்டிருக்கும் இன்பத்தை நான் பெற்றேன்.

## 14. கர்ப்பக்கிரியை

கர்ப்பத்தில் செய்யப்படும் தொழில் கர்ப்பக்கிரியை எனப்படும். இறைவன் சீவர்களைக் கருப்பையில் இருந்து காக்கும் முறைமை இங்குக் கூறப்பெறும்.

*451. ஆக்குகின் றான்முன் பிரிந்த இருபத்தஞ்*
*சாக்குகின் றானவ னாதியெம் ஆருயிர்*
*ஆக்குகின் றான்கர்ப்பக் கோளகை யுள்ளிருந்*
*தாக்குகின் றான்அவன் ஆவ தறிந்தே.ள*

இறப்பின் போது பிரிந்த இருபத்தைந்து தத்தவங்களைத் தோற்றுவிக்கின்றான், ஆதியாகிய அவ்விறைவன் அருமையான உயிரைத் தத்துவங்களோடு சேர்க்கிறான், அவன் மாதாவின் கருப்பையில் பொருந்தி உயிர்களுக்கு உதவுகிறான், அவன் உடல் வளர்ச்சிக்குத் தேவையை அறிந்தே எல்லாம் செய்கின்றான்.

*452. அறிகின்ற மூலத்தின் மேல்அங்கி அப்புச்*
*செறிகின்ற ஞானத்துச் செந்தாள் கொளுவிப்*
*பொறைநின்ற இன்னுயிர் போந்துற நாடிப்*
*பறிகின்ற பத்தெனும் பாரஞ்செய் தானே.*

யோகியர் அறிகின்ற மூலாதாரத்தின்மேல், நெருப்பும் நீரும் செறிந்துள்ள ஞான பூமியில், திருவடியைப் பதித்து, பொறுமையுடனுள்ள இனிமையான உயிரைக் கருவில் புகும் வண்ணம் எண்ணி, கருவினின்றும் நீங்குகின்ற பத்து மாத கால வரையறையை அதற்கு இறைவன் நியமித்தருளினான்.

*453. இன்புறு காலத் திருவர்முன் பூறிய*
*துன்புறு பாசத் துயர்மனை வானுளன்*
*பண்புறு காலமும் பார்மிசை வாழ்க்கையும்*
*அன்புறு காலத் தமைத்தொழில் தானே.*

சிதாகாயத்தில் விளங்கும் இறைவன், தலைவன் தலைவியுமாகிய இருவர் இன்புற்ற போது, சீவன் விட்டுச் சென்ற வினையை அனுபவிப்பதற்கான துயரம் பொருந்திய உடம்பில், பக்குவமடையும் காலத்தையும் சீவன் பூமியில், இருவரும் அன்போடு கூடிய காலத்தே அமைத்தருளினான்.

*454. கருவை ஒழிந்தவர் கண்டநால் மூவேழ்*
*புருடன் உடலில் பொருந்துமற் றோரார்*
*திருவின் கருக்குழி தேடிப் புகுந்த*
*உருவம் இரண்டாக ஓடி விழுந்ததே.*

கருவை நீங்கினவர் அறிந்த இருபத்தைந்து தத்துவங்களும், ஆண் உடம்பில் தங்கி உருவாவதை மற்றையோர் அறியமாட்டார், அக்கருபின் பெண்ணின் கருப்பையை நாடி அடைந்து, ஆணும் பெண்ணுமாகிய இரண்டு உருவமாக ஓடிப் பாய்ந்தது.

*455. விழுந்தது லிங்கம் விரிந்தது யோனி*
*ஒழிந்த முதல் ஐந்தும் ஈரைந்தோ டேறிப்*
*பொழிந்த புனல்பூதம் போற்றுங் கரணம்*
*ஒழிந்த நுதல்உச்சி உள்ளே ஒளித்ததே.*

ஆண் பெண் சேர்க்கையுல் யோனி விரிந்து இலிங்கத்தினின்றும் சுக்கிலம் விழுந்தது. நீங்கிய புருடன் என்ற தத்துவம், தன்மாத்திரைகள் ஐந்தும், ஞானேந்திரியம் ஐந்தும் கன்மேந்திரியம் ஐந்துடனும் கூடி, தன்மாத்திரைகளினின்றும் தோன்றிய நீர் முதலான ஐந்து பூதம் போற்றுதலுக்குரிய நான்கு அந்தக்கரணங்களுடன், நீங்கிய நெற்றியின் உச்சியுள் ஒளிந்தது.

*456. பூவின் மணத்தைப் பொருந்திய வாயுந்*
*தாவி உலகில் தரிப்பித்த வாறுபோல்*
*மேவிய சீவனில் மெல்லநீள் வாயுவுங்*
*கூவி ஆவிழுங் குறிக்கொண்ட போதே.*

பூவினில் உள்ள வாசனையைப் பொருந்திய காற்றும், உலகில் எங்கும் பரவித் தங்கியிருப்பது போல், கருப்பையில் பொருந்திய கருவினில் மெல்ல நீண்ட தனஞ்சயன் என்னும் வாயுவும், குறிப்பிட்ட காலத்தில் இரைந்துகொண்டு உள்ளே செல்லும்.

*457. போகின்ற எட்டும் புகுகின்ற பத்தெட்டும்*
*மூழ்கின்ற முத்தனும் ஒன்பது வாய்தலும்*
*நாகமும் எட்டுடன் நாலு புரவியும்*
*பாகன் விடானெனிற் பன்றியு மாமே.*

அருவமாய்ப் போகின்ற புரியட்டக சரீரமும், உள்ளே புகுகின்ற தச வாயுக்களும், இவற்றுள் அமிழ்ந்துள்ள புருடனும், நவத்துவாரங்களும், குண்டலியாகிய நாதமும், பன்னிரண்டு விரற்கடை செல்லும் பிராணனாகிய குதிரையும், இறைவனாகிய பாகன் செலுத்தாவிடில் பன்றியைப் போல் இழிந்த பிறப்பாய்விடும்.

*458. ஏற எதிர்க்கில் இறையவன் றானாகும்*
*மாற எதிர்க்கில் அரியவன் றானாகும்*
*நேரொக்க வைக்கின் நிகர்போதத் தானாகும்*
*பேரொத்த மைந்தனும் பேரர சாளுமே.*

கூட்டுறவின்போது சுக்கிலசுரோணிதக் கலப்பில் அக்கிலம் எதிர்த்துச் சென்றால் பிறக்கும் குழந்தை இறையவனைப் போன்றிருப்பான், சுரோணிதம் மாறி எதிர்த்துவரின் அப்பொழுது பிறக்கும் குழந்தை திருமாலைப் போன்றிருப்பான், சுக்கில சுரோணிதமாகிய இரண்டும் சமமாகப் பொருந்தினால் அப்பொழுது பிறக்கும் குழந்தை பிரமனைப் போன்றிருப்பான், மூவரது தன்மையும் ஒத்த குழந்தை பேரரசனாய்ப் பெரிய சாம்ராச்சியத் ஆளுவான்.

*459. ஏயங் கலந்த இருவர்தஞ் சாயத்துப்*
*பாயுங் கருவும் உருவா மெனப்பல*
*காயங் கலந்தது காணப் பதிந்தபின்*
*மாயங் கலந்த மனோலய மானதே.*

பல புவனங்களில் பொருந்தி வருந்தின ஆண் பெண்ணாகிய இருவரது வண்ணத்தில், வெளியாகிற கரு உருவாகும் என்றபடி, பல பிறவியில் பல உடம்பில் பொருந்திய அக்கரு நன்றாகப் பதிந்த பிறகு, மயக்கம் பொருந்திய இருவரது மனமும் ஒருமைப்பாடுற்றது.

***460.*** ***கர்ப்பத்துக் கேவல மாயாள் கிளைகூட்ட***
***நிற்கும் துரியமும் பேதித்து நினைவெழ***
***வற்புறு காமியம் எட்டாதல் மாயேயஞ்***
***சொற்புறு தூய்மறை வாக்கினாஞ் சொல்லே.***

கருப்பையில் அறியா நிலையிலுள்ள சிசுவுக்கு மாயை தத்துவங்களைச் சேர்க்க, அமைந்து நிற்கும் பேருறக்க நிலை நீங்கிச் சிசுவுக்கு நினைவு உண்டாக, வலிமை மிக்க மாயையின் காரியமாகிய அராகாதி எட்டுக் குணங்களும், சுத்த மாயையினின்றும் தோன்றும் நால்வகை வாக்கினிறு சொல்லும் ஆகும்.

***461.*** ***என்பால் மிடைந்து நரம்பு வரிக்கட்டிச்***
***செம்பால் இறைச்சி திருந்த மனைசெய்து***
***இன்பால் உயிர்நிலை செய்த இறையோங்கும்***
***கண்பால் ஒருவனை நாடுகின் றேனே.***

எலும்புகளால் பின்னி நரம்புகளாகிய கயிற்றால் வரிந்து கட்டி, இரத்தத்தோடு கூடிய இறைச்சியால் திருத்தமாக வீட்டை அமைத்து, இன்பத்தையடைய உயிர் தங்கும் உடம்பினைச் செய்த இறைவனிடத்து ஓங்கும் காதலால், ஒப்பற்ற அப்பெருமானைத் தேடுகின்றேன்.

***462.*** ***பதஞ்செய்யும் பால்வண்ணன் மேனிப் பகலோன்***
***இதஞ்செய்யு மொத்துடல் எங்கும் புகுந்து***
***குதஞ்செய்யும் அங்கியின் கோபந் தணிப்பான்***
***விதஞ்செய்யும் மாறே விதித்தொழிந் தானே.***

சீவர்களைப் பக்குவம் செய்யும் பால் வண்ணனாகிய சூரியப் பிரகாசம் போன்ற மேனியையுடைய சதாசிவன், உடலில் எங்கும் நீக்கமற நிறைந்து நன்மையைச் செய்வான், குதத் தானத்திலிருந்து தூண்டி நடத்தும் மூலாக்கினியின் வேகத்தைத் தணிப்பதற்காக, இன்பம் பெறும்படியான நியதியை அமைந்தருளினான்.

***463.*** ***ஒழிபல செய்யும் வினையுற்ற நானே***
***வழிபல நீராட்டி வைத்தெழு வாங்கி***
***பழிபல செய்கின்ற பாசக் கருவைச்***
***சுழிபல வாங்கிச் சுடாமல்வைத் தானே.***

பழியான காரியங்களைச் செய்கின்ற பாசத்தில் கட்டுப்பட்ட கருவை, பலவாகிய சுழல்களினின்றும் எடுத்து அழியாது காப்பாற்றினான், மேலும் வினை பொருந்திய காலத்தே, பல வகையாகத் தூய்மையாக்கிச் சிசுவை மேலெழும்படி செய்து, வினையை நீங்கும்படி இறைவன் செய்வான்.

***464.*** ***சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளியும்***
***அக்கிர மத்தே தோன்றுமவ் வியோனியும்***
***புக்கிடும் எண்விரல் புறப்பட்டு நால்விரல்***
***அக்கரம் எட்டும்எண் சாணது வாகுமே.***

ஆண், பெண் கூட்டுறவால் சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளை நிறமான சுக்கிலம், அவ்வாறே யோனியினின்றும் தோன்றும் செந்நிறமான சுரோணிதமும், எட்டு விரற்கடையளவு புறப்பட்டு நான்கு விரற்கடையளவு உள்ளே போகும், அப்போது பஞ்சபூத அக்கரங்களாகிய ஐந்தும், அகரமாகிய நாதமும், உகரமாகிய விந்துவும், மகரமாகிய மாயையும் சேர்ந்து எட்டுச் சாணளவு உடம்பு சிசுவுக்கு உண்டாகும்.

***465.*** ***போகத்துள் ஆங்கே புகுந்த புனிதனும்***
***கோசத்துள் ஆகங் கொணர்ந்த கொடைத்தொழில்***
***ஏகத்துள் ஆங்கே இரண்டெட்டு மூன்றைந்து***
***மோகத்துள் ஆங்கொடு முட்டைசெய் தானே.***

இன்பத்துள் பொருந்திய இறைவனும், கருவில் உடம்பைத் தந்த கொடைச் செயலால், ஆண், பெண் கூட்டுறவால் முப்பத்தொரு தத்துவங்களைச் சேர்த்து, இருவரது மயக்க நிலையில் ஒரு கருவாகிய முட்டையைத் தந்தருளினான்.

***466.*** ***பிண்டத்தில் உள்ளுறு பேதைப் புலன்ஐந்தும்***
***பிண்டத்தி னூடே பிறந்து மரித்தது***
***அண்டத்தின் உள்ளுறு சீவனும் அவ்வகை***
***அண்டத்து நாதத் தமர்ந்திருந் தானே.***

பிண்டமாகிய இவ்வுடம்பினுள்ளே அறியாமை நிறைந்த புலன்கள் ஐந்தும், உடம்பினிற்றோன்றி உடம்பு அழிந்தபோது அவையும் செயலற்றழிந்தன, உடம்பைச் சுற்றியுள்ள அண்டகோசத்தில் உள்ளேயுற்ற சீவனும், அவ்வாறே பக்குவம் பெற்ற போது தன் செயலற்று நாத தத்துவத்தில் ஒடுங்கும்.

*467. இலைப்பொறி யேற்றி யெனதுடல் ஈசன்*
*துலைப்பொறி யிற்கரு ஐந்துட னாட்டி*
*நிலைப்பொறி முப்பது நீர்மை கொளுவி*
*உலைப்பொறி ஒன்பதில் ஒன்றுசெய் தானே.*

இறைவன் மாயையால் உண்டாக்கிய உடம்பை, துலாக்கோல் போல் செலுத்தும் சிவ தத்துவத்தில் அகர மகர விந்து நாதமாகிய பிரணவத்தால் கருவை இயக்கி, சீவனை நிலைக்க வைக்கும் ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும், புருட தத்தவம் நீங்கிய வித்தியாதத்துவம் ஆறும் சீவனதும் இயல்புக்கேற்பக் கூட்டி, உடம்பாகிய பொறியில் ஒன்பது துவாரங்களையும் அமைத்தருளினான்.

*468. இன்புற் றிருவர் இசைவித்து வைத்தமண்*
*துன்பக் கலசம் அணைவான் ஒருவனே*
*ஒன்பது நீர்ச்சால் கலசம் பதினெட்டு*
*வெந்தது சூளை விளைந்தது தானே.*

சிற்றின் பத்தில் ஈடுபட்டிருந்த தாயும் தந்தையுமாகிய இருவரும் மனமொன்றி வைத்த, மண்ணாலான துன்ப மயமான குடத்துள்ளே சேர்ந்தவன் ஆன்மா ஒருவனே, அத்துடன் ஒன்பது வாயில்களாகிய நீர்ச்சாலும், புரியட்டமாகிய எட்டும் ஞானேந்திரிய கன்மேந்திரியமாகிய பத்தும் ஆகப் பதினெட்டு கலசமும், அந்தக் கருப்பையாகிய சூளையில் வெந்து பக்குவமாயின.

*469. அறியீ ருடம்பினி லாகிய வாறும்*
*பிறியீ ரதனிற் பெருகுங் குணங்கள்*
*செறியீ ரவற்றினுட் சித்திகள் இட்ட*
*தறியவீ ரைந்தினு ளானது பிண்டமே.*

உடம்பினில் பொருந்திய ஆற துன்பங்களையும் அறியாதுள்ளீர், அங்கு மனத்தினுள்ளே பெருகிக் கொண்டிருக்கும் தாமத இராசத சாத்துவிகமாகிய குணங்களினின்றும் பிரியாதுள்ளீர், அங்குச் சித்திகள் அமைவதைப் பொந்தாதீர், உணரின் பத்து மாதங்களில் ஆகியது இப்பிண்டமாகும்.

*470. உடல்வைத்த வாறும் உயிர்வைத்த வாறும்*
*மடைவைத்த ஒன்பது வாய்தலும் வைத்துத்*
*திடம்வைத்த தாமரைச் சென்னியுள் அங்கிக்*
*கடைவைத்த ஈசனைக் கைகலந் தேனே.*

உடலை மாயையினின்றும் தோற்றுவித்தவாறும், உடம்பினுள் உயிரை அமைத்தவாறும், மடைகளோடு கூடிய ஒன்பது வாயில்களை அமைத்து, உறுதியான ஆயிர இதழ்த் தாமரையோடு கூடிய சிரசில் அக்கினியின் இறுதிநிலை வைத்த இறைவனைச் சுழுமுனையில் கூடினேன்.

*471. கேட்டுநின் றேன்எங்குங் கேடில் பெருஞ்சுடர்*
*மூட்டுநின் றான்முதல் யோனி மயனவன்*
*கூட்டுகின் றான்குழம் பின்கரு வையுரு*
*நீட்டிநின் றாகத்து நேர்பட்ட வாறே*

எவ்விடத்தும் தனக்கொரு கேடில்லாத ஒளிவடிவமான பெருமான் கருவுக்கெல்லாம் ஒளிவடிவமான பெருமான் கருவுக்கெல்லாம் கருவாயிருந்து ஆதி சிருட்டியை அருளுகிறான், அப்பெருமான் குழம்பான கருவைச் சீவனோடு சேர்ப்பிக்கின்றான், அதனை உருவாக நீட்டி உடனாய் நின்று, உடம்பில் எழுந்தருளியதை அடியேன் கேட்டு நின்றேன்.

*472. பூவுடன் மொட்டுப் பொருந்த அலர்ந்தபின்*
*காவுடைத் தீபம் கலந்து பிறந்திடும்*
*நீரிடை நின்ற குமிழி நிழலதாய்ப்*
*பாருடல் எங்கும் பரந்தெட்டும் பற்றுமே*

பூப்போன்ற யோனியும் மொட்டுப் போன்ற இலிங்கமும் பொருந்த மலர்ந்தபின், சுக்கில சுரோணிதக் கலப்பால் ஒளிமயமான சீவ அணு உண்டாகும், நீரிடை எங்கும் பரந்து நின்ற குமிழியின் நிழல் போன்று, புரியட்டக சரீரத்திலுள்ள சீவ அணு உடம்பெங்கும் கலந்துவிடும்.

*473. எட்டினுள் ஐந்தாகும் இந்திரி யங்களுங்*
*கட்டிய மூன்று கரணமு மாய்விடும்*
*ஒட்டிய பாச உணர்வென்னுங் காயப்பை*
*கட்டி அவிழ்த்திடுங் கண்ணுதல் காணுமே.*

முற்கூறிய எட்டனுள் மெய் வாய் கண் மூக்கு செவியாகிய ஐந்து இந்திரியங்களும், அவற்றோடு தொடர்புடைய மனம் புத்தி அகங்காரம் என்ற மூன்று அந்தக்கரணங்களும் ஆகும், அவற்றோடு சேர்த்த ஆசாபாசங்களுக்கேற்ப உண்டாகிய உடம்பை, பெருமானே முதலில் சேர்த்துப் பின்னர் அவிழ்த்துவிடுவான், நீங்கள் அதைக் காணுங்கள்.

*474. கண்ணுதல் நாமங் கலந்துடம் பாயிடைப்*
*பண்ணுதல் செய்து பசுபாசம் நீங்கிட*
*எண்ணிய வேதம் இசைந்த பரப்பினை*
*மண்முத லாக வகுத்வைத் தானே.*

இறைவனது நாமமாகிய பிரணவத்தைக் கலந்து, உடம்பினில் நாதம் விளங்குமாறு செய்து, பசுத் தன்மையும் பாசத்தன்மையும் நீங்குமாறு, நான்கு இதழ்களையுடைய மூலாதாரச் சக்கரத்தினால் உணர்த்தப்படும் பரப்பனைத்தையும், பிருதிவி தத்துவத்திலிருந்த தொடங்குகின்ற நியதியை வைத்துள்ளான்.

*475. அருளல்ல தில்லை அரனவன் அன்றி*
*அருளில்லை யாதலி னவ்வோர் உயிரைத்*
*தருகின்ற போதிரு கைத்தாய தம்பால்*
*வருகின்ற நண்பு வகுத்திடும் தானே.*

சத்தியின்றிச் சிவன் இல்லை, இனிச் சிவனின்றிச் சத்தியும் இல்லை, ஆதலால் அச்சிறப்பான உயிருக்கு உடம்பைத் தருகின்றபோது, இரு செவிலித்தாய்மாட்டு,வைக்கும் அன்பை அமைத்தருளினான்.

*476. வகுத்த பிறவியின் மாதுநல் லாளுந்*
*தொகுத்திருள் நீக்கிய சோதி யவனும்*
*பகுத்துணர் வாகிய பல்லுயிர் எல்லாம்*
*வகுத்துள்ளும் நின்றதோர் மாண்பது வாமே.*

அவரவர் வினைக்கீடாக வகுக்கப்பெற்ற பிறவியில் நல்ல சத்தியும், சத்திக்கேற்ற முறையில் தொகுப்பாக உள்ள இருளைப் போக்கிய சோதி வடிவான இறைவனும், பல வகைத் திறத்தினுள்ள உணர்வு மயமான பல உயிர்கட்கெல்லாம், வகை செய்யுமாறு அவ்வவற்றின் உயிருக்குயிராய் நிற்கின்ற சிறந்த பொருளாகும்.

*477. மாண்பது வாக வளர்கின்ற வன்னியைக்*
*காண்பது ஆண்பெண் அலியெனுங் கற்பனை*
*பூண்பது மாதா பிதாவழி போலவே*
*ஆம்பதி செய்தானச் சோதிதன் ஆண்மையே.*

பெருமையோடு வளர்கின்ற ஒளியாகிய உயிரை, ஆணாகவோ பெண்ணாகவோ அலியாகவோ காண்பது கற்பனையாகும், அது தாய் தந்தையின் தன்மையைக் கொண்டிருக்கும், அவ்வாறாகும் உயிருக்கேற்ற உடம்பினைப் படைத்தல் அச்சோதியாகிய இறைவனது வல்லமையாகும்.

*478. ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகிற் பெண்ணாகும்*
*பூணிரண் டொத்துப் பொருந்தில் அலியாகுந்*
*தாண்மிகு மாகில் தரணி முழுதாளும்*
*பாணவ மிக்கிடில் பாய்ந்ததும் இல்லையே.*

கூட்டுறவின்போது ஆண் பண்பு மிகுந்தால் சிசு ஆணாகும், பெண் பண்பு மிகுந்தால் சிசு பெண்ணாகும், ஆண் பெண் குணம் சமமாகில் சிசு அலியாகும், பெண்ணின் நீக்க நிலைக்கும் கடந்த பூமானாகில் உலகை ஆளத்தக்க குழவியாகும், கூட்டுறவின் போது தாழ்ச்சி மனப்பான்மையிருந்தால் சுக்கிலம் பாய்வது நின்றுவிடும்.

*479. பாய்ந்தபின் னஞ்சோடில் ஆயுளும் நூறாகும்*
*பாய்ந்தபின் னாலோடில் பாரினில் எண்பதாம்*
*பாய்ந்திடும் வாயுப் பகுத்தறிந் திவ்வகை*
*பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலு மாமே.*

சுக்கிலமானது ஆணிடமிருந்து பிரிந்து ஐந்து விரற்கடை ஓடி விழுந்தால் பிறக்கும் குழந்தையின் ஆயுள் நூறாண்டாகும். நான்கு விரற்கடை ஓடி விழுந்தால் ஆயுள் எண்பதாகும், சுக்கிலத்தைச் செலுத்தும் வாயுவினை நன்றாக உணர்ந்து இவ்வகையாக, ஓடி விழும்படி செய்யும் யோகிக்குச் செலுத்த முடியும்.

*480. பாய்கின்ற வாயுக் குறையிற் குறளாகும்*
*பாய்கின்ற வாயு விளைக்கின் முடமாகும்*
*பாய்கின்ற வாயு நடுப்படிற் கூனாகும்*
*பாய்கின்ற வாயுமா தர்க்கில்லைப் பார்க்கிலே.*

சுக்கிலத்தைச் செலுத்துகின்ற வாயு குறையுமானால் குழந்தை குட்டையாக இருக்கும், அவ்வாறு செல்லுகின்ற வாயு மெலிந்திடின் குழந்தை முடமாகும், அவ்வாயு தடைப்படின் குழந்தை கூனாகும், ஆராயின் பெண்களுக்குச் செலுக்கின்ற வாயு இல்லை.

*481. மாதா உதரம் மலமிகில் மந்தனாம்*
*மாதா உதரம் சலமிகில் மூங்கையாம்*
*மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை*
*மாதா உதரத்தில் வைத்த குழவிக்கே.*

தாயின் வயிற்றில் கருவாய் அமைந்த குழந்தைக்கு, அவள் வயிற்றில் மலம் மிகுமாகில் அக்குழந்தை மந்த புத்தி உள்ளவனாவான், அவ்வயிற்றில் நீர் மிகுந்தால் அக்குழந்தை ஊமையாகும், மலர் நீர் இரண்டும் அங்கு மிகுமாயின் அக்குழந்தை குருடாம்.

*482. குழவியும் ஆணாம் வலத்தது வாகில்*
*குழவியும் பெண்ணாம் இடத்தது வாகில்*
*குழவியும் இரண்டாம் அபான னெதிர்க்கில்*
*குழவி அலியாகும் கொண்டகால் ஒக்கிலே.*

போக காலத்தில் ஆண்மகனிடம் பிராணன் சூரிய கலையில் (வலநாசியில்) இருங்குமாயின் ஆண் குழந்தையாகும், அப்போது சந்திரக்கலையில் (இட நாசியில்) இயங்குமாயின் பெண் குழந்தையாம், சுக்கிலத்தைச் செலுத்தும் பிராணவாயுவோடு அபானன் என்னும் மலக்காற்று எதிர்த்தால் சுக்கிலம் சுதைந்து இரட்டைக் குழந்தையாகும், சூரிய கலை சந்திர கலை ஒத்து இயங்கினால் குழந்தை அலியாகும்.

*483. கொண்டநல் வாயு இருவர்க்கும் ஒத்தெழில்*
*கொண்ட குழவியுங் கோமள மாயிடுங்*
*கொண்டநல் வாயு இருவர்க்குங் குழ றிடில்*
*கொண்டதும் இல்லையாங் கோல்வனை யாட்கே.*

பிராணவாயு புணரும் இருவருக்கும் ஒத்து இயங்குமாயின், கருவுட்கொண்ட குழந்தையும் அழகாக இருக்கும், அக்காலத்து இருவர்க்கும் பிராணவாயு தடுமாறினால், பெண்ணுக்குக் கரு உண்டாதற்கான வாய்ப்பு இல்லையாகும்.

*484. கோல்வளை உந்தியிற் கொண்ட குழவியுந்*
*தால்வளை யுள்ளே தயங்கிய சோதியாம்*
*பால்வளர்ந் துள்ளே பகலவன் பொன்னுருப்*
*போல்வளர்ந் துள்ளே பொருந்துரு வாமே.*

பெண்ணினது கருப்பாசயத்தில் ஏற்றுக்கொண்ட குழந்தையும், அண்ணாக்கினுள்ளே விளங்கும் சோதி போன்றதாம், அஃது ஆணாகவோ பெண்ணாகவோ வளர்ந்து சூரியனது பொன்னுருவைப் போன்று, வளர்ச்சியுற்றுப் பூரணமான உருவத்தைப் பெறும்.

*485. உருவம் வளர்ந்திடும் ஒண்டிங்கள் பத்தில்*
*பருவம தாகவே பாரினில் வந்திடும்*
*மருவி வளர்ந்திடு மாயையி னாலே*
*அருவம தாவதிங் காரறி வாரே.*

உருவமானது நியதியான பத்து மாதங்கள் கருப்பையில் வளரும், பக்குவம் உண்டாகவே அச்சிசு பூமியில் பிறந்து வளரும், மாயையாகிய வளர்ப்புத் தாயோடு பொருந்தி வளர்ந்திடும், ஆனால் அவ்வுடம்பினுள் பொருந்திய உயிர் வடிவமில்லாதது என்பதை யார் அறிவார் ? (ஒருவரும் அறிய மாட்டார்.)

*486. இட்டான் அறிந்திலன் ஏற்றவன் கண்டிலன்*
*தட்டான் அறிந்தும் ஒருவர்க் குரைத்திலன்*
*பட்டாங்கு சொல்லும் பரமனும் அங்குளன்*
*கெட்டேன் இம்மாயையின் கீழ்மையெவ் வாறே.*

வித்திட்ட தந்தையும் என்ன குழந்தை என்பதை அறியவில்லை, அதனை ஏற்றுக்கொண்ட தாயும் அந்த விவரத்தை அறியவில்லை, காரணத்துக்கேற்பக் காரியம் செய்யும் பிரமனாகிய தட்டானும் அறிந்தவனாயினும் ஒருவருக்கும் சொல்லவில்லை, அந்நியதியை அமைத்துக் கொடுக்கும் சதாசிவனும் அங்கேயிருக்கிறான், என்னே இம்மாயையின் மயக்குந் தன்மை இருந்தவாறு!

***487.*** ***இன்புற நாடி இருவருஞ் சந்தித்துத்***
***துன்புறு பாசத்தில் தோன்றி வளர்ந்தபின்***
***முன்புற நாடி நிலத்தின்முன் தோன்றிய***
***தொன்புற நாடிநின் றோதலு மாமே.***

இன்ப நாட்டத்தை விரும்பிய இருவர் கூட்டத்து, துன்பம் பொருந்தும் பாசத்தில் தோன்றிய சிக துன்பத்திலே வளர்ந்த பின்னர், மேன்மை பெற விரும்பி, உலகிலே எல்லாவற்றுக்கும் முன்னே தோன்றியுள்ள, பழமைக்கும் பழமையான இறைவனைப் பொருந்த நாடி ஏத்தலுமாகும்.

***488.*** ***குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக்கூட் டிட்டால்***
***அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின் றதுபோல்***
***இயக்கில்லைப் போக்கில்லை யேனென்ப தில்லை***
***மயக்கத்தால் காக்கை வளர்க்கின்ற வாறே.***

குயிலின் முட்டையைக் காக்கையின் கூட்டில் வைத்தால், சந்தேகமின்றிக் காக்கை வளர்ப்பது போன்று, இயக்கமில்லாமலும் போக்கில்லாமலும் ஏனென்று வினவாமலும், தாயும் மயக்கத்தினால் உடம்பை வளர்க்கின்ற முறை இதுவாம்.

***489.*** ***முதற்கிழங் காய்முளை யாய்அம் முளைப்பின்***
***அதற்புத லாய்ப்பல மாய்நின் றளிக்கும்***
***அதற்கது வாய்இன்ப மாவத போல***
***அதற்கது வாய்நிற்கும் ஆதிப் பிரானே.***

தாவரமானது முதலில் கிழங்காய் இருந்தது, முளையாய், முளைக்குப் பின் அதன் புதராய், பின் பழமாய்ப் பயனைத் தரும், அதுவே அத்தாவரத்திற்கு இன்மாக அமைவது போன்று, எல்லாவற்றையும் படைத்துக் காத்து பயன் அளிப்பதே ஆதியாகிய இறைவனுக்கு இன்பமாம்.

***490.*** ***ஏனோர் பெருமைய னாகிலும் எம்மிறை***
***ஊனே சிறுமையுள் உட்கா ந் தங்குளன்***
***வானோர் அறியும் அளவல்ல மாதேவன்***
***தானே அறியுந் தவத்தி னுள்ளே.***

மற்றைய தேவர்களைக் காட்டிலும் பெருமையுடையவனாகிலும் எம்மிறைவனாகிய பரமேசுவரன், ஊனுடலிலுள்ள குற்றங்களிலும் தான் கலந்து அவற்றினூடே விளங்குகின்றான், அப்படிப்பட்ட தேவதேவனை வானோர்களாலும் அறிய முடியாது, மக்களே தாம் தங்கள் தவவலிமையால் காண முடியும்.

***491.*** ***பரத்திற் கரைந்து பதித்தநற் காயம்***
***உருத்தரித் திவ்வுடல் ஓங்கிட வேண்டித்***
***திரைக்கடல் உப்புத் திரண்டது போலத்***
***திரித்துப் பிறக்குந் திருவரு ளாலே.***

மேலான பரம்பொருளினிடத்துச் சூக்குமாய் ஒடுங்கிய நல்ல உடம்பு, மீண்டும் பக்குவத்துக்கேற்பப் பயனை அடைய வேண்டி, அலைகடலில் சூரிய வெப்பத்தால் உப்புத் திரண்டு உருவமடைவது போல, இறைவனது அருளால் மீண்டும் தூல உடம்பு கருவில் உருவாகிறது.

***492.*** ***சத்தி சிவன்யீவனை யாட்டால் உயிராக்கி***
***ஒத்த இருமாயா கூட்டத் திடையூட்டிச்***
***சுத்தம தாகுந் துரியம் புரிவித்துச்***
***சித்தம் புகுந்து சிவமய மாக்குமே.***

மூவகைச் சீவவர்க்கம் என்பது விஞ்ஞானகலர், பிரளயகலர், சகலர் என்றபடி விஞ்ஞானகலர், ஆணவமலம் ஒன்று மட்டும் உடையவர், பிரளயாகலர், ஆணவம் கன்மம் என இருமலமுடையவர் சகலர், ஆணவம், கன்மம், மாயையென மும்மலமுடையவர்.

***493.*** ***விஞ்ஞானர் நால்வரு மெய்ப்பிரள யாகலத்***
***தஞ்ஞானர் மூவருந் தாங்கு சகலத்தின்***
***அஞ்ஞானர் மூவரு மாகும் பதின்மராம்***
***விஞ்ஞான ராதியார் வேற்றுமை தானே.***

தெளிந்த ஞானமுடையோராகிய விஞ்ஞானகலர் நால்வகையினரும், பிரளயா காலத்தில் அந்த ஞானத்தைப் பெறும் பிரளயாகலர் மூவகையினரும், உலக வாழ்வில் பொருந்தி அறியாமையுடைய சகலர் மூவகையினருமாக, விஞ்ஞான கலராதிய மூவகைச் சீவ வர்க்கமும் பத்துப் பிரிவினதாகும்.

*494.* ***விஞ்ஞானர் கேவலத் தாரது விட்டவர்***
***தஞ்ஞானர் அட்டவித் தேசராஞ் சார்ந்துள்ளோர்***
***எஞ்ஞானர் ஏழ்கோடி மந்திர நாயகர்***
***மெய்ஞ்ஞானர் ஆணவம் விட்டுநின் றாரே.***

விஞ்ஞானகலர் ஆணவ மலம் மட்டும் உடையோராகிய தன்னலம் விட்டவரும், ஆன்ம ஞானம் உடையவராகிய அட்டவித்தியேசுரபதம் சார்ந்தோரும், உயர்ந்த ஞானமுடையோராகிய ஏழுகோடி மந்திரேசுரரும், உண்மையான ஞானமுடையோராகிய ஆணவமல வாசனையும் விட்டுநின் றவருமாக நால் வகையினராம்.

*495.* ***இரண்டா வதில்முத்தி எய்துவர் அத்தனை***
***இரண்டாவ துள்ளே இருமல பெத்தர்***
***இரண்டாகு நூற்றெட்டு ருத்திரர் என்பர்***
***முரண்சேர் சகலத்தர் மும்மலத் தாரே.***

விஞ்ஞானகலரில் பக்குவம் குறைந்தோர் உடலுடன் கூடியிருந்தபோது சீவன்முத்தி அடையாது அடுத்த பிறவியில் சிவனைஅடைவர், இருமலமுடைய இரண்டாவது பிரிவினரான பிரளயாகலர், இரண்டு பிறவிகளில் நூற்றெட்டு உருத்திரர் பதமடைவர் என்பர். மாயையின் வலிமையால் பிணிக்கப்பட்ட சகலர் மும்மலம் கெடாதுள்ளவராவர்.

*496.* ***பெத்தத்த சித்தொடு பேண்முத்தச் சித்தது***
***ஒத்திட் டிரண்டிடை யூடுற்றார் சித்துமாய்***
***மத்தது மும்மலம் வாட்டுகை மாட்டாதார்***
***சத்தத் தமிழ்ந்து சகலத்து ளாரே.***

மும்மலமுடைய சகலரில் சிலர் சித்தாகிய சிவத்தைப் பேணி ஞானமும் வடிவான சிவமாயினார், ஞானமும் கிரியையும் ஒத்துச் சதாசிவ நிலையில் பற்றி நின்றவர், ஞானவடிவாய் மும்லங்களைக் கடந்த மேல் நிற்பவராவர், ஞானமும் கிரியையும் ஒத்து மும்மலத்தை நீக்க மாட்டாதார், நாத தத்துவம் வெளிப்படாமல் சகலராவார்.

*497.* ***சிவமாகி ஐவகைத் திண்மலஞ் செற்றோர்***
***அவமாகாச் சித்தர்முத் தாந்தத்து வாழ்வார்***
***பவமான தீர்வோர் பசுபாசம் அற்றோர்***
***நவமான தத்துவம் நாடிக்கொண் டாரே.***

சிவமாகி ஐவகையான வலிமையுள்ள மலங்களையும் வென்றவர், வீண்போகாத சித்தராய் முத்தி பெற்று அழியாத நிலையில் இருப்பர், பசுபாசத் தன்மைகள் நீங்கப் பெற்றவராய் அவர் பிறிவியினின்றும் நீங்குவர், அவர் சிவனது ஒன்பது நிலையையும் விரும்பிக் கண்டவராவர்.

*498.* ***விஞ்ஞானர் ஆணவ கேவல மேவுவோர்***
***விஞ்ஞானர் மாயையில் தங்கும் இருமலர்***
***அஞ்ஞானர் அச்சக லத்தா சகலராம்***
***விஞ்ஞான ராதிகள் ஒன்பான்வே றுயிர்களே.***

விஞ்ஞானகலர் ஆணவமாகிய ஒரு மலமட்டும் உடையவர் (ஆணுசதாசிவர்), விஞ்ஞானரைப் போன்று சுத்தமாயையிலுள்ள பிரளயாகலர் இரு மலமுடையவர் (அட்ட வித்தியேசர் முதலியோர்), கருவி கொண்டு உணரும் சகலரும் அஞ்ஞானத்தால் அறிவில்லதாவராவர், இம்மூவகையிலுமுள்ள உயிர் வருக்கங்கள் உத்தம மத்திம அதமமான தகுதி என்று ஒவ்வொரு பிரிவிலும் மும்மூன்றாய் ஒன்பது வகையுள்ளன.

*499.* ***விஞ்ஞான கன்மத்தால் மெய்யகங் கூடி***
***அஞ்ஞான கன்மத்தி னால்சுவர் யோனிபுக்***
***கெஞ்ஞான மெய்தீண்டி யேயிடை யிட்டுப்போய்***
***மெய்ஞ்ஞான ராகிச் சிவமேவல் உண்மையே.***

விஞ்ஞானகலர் மேலான ஞான கன்மத்தினால் உள்நின்று உணர்த்தப்பெற்றும், பிரளயாகலர் உள்நின்று உணர்த்தப் பெறாமையால் சுத்த வித்தியா மண்டலங்களை அடைந்தும், சகலர் ஞானம் படிப்படியாகப் பெற மாயா சரீரத்தைக் கொண்டு மீளமீள வந்து பிறந்தும், உண்மை ஞானத்தைப் பெற்றுச் சிவசாயுச்சியம் பெறுதல் உறுதியாம்.

*500.* ***ஆணவந் துற்ற வவித்தா நனவற்றோர்***
***காணிய விந்துவா நாத சகலாதி***
***ஆணவ மாதி யடைந்தோ ரவரன்றே***
***சேணுயர் சத்தி சிவதத் துவமாமே.***

ஆணவம் செறிந்துள்ள அஞ்ஞானத்தை நனவிலும் நீக்கியவர், விந்து நாதம் ஆகியவற்றைச் சகல நிலையில் (தேகத்துடனே) காணமுடியும், அணவம் முதலான மலங்களைப் பொருந்திய பொருந்திய சகலர்களோ, மிக மேலான சிவதத்துவ மண்டலங்களை மல நீக்கம் பெற்ற பின்னரே அடைவர்.

## 16. பாத்திரம்

பாத்திரம் - கொள்கலன். அஃதாவது, அறவழியில் ஈட்டிய பொருளைச் சேம வைப்பாக வைக்கும் இடமாகும். அதற்குரிய சிவஞானியராகும்.

*501.* *திலமத் தனைபொன் சிவஞானிக் கீந்தால்*
*பலமுத்தி சித்தி பரபோக முந்தரும்*
*நிலமத் தனைபொன்னை நின்மூடர்க் கீந்தால்*
*பலமுமற் றேபர போகமுங் குன்றுமே.*

எள்ளளவு பொன்னைச் சிவஞானிக்குக் கொடுத்தால், அதன் பயன் மறுமைக்கு முத்தியும் இம்மைக்குச் சித்தியும் பேகாமும் உண்டாகும், பூமியளவு பொன்னை அஞ்ஞானிகளுக்குக் கொடுத்தால், பயனுமில்லையாய் மறுமை இன்பமும் இல்லையாம்.

*502.* *கண்டிருந் தாருயிர் உண்டிடுங் காலனைக்*
*கொண்டிருந் தாருயிர் கொள்ளுங் குணத்தனை*
*நன்றுணர்ந் தார்க்கருள் செய்திடு நாதனைச்*
*சென்றுணர்ந் தார்சிலர் தேவரு மாமே.*

காலம் வரும் வரை பார்த்திருந்து உயிரைக் கவர்ந்து செல்லும் காலனை, செலுத்தியிருந்து ஏற்றுக்கொள்ளும் எண்குணத்தானும், நன்றாக அவனது உயிர்க்குயிராந்தன்மையை உணர்ந்தார்க்கு அருள்புரியும் நாதனமாகிய இறைவனை, அவன் விளங்கும் விந்துநாத மண்டலங்களில் சென்றுணர்ந்தவர் சிலர் ஒளிமண்டல வாசிகளாவர்.

*503.* *கைவிட்டி லேன்கரு வாகிய காலத்து*
*மெய்விட்டி லேன்விகிர் தன்னடி தேடுவன்*
*பொய்விட்டு நானே புரிசடை யானடி*
*நெய்விட் டிலாத விடிஞ்சில மாமே.*

நான் தாய் வயிற்றில் கருவாய் இருந்தபோது சிவஞானத்தேயே பற்றியிருந்தேன், மெய்ப்பொருளாம் இறைவனது திருவடியை உடம்போடு கூடியிருந்தபோதும் நீங்காதிருந்தேன், பின் பொய்யாகிய உடம்பை விட்டு ஒளிமயமான திருவடியை நான் தேடுவேன், அது நெய்விட்டு எரியாத தூண்டா விளக்காகும்.

*504.* *ஆவன ஆவ அழிவ அழிவன*
*போவன போவ புகுவ புகுவன*
*காவலன் போநந்தி காட்டித்துக் கண்டவன்*
*ஏவன செய்யும் இளங்கினை யோனே.*

போக பொருள்கள் வருவன வரும், அவை நீங்குவன நீங்கும், கழிக்கப் பெறும் வினைகள் கழியும், அனுபவிக்க வேண்டி வருவன வந்து சேரும், ஆகையால் இவற்றை இறைவன் காட்டியருளக் கண்டிருப்பவனே, அவன் ஆணையின் வண்ணம் செயலாற்றுகின்ற முதல் தகுதியுடையவனாவான்.

## 17. அபாத்திரம்

பாத்திரம் அல்லாதது அபாத்திரம். சற்பாத்திரத்திற்கு ஈவது பயனுண்டு என்று முன் கூறிய ஆசிரியர் அசற்பாத்திரத்துக்கு ஈவதில் பயனில்லை என்று இங்குக் கூறுகிறார்.

*505.* *கோல வறட்டைக் குனிந்து குளகிட்டுப்*
*பாலைக் கறந்து பருகுவ தேயொக்கும்*
*சீலமும் நோன்பும் இலாதவர் கீந்தது*
*காலம் கழிந்த பயிரது ஆகுமே.*

அழகான வறட்டுப் பசுவுக்குக் குனிந்து நிமிர்ந்து பசுந்தழையிட்டு, பாலைக் கறந்து குடிப்பது போலாகும், ஒழுக்கமும் விரதமும் இல்லாதவர்க்கு ஈவது, மேலும் பருவம் தப்பிச் செய்த பயிரையும் போலப் பயனற்றதாகும்.

*506.* *ஈவது யோக இயம நியமங்கள்*
*சார்வ தறிந்தன்பு தங்கு மவர்க்கன்றி*
*ஆவ தறிந்தன்பு தங்கா தவர்களுக்*
*கீவ பெரும்பிழை யென்றுகொள் வீரே.*

யோகத்துக்குத் தவிர்க்க வேண்டியவைகளையும் கொள்ள வேண்டியவைகளையும் அறிந்து, அன்புடையார்க்கே தானம் செய்ய வேண்டும், அவ்வாறன்றிச் சாரபறிந்து அன்பு கொள்ளாதவர்க்குத் தானம் செய்வது, பெரிய தவறாகும் என்று உலகவரே அறிந்து கொள்ளுங்கள்.

*507. ஆமா றறியான் அதிபஞ்சு பாதகன்
தோமாறும ஈசற்றுந் தூய குரவற்குங்
காமாதி விட்டோர்க்குந் தரல் வந்து கற்பிப்போன்
போமா நரகில் புகான்போதங் கற்கவே.*

பஞ்சமாபாதகன் நல்லோர்க்குக் கொடுப்பதன் நன்மையை அறியாது கெடுவான், ஆனால் குற்றமற்ற ஞான குருவுக்கும் தூய்மையான பெரியோர்க்கும், காமம் வெகுளி மயக்கமாகிய மூன்றையும் நீங்கினோர்க்கும், அவரவர்க்குக் கொடுத்து அவ்வந்நிலையிலே நிற்கச் செய்பவன், ஞானத்தைப் பெற்றமையால் பஞ்சமாபாதகன் ஆழும் நரகில் புக மாட்டான்.

*508. மண்மலை யத்தனை மாதனம் ஈயினும்
அண்ணல் இவனென்றே யஞ்சலி யத்தனாய்
எண்ணி யிறைஞ்சாதாரர்க் கீந்த இருவரும்
நண்ணுவர் ஏழா நரகக் குழியிலே.*

மண்மலை போன்று அத்துணை பெரிய பொருளைச் கொடுத்தாலும், சிவனே முன்னின்று அருளுகின்றான் என்று கூப்பிய கையினனாய், எண்ணி வணங்காதவருக்கு, கொடுத்த புரவலரும் எற்ற இரவலருமாகிய இருவரும் ஏழு வகையான நரகங்களில் அழிந்துழல்வர்.

## 18. தீர்த்தம்

தீர்த்தம்-புனித நீர், புறத்தே காவிரியிலும் கங்கையிலும் தீர்த்தம் உள்ளது போல அகத்தேயும் மூலாதாரம் முதல் சகஸ்ரதளம் வரை தீர்த்தம் உள்ளது. இங்குள்ள தீர்த்தத்தை அறிந்து ஆட வேண்டும் என்கிறார்.

*509. உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்துநின் றாடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பருந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வியி லோரே.*

மனமண்டலம் சூழவுள்ள உடம்பில் மூலாதாரம் முதலாகச் சகஸ்ரதளம் ஈறாகவுள்ள இடங்களில் ஏழு தீர்த்தங்கள் உள்ளன. தாம் செய்த வினை நீங்க இவ்விடங்களில் பொருந்தி ஆடமாட்டார், நேர்மை இல்லாத மனம் உடைய அறிவில்லோரே, பூமியில் பள்ளத்திலுள்ள தீர்த்தங்களையும் மலையில் மேட்டிலுள்ள சுனைகளையும் தேடி அலைவர்.

*510. தனியறி வானர்க்குத் தண்ணிதாய்த் தோன்றுங்
குனியறி வானர்க்குக் கூடவும் ஒண்ணான்
வனியறி வானர்க்கு வாய்க்கிலும் வாய்க்குந்
தெளியறி வானர்தஞ் சிந்தையு ளானே.*

தெளிந்த ஞானமுடையாரது சிந்தியில் விளங்கும் சிவன், திருக்கோயில் வழிபாடு செய்பவர்க்குத் குளிர்ச்சியுடைய பொருளாய்க் காட்சியளிப்பான், காம நெறியில் ஈடுபடுவர்க்கு அடைய முடியாதவனாக உள்ளான், பிராணாயாமப் பயிற்சியாளர்க்கு அவனை ஒரு சமயம் அடைதலும் கூடும்.

*511. உள்ளத்தின் உள்ளே உணரும் ஒருவனைக்
கள்ளத்தி னாருங் கலந்தறி வார்இல்லை
வெள்ளத்தை நாடி விடுமலர் தீவினைப்
பள்ளத்தி லிட்டதோர் பத்தலுள் ளாமே.*

மனமண்டலத்துக்குள்ளே உணருகின்ற ஒப்பற்ற பொருளை, கூடாவொழுக்கமுடைய கள்ள மனமுடையார் கலந்தறிய மாட்டார், நீர்ப்பிரதேசத்தை விரும்பிப் பாய்ச்சுகின்றவரது தீய செயலானது, பள்ளத்திலுள்ள நீரை நீர்ச்சால் கொண்டு மேட்டுக்கு இறைப்பது போலப் பயனற்றதாம்.

*512. அறிவார் அமரர்கள் ஆதிப் பிரானைச்
செறிவா னுறைபதஞ் சென்று வலங்கொள்
மறியார் வளைக்கை வருபுனற் கங்கைப்
பொறியார் புனல்மூழ்கப் புண்ணிய ராமே.*

ஒளி மண்டலவாசிகள் ஆகாய மண்டலத்தில் செறிந்துள்ள விந்து மண்டலத்தை அடைந்து, ஆதியாகிய சிவபெருமானை அறிவார், காமக் கலையைத் தடுத்துச் செயம் பெறுவதால் பொருந்தும் பிரணவ கோஷத்தோடு வரும் கங்காப் பிரவாகத்தில், பொறிகளையுடைய சீவர்கள் நீராடவே புண்ணியராவர்.

*513. கடலிற் கெடுத்துக் குளத்தினில் காண்டல்*
*உடலுற்றுத் தேடுவார் தம்மையொப் பாரிலர்*
*திடமுற்ற நந்தி திருவரு ளாற்சென்*
*றுடலிற் புகுந்தமை ஒன்றறியாரே.*

கடலிலே பொருளைப் போட்டுவிட்டு அதனைக் குளத்தினில் காண்பவர், நீர்ப்பையாகிய கடலில் விந்து நீக்கத்தைக் கெடுத்து அதனை நெற்றிப் பிரதேசமாகிய குளத்தினில் ஒளியாகப் பெறுவாரை ஒப்பாக மாட்டார், அவ்வாறு ஆகாய பூத நாயகரான சதாசிவரின் அருளாலே சென்று, உடலில் புகுந்தமை ஒன்றறியார் உடம்பில் புகுந்து மேற்சென்றமையை அறியமாட்டார்.

*514. கலந்தது நீர துடம்பிற் கறுக்கும்*
*கலந்தது நீர துடம்பிற் சிவக்கும்*
*கலந்தது நீர துடம்பில் வெளுக்குங்*
*கலந்தது நீரனல் காற்றது வாமே.*

உடம்பில் கலந்த நீரானது (உணர்வானது) சிவன் தாமத குணவயப்பட்டபோது கீழ்நிலையில் கருமையாகப் புலப்படும், உடம்பில் கலந்த நீரானது இராசத குணநிலையில் கீழேயுள்ள மூலவாயு நெற்றிக்கு வந்த போது மாதுளம் பூப்போன்ற செஞ்சோதியாகத் தோன்றும், கலந்த நீரானது சாத்துவிக நிலையில் சிதாகாயத்தை அடைந்த போது வெண்ணிற ஒளியாகத் தோன்றும், அவ்வாறு கலந்த நீரானது அக்கினியின் பிரகாசமும் காற்றின் இயக்கமும் பொருந்தியே உள்ளது.

## 19. திருக்கோயிலிழிவு

திருக்கோயில் இழிவு என்பது, திருக்கோயிலுக்குச் செய்யும் இழிவு என்றபடி. திருக்கோயிலுக்குச் செய்யும் இழிவால் வரும் கேடு இங்கக் கூறப்பெறும்.

*515. தாவர லிங்கம் பறித்தொன்றில் தாபித்தால்*
*ஆவதன் முன்னே அரசுநிலை கெடுஞ்*
*சாவதன் முன்னே பெருநோய் அடுத்திடுங்*
*காவலன் பேர்நத்தி கட்டுரைத் தானே.*

கோயிலுள்ள அருவுருவத் திருமேனியை இலிங்கத்தைப் பிடுங்கி வேறொரிடத்தில் வைத்தால், வைப்பதன் முன்னம் ஆட்சி அழியும், பிடுங்கி வைத்தவன் இறப்பதற்கு முன்னே தொழுநோயால் பிடிக்கப்படுவான், இவ்வாறு என்னுயிர்க் காவலனாகிய சிவபெருமான் கூறியருளினான்.

*516. கட்டுவித் தார்மதிற் கல்லொன்று வாங்கிடில்*
*வெட்டுவிக் கும்அபி டேசுத் தரசரை*
*முட்டுவிக் கும்முனி வேதிய ராயினும்*
*வெட்டுவித் தேவிடும் விண்ணவன் ஆணையே.*

கட்டுவிக்கப் பெற்ற நிறைந்த மதிலில் ஒரு கல்லைப் பெயர்த்தெடுத்தால், அத்தீமை மகுடாபிஷேகம் செய்விக்கப் பெற்ற மன்னரை வெட்டி வீழ்சிக்கச் செய்யும், முனிவரது தவத்தை முடிவு பெறாமல் செய்யும், கல்லைப் பெயர்த்தவர் வேதியராக இருந்தாலும் அவர்களையும் வெட்டி வீழ்த்தும்படி செய்யும், இது சிவனது ஆணையாகும்.

*517. ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்*
*போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்*
*கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளெல்லாஞ்*
*சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே.*

இயமனை உதைத்தவனாகிய இறைவன் எழுந்தருளியுள்ளள கோயில்களில், வேதாகமங்களில் விதிக்கப்பெற்ற நித்திய கைமித்திய வழிபாடுகள் தப்புமாயின், பொறுக்க முடியாத நோய் மிகுந்து, பூமியில் மழை குறைந்து, போற்றுதற்கு அருமையான அரசரும் போர் செய்யும் திறமையில் குறைவர்.

*518. முன்னவ னார்கோயில் பூசைகள் முட்டிடின்*
*மன்னார்க்குத் தீங்குள வாரி வளங்குன்றுங்*
*கன்னம் களவு மிகுந்திடுங் காசினி*
*என்னரு நந்தி எடுத்துரைத் தானே.*

முதல்வனுடைய திருக்கோயில் பூசைகள் நடவாது தடைப்படுமாயின், அரசருக்குத் தீமைகள் உளவாம், மழை நீர் வளப்பம் குறையும், உலகில் கன்னக்கோல் கொண்டு செய்யும் களவு மிகும், என்று அருமையான நந்தி எடுத்துக் கூறினான்.

*519. பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தாற்*
*போர்கொண்ட வேத்தர்க்குப் பொல்லா வியாதியாம்*
*பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாமென்றே*
*சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே.*

தகுதி பெறாத பெயரளவில் உள்ள பிராமணன் சிவபெருமானுக்குப் பூசை செய்தால், போர்மேல் செல்லும் மன்னர்க்குப் பொல்லாத வியாதி உண்டாம், உலக முழுவதும் வியாபித்துள்ள நாட்டில் பஞ்சமும் உண்டாகும் என்று, சிறப்பு மிக்க நந்தியெம்பெருமான் ஆராய்ந்து கூறியருளினான்.

## 20. அதோமுக தெரிசனம்

சதாசிவ மூர்த்திக்கு ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என் ஐம்முகங்கள் உள என்று ஆகமம் கூறும். இவையன்றித் கீழ்நோக்கிய முகம் ஒன்றுண்டு. அதுவே அதோமுகமாம், அதனைத் தரிசித்தல் அதோமுக தெரிசனமாம்.

*520. எம்பெரு மான்இறை வாமுறை யோஎன்று*
*வம்பவிழ் வானோர் அசுரன் வலிசொல்ல*
*அம்பவள மேனி அறுமுகன் போயவர்*
*தம்பகை கொல்லென்ற தற்பரன் தானே.*

எம்பெருமானே! இறைவா! நாங்கள் வருந்துவது முறையோ என்று, ஒளி மண்டலவாசிகளாகிய வானவர்கள் இருள் மண்டலவாசிகளாகிய அசுரனது வலிமையைப் பற்றி முறையிட, அழகிய பவழம் போன்ற மேனியை அடைய அறுமுகனே! நீ நாம் அளிக்கும் சேனையுடன் சென்று அத்தேவர்களின் பகையை அழித்து வருக, என்று கூறியருளிய இறைவனே தற்பரனாக உள்ளான்.

*521. அண்டமொ டெண்டிசை தாங்கும் அதோமுகம்*
*கண்டங் கறுத்த கருத்தறி வாரில்லை*
*உண்டது நஞ்சென் றுரைப்போ உணர்விலோர்*
*வெண்டலை மாலை விரிசடை யோற்கே.*

வெண்மையான தலைமாலையை அணிந்த விரிந்த சடையையுடைய சிவபெருமானுக்கு, அண்டங்களையும் எட்டுத் திக்குகளையும் தாங்கிக் கொண்டுள்ள அதோ முகத்தின், கழுத்து கருமையாக உள்ள உண்மையை அறிகின்றவர் யாரும் இல்லை, அவர் நஞ்சுண்டதால் கண்டம் கறுத்தது என்பர் அறிவிலாதார்.

*522. செய்தான் அறியுஞ் செழுங்கடல் வட்டத்துப்*
*பொய்யே யுரைத்துப் புகழும் மனிதர்கள்*
*மெய்யே யுரைக்கில் விண்ணோர் தொழச்செய்வன்*
*மைதாழ்ந் திலங்கும் மிடறுடை யானே.*

கருமை நிறம் பொருந்தி விளங்கும் கண்டத்தையுடைய பெருமான், செழுமையான கடல் சூழ்ந்த உலகில் பொய்யான கதை பேசிப் புகழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்கள், உண்மையான தத்துவத்தைப் பற்றிப் பேசுவார்களாயின் தேவரும் தொழும் தகுதியை அவர்கட்கு அருளுவான், இவ்வுலகினைப் படைத்த அவன் பொய்யினையும் மெய்யினையும் அறிவான்.

*523. நந்தி எழுந்து நடுவுற ஓங்கிய*
*செந்தீக் கலந்துட் சிவனென நிற்கும்*
*முக்திக் கலந்தங் குலகம் வலம்வரும்*
*அந்தி இறைவன் அதோமுக மாமே.*

மூலாதாரத்திலுள்ள உருத்திரன் கழுமுனை வழியாக மேலெழுந்து, சிரசின்மேல் செவ்வொளியுள் கலந்து சிவன் என்ற பேருடன் நிற்கும், அப்போது முன்னைய நிவர்த்யாதி புவனங்களின் இயல்பை மாற்றி வெற்றி கண்டு மேலெழுந்து நிற்கும், இவ்வாறு செய்வதும் முடிவினைச் செய்கின்ற சிவனது அதோமுகமாகும்.

*524. அதோமுகங் கீழண்ட மான புராணன்*
*அதோமுகந் தன்னொடும் எங்கும் முயலுஞ்*
*சதோமுகத் தொண்மலர்க் கண்ணிப் பிரானும்*
*அதோமுகன் ஊழித் தலைவனு மாமே.*

அதோமுகம் என்பது கீழே பிரணவமாகிய அண்டத்தில் பழமையாகவுள்ளது, அது சூக்கும உடலில் எங்கும் செல்லும் ஆற்றலையுடையது, சத்தாகிய ஓம் என்னும் பிரணவ வடிவாயுள்ள ஒளி பொருந்திய பராசக்தியுடன் கூடிய பரனும், அதோமுகாராம் ஊழியைச் செய்பவனாயும் உள்ளான்.

*525. அதோமுக மாமல ராயது கேளும்*
*அதோமுகத் தாலொரு நூறாய் விரிந்து*
*அதோமுக மாகிய அந்தமில் சத்தி*
*அதோமுக மாகி அமர்ந்திருந் தானே.*

கவிழ்ந்த முகமுடைய பெரிய மலராகிய விந்தையைக் கேளுங்கள், சிரசில் கவிழ்ந்துள்ள சகஸ்ரதளத்திலிருந்து நூறு நாடிகள் கீழ்நோக்கி விரிந்து, கவிழ்ந்துள்ள நாடித் தொகுதிகளிலுள்ள அழிவவில்லாத சத்திகளுடன் அதோகேமாகிப் பொருந்தி இறைவனும் நின்றான்.

## 27. சிவ நிந்தை

சிவ நிந்தையாவது, சிவனே முழு முதல் என்று உணராது நிந்தித்தல்.

*526. தெளிவுறு ஞானத்துச் சிந்தையின் உள்ளே*
*அளிவுறு வாரம ராபதி நாடி*
*எளியனென் றீசனை நீசர் இகழில்*
*கிளியொன்று பூஞையாற் கீழது வாகுமே.*

மேலார் தெளிந்த ஞானத்தால் சிந்தையினிடத்து,தேவ உலக அதிபனாகிய சிவனை நாடி அருள் பெறுவர், அவ்வாறிருக்கச் சிவன் எளிமையானவன் என்று கீழோர் இகழ்வாராயின், கிளியாவது பூனையின் கீழ்ப்பட்டுக் கெடுவது போலாகும்.

*527. முளிந்தவர் வானவர் தானவர் எல்லாம்*
*விளிந்தவர் மெய்நின்ற ஞானம் உணரார்*
*அளிந்தமு தூறிய ஆதிப் பிரானைத்*
*தளிந்தவர்க் கல்லது தாங்கஒண் ணாதே.*

உலர்ந்துபோன தேவரும் அசுரரும் எல்லோரும் காமத்தால் கெட்டுப் போனவர்களாம், அவர்கள் உடம்பில் அதோமுகத்தில் விளங்கும் உண்மைப் பொருளை உணர மாட்டார்கள், அன்பினால் கசிந்து அமுதம் போல் சுரக்கும் ஆதியாகிய பெருமானை, உடம்பெங்கும் தேக்கி உண்பவர்க்கன்றித் தாங்க முடியாதாகும்.

*528. அப்பகை யாலே அசுரருந் தேவரும்*
*நற்பகை செய்து நடுவே முடிந்தனர்*
*எப்பகை யாகிலும் எய்தார் இறைவனைப்*
*பொய்ப்பகை செய்யினும் ஒன்றுபத் தாமே.*

அசுரரும் தேவரும் ஈசுவர நீந்தையினால், தீராப் பகை கொண்டு உய்தி பெறாது இடையே அழிந்தனர், ஈசுவரனிடம் எவ்வாறு பகை கொள்ளினும் அவனை அடைய முடியாது, ஈசுவரனைப் போலியாகவாவது பகை செய்யினும் தீமை ஒன்று பத்தாக வளரும்.

*529. போகமும் மாதர் புலவி யதுநினைந்*
*தாகமும் உள்கலந் தங்குள ராதலில்*
*வேதிய ராயும் விகிர் தனாம் என்கின்ற*
*நீதியுள் ஈசன் நினைப்பொழி வாரே.*

வேதியராகப் பிறந்தும், பெண்களது போகத்தையும் ஊடலையும் எண்ணி, மார்பிலும் சிந்தையிலும் கலந்துளராதலாலும், நாம் பிரமன் என்கின்ற தர்மத்துளராதலாலும், இறைவனைப் பற்றிய எண்ணத்தைச் சிந்தையில் கொள்ளமாட்டார்.

## 22. குரு நிந்தை

குரு நிந்தையாவது, குருவைப் பழித்தலாம். குருவைப் பழித்தலும் அடாத செயல் என்க. குருவைப் பழித்தவர் எய்தும் துன்பம் இங்குக் கூறப்பெறும்.

*530. பெற்றிருந் தாரையும் பேணார் கயவர்கள்*
*உற்றிருந் தாரை உளைவன சொல்லுவர்*
*கற்றிருந் தார்வழி உற்றிருந் தாரவர்*
*பெற்றிருந் தாரன்றி யார்பெறும் பேறே.*

கீழ் மக்கள் ஞானம் பெற்றவரையும் பேண மாட்டார்கள், இவர் உடனிருந்தவரையும் வருந்தும்படி சொல்லுவர், கற்றறிந்தோரிடம் பொருந்தியிருந்தவரே ஞானம் பெற்றோராவர், இவரன்றி யார் இப்பேற்றினைப் பெற முடியும்!

*531.* *ஓரெழுத் தொருபொருள் உணரக் கூறிய*
*சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர்*
*ஊரிடைச் சுணங்களாய்ப் பிறந்தங் கோருகம்*
*பாரிடைக் கிருமியாய்ப் பழகுவர் மண்ணிலே.*

ஓம் என்ற பிரணவத்தின் பொருளைச் சீடன் உணரும்படி செய்த, பெருமை பெற்ற நாதத்தை எழுப்பித் தந்த குருவை மனம் நோகும்படி செய்தவர், ஊர் சுற்றித் திரியும் நாயாகப் பிறந்து, பின் ஒரு புகழ் பூமியில் புழுவாய்க் கிடப்பர்.

*532.* *பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்*
*சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்*
*அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடுஞ்*
*சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே.*

இல்லற ஞானிகளும் தத்துவ ஞானிகளும், மனம் வருந்தக் கேடு செய்தவரது, பொருளும் உயிரும் ஒரு வருடத்தில் நீங்கிவிடும், இது உண்மை, சதாசிவத்தின் மேல் ஆணை.

*533.* *மந்திரம் ஒரெழுந் துரைத்த மாதவர்*
*சிந்தையில் நொந்திடத் தீமைகள் செய்தவர்*
*நுந்திய கணங்களாய்ப் பிறந்து நூறுரு*
*வந்திடும் புலையராய் மாய்வர் மண்ணிலே.*

ஒரெழுத்தொரு மொழியாகிய பிரணவத்தை உபதேசித்த பெரிய தவத்தையுடைய குருவை, மனம் வருந்தும் வண்ணம் தீமை புரிந்தவர், இழித்து ஒதுக்கப்பட்ட நாயாய் நூறு பிறிவிகள் எடுப்பர், பின்பு தாழ்ந்த பிறப்பெடுத்து மண்ணில் வடிவர்.

*534.* *ஈசனடியார் இதயங் கலங்கிடத்*
*தேசமும் நாடுஞ் சிறப்பும் அழிந்திடும்*
*வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்*
*நாசமதாகுமே நந்நந்தி யாணையே.*

சிவனடியார் மனம் கலங்கினால், தேசமும் நாடும் பிற சிறப்புகளும் அழியும், இந்திரனது ஆட்சி பீடமும் பெரிய மன்னரது ஆட்சி பீடமும் நாசமாகுமே, இது நம் சிவபெருமான் மேல் ஆணையாகும்.

*535.* *சன்மார்க்க சற்குருச் சந்நிதி பொய்வரின்*
*நன்மார்க்க முங்குன்றி ஞானமும் தங்காது*
*தொன்மார்க்க மாய துறையும் மறந்திட்டுப்*
*பன்மார்க்க முங்கெட்டு பஞ்சமு மாமே.*

சன்மார்க்கத்தைப் போதித்த நல்லாசிரியரின் முன்பாகப் பொய் கூறினால், முன்பு பெற்றிருந்த தவமும் கெட்டு ஆசாரியரிடம் பெற்ற ஞானோபதேசமும் தங்காது, பழமையாக உபதேசிக்கப்பட்ட நெறியையும் மறந்து, ஆன்ம வளர்ச்சிக்குரிய பிற நெறியும் போய் வறுமையும் உண்டாகும்.

*536.* *கைப்பட்ட மாமணி தானிடை கைவிட்டு*
*மெய்ப்பட்ட கல்லைச் சுமப்போன் விதிபோன்றும்*
*கைப்பட்ட நெய்பால் தயிர்நிற்கத் தானறக்*
*கைப்பிட்டுண் பான்போன்றும் கன்மிஞானிக் கொப்பே.*

யைிலகப்பட்ட பெருமையுடைய மாணிக்கத்தைக் கைவிட்டு, காலில் பட்ட கல்லை எடுத்துச் சுமப்பானின் வினையைப் போலவும், கையிலுள்ள நெய் பால் தயிர் உணவு இருக்க, தனக்கு நன்மை தராத கையளவு பீட்டு உண்பான் போலவுமாகும், ஞானியரோடு கருமம் செய்வானை எண்ணுதல்.

*537.* *ஆண்டான் அடியவ ரார்க்கும் விரோதிகள்*
*ஆண்டான் அடியவர் ஐயமேற் றுண்பவர்*
*ஆண்டான் அடியாரை வேண்டாது பேசினோர்*
*தாந்தாம் விழுவது தாழ்நர காகுமே.*

சிவத்தை வழிபடும் அடியார்கள் உலகியல் நெறிக்கு மாறுபட்டவர், சிவடினயார் பசி வந்துற்ற போது பிச்சையெடுத்துண்பவர், அத்தகைய அடியாரை வெறுக்கத் தக்க வகையில் வசை மொழிந்தவர், மிகத் தாழ்மையான நரகத்தில் வீழ வகை செய்து கொண்டவராவர்.

*538.* *ஞானியை நிந்திப் பவனும் நலனென்றே*
*ஞானியை வந்திப் பவனுமே நல்வினை*
*யான கொடுவினை தீர்வர ரவன்வயம்*
*போன பொழுதே புகுஞ்சிவ போகமே.*

சிவஞானனியைத் தூற்றுயவனும், நல்லவன் என்று ஞானியைப் போற்றுபவனும், முறையே கொடிய வினையும் நல்ல வினையும் நீங்குவர், அச்சிவஞானியை அடைந்த பொழுதே சிவபோகம் சித்திக்கும்.

## 24. பொறையுடைமை

பொறைமையுடைமையாவது, பொறுத்தலையுடைமை, உடம்பிலுள்ள அமுதம் வற்றி அழியாமல் பொறுத்தல் பொறை நிலை என்க.

*539. பற்றிநின் றார்நெஞ்சில் பல்லிதான் ஒன்றுண்டு*
*முற்றிக் கிடந்தது மூக்கையும் நாவையும்*
*தெற்றிக் கிடந்து சிதைக்கின்ற சிந்தையும்*
*வற்றா தொழிவது மாகமை யாமே.*

மெய்ந்நெறி பற்றி வழுவாமல் நிற்கும் யோகியர் நெஞ்சில் மெய்ப்பொருளோடு கூட வேண்டுமென்ற எண்ணமாகிய பல்லி ஒன்றுள்ளது, அது மூக்கையும் நாவையும் முற்றுகையிட்டு அவற்றைச் செயலறும்படி, அப்பொழுது மாறி நின்று இருளில் செலத்துகின்ற மன மண்டலத்தில், உலராது அமுதத்தைப் பெருகச் செய்வது மிக்க பொறுமையாகும்.

*540. ஓலக்கஞ் சூழ்ந்த உலப்பிலி தேவர்கள்*
*பாலொத்த மேனியன் பாதம் பணிந்துய்ய*
*மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் மன்னவன்*
*ஞாலத் திவன்மிக நல்லனென் றாரே.*

பால் போன்ற வெண்ணிற ஒளியில் விளங்கும் சிவனது திருவடியை வணங்கி உய்தி பெறுவதற்காக, அவனது கொலு மண்டபத்தைச் சூழ்ந்துள்ள அழிவில்லாத தேவர்களிடம், பொறுமையுடைய இந்த ஞானி திருமாலுக்கும் ஆதிப் பிரமனுக்கும் தலைவன், உலகத்துக்கும் மிகச் சிறப்புடையவன் என்று சிவபெருமான் அருளிச் செய்தான்.

*541. ஞானம் விளைந்தவர் நம்மிட மன்னவர்*
*சேனை வளைந்து திசைதொறுங் கைதொழ*
*ஊனை விளைத்திடும் உம்பர்தம் ஆதியை*
*ஏனை வளைத்தருள் எட்டலு மாமே.*

மெய்ஞ்ஞானம் கைவரப்பெற்றவர் சீவர்களுக்கு மன்னராவார், அத்தகைய ஞானியைக் கருவி கரணங்களாகிய சேனை சூழ்ந்து அவர் ஏவல்வழி நிற்ப, அவரது உடம்பை மாற்றிப் படைக்கும் தேவ தேவனை, அவர் ஏனை வரீ நீத்து ஞானத்தால் அணுகி அருள் கூட முடியும்.

*542. வல்வகை யாலும் மனையிலும் மன்றிலும்*
*பல்வகை யாலும் பயிற்றிப் பதஞ்செய்யுங்*
*கொல்லையி னின்று குதிகொள்ளுங் கூத்தனுக்*
*கெல்லையி லாத விலயமுண் டாமே.*

ஆன்மாக்களின் பக்குவத்துக்குத் தக்கவாறு, அவரது உடலிலும் உள்ளத்திலும், பலவாறாக இன்பதுன்பங்களை நுகர்வித்துச் சிவபெருமான் பக்குவம் செய்வான், மூலாதாரத்தினின்று ஆதாரநிராதாரக் கலைகளில் ஆடுகின்ற அக்கூத்தப்பெருமானுக்கு, அக்கூத்தின் பயனாக அளவில்லாத ஒருமைப்பாடு உண்டாகும்.

## 25. பெரியாரைத் துணைக்கோடல்

பெரியாரைத் துணைக்கோடலாவது, ஞானியரைத் துணையாகப் பெறுதல், பெரியாரது கூட்டுறவு நன்மையைப் பயக்கும்.

*543. ஓடவல் லார்தம ரோடு நடாவுவன்*
*பாடவன் லாரொலி பார்மிசை வாழ்குவன்*
*தேடவல் மார்க்கருள் தேவர்பி ரானொடுங்*
*கூடவல் லாரடி கூடுவன் யானே.*

தல யாத்திரை செய்வாரோடு சேர்ந்து யானுத் தல யாத்திரை செய்வேன், பாடுகின்றவர் ஒலியைச் செவி வழியே கேட்டு இன்புற்று வாழ்வேன், அகத்தே தேடி அடைய வல்லார்க்கு அருளுகின்ற மகாதேவனோடும், பொருந்தும் வல்லமையுடையார் திருவடியை யானும் பொருந்தியிருப்பேன்.

*544. தாமிடர்ப் பட்டுத் தளிர்போல் தயங்கினும்*
*மாமனத் தங்கன்பு வைத்த நிலையாகும்*
*நீயிர்ப் பட்டீருந் தென்செய்வாய் நெஞ்சமே*
*போமிடத் தென்னாடும் போதுகண் டாயே.*

கொழு கொம்பில்லாமல் துவண்டு தீயிடைப்பட்ட தளிர் போல் வாடினும், மனவுறுதியுடையோர் பெருமையுடைய (நன்மையைத் தரும்) மனத்தினிடம் அன்பு வைத்து அதன்வழிச் செல்வதில்லை, மனமே! நீ தனியே துன்பப்பட்டிருந்து என் செய்யப் போகிறாய்? இறைவனை நாடிய போதும்போது என்னோடு வருவாயாக.

***545.*** *அறிவார் அமரர் தலைவனை நாடிச்*
*செறிவார் பெறுவர் சிவதத் துவத்தை*
*நெறிதான் மிசுமிசு நின்றருள் செய்யும்*
*பெரியா ருடன் கூடல் பேரின்ப மாமே.*

உண்மையை அறியும் பெரியோர் தேவதேவனை விரும்பி அவனிடம் பொருந்தியிருப்பர், இவர் ஆன்ம தத்துவம் வித்தியாத்துவம் கடந்து சில தத்துவத்தில் விளங்குவர், நன்னெறியில் நின்றொழுகி அடைந்தார்க்கும் உபதேசிக்கின்ற, யான் எனதென்னும் செருக்கறுத்த பெரியோருடன் கூடியிருத்தல் பேரின்பமாகும்.

***546.*** *தார்சடை யான்றன் தமராய் உலகினிற்*
*போர்புக ழாவெந்தை பொன்னடி சேருவர்*
*வாயடை யாவுள்ளந் தேர்வார்க் கருள்செய்யுங்*
*கோவடைந் தந்நெறி கூடலு மாமே.*

பெரியோருடன் கூடினவர் நீண்ட கிரணங்களுடைய சிவபெருமான் உறவினராய், உலக நடையில் ஒழுகுபவர்களால் புகழப்படாதவனான என் ஐயனின் திருவடியை அடைவர், வாய் பேசாமல் மௌனமாய் ஆன்மாவில் அரனைத் தியானிப்பார்க்கு அருள் புரிகின்ற, சிவனை அடைந்து அச்சிவநெறியில் இரண்டறக் கலத்தலும் அப்பெரியோர் கூட்டத்தால் அமையும்.

***547.*** *உடையான் அடியார் அடியாருடன்போய்ப்*
*படையா ரழன்மேனிப் பதிசென்று புக்கேன்*
*கடையார நின்றவர் கண்டறி விப்ப*
*உடையான் வருகென ஓலமென் றாரே.*

எல்லாமுடைய சிவனது அடியார்க்கு அடியராயுள்ளவரிடம் கூடி, சிவச்சோதியில் பொருந்திச் சிவபுரத்தில் புகுந்தேன், சிவபுரத்தில் கடைவாயிலில் பொருந்தி நின்றவர் என்னைப் பார்த்ததும் சிவபெருமானிடம் விண்ணப்பிக்க, சிவபெருமான் என்னை அழைத்து வருமாறு பணிக்கக் கடைவாயில் காப்பாளர் அபய முத்திரை காட்டி அழைத்தனர்.

***548.*** *அருமைவல் லோன்கலை ஞானத்துள் தோன்றும்*
*பெருமைவல் லோன்பிற விச்சிழி நீந்தும்*
*உரிமைவல் லோன்உணர்ந் தூழி யிருக்குந்*
*திருமைவல் லாரொடு சேர்ந்தனன் யானே.*

பெரியாரைக் கூட வல்ல அருமையானவன் கலைஞானத்துள் விளங்கி இருப்பான், பெருமை உடைய ஞானத்தைப் பெற்றவனோ பிறவிச் சூழலினின்றும் நீங்கப் பெறுவான், உரிமை வல்லோன் உணர்ந்து ஊழியிருக்கும் உரிமையோடு பழகும் தன்மையுல் வல்லவன் சிவபெருமானை அகத்தே உணர்ந்து அழிவின்றி வாழ்வான், நான் அருமையும் பெருமையும் உரிமையுமுடைய பெரியோரது துணையைப் பெறும் பேறு பெற்றேன்.

## மூன்றாந்தந்திரம்

## 1. அட்டாங்க யோகம்

அட்டாங்க யோகம் என்பது இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்ற எட்டு வகை உறுப்புகளைக் கொண்ட யோகம் என்றபடி, அற வாழ்க்கை கூறிப் பின் இறையுண்மை கூறிய ஆசிரியப் பொருந்தகை அவ்விறைவனை அடைவதற்குரிய நெறி வகைகளைக் கூறத் தொடங்குகிறார்.

***549.*** *உரைத்தன வற்கரி ஒன்று மூடிய*
*நிரைத்த இராசி நிரைமுறை எண்ணிப்*
*பிரைச்சதம் எட்டும் பேசியே நந்தி*
*நிரைத்த இயமம் நியமஞ்செய் தானே.*

பலவாறாகப் பேசப்பெற்று வந் பிராணன் என்ற ஒன்று இழுக்கப்பெற்றும், அது பன்னிரண்டு விரற்கடை கண்டத்துக்கும் கீழும் கண்டத்துக்கு மேலும் இயங்குமாறும் நினைந்து, அட்டாங்க யோகத்தை எடுத்துரைத்தே, குருநாதன் முறையாகத் தீமையைப் போக்குவதற்கும் நன்மையைப் பற்றுவதற்கும் வழிவகை செய்தருளினான்.

***550.*** *செய்த இயம நியமஞ் சமாதிசென்*
*றுய்யப் பராசத்தி உத்தர பூருவ*
*மெய்த கவச நியாசங்கள் முத்திரை*
*எய்த வரைசெய்வன் இந்நிலை தானே.*

முற்கூறியவாறு உரை செய்த இயம நியம ஒழுக்கங்களில் நின்ற சமாதி பொருந்தி உய்தி பெறவும், முன்னின்று வழிகாட்டிப் பின்னின்று தாங்கிக் கொண்டிருக்கும் பராசக்தியின் துணையை அடையவும், கவச நியாசங்கள் முத்திரைகளை அறிந்து ஒழுகவுமாகிய, இம்முறையில் யான கூறிச் செல்வேன்.

*551. அந்நெறி இந்நெறி என்னா நட் டாங்கத்*
*தந்நெறி சென்றுசமாதியி லேநின்மின்*
*நன்னெறி செல்வார்க்கு ஞானத்தி லேகலாம்*
*புன்னெறி யாகத்திற் போக்கில்லை யாகுமே.*

இறைவனை அடைவதற்கு அது நெறி இது நெறி என்று தடுமாறாது, அடங்கா யோக நெறியிலே நின்று சமாதி கூடுமின், அவ்வாறு அந்நெறி சென்று பொருந்தினவர்க்கு ஞானயோகம் கைகூடிச் சிவப்பேறு எய்தலாம். அவ்வாறு ஞானம் கூடாவிட்டாலும் பிறவிக்கு வரும் நெறியில் வந்து உடம்பில் பொருந்துவது இல்லையாகும்.

*552. இயம நியமமே எண்ணிலா ஆதனம்*
*நயமுறு பிராணாயா மம்பிரத்தி யாகாரஞ்*
*சயமிகு தாரணை தியானஞ் சமாதி*
*அயமுறும் அட்டாங்க மாவது மாமே.*

இயமம், நியமம், பல வகைப்பட்ட ஆசனம், நன்மையைத் தரும் பிராணாயாமம், பிரத்தியாகாரம், வெற்றி மிக்க தாரணை,தியானம், சமாதி ஆகியவை, நல்வினையுடையோர்க்குத் கிட்டும் எண்வகை உறுப்புகளைக் கொண்டயோக நெறியாகும்.

## 2. இயமம்

இயமமாவது, தீயனவற்றைச் செய்யாது ஒழுகுதல், இயமத்தை முதலில் கூறி எஞ்சிய உறுப்புகளை முறையே அடுத்துக் கூறுவார் ஆசிரியர்.

*553. எழுந்துநீர் பெய்யினும் எட்டுத் திசையுஞ்*
*செழுந்த ணியமங்கள் செய்மினென் றண்ணல்*
*கொழுந்தன் பவளக் குளிர்சடை யோடே*
*அழுந்திய நால்வர்க் கருள்புரிந் தானே.*

எட்டுத் திக்குகளிலும் சூழ்ந்தெழுந்து பெருமழை பெய்தாலும், குளிர்ச்சியைத் தருகின்ற இயமங்களைத் தவறாது செய்யுங்கள் என்று, சிவபெருமான், கொழுமை மிக்க பவளம் போன்ற குளிர்ந்த தன் சடையோடே, பொருந்திய சனகாதி நால்வருக்கும் அருளிச் செய்தான்.

*554. கொல்லான் பொய்கூறான் களவிலான் எண்குணன்*
*நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய*
*வல்லான் பகுந்துண்பவர்கள் மாசிலான் கட்காமம்*
*இல்லா னியமத் திடைநின் றானே.*

ஒருயிரைக் கொல்லாதவனும், பொய் கூறாதவனும், திருடாதவனும், ஆராய்ச்சியுடையவனும், நல்லவனும், பணிவுடையவனும், நீதி வழுவாதவனும், பகிர்ந்து கொடுத்து உண்பவனும், குற்றமில்லாதவனும், கள்ளும் காமமும் இல்லாதவனுமாகிய தன்மையுடையவனே, இயம ஒழுக்கங்களில் நிற்பவனாவான்.

## 3. நியமம்

நியமமாவது நல்லனவற்றைச் செய்து ஒழுகுதல்.

*555. ஆதியை வேதத்தின் அப்பொரு ளானைச்*
*சோதியை அங்கே சுடுகின்ற அங்கியைப்*
*பாதியுள் மன்னும் பராசத்தி யோடுடன்*
*நீதி யுணர்ந்து நியமத்த னாமே.*

ஆதியானவனை, நாத வடிவானவனை, ஒளி வடிவானவனை, மூலாதாரத்தில் அக்கினி மயமாகவுள்ளவனை, சிவத்தினிடம் பிரிப்பின்றியிருக்கும் பராசத்தியோடு, உயிரோடு உடனாய் உறையும் தர்மத்தை உணர்ந்து ஒழுகுபவனே நியமத்தனாவான்.

*556. தூய்மை அருளூண் சுருக்கம் பொறைசெவ்வை*
*வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை*
*காமம் களவு கொலையெனக் காண்பவை*
*நேமியீ ரைந்து நியமத்த னாமே.*

தூய்மை, கருணை, சுருங்கிய உணவு, பொறுமை, நேர்மை, வாய்மை, உறுதியுடைமையாகியவற்றை வளர்த்தலும், ஏனைய காமம், களவு கொலையாகியவற்றைத் தீமையெனக் காண்டலுமாக, நியம நெறியில் நிற்பவன் பத்துக் குணங்களைக் கொண்டவனாவான்.

*557.* *தவஞ்செயஞ் சந்தோடம் ஆத்திகந் தானஞ்*
*சிவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி*
*மகஞ்சிவ பூசையொண் மதிசொல்வீர் ஐந்து*
*நிவம்பல செய்யின் நியமித்த னாமே.*

தவம், செபம், மகிழ்வு, தெய்வ நம்பிக்கை, கொடை, சில விரதம், முப்பொருளுண்மை கேட்டல், வேள்வி, சிவபூசை, சோதி தரிசனம் என்று சொல்லப்பெற்ற பத்தையும், உயர்வாகக் கடைப்பிடிப்பவன் நியம நெறியிலுள்ளவனாவான்.

## 4. ஆதனம்

ஆதனம்-இருக்கை, யோகம் புரிவதற்கு முன் இருக்க வேண்டிய ஆசன முறையைப்பற்றியும், அவற்றால் உண்டாகும் பயனைப் பற்றியும் இங்குக் கூறப்பெறும்.

*558.* *பங்கய மாதி பரந்தபல் ஆதனம்*
*அங்குள வாம்இரு நாலும் அவற்றினுள்*
*சொங்கில்லை யாகச் சுவத்திக மெனமிகத்*
*தங்க இருப்பத் தலைவனு மாமே.*

பத்மாசனம் முதலாகப் பரந்துபட்ட ஆசனங்கள் பல அங்க உள்ளன, அவ்வாசன வகைகளுள் எட்டு முக்கியமாகும், சோர்வு இல்லாமல், சுவத்திகம் என்ற சுகாசனத்தில் பொருந்தி இருக்கத் தலைவனாவான்.

*559.* *ஓரணை யப்பத முருவின் மேலேறிட்*
*டார வலித்ததன் மேல்வைத் தழகுறச்*
*சீர்திகழ் கைகள் அதனைத்தன் மேல்வைக்கப்*
*பார்திகழ் பத்மா சனமென லாகுமே.*

ஒரு பக்கம் அணைந்த காலைத் தொடையின்மேல் ஏறும்படி செய்து, மிக இழுத்து வலப்பக்கத் தொடையின் மேல் இடைக்காலையும் இடப்பக்கத் தொடையின்மேல் வலக்காலையும் வைத்து, அழகாகக் கைகளை மலர்த்தித் தொடையின்மேல் வைக்க, உலகம் புகழ் பத்மாசனமாகும்.

*560.* *துரிசில் வலக்காலைத் தோன்றவே மேல்வைத்து*
*அரிய முழந்தாளி லங்கைகளை நீட்டி*
*உருகி யிடுமுடற் செவ்வே யிருத்திப்*
*பரிசு பெறுவது பத்திரா சனமே.*

குற்றமில்லாத வலக்காலை இடப்பக்கம் தொடையின்மேல் விளங்கும்படி வைத்து, அருமையான முழுங்கால்களின்மேல் அழகிய கைகளை நீட்டி, தளர்கின்ற உடம்பைச் செம்மையாக இருத்தி, நன்மையைப் பெறுவது பத்திராசனமாம்.

*561.* *ஒக்க அடியிணை யூருவில் ஏறிட்டு*
*முக்கி யுடலை முழங்கை தனில்ஏற்றித்*
*தொக்க அறிந்து துளங்கா திருந்திடிற்*
*குக்குட ஆசனங் கொள்ளலு மாமே.*

பத்மாசனத்தில் கூறியது போல் பாதங்கள் இரண்டையும் தொடையின்மேல் மாறி ஏற்றி, முக்கி உடம்பை முழுங்கை வரை தூக்கி நிறுத்தி, உடம்பின் பாரம்கைகளில் தங்குவதற்கான சமநிலை தெரிந்து அசையாதபடி இருந்தால், குக்குட ஆசனம் செய்தலும் கூடும்.

*562.* *பாத முழந்தாளிற் பாணி களைநீட்டி*
*ஆதர வோடும்வாய் அங்காந் தழகுறக்*
*கோதில் நயனங் கொடிமூக்கி லேயுறச்*
*சீர்திகழ் சிங்கா தனமெனச் செப்புமே.*

பாத நுனிகளைப் பூமியிலூன்றி முழுங்காலில் கைகளை நீட்டி, அன்போது வாயைப் பிளந்துகொண்டு, அழகு பொருந்தக் குற்றமற்ற கண்களை நாசி நாசிகாக்கிரம் என்னும் புருவ நடுவில் வைத்திருப்பது, புகழமைந்த சிம்மாசனம் என்று சொல்லப்படும்.

*563.* *பத்திரம் கோமுகம் பங்கயங் கேசரி*
*சொத்திரம் வீரஞ் சுகாதனம் ஓரேழும்*
*உத்தம மாமுது ஆசனம் எட்டெட்டுப்*
*பத்தொடு நூறு பலஆ சனமே.*

பத்திரம், கோமுகம், பங்கயம், கேசரி, சொத்திரம், வீரம், சுகாசனம் என்ற ஒரேழும் மேலாவையாம், பழமையான ஆசனங்கள் இவற்றோடு நூற்று இருபத்தாறும் அவற்றின் மேலும் பல ஆசனங்களாம்.

## 5. பிராணாயாமம்

பிராணாயாமமாவது, பிராணனைக் கட்டுப்படுத்தல், மேலே கூறிய ஆசன வகையில் ஏதாவது ஒன்றில் இருந்து பிராணாயாமப் பயிற்சி செய்ய வேண்டும். பிராணாயாமம் ஆசனம் போன்று பல்வேறு வகைத்து.

***564.*** *ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்*
*உய்யக் கொண்டேறுங் குதிரைமற் றொன்றுண்டு*
*மெய்பர்க்குப் பற்றுக் கொடுக்குங் கொடாதுபோய்ப்*
*பொய்யரைத் துள்ளி விழுந்திடும் தானே.*

ஐம்பொறிகளுக்கு நாயகனும், அவ்வுடம்புக்குத் தலைவனுமாகிய ஆன்மா, உய்தி பெற்று மேல் செல்லுவதற்கு மனத்தோடு பிராணனாகிய குதிரை ஒன்றுள்ளது,அது தேகத்தை விட்டு அகண்டத்தைப் பற்றி நின்றோர்க்கு வசப்பட்டு நிற்கும், மெய்யுணர்வில்லாது கண்டத்தைப் பற்றி நின்றோர்க்குப் பிராணன் வசப்படாது கீழே தள்ளிவிடும்.

***565.*** *ஆரிய னல்லன் குதிரை இரண்டுள*
*வீசிப் பிடிக்கும் விரகறி வாரில்லை*
*கூரிய நாதன் குருவின் அருள்பெற்றால்*
*வாரிப் பிடிக்க வசப்படுந் தானே.*

மனமாகிய ஆரியன் மிகவும் நல்லவன், அவன் ஓடுகின்ற பிராணன் அபானனாகிய குதிரைகள் இரண்டு உள்ளன, அவற்றை வெளியே விட்டு உள்ளே நிறுத்தும் திறமையை அறிபவர் இல்லை, பிராண செயம் பெற்ற குருநாதனின் அருள் கிட்டினால், பிராண அபானனாகிய குதிரையைச் சேர்த்துப் பிடிக்கப் பிராண செயம் அமையும்.

***566.*** *புள்ளினும் மிக்க புரவியை மேற்கொண்டாற்*
*கள்ளுண்ண வேண்டாந் தானே களிதருந்*
*துள்ளி நடப்பிக்குஞ் சோம்பு தவிர்ப்பிக்கும்*
*உள்ளது சொன்னோம் உணர்வுடை யோருக்கே.*

பறவையைவிட வேகத்துடன் கூடிய பிராணயின் வழி சிரசை நோக்கிச் சென்றால், கள்ளுண்ணாமலேயே மகிழ்ச்சியுண்டாகும், உடலில் சோர்வு நீங்கும், சுறுசுறுப்புடனும் இருக்கும், பிராணனும் மனமும் சிரசில் பாயும் மனமுடையோர்க்கு இவ்வுண்மையைச் சொன்னோம்.

***567.*** *பிராணன் மனத்தொடும் பேரா தடங்கிப்*
*பிராண னிருக்கிற் பிறப்பிறப் பில்லை*
*பிராணன் மடைமாறிப் பேச்சறி வித்துப்*
*பிராண னடைபேறு பெற்றுண்டீர் நீரே.*

நாம ரூப பேதமான பிரபஞ்சத்தை எண்ணாதவற்கு மனமும் பிராணனும் அடங்கி, பிராணன் ஒடுங்கின் பிறப்பு இறப்பு இல்லை, சீவன் தனி வியக்தியில் வைகரி வாக்கு உதித்துப் பிராணனும் நிலை மாறி, பிராணன் ஒடுங்காதபோது பிறப்பிறப்பில் படுவீர்.

***568.*** *ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்*
*ஆறுதல் கும்பம் அறுபத்து நாலதில்*
*ஊறுதல் முப்பத் திரண்டறி ரேசகம்*
*மாறுதல் ஒன்றின்கண் வஞ்சக மாமே.*

பதினாறு மாத்திரை கால அளவு இடப்பக்கமுள்ள நாசித்துவாரத்தில் காற்றை உள்ளுக்கிழுத்தல் பூரகமாம், அறுபத்து நான்கு மாத்திரை அளவு இழுத்த காற்றை உள்ளே நிறுத்தல் கும்பகமாம், முப்பத்திரண்டு மாத்திரை கால அளவு வலப்பக்கம் நாசித்துவாரத்தில் காற்றை மெல்லென விடுதல் ரேசகமாம், முன்னே சொல்லிய முறைக்கு மாறாக வலப்பக்கம் நாசித்துவாரத்தில் காற்றை இழுத்து நிறுத்தி இடப்பக்கம் நாதித்துவாரத்தில் விடுதல் வஞ்சனையாம்.

***569.*** *வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்*
*பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்*
*தெளியக் குருவின் திருவருள் பெற்றால்*
*வளியினும் வேட்டு வளியனு மாமே.*

சாதகர் காற்றை இழுத்துத் தன் வசப்படத்தி அடக்கியிருந்தால், உடம்பு பளிங்கு போன்று மாசின்றித் தூயதாய் அது முதுமை எய்தினும் இளமைத்தன்மை உண்டாகும், இதனைத் தெளிய குருவின் அருளையும் பெற்றுவிட்டால், அவர் உடம்பானது காற்றைவிட மென்மையுடையதாகி எங்கும் செல்லும் ஆற்றல் பெற்று மேன்மையடைவர்.

570. *எங்கே இருக்கினும் பூரி இடத்திலே*
*அங்கே யதுசெய்ய ஆக்கைக் கழிவில்லை*
*அங்கே பிடித்தது விட்டள வுஞ்செல்லச்*
*சங்கே குறிக்கத் தலைவனு மாமே!*

நீ எங்கே இருந்தாலும் இடப்பாக நாசியாகிய இடைகலை வழியாகவே பூரகம் செய்வாயாக, அங்கே அவ்வாறு பூரிக்க உடம்புக்கு அழிவில்லை, அங்கே கும்பகம் செய்து அப்பிராணன் செல்லும் அளவு மேற்கொண்டு, சங்கநாதம் உண்டாகி மேன்மையடையலாம்.

571. *ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்குங்*
*காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை*
*காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்*
*கூற்றை யுதைக்குங் குறியது வாமே.*

இடைகலை, பிங்கலை வழியாக இழுத்துப் பூரித்து, காற்றை உள்ளே கும்பகம் செய்யும் முறையைத் தெரிந்தவர் இல்லை, அவ்வாறு காற்றைக் கும்பகம் செய்யும் முறையைத் தெரிந்தவர், காலனைக் கடக்கும் இலட்சியத்தை உடையவராவர்.

572. *மேல்கீழ் நடுப்பக்க மிக்குறப் பூரித்துப்*
*பாலாம் இரேசகத் தானுட் பதிவித்து*
*மாலாகி யுந்தியுட் கும்பிதது வாங்கவே*
*ஆலாலம் உண்டான அருள்பெற லாமே.*

முறையான காற்று தொண்டை, மூலாதாரம், விலா ஆகியவற்றில் நிரம்பும்படி செய்து, மறு பகுதியான இரேசகத்தால் (விடுதலால்) அவயவங்களை ஒன்றோடொன்று பதியும்படி செய்து, விருப்பத்தோடு வயிற்றில் கும்பகம் செய்து இருக்கவே, திருநீலகண்டப் பெருமான் அருளைப் பெறலாகும்.

573. *வாமத்தில் ஈரெட்டு மாத்திரை பூரித்தே*
*ஏமுற்ற முப்பத் திரண்டும் இரேசித்துக்*
*காமுற்ற பிங்கலைக் கண்ணாக இவ்விரண்*
*டோமத்தால் எட்டெட்டுக் கும்பிக்க உண்மையே.*

இடைகலை வழியாகப் பதினாறு மாத்திரை பூரகம் செய்து, விரும்பத்தக்க பிங்கலையின் கண், பாதுகாப்புற்ற முப்பத்திரண்டு மாத்திரை இரேசகம் செய்து, பூரித்தலும் இரேசித்தலுமாகிய வேள்வியால் அறுபத்து நான்கு மாத்திரை கும்பகம் செய்ய உண்மை விளையும்.

574. *இட்ட தவ்வீ டிளகா திரேசித்துப்*
*புட்டிப் படத்தச நாடியும் பூரித்து*
*கொட்டிப் பிராணன் அபானனுங் கும்பித்து*
*நட்டம் இருக்க நமனில்லை தானே.*

ஆக்கப்பட்டதாகிய இவ்வுடம்பு தளர்ச்சியடையாது இரேசகம் செய்து, பத்து நாடிகளும் விம்முமாறு காற்றினை உள்ளே இழுத்து நிரப்பி, பிராணனும் அபானனும் சேரப்பெற்று நேராக நிமிர்ந்திருக்க, எம பயம் இல்லையாம்.

575. *புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை*
*நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கில்*
*உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும்*
*புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே.*

உயிர்ப்பாய்ப் புறம் போந்து புக்குத் திரிகின்ற வாயுவை, முறையான கும்பகத்தினாலே உள்ளே தூய்மை செய்தால், உறுப்புகளில் இரத்தவோட்டம் பாயந்து சிவந்து நிற்கும், தலைமுடி மயிர் கறுத்து விளங்கும், சிரணங்களால் சூழப்பெற்ற ஆத்மன் உடலில் நிலைபெற்று நிற்பான்.

576. *கூடம் எடுத்துக் குடிபுக்க மங்கையர்*
*ஓடுவர் மீளுவர் பன்னிரண டங்குலம்*
*நீடுவர் எண்விரல் கண்டிப்பர் நால்விரல்*
*கூடிக் கொளிற்கோல அஞ்செழுத் தாமே.*

உடம்பை இடமாகக் கொண்ட பிராண சத்தி, குழந்தையாக இருந்தபோது பன்னிரண்டு விரற்கடை நீளம் சென்றும் புகுந்தும் இருந்தனர், வயதான போது தொண்டைக்கு மேலே சிரசில் செல்லும் நான்கு விரற்கடையைத் துண்டித்துவிட்டு எட்டு விரற்கடை அளவே தொழிற்படுகின்றனர், மேலே தடை செய்யப்பட்ட நான்கு விரற்கடையும் தொழிற்படுமாறு செய்துகொண்டால் சாதகர் பஞ்சாக்கர சொரூபமாவர்.

*577.* *பன்னிரண் டானைக்குப் பகல்இர வுள்ளது*
*பன்னிரண் டானையைப் பாகன் அறிகிலன்*
*பன்னிரண் டானையைப் பாகன் அறிந்தபின்*
*பன்னிரண் டானைக்குப் பகல்இர வில்லையே.*

பன்னிரண்டு விரற்கடை செயற்படும் பிராணனாகிய சூரியனுக்குப் பகல் என்றும் இரவு என்றும் காலங்கள் உள்ளன, மூக்கிலிருந்து தொண்டை வழியாகக் கீழ்நோக்கிப் பாய்வதால் சிரசிலுள்ள ஆன்மா அறியவில்லை, கீழ்முகஞ் செல்லாது மேல்முகங்கொண்ட பிராணனை ஆன்மா அறிந்த பின், பிராணனாகிய சூரியனுக்குப் பகல் இரவு என்ற காலங்களின்றி எப்போதும் பிரகாசிக்கும்.

## 6. பிரத்தியாகாரம்

புறத்தே செல்லும் மனத்தை உள்ளே நிறுத்திப் பழகுதலே பிரத்தியாகாரமாம். இப்பிரத்தியாகாரமும் அடயோகம், இலய யோகம், இலம்பிய யோகம், மந்திர யோகம், இராஜ யோகம், சிவ யோகம் என்ற பிரிவுகளுக்கேற்ப வேறுபடும். அட்டாங்க யோகத்தில் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் என்ப பூர்வபட்சம் என்றும், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன உத்தரபட்சம் என்றும் கொள்ள வேண்டும்.

*578.* *கண்டுகண் டுள்ளே கருத்துற வாங்கிடித்*
*கொண்டுகொண் டுள்ளே குணம்பல காணலாம்*
*பண்டுகந் தெங்கும் பழமறை தேடியை*
*இன்றுகண் டிங்கே இருக்குலு மாமே.*

புறத்தே சென்று ஓடுகின்ற மனத்தை அகத்தே பொருந்துமாறு செய்துவிடின், அக்காட்சியைக் கொண்டு சிறிது சிறிதாக இருள் நீங்கி ஒளி பெறலாம், முன்பு விரும்பி எங்கும் பழைய வேதங்களால் தேடப்பெற்ற பொருளை, எடுத்த இவ்வுடலில் அகத்தே கண்டு இருத்தல் கூடும்.

*579.* *நாபிக்குக் கீழே பன்னிரண் டங்குலந்*
*தாபிக்கு மந்திரந் தன்னை அறிகிலர்*
*தாபிக்கு மந்திரந் தன்னை அறிந்தபின்*
*கூவிக்கொண் டீசன் குடியிருந் தானே.*

உந்திக்குக் கீழே பன்னிரண்டு அங்குலத்தில், மூலாதாரத்திலுள்ள குண்டலினியை மேலெழுப்பும் மந்திரமாகிய பிராசாத மந்திரத்தை ஒருவரும் அறியவில்லை, அவ்வாறு எழுப்பும் மந்திர அறிந்த பின்னர், சிவன் நாதமயமாகச் சிரசின்மேல் விளங்கி நிற்பான்.

*580.* *மூலத் திருவிரல் மேலுக்கு முன்நின்ற*
*பாலித்த யோனிக் கிருவிரற் கீழ்நின்ற*
*கோலித்த குண்டலி யுள்ளெழுஞ் செஞ்சுடர்*
*ஞாலத்து நாபிக்கு நால்விரற் கீழதே.*

மூலாதாரத்துக்கு இரு விரலளவு மேலுள்ளதும், முன்பக்கம் பார்வையுடையதும் வெளிப்படுத்துந் தன்மையுடைய குறிக்கு இரண்டு விரலளவு கீழே உள்ளதுமான இடத்தில், வட்டமிட்டுக் கொண்டுள்ள குண்டலினியும் எழுகின்ற செஞ்சுடர், உடம்பில் உந்திக்கமலத்துக்கு நான்கு விரலளவு கீழேயுள்ளது.

*581.* *நாசிக் கதோமுகம் பன்னிரண் டங்குலம்*
*நீசித்தம் வைத்து நினையவும் வல்லையேல்*
*மாசித்த மாயோகம் வந்து தலைபபெய்துந்*
*தேகத்துக் கென்றுஞ் சிதையில்லை யாகுமே.*

நாசிக்குக் கீழ் பன்னிரண்டங்குல அளவிலுள்ள இதயத்து, நீ மனத்தை இழுத்து வைத்துச் செஞ்சுடரை நினைப்பாயாயின், அட்டமாசித்திகளும் ராஜயோகமும் வந்து கூடும், இத்தியானம் தேகத்துக்கு எப்பொழுதும் தீமை செய்யாதாகும்.

*582.* *சோதி இரேகைச் சுடரொளி தோன்றிடித்*
*கோதில் பரானந்தம் என்றே குறிக்கொண்மின்*
*நேர்திகழ் கண்டத்தே நிலவொளி எய்தினால்*
*ஓதிய தன்னுடல் உன்மத்த மாமே.*

இரு மின்னற்கொடி பின்னி ஓடுவது போன்ற ஒளி தோன்றினால், குற்றமில்லாத மேலான் ஆனந்தம் என்றே எண்ணுங்கள், நேர்மை விளங்கும் கண்டத்தளத்தில் (கழுத்துப் பிரதேசத்தில்) நிலவொளி தோன்றிடின், பிரத்தியாகாரப் பயிற்சி செய்த சாதகனது உடலில் ஆனந்தப் பரவசம் உண்டாகும்.

*583.* *மூலத் துவாரத்தை முக்கார மிட்டிரு*
*மேலைத் துவாரத்தின் மேல்மனம் வைத்திரு*
*வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு*
*காலத்தை வெல்லுங் கருத்திது தானே.*

மூலாதாரத்தை ஆகுஞ்சனம் என்ற முத்திரையால் அடைத்துக் கொண்டிரு, பிரமந்திரத்தின் மேல் மனத்தைப் பதித்து வை, வேல் போன்ற கூர்மையான கண்ணை வெளிப்புறம் விழித்தபடி இரு, இதுதான் காலத்தை வெல்லும் உபாயமாகும்.

*584.* *எருவிடும் வாசற் கிருவிரன் மேலே*
*கருவிடும் வாசற் கிருவிரற் கீழே*
*உருவிடும் சோதியை உள்கவல் லார்க்குக்*
*கருவிடுஞ் சோதி கலந்துமின் றானே.*

மலங்கழிக்கும் வாயிலாகிய குதத்துக்கு மேலே இருவிரலும், கருவுண்டாகும் வாயிலாகிய கோசத்துக்கு இரு விரல் கீழுள்ள இடத்தில், உருப்பெறும் குண்டலினியை நினைக்க வல்லார்க்கு, கருவிடும் மகேசுவரன் சோதி வடிவில் கலந்துள்ளான்.

*585.* *ஒருக்கால் உபாதியை ஒண்சோதி தன்னைப்*
*பிரித்துணர் வந்த உபாதிப் பிரிவைக்*
*கரைத்துணர் வுன்னல் கூரைதல்உள் நோக்கல்*
*பிரத்தியா காரப் பெருமைய தாமே.*

சுழுமுனையில் மலத்தின் காரியமாகிய இருளால் உண்டாகும் அவத்தையை (நிலை வேறுபாட்டை)யும், புருவ நடுவில் விளங்கும் சோதியினின்றும் பிரித்துள்ள நிலை வேறுபாட்டினையும் ஒழித்து, உணர்வு மயமான ஒளியை நினைத்து உருகி மனத்தை ஒருமைப்படுத்தல், பிரத்தியாகாரப் பெருமையாம்.

*586.* *புறப்பட்ட வாயுப் புகவிடா வண்ணம்*
*திறப்பட்டு நிச்சயஞ் சேர்ந்துடன் நின்றால்*
*உறப்பட்டு நின்றது உள்ளமும் அங்கே*
*புறப்பட்டுப் போகான் பெருந்தகை யானே.*

வெளியே சென்ற வாயுவை மீளவும் புக முடியாதபடி, திறமையாக உள்ளொளியில் பொருந்தி நின்றால், உள்ளம் வலுடைந்துள்ளதாம், அப்போது பெருந்தகுதிடைய இறைவனும் அவ்வொளியில் நிலை பெற்றுப் புறப்பட்டுப் போகாதவனாய் விளங்குவான்.

*587.* *குறிப்பினின் உள்ளே குவலயந் தோன்றும்*
*வெறுப்பிருள் நீங்கி விகிர்த்தனை நாடுஞ்*
*சிறப்புறு சிந்தையைச் சிக்கென றுணரில்*
*அறிப்புறு காட்சி அமரரு மாமே.*

குறித்து நிறுத்துதலாகிய பிரத்தியாகாரத்தில் உலகம் முழுவதுமே இருந்த நிலையிலிருந்து அறியப்படும், வெறுக்கத்தக்க அறியாமையாகிய இருளை நீங்கி வேறு பாட்டினைச் செய்யும் சிவனை நாடுங்கள், சிவத்தை விரும்புகின்ற சிறப்புற்ற சிந்தையில் உறுதியாக உணர்ந்தால், சிவஞானம் பொருந்திய தேவருமாவர்.

## 7. தாரணை

தாரணையாவது, தரிக்கச் செய்தல், பிரத்தியாகாரப் பயிற்சியால் உள்ளுக்கிழுத்த மனத்தை நிலைபெறச் செய்தல் என்க.

*588.* *கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி*
*வீணாத்தண் டூடே வெளியுறத் தானோக்கிக்*
*காணாக்கண் கேளாச் செவியென் றிருப்பார்க்கு*
*வாணாள் அடைக்கும் வழியது வாமே.*

கோணுதலில்லாத மனத்தை ஜாலந்தர பந்தம் முதலியவற்றால் கீழ் நோக்காது தடுத்து, நடுநாடியின் வழியாகச் செல்லும் பிராணனுடன் மனத்தையும் பொருத்தி ஆகாயத்தினிடை பார்வையைச் செலுத்தி, காணாத கண்ணும் கேளாத செவியுமாக இருப்பார்க்கு, வாழ்நாளாகிய ஆயுள் அழியாமே அடைக்கும் உபாயமாகும்.

*589.* *மலையார் சிரத்திடை வானீர் அருவி*
*நிலையாரப் பாயும் நெடுநாடி யூடுபோய்ச்*
*சிலையார் பொதுவில் திருநட மாடுந்*
*தொலையாத ஆனந்தச் சோதிகண் டேனே.*

மலை போன்ற சிரசினிடை, ஆகாய கங்கை எப்போதும் பாய்ந்துகொண்டேயிருக்கின்ற சுழுமுனை நாடியின் வழியாகச் சென்று, பரநாதவொலி கூடிய சிற்சபையில் ஆனந்தக் கூத்தாடும், அகலாத ஆனந்தத்தை நல்கும் சோதியைத் தரிசித்தேன்.

***590.*** *மேலை நிலத்தினாள் வேதகப் பெண்பிள்ளை*
*மூல நிலத்தில் எழுகின்ற மூர்த்தியை*
*ஏல எழுப்பி இவளுடன் சந்திக்கப்*
*பாலனும் ஆவான் பார்நந்தி ஆணையே.*

சிரசின்மேல் எழுந்தருளியுள்ள சிற்சத்தி மாற்றத்தைச் செய்யும் தேவியாவாள், மூலாதாரத்தில் குண்டலினியாகிய கிரியா சத்தியோடு பொருந்திய மூர்த்தியை, தாரணைப் பயிற்சியால் அம்மூர்த்தியைச் சிரசின்மேல் எழுந்தருளப்பண்ணிச் சிற்சத்தியுடன் சேரும்படி செய்தால் வயதில் முதிர்ந்தவனும் வாலிபனாவான் பார்த்தறிக, இது நந்தியின் ஆணையாகும்.

***591.*** *கடைவாசலைக்கட்டிக் காலை எழுப்பி*
*இடைவாசல் நோக்கி இனிதுள் இருத்தி*
*மடைவாயிற் கொக்குப்போல் வந்தித் திருப்பார்க்*
*குடையாமல் ஊழி இருக்கலு மாமே.*

மூலாதாரத்தை அடைத்து அங்குள்ள காம வாயு அல்லது அபானனை மேலே செல்லும்படி செய்து, நடுவழியான சுழுமுனையின் மேல் மனத்தைப் பொருத்தி, நீரோடும் மடைவாயிலில் காத்திருக்கும் கொக்குப் போல நாட்டத்தை விடாமல் இருப்போர்க்கு, தேகம் சிதையாமல் ஊழிக்காலம் வரை இருக்கலாம்.

***592.*** *கலந்த உயிருடன் காலம் அறியில்*
*கலந்த உயிரது காலின் நெருக்கங்*
*கலந்த உயிரது காலது கட்டிற்*
*கலந்த உயிருடன் காலமும் நிற்குமே.*

உடலில் உயிர் கலந்துள்ள கால எல்லையை அறியின், அக்கால எல்லை பிராணன் இயக்கத்தால் அமைந்துள்ளது, அத்தகைய உயிரில் பிராணனது இயக்கத்தைக் கட்டி நிறுத்திவிட்டால், உயிருடன் பொருந்திய காலமும் அழிவின்றி நிற்கும்.

***593.*** *வாய்திற வாதா மனத்திலோர் மாடுண்டு*
*வாய்திறப் பாரே வளியிட்டுப் பாய்ச்சுவர்*
*வாய்திற வாதார் மதியிட்டு மூட்டுவர்*
*கோய்திற வாவிடிற் கோழையு மாமே.*

வாய் திறவாமல் மௌனமாக இருப்பவரது மன மண்டலத்தில் பிராணனாகிய செல்வம் ஒன்றுள்ளது, அங்ஙனமின்றி வாய் திறந்து பேசிக்கொண்டிருப்பவர் பிராணனை வெளியிட்டு வீணாக்குவர், பேசாத மௌனியர் மதிமண்டலத்தில் பிராணனைச் செலுத்திச் சோதியை அறிகின்றனர், சகஸ்ரதளமாகிய செப்பினைத் திறந்து பார்க்க வல்லமையற்றவர்கள் கோழைத்தனமுள்ளவராவர்.

***594.*** *வாழலு மாம்பல காலும் மனத்திடைப்*
*போழ்கின்ற வாயு புறம்படாப் பாய்ச்சுறில்*
*ஏழுசா லேகம் இரண்டு பெருவாய்தல்*
*பாழி பெரியதோர் பள்ளி அறையிலே.*

உள்ளத்தினின்றும் இறங்கி ஊடறுத்துச் செல்லுகின்ற வாயுவை வெளியே போகாதபடி நடுநாடியின்கண் செலுத்தின், ஏழு சாளரங்களையும் இரண்டு பெரிய வாயில்களையும் கொண்ட, தேவர் கோயிலில் பெரிய பள்ளி அறையிலே, பல காலும் வாழலாம்.

***595.*** *நிரம்பிய ஈரைந்தில் ஐந்தவை போனால்*
*இரங்கி விழிந்திருந் தென்செய்வை பேதாய்*
*வரம்பினைக் கோலி வழிசெய்கு வாரக்குக்*
*சூரங்கினைக் கொட்டை பொதியலு மாமே.*

புலன்களைத் துய்த்து நிரம்பிய ஞானேந்திரிய கன்மேந்திரியமாகிய பத்தி ஞானேந்திரியங்கள் ஐந்தும் நீங்கினால், அறிவிலியே! நீ வருந்தி இருந்தும் என்ன பயனைப் பெற முடியும்? ஆனால் இந்திரியங்களின் எல்லையைத் தாண்டி நிற்பவர்க்கு, மனமாகிய குரங்கை உடம்பினில் சேட்டையின்றி இருக்கச் செய்ய முடியும்.

***596.*** *முன்னம் வந்தனர் எல்லாம் முடிந்தனர்*
*பின்னை வந்தவர்க் கென்ன பிரமாணம்*
*முன்னுறு கோடி உறுகதி பேசிடில்*
*என்ன மாயம் இடிகரை நிற்குமே.*

முன்னமே வந்து பிறந்தார் அனைவரும் தாரணைப் பயிற்சியின்மையால் அழிந்து ஒழிந்தனர், பின்னே வந்தவர் அழியமாட்டார் என்பதற்கு என்ன பிரமாணம்? அவ்வாறு அழிகின்றவர் அடையும் நிலைகளைப் பேசினால் அவை அளவற்றனவாகும், என்ன வியப்பு? ஆற்றில் இடிந்து கரைகின்ற கரை போன்று நாளும் அழிகின்ற உடம்பு அழியாது நிற்குமோ?

***597.*** ***அரித்த வுடலைஐம் பூதத்தில் வைத்து***
***பொருத்தஐம் பூதஞ்சத் தாதியிற் போந்து***
***தெரிந்த மனாதிசத் தாதியிற்செல்லத்***
***தரித்தது தாரணை தற்பரத் தோடே.***

ஐம்பொறிகளால் அரிப்புண்ட உடலை ஐம்பூதங்களில் வைத்து, அப்படிப்பட்ட ஐம்பூதங்களில் சத்தம் முதலான தன்மாத்திரைகளில் போகும்படியாக, தெரிந்த மனாதி நாதத்தில் ஒடுங்க, ஆன்மா தற்பரமாகிய சிவனோடு பொருந்தியிருப்பதே தாரணையாகும்.

***598.*** ***வருமாதி யீரெட்டுன் வந்த தியானம***
***பொருவாத புந்தி புலன்போக மேவல்***
***உருவாய சத்தி பரத்தியான முன்னுங்***
***குருவார் சிவத்தியானம் யோகத்தின் கூறே.***

முன்னே தாரணைப் பகுதியில் பத்தாவது மந்திரத்தில் கூறியபடி அமைந்த தியானமாவது, ஒப்பற்ற புத்தியும் புலனும் நீங்கியிருத்தலாம், அது உருவோடு கூடிய சத்தியை மேலாக எண்ணுதலாகிய பரத்தியானம் என்றும், ஒளி பொருந்திய சிவனை எண்ணுதலாகிய சிவத்தியானம் என்றும் இரு கூறாக யோகத்தில் கூறப்பெறும்.

***599.*** ***கண்ணாக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்துட்***
***பண்ணாக்கி நின்ற பழம்பொருள் ஒன்றுண்***
***டண்ணாக்கின் உள்ளே அகண்ட ஒளிகாட்டிப்***
***புண்ணாக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே.***

கண் நாக்கு மூக்கு செவியாகிய ஞானேந்திரியங்கள் கூடுமிடத்தில், நாதத்தை உதிக்கச் செய்யும் பழமையான பொருள் ஒன்றுள்ளது, அது அண்ணாக்குப் பிரதேசத்தில் எல்லையற்ற பேரொளியைக் காட்டி, மனம் புறவழிச் செல்லாது தடுத்து நம்மைப் பிழைக்கச் செய்தது இவ்வண்ணமாம்.

***600.*** ***ஒண்ணா நயனத்தில் உற்ற ஒளிதன்னைக்***
***கண்ணாரப் பார்த்துக் கலந்தங் கிருந்திடில்***
***விண்ணாறு வந்து வெளிகண் டிடவோடிப்***
***பண்ணாமல் நின்றது பார்க்கலு மாமே.***

ஒன்றாகிய ஞானக்கண்ணில் பொருந்திய சோதியை, இரு கண்களையும் பொருத்திப் பார்த்து அங்கே சலனமில்லாமல் பொருந்தியிருந்தால், ஆகாய கங்கை நன்கு புலப்படு முறையில் சிதாகாயப் பெருவெளியில் பொருந்தி நிற்க, பண்ணாமல் நின்ற சுயம்பு மூர்த்தியைப் பார்க்கலுமாகும்.

***601.*** ***ஒருபொழு துன்னார் உடலோ டுயிரை***
***ஒருபொழு துன்னார் உயிருட் சிவனை***
***ஒருபொழு துன்னார் சிவனுறை சிந்தையை***
***ஒருபொழு துன்னார் சந்திரப் பூவையே.***

உடலோடு கலந்துள்ள உயிரை ஒரு பொழுதும் நினையாரகள், உயிருக்கு உயிராக விளங்கும் சிவனை ஒரு போதும் எண்ணார்கள், சிவன் எழுந்தருளியிருக்கின்ற சிந்தையையும் ஒரு பொழுதும் எண்ணார்கள், சந்திர மண்டலத்தில் நாதமயமாக விளங்கும் சத்தியை எண்ணார்கள். (என்னே இவர்கள் அறியாமை!)

***602.*** ***மனத்து விளக்கினை மாண்பட ஏற்றிச்***
***சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி***
***அனைத்து விளக்குந் திரியொக்கத் தூண்ட***
***மனத்து விளக்கது மாயா விளக்கே.***

மனத்தில் விளங்கும் ஒளியை மாட்சிமை பெறும்படி மேலே செலுத்தி, சினமாகிய அக்கினியைப் போகும்படி செய்து, யாவற்றையும் விளக்கி நிற்கும் சிவவொளியைச் சுழுமுனை என்ற திரியைத் தூண்டி கடத்த, மனத்துள் விளங்கும் சிவம் என்றும் மங்காத விளக்காகும்.

***603.*** ***எண்ணா யிரத்தாண்டு யோகம் இருக்கினும்***
***கண்ணார் அமுதினைக் கண்டறி வாரில்லை***
***உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கினாற்***
***கண்ணாடி போலக் கலந்துநின் றானே.***

எண்ணாயிரம் ஆண்டுகள் யோகம் பயின்றாலும், கண்ணில் சோதியாக இருந்து விளங்கும்பவனைக் கண்டறிபவர்கள் யாருமில்லை, மன மண்டலாகிய உள்ளத்தில் ஒளி பொருந்தும்படி பார்ப்பவர்க்கு, கண்ணாடியில் உருவத்தைக் காண்பதுபோல உள்ளத்தில் கலந்திருப்பவர்கள் காணலாம்.

*604.* நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை
ஓட்டமும் இல்லை உணர்வில்லை தானில்லை
தேட்டமும் இல்லை சிவனவ னாமே.

இரண்டு கண்பார்வையும் நடுமூக்கில் பொருந்தி வைத்திடில், சோர்வும் இல்லை, உடம்புக்கும் அழிவில்லை, மனத்தின் ஒட்டம் இராது, அறியுந்தன்மை இராது, தான் என்ற முனைப்பும் இராது, புறத்தே செல்லும் அறிவுத் திறனும் இராது, அவன் சிவனாகலாம்.

*605.* நயனம் இரண்டும் நாசிமேல் வைத்திட்
டுயர்வெழா வாயுவை உள்ளே அடக்கித்
துயரற நாடியே தூங்கவல் லார்க்குப்
பயனிது காயம் பயமில்லை தானே.

இரண்டு கண்பார்வையும் நாசிகாக்கிரம் என்ற புருவ நடுவில் வைத்து, உயர்தவினின்றும் தாழாதபிராணனை உள்ளே அடக்க, துன்பத்தைத் தரும் மனாமதியை நீக்கி யோக நித்திரை செய்வார்க்கு, எடுத்த இப்வுடல் பயனைத் தருவதாகும், பிரபஞ்சம் பிணிக்கும் என்ற பயமும் இல்லையாம்.

*606.* மணிகடல் யானை வார்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளைபேரி கையாழ்
தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்கஒண் ணாதே.

மணி, கடல், யானை, புல்லாங்குழல், அழகிய வண்டு, தும்பி, சங்கு, பேரிகை, யாழ் ஆகியவற்றின், நுண்ணொலிகள் பத்தும், தியானத்தில் அடங்கியிருப்பவர்க்கன்றி வேறு யாராலும் அறியவொண்ணாது.

*607.* கடலொடு மேகங் களிறொடும் ஓசை
அடவெழும் வீணை அண்டாண் டத்துச்
சுடர்மனு வேணுச் சுரிசங்கின் ஓசை
திடமறி யோகிக்கல் லாற்றெளி யாதே.

கடல், மேகம், யானை ஆகியவற்றின் ஓசையும், கம்பி இறுக்கத்தால் வீணையில் எழும் நாதமும், ஆகாயத்தில் அமைந்துள்ள வேத கோஷம், புல்லாங்குழல், சுருங்கிய வாயினையுடைய சங்கு ஆகியவற்றின் ஓசையும், திடமாக அறியவல்ல யோகியர்க்கன்றி ஏனையோரால் அறிய முடியாது.

*608.* ஈசன் இயல்பும் இமையவர் ஈட்டமும்
பாசம் இயங்கும் பரிந்துயி ராய்நிற்கும்
ஓசை யதன்மணம் போல விடுவதோர்
ஓசையாம் ஈசன் உணரவல் லார்க்கே.

இறைவனது இயல்பும், தேவர்குழாச் சேர்க்கையும், பாசத்தின் இயக்கமும், பாசத்தை விட்ட உயிராய் நிற்பதும் நாதமாகும், அதனை உணர வல்லார்க்கு, பூவினில் வெளிவரும் கந்தம் போல நாதத்தில் விளங்குகிறான் என்பது புலப்படும்.

*609.* நாத முடிவிலே நல்லான் இருப்பது
நாத முடிவிலே நல்யோகம் இருப்பது
நாத முடிவிலே நாட்டம் இருப்பது
நாத முடிவிலே நஞ்சுண்ட கண்டனே.

நாத தத்துவம் முடிந்த இடத்திலே பராசத்தியுள்ளாள், அங்கு நல்ல யோகத்தின் முடிவு உள்ளது, நாதம் முடியும் இடத்தில் நம் மனம் பதிவது, அவ்விடத்திலே நீலகண்டப் பெருமான் விளங்குவான்.

*610.* உதிக்கின்ற ஆறினும் உள்ளங்கி ஐந்துக்
துதிக்கின்ற தேகடைத் தூங்கிருள் நீங்கி
அதிக்கின்ற ஐவருள் நாதம் ஒடுங்கக்
கதிக்கொன்றை ஈசன் கழல்சேர லாமே.

ஆறாதாரங்களில் தோன்றுகின்ற ஐவகை அக்கினியும், வணங்குகின்ற பிரகாசத்தோடு கூடிய நீல ஒளியை அகன்று, இயக்குகின்ற பஞ்ச தன்மாத்திரைகளில் ஒன்றாகிய சத்தம் ஒடுங்க, பொன்னொளியில் விளங்கும் இறைவனது திருவடியை அடையலாம்.

*611. பள்ளி அறையில் பகலே இருளில்லை*
*கொள்ளி அறையிற் கொளுந்தாமற் காக்கலாம்*
*ஒள்ளி தறியிலோ ரோசனை நீளிது*
*வெள்ளி அறையில் விடிவில்லை தானே.*

இந்திரியங்கள் ஓய்வு பெய்கின்ற பள்ளி அறை என்ற பராவத்தையில் (பரைநிலையில்) ஒளியேயன்றி இருளில்லை, ஒளியேயுள்ள அறையானபடியால் வேறு அக்கினி கொளுத்தாமல் காக்கலாம், ஒளியையுடையதாகிய இந்நிலையை அறியில் இது தியானத்தால் எய்தப் பெறுவது ஆகும், இருளே இல்லாதபடியால் விடிவே இல்லை.

*612. கொண்ட விரதங் குறையாமற் றானொன்றித்*
*தண்டுடன் ஓடித் தலைப்பட்ட யோகிக்கு*
*மண்டலம் மூன்றினும் ஓக்க வளர்ந்தபின்*
*பிண்டமும் ஊழி பிரியா திருக்குமே.*

சந்திர மண்டலம் அமைக்க வேண்டுமென்று மேற்கொண்ட குறிக்கோளுக்குக் குறைவு வராமல் தான் ஒன்றுபட்டு, முதுகந்தண்டிலுள்ள சுழுமுனை நாடி வழியாக மேல் நோக்கி ஏறிச்சென்று யோகிக்கு, அக்கினி மண்டலம் சூரிய மண்டலம் சந்திர மண்டலம் ஆகிய மூன்றும் பொருந்தும் வகையில் வளர்ந்தபின், எடுத்த தேகம் உலகம் உள்ளவரை சீவனை விட்டு அகலாது.

*613. அவ்வவர் மண்டல மாம்பரி சொன்றுண்டு*
*அவ்வவர் மண்டலத் தவ்வவர் தேவராம்*
*அவ்வவர் மண்டலம் அவ்வவர்க் கேவரில்*
*அவ்வவர் மண்டல மாயமற் றோர்க்கே.*

அவ்வவர் மண்டலத்தினால் ஆகின்ற தன்மை ஒன்றுள்ளது, அக்கினி சூரிய சந்திர மண்டலங்களுக்குப் பிரமன், விஷ்ணு, உருத்திரன் ஆகியோர் தலைவராம், அவ்வவரது ஆட்சி அவ்வம் மண்டலத்திலே இருப்பின், அவ்வவரது மண்டலம் மற்றவர்க்கு உதவு செய்யும் கூட்டமாகும்.

*614. இளைக்கின்ற நெஞ்சத் திருட்டறை உள்ளே*
*முளைக்கின்ற மண்டலம் மூன்றினும் ஒன்றித்*
*துளைப்பெரும் பாசந் துருவிடு மாகில்*
*இளைப்பின்றி மார்கழி ஏற்றம நாதமே.*

உலகப் பொருளில் மயங்கித் தவிக்கின்ற உள்ளமாகிய இருட்டறையில்தான், உதயமாகின்ற மூன்று மண்டலங்களுள் பொருந்தி, பிரமரந்திரத் துளை வழியாகச் சிவனத்தினிடம் பெருங்காதல் கொண்டு ஆராய்ந்து மேற்சென்றால், துன்பம் நீங்கிச் சிரசின் மேல் விடியற்காலம் போல வெளிச்சத்தைக் காணலாம்.

*615. முக்குண மூடற வாயுவை மூலத்தே*
*சிக்கென மூடித் திரித்துப் பிடித்திட்டுத்*
*தக்க வலமிடம் நாழிகை சாதிக்க*
*வைக்கும் உயிர்நிலை வானவர் கோனே.*

தாமத இராசத சாத்துவிகம் என்ற மூக்குணங்களாகிய இருள் நீங்க, மூலாதாரத்திலுள்ள அபானனை மேலெழும்படி செய்து, வலப்புற சூரிய கலையை இடப்புறமுள்ள சந்திர கலையோடு பொருந்தும்படி அதிகாலையில் ஒரு நாழிகை பயின்றால், உயிரை உடம்பில் அழியாது சிவன் வைப்பான்.

*616. நடலித்த நாபிக்கு நால்விரன் மேலே*
*மடலித்த வாணிக் கிருவிரல் உள்ளே*
*கடலித் திருந்து கருதவல் லார்கள்*
*சடலத் தலைவனைத் தாமறிந் தாரே.*

அசைவினை உண்டாக்கிக் கொண்டிருக்கும் உந்திச் சக்கரத்துக்கு நான்கு விரல்மேலே, ஊர்த்துவ முகமாப் மேலே செல்லும் வாக்கு வெளிப்படும் தொண்டைச் சக்கரத்துக்கு இரண்டு விரற்கடை கீழேயுள்ள அநாகதச் சக்கரத்தில், கடல் முழுக்கம் போன்று பொங்கி எழுகின்ற ஒலியினைத் தியானிக்க வல்லர்கள், உடம்புக் சூரியனாகிய ஆன்மாவை அறிந்தவராவார்.

*617. அறிவாயசத் தென்னு மாறா றகன்று*
*செறிவான மாயை சிதைத்தரு ளாலே*
*பிறியாத பேரரு ளாயிடும் பெற்றி*
*நெறியான அன்பர் நிலையறிந் தாரே.*

அறிவான ஆன்மா அறிவில்லாத முப்பத்தாறு தத்துவங்களும் நீக்கி, செறிந்துள்ள மாயையை அருளாலே கெடுத்து, சிவனோடு நீங்காதிருக்கும் அருள் சத்தியாகிவிடும் பேற்றை, சிவநெறியில் முறைப்பட்ட அன்பரே அவ்வுண்மையை உணர்ந்தோராவர்.

## 9. சமாதி

சமாதியாவது, உயிரும் இறைவனும் ஒன்றி நிற்றல்.

*618. சமாதிய மாதியிற் றான்சொல்லக் கேட்கிற்*
*சமாதிய மாதியிற் றானெட்டுச் சித்தி*
*சமாதிய மாதியில் தங்கினோர்க் கன்றே*
*சமாதியதி மாதி தலைப்படும் தானே.*

இயமம் முதலியவைகளைக் கடைப்பிடித்து சமாதி வரை செல்லும் முறைமையைச் சொல்லக் கேட்டால், இயமம் முதல் சமாதிக்கு முன்னுள்ள அங்கங்கள் கடைப்பிடிக்கப்படின், எட்டாவதான சமாதி கைகூடும், இவ்வெட்டு உறுப்புகளையும் நியதியாகச் செய்து வருபவர்க்கு, அட்டாங்க யோகத்தின் இறுதி உறுப்பான சமாதி கைகூடும்.

*619. விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடில்*
*சந்தியி லான சமாதியில் கூடிடும்*
*அந்தமி லாத அறிவின் அரும்பொருள்*
*சுந்தரச் சோதியுந் தோன்றிடுந் தானே.*

ஒளியும் ஒலியும் சிரசின்மேல் சகஸ்தரளத்தில் மிகுந்து விளங்கினால், யோகமான சமாதியில் சீவன் பொருந்தியிருக்கும், அப்போது இறுதியில் ஞான சொரூபமான சிவம், அழகிய சோதியாக வெளிப்படும்.

*620. மன்மனம் எங்குண்டு வாயுவும் அங்குண்டு*
*மன்மனம் எங்கில்லை வாயுவும் அங்கில்லை*
*மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு*
*மன்மனத் துள்ளே மனோலய மாமே.*

நினைத்தலைச் செய்யும் மனம் எங்கே உள்ளதோ அங்கே பிராண வாயுவும் உண்டு, மனம் நினைக்கவில்லையானால் பிராண வாயுவின் அசைவும் உண்டாகாது, அம்மனத்துள்ளே நினைப்பதைவிட்டு மகிழ்ந்திருப்பார்க்கு, நினைக்கும் மனதே நினையாத மனமாகி அடங்கிவிடும்.

*621. விண்டலர் கூபமும் விஞ்சத் தடவியுங்*
*கண்டுணர் வாகக் கருதியிருப் பார்கள்*
*செண்டு வெளியிற் செழுங்கிரி யத்திடை*
*கொண்டு குதிரை குசைசெறுத் தாரே.*

பிளந்து வெளிப்படும் ஒளியாகிய நீர் ஊற்றையும் அதில் சிவமாகிய அறிவுக்காட்டையும், தரிசித்து உணர்வு மயமாக எண்ணியிருப்பவர்கள், செழுமையான சிரசாகிய மலையில், பிராணனாகிய குதிரையைச் செலுத்தி மனமாகிய கயிற்றைக் கொண்டு கட்டிவிடுவார்கள்.

*622. மூல நாடி முகட்டல குச்சியுள்*
*நரலு வாசல் நடுவுள் இருப்பிர்கள்*
*மேலை வாசல் வெளியுறக் கண்டபின்*
*காலன் வார்த்தை கனாவிலும் இல்லையே.*

சிவத்தை நாடிச் சிரசின் உச்சியிலுள்ள சகஸ்ரதளத்தில், கண்ணறிவு, காதறிவு, மூக்கறிவு, நாக்கறிவு ஆகிய நான்கு அறிவும் பொருந்தும் வண்ணம் இருப்பவர்களே! விரிந்த சகஸ்ரதளத்துக்கு மேலே அகண்டத்தைத் தரிசித்த பின், உங்களுக்குக் காலன் என்ற சொல்லுங்கூடக் கனாவிலும் இல்லை.

*623. மண்டலம் ஐந்து வரைகளும் ஈராறு*
*கொண்டிட நிறகுங் குடிகளும் ஆறெண்மர்*
*கண்டிட நிற்குங் கருத்து நடுவாக*
*உண்டு நிலாவிடும் ஓடும் பதத்தையே.*

பிருதவி முதலிய ஐந்து மண்டலங்களும், அகர முதல் உன்மனி ஈறாகவுள்ள கலைகள் பன்னிரண்டும், ஆதாரச் சக்கரங்களிலுள்ள அட்சரங்களை இடமாகக் கொண்டுள்ள தேவதைகள் நாற்பத்தெட்டும், கருத்து மாத்திரமா நிராதாரத்தில் (சாந்தியதீத கலையில்) கண்டு, எங்கும் வியாபகமாகவுள்ள திருவடியைப் பொருந்தி அனுபவிப்பான் சிவயோகி.

*624.* *பூட்டொத்து மெய்யிற் பொறியப்பட்ட வாயுவைத்*
*தேட்டற்ற வந்நிலஞ் சேரும் படிவைத்து*
*நாட்டத்தை மீட்டு நயனத் திருப்பார்க்குத்*
*தோட்டத்து மாம்பழந் தூங்கலு மாமே.*

பூட்டைக் கருவியைப் போல உடம்பில் கீழும் மேலுமாகச் செல்லும் வாயுவை, தேடுதலற்ற பிரமரந்திரத்தால் பொருந்தச் சேர்த்து, தேடியலைதலை விட்டு விழித்தபடி இருப்பார்க்கு, சிவக்கனியோடு அசைவற்றிருக்கலாம்.

*625.* *உருவறி யும்பரி சொன்றுண்டு வானோர்*
*கருவரை பற்றிக் கடைந்தமு துண்டார்*
*அருவரை ஏறி அமுதுண்ண மாட்டார்*
*திருவரை யாமனந் தீர்ந்தற்ற வாறே*

எங்கள் ஆன்ம சொரூபத்தை அறியும் சிறப்பான முறை ஒன்று உள்ளது (அதனையான் சொல்லுவேன்), தேவர்கள் கருவுண்டாகும் இடத்தில் பொருந்தி இன்பத்தைப் பெற்றனர், அதனால் சிரசின் உச்சியில் சென்று அமுத பானம் செய்யாதவர், ஆகவே மனம் அடங்கச் சிரசின் மேலிடத்தில் பொருந்துவதே சொரூபத்தை அறிதலாம்.

*626.* *நம்பனை யாதியை நான்மறை ஓதியை*
*செம்பொனின் உள்ளே திகழ்கின்ற சோதியை*
*அன்பினை யாக்கி யருத்தி ஒடுக்கிப்போய்க்*
*கொம்பேறிக் கும்பிட்டுக் கூட்டமிட் டாரே.*

முதல் பொருளானவனும், நான்கு வேதங்கலை ஓதியவனும், செம்பொன்னிலுள்ளே விளங்கும் சோதி போன்றவனுமாகிய சிவனிடம், அன்பினைப் பெருக்கி ஆசையை அடக்கிப் போய், சகஸ்ரதளத்தில் பொருந்தி நின்று சாதகர் நிட்டை கூடியிருந்தார்.

*627.* *மூலத்து மேலது முச்சது ரத்தது*
*காலத் திசையிற் கலக்கின்ற சந்தினில்*
*மேலைப் பிறையினில் நெற்றிநேர் நின்ற*
*கோலத்தின் கோலங்கள் வெவ்வேறு கொண்டதே.*

குண்டலினி நான்கு இதழ்களோடு கூடிய மூலாதாரத்திலுள்ள முக்கோண வடிவுள்ளது, அது அபானன் சத்தி கெட்டுப் பிராணனோடு சேர்கின்ற இடத்தில், பெருமை மிக்க அர்த்த சந்திரனில் நெற்றிக்கு நடுவேயுள்ள வடிவத்தில், அர்த்தசந்திரன் முதல் உன்மனி ஈறாகவுள்ள கலைகளாக விளங்கும்.

*628.* *கற்பனை யற்றுக் கனல்வழி யேசென்று*
*சிற்பனை எல்லாஞ் சிருட்டித்த பேரொளிப்*
*பொற்பினை நாடிப் புணர்மதி யோடுற்றுத்*
*தற்பர மாகத் தகுந்தண் சமாதியே.*

சீவ சங்கற்பங்களை விட்டு, மூலக்கனலோடு மேற்சென்று, சிற்பத்திறம் நிறைந்த இப்புவனங்களையெல்லாம் படைத்துக் கொடுத்த பேரொளி அழகனாகிய பரம சிவத்தை, தேடி மதியண்டலத்தோடு பொருந்தி, தான் என்றும் சிவமென்றும் பேதமாகாதது சாந்தம் பொருந்திய சமாதியாகும்.

*629.* *தலைப்பட் டிருந்திடத் தத்துவங் கூடும்*
*வலைப்பட் டிருந்திடம் மாதுகல் லாளுங்*
*குலைப்பட் டிருந்திடுங் கோபம் அகலுந்*
*துலைப்பட் டிருந்திடும் தூங்கவல் லார்க்கே.*

மேற்கூறிய வண்ணம் வாழ்க்கையை மாற்றியவரிடம் ஆன்மா நன்கு விளங்கும், ஆன்மா சிவத்தைச் சார்ந்திருத்தலால் திருவருட்சத்தியும் அங்கே பிணைந்து நிற்கும், அருட்சத்திக்கு எதிரான காமக் குரோதாதிகள் அகன்றுவிடும், சமாதி கூடினவர்க்கு நடுவு நிலைமை தானே வந்து கூடும்.

*630.* *சோதித் தனிச்சுட ராய்நின்ற தேவனும்*
*ஆதியும் உள்நின்ற சீவனு மாகுமால்*
*ஆதிப் பிரமன் பெருங்கடல் வண்ணனும்*
*ஆதி அடிபணிந் தன்புறு வாரே.*

ஒளியோடு கூடிய ஒப்பற்ற சுடர்வடிவாக நின்ற சிவமும், ஆதியாகிய சத்தியும் உள்ளே விளங்குகின்ற மலமற்ற ஆன்மாவும் சமாதியில் ஒன்றேயாகும், படைப்புக்கு முதல்வனாகிய பிரமனும் நீலமேனியுடைய திருமாலும், ஆதி முதல்வனாகிய சிவத்திடம் அடி பணிந்து அவனிடம் என்றும் நீங்கா அன்பு எய்துவர்.

*631.* *சமாதிசெய் வார்க்குத் தரும்பல யோகஞ்*
*சமாதிகள் வேண்டாம் இறையுட னேகிற்*
*சமாதிதா னில்லை தானவ னாகிற்*
*சமாதியில் எட்டெட்டும் சித்தியும் எய்துமே.*

சமாதியில் இருப்பவர்க்குப் பல யோகங்கள் சித்திக்கும், எப்போதும் இறைவனோடு ஒன்றியிருக்கின் சமாதிகள் வேண்டாம், ஆன்மரிவாகிய தான் சிவமேயானால் சமாதி தேவையில்லாததாகும், சமாதியினால் அறுபத்து நான்கு கலை ஞானங்களும் வந்து பொருந்தும்.

## 10. அட்டாங்க யோகப் பேறு

அஃதாவது, அட்டாங்க யோகத்தால் அடையும் சிறப்பு என்பதாம்.

*632.* *போதுகந் தேறும் புரிசடை யாண்டி*
*யாதுகந் தாரம ராபதிக் கேசெல்வர்*
*ஏதுகந் தானிவன் என்றருள் செய்திடு*
*மாதுகந் தாடிடு மால்விடை யோனே.*

சகஸ்ரதளத்தை விரும்பி எழுந்தருளியிருக்கும் சிவபெருமானது திருவடியை, எவ்வாற்றானும் விரும்பியவர் விண்ணுலகை அடைவர், உமை காண நடனம் புரியும் இடபவாகன மூர்த்தி, இச்சாதகன் எதை விரும்பி வந்தான் என்று அதனை அருள் புரியும்.

*633.* *பற்றிப் பதத்தன்பு வைத்துப் பரன்புகழ்*
*கற்றிருந் தாங்கே கருது மலர்கட்கு*
*முற்றெழுந் தாங்கே முனிவர் எதிர்வரத்*
*தெற்றுஞ் சிவபதஞ் சேரலு மாமே.*

திருவடியைப் பற்றி நின்று அதனிடம் அன்பு கொண்டு, சிவத்தின் புகழையே கற்றுக் கேட்டிருந்து அங்கு அவ்வண்ணமே சிந்தித்திருப்பார்க்கு, முனிவர்கள் அனைவரும் எழுந்து எதிர் கொண்டழைக்க, தெளிந்த சிவபதம் சேர்தலும் கூடும்.

*634.* *வருந்தித் தவஞ்செய்த வானவர் கோவாய்த்*
*திருந்தம ராபதிச் செல்வன் இவனெனத்*
*தருந்தண் முழவங் குழலும் இயம்ப*
*இருந்தின்பம் எய்துவர் ஈசன் அருளே.*

சிவபெருமானை நோக்கி வருந்தித் தவம் செய்து தேவ உலகுக்கு அரசனாய், தேவ உலகம் செல்லக்கூடிய தகுதியுடையவன் இவன் என்று சொல்லும்படி, குளிர்ச்சியைத் தரும் முரசும் வேய்ங்குழலும் ஒலிக்க, இறைவன் அருளால் இவ்வுலகிலிருந்து இன்பம் அடைவர்.

*635.* *செம்பொற் சிவகதி சென்றெய்துங் காலத்துக்*
*கும்பத் தமரர் குழாம்வந் தெதிர்கொள்ள*
*எம்பொற் றலைவன் இவனா மெனச்சொல்ல*
*இன்பக் கலவி இருக்கலு மாமே.*

செம்பொன்னின் ஒளியையுடைய சிவகதியை அடைகின்ற காலத்தில், பூரண கும்பத்துடன் கூடிய தேவர் கூட்டம் வந்து எதிர்கொண்டழைக்க, எங்களுடைய பொன் மண்டலம் என்ற புத்தி மண்டலத் தலைவன் இவனாம என்று அனைவரும் பாராட்ட, இன்பச் சேர்க்கையுள் இருக்கலாம்.

*636.* *சேருறு காலந் திசைநின்ற தேவர்கள்*
*ஆரிவன் என்ன அரனாம் இவனென்ன*
*ஏருறு தேவர்கள் எல்லாம் எதிர்கொள்ளக்*
*காருறு கண்டனை மெய்கண்ட வாறே.*

சிவகதியைப் பெறுங்காலத்துத் திக்குப்பாலகர்களாகிய தேவர்கள், இவன் யார் என்று கேட்க, சிவபெருமான் நாமே இவன் என்று சொல்ல, அழகு மிக்க தேவர்கள் அனைவரும் எதிர்கொண்டு அழைக்க, கருமை நிறம் பொருந்திய கண்டத்தையுடைய சிவபெருமானைச் சாதகர் நேரில் தரிசித்தவராவார்.

*637.* *நல்வழி நாடி நமன்வழி மாற்றிடுஞ்*
*சொல்வழி யாளர் சுருங்காப் பெருங்கொடை*
*இவ்வழி யாளர் இமையவர் எண்டிசைப்*
*பல்வழி எய்தினும் பார்வழி யாகுமே.*

நாத சம்மியத்தை நாடி, எமனிடம் செல்லுகின்ற வழியை மாற்றுகின்ற பிரணவ உபாசகரும், குறையாத கொடையில் வழிவழி வந்தவரும் ஆகிய இவ்யோகியர்களுக்கு, தேவலோகத்திலுள்ள எட்டுத் திக்குகளுக்குச் சென்றாலும், தேவலோகம் பூலோகம் போன்று தெரிந்த வழியாக இருக்கும்.

*638.* *தூங்கவல் லார்க்குந் துணையேற் புவனமும்*
*வாங்கவல் லார்க்கு வலிசெய்து நின்றிட்டுத்*
*தேங்கவல் லார்க்குந் திளைக்கும் அமுதமுந்*
*தாங்கவல் லார்க்குந் தன்னிட மாமே.*

அறிதுயில் கொள்ளும் திருமாலுக்கும், ஏழுலகங்களை மீண்டும் படைக்க வல்ல பிரமனுக்கும், வலிமையால் அழித்து அசையாது நிற்கும் உருத்திரனுக்கும், அமுதம் உண்டு திளைத்துத் தாங்கிக்கொண்டிருக்கும் தேவர்களுக்கும், சிவகதியைப் பெற்றவரே இடமாகும்.

*639.* *காரிய மான உபாதியைத் தான்கடக்*
*தாரிய காரணம் ஏழுந்தன் பாலுற*
*ஆரிய காரண மாய தவத்திடைத்*
*தாரியல் தற்பரஞ் சேர்தல் சமாதியே.*

ஆன்மாக்களுக்கு ஆணவ மல மறைப்பால் விளைந்த உபாதி ஏழையும் அகன்று, ஆரியனான சிவத்தினது உபாதி ஏழையும் பொருந்தி, பரம்பரையாக வரும் சுத்த மாயை கெட, தவத்தில் இயங்குந் தன்மையதான பொருளைச் சேர்தலே சமாதியின் பயனாம்.

## 11. அட்டமாசித்தி

அட்டமாசித்தி - எட்டுப் பெரிய சித்திகள். யோகப்பயனாலும் ஈசனருளாலும் கிட்டுவன. அவையாவன - அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன. அணிமா - அணுப்போன்று சூக்குமமாதல். மகிமா - மலை போன்று பெரிதாதல். கரிமா - கனமாதல், இலகிமா - பஞ்சைப் போல் இலேசாதல். பிராப்தி - எல்லாப் பொருளையும் தன்பால் தருவித்தல். பிராகாமியம் - விருப்பம் போல் தடையின்றி எல்லா இன்பங்களையும் பெற்றிருத்தல். ஈசத்துவம் - தத்துவங்களை விருப்பப்ப கடத்தல், வசித்துவம் - தத்துவங்களில் கலந்திருத்தல்.

*640.* *பணிந்தெண் திசையும் பரமனை நாடித்*
*துணிந்தெண் திசையும் தொழுதெம் பிரானை*
*அணிந்தெண் திசையினும் அட்டமா சித்தி*
*தணிந்தெண் திசைசென்று தாபித்த வாறே.*

மனம் ஒருமைப் பட்டு எட்டுத் திசைகளிலும் மேலான பொருளாகிய பரமனை, அவனே பரம்பொருள் என்று ஆராய்ந்து துணிந்து, அவ்வெட்டுத்திசைகளிலும் எம் பெருமானை வணங்கி, அங்கு அட்டமாசித்திகள் தாமே அடையுமாறு பெற்று, எங்கும் அட்டமாசித்திகள் நிலைபெறுவித்தவாறாகும்.

*641.* *பரிசறி வானவர் பண்பன் அடியெனத்*
*துரிசற நாடியே தூவெளி கண்டேன்*
*அரிய தெனக்கில்லை அட்டமா சித்தி*
*பெரிதருள் செய்து பிறப்பறுத் தானே.*

ஒளி மண்டலவாசிகளின் பக்குவத்துக்கேற்ப வழங்கும் பண்பாளன் திருவடியே சரண் என்ன, குற்றமற நாடி மிகத் தூய்மையான பரவெளியைக் கண்டேன், ஆதலால் அடியேனுக்கு அருமையான பொருள் பிறிதொன்றில்லை, அட்டமாசித்திகளை அடியேனுக்கு விரும்பியருளி, அப்பெருமான் பிறவியை நீக்கியருள் செய்தான்.

*642.* *குரவன் அருளிற் குறிவழி மூலப்*
*பரையின் மணமிகு சங்கட்டம் பாத்த்துத்*
*தெரிதரு சாம்பவி கேசரி சேரப்*
*பெரிய சிவகதி பேறெட்டாஞ் சித்தியே.*

குருவின் அருளினால், மூலாதாரத்திலுள்ள குண்டலினி சத்தி சீவசத்தியுடன் பொருந்திக் குறிவழி பாய்வதைத் தடுத்து நல்ல தருணத்தை உண்டாக்கி, தியான முறையில் சாம்பவி கேசரியாகிய இரு நாட்டத்தில் ஏதேனும் ஒன்றுசேர, பெரிய சிவகதியைப் பெற்று அதன் பேறாகிய அட்டமாசித்திகளையும் அடையலாம்.

*643.* *காயாதி பூதங் கலைகால மாயையில்*
*ஆயா தகல அறிவொன் றனாதியே*
*ஓயாப் பதியதன் உண்மையைக் கூடினால்*
*வீயாப் பரகாயம் மேவலு மாமே.*

ஆகாயம் முதலான பூதங்களும் கலை காலம் மாயையாகிய தத்துவங்களும் ஆகிய இவற்றில், ஆய்ந்து தோயாது அகல, ஆன்ம அறிவானது பொருந்தி அனாதியே நீங்காத சத்திகளைக் கூடினால், அழியாது மேன்மையான சரீரத்தைப் பொருந்தலாம்.

*644.* ***இருபதி னாயிரத் தெண்ணூறு பேதம்***
***மருவிய கன்ம மாமந்த யோகம்***
***தருமியை காய உழைப்பாகுந் தானே***
***அருமிரு நான்காய் அட்டமா சித்திக்கே.***

பொருந்திய கன்ம யோகம், இருபதினாயிரத்து எண்ணூறு பேதங்களையுடையது, இவ்வாறு வந்தவை உடல் உழைப்பாகும், அருமையான இவை அட்டாங்க யோகத்துள் அடங்கி எண் சித்திகளை அளிக்க வல்லனவாம்.

*645.* ***மதிதனில் ஈராறாய் மன்னுங் கலையின்***
***உதய மதுநா லொழியவோ ரெட்டுப்***
***பதியும்ஈ ராறாண்டு பற்றறப் பார்க்கில்***
***திதமான ஈராறு சித்திக னாமே.***

சந்திர நாடியாகிய இடைகலையில் பன்னிரண்டு அங்குல அளவாய் இழுக்கப் பெறும் பிராணனில், பிங்கலை வழியாக வெளிப்படுதல் நாலங்குல அளவு போக எட்டங்குல அளவு உள்ளே தங்கும், இதனைப் பன்னிரண்டு ஆண்டுகள் உலகப்பற்றை விட்டுக் கவனித்து வந்தால், உறுதியான அட்டமாசித்திகளை அடையலாம்.

*646.* ***நாடும் பிணியாகு நஞ்சனஞ் சூழ்ந்தக்கால்***
***நீடுங் கலைகல்வி நீள்மேதை கூர்ஞானம்***
***பீடொன்றி னால்வாயாச் சிதத்தியே தத்தின்***
***நீடுந் துரங்கேட்டல் நீண்முடி வீராறே.***

நம்முடைய உறவினர் சூழ இருப்பின் நம்மை நாடுவது பக்தமாகும், மிக்க கலை, ஞானம், நுண்ணறிவு, நிறைபறிவு ஆகிய இவற்றால், அட்டமாசித்திகள் அடையா, பேதமாகப் பெருகிய ஒலியினைப் பன்னிரண்டு கேட்டலே சித்தியைத் தருமாம்.

*647.* ***ஏழா னதிற்சண்ட வாயுவின் வேகியாந்***
***தாழா நடைபல யோசனை சாரந்திடுஞ்***
***சூழான ஓரெட்டில் தோன்றா நரைதிரை***
***தாழான ஒன்பதிற் றான்பர காயமே.***

நாத தரிசனம் கிட்டியவர் ஏழாண்டில் சண்டமாருதம் போல் செல்லும் வேகததை உடையோராவர், நடை தளராமல் பல யோசனை செல்லும் வன்மை கிட்டும், சூழ்ந்த எட்டாம் ஆண்டில் நரை என்றும் மூப்பு என்றும் தோன்றா, தங்கு தலையுடைய ஒன்பதாம் ஆண்டிலே பரகாயப் பிரவேசமாம் (அஃதாவது, அழியாத உடல் உண்டாகும்).

*648.* ***ஈரைந்திற் பூரித்துத் தியான உருத்திரன்***
***ஏர்வொன்று பன்னொன்றில் ஈராறாம் எண்சித்தி***
***சீரொன்று மேலேழ் கீழேழ் புவிச்சென்று***
***ஏரொன்று வியாபியாய் நிற்றல்ஈ ராறே.***

பத்தாண்டு தியான சத்தியால் கீழே போகும் சத்திகளை மேலே நிரப்பிக்கொண்டு உருத்திரன் போன்று சாதகர் விளங்குவர், பதினோராண்டில் எட்டு என்ற எண்ணப்பட்ட சித்தி உண்டாம், சிறப்புப் பொருந்திய மேலேழ் உலகங்களிலும் கீழேழ் உலகங்களிலும் சென்று, பன்னிரண்டாண்டில் எங்கும் சென்று அழகுடன் நிறைந்து நிற்கும் தகுதி சாதகர்க்கு உண்டாகும்.

*649.* ***தானே அணுவுஞ் சகத்துத்தன் நோன்மையும்***
***மானாக் கனமும் பரகாயத் தேகமுந்***
***தானாவ தும்பர காயஞ்சேர் தன்மையுள்***
***ஆனாத வுண்மையும் வியாபியு மாமஎட்டே.***

தானே அணிமாவும், உலகம் போன்று பெருமையுடைய மகிமாவும், அளவிட முடியாத கனமுடைமையான கரிமாவும், எல்லாவற்றையும் அடக்கியும் அமையாத ஆகாயம் போன்று இலேசான இலகிமாவும், அழியாத உடலை அடைதலாகிய பிராத்தியும், பரகாயத்தை அடையும் ஆற்றலாகிய பிராகாமியமும், அமையாத உண்மையாகிய ஈசத்துவமும், வியாப்பியமாகிய வசித்துவமும் ஆகிய எட்டுச் சித்திகளும் அடையலாம்.

*650.* ***தாங்கிய தன்மையுந் தானணுப் பல்லுயிர்***
***வாங்கிய காலத்து மற்றோர் குறையில்லை***
***யாங்கே எழுந்தோம் அவற்றுள் எழுந்துமிக்***
***கோங்கி வரமுத்தி முந்திய வாறே.***

சிவயோகியாகிய தான் அணுத்தன்மை எய்திப் பல உயிர்களையும் தாங்கிய காலத்தும், அவற்றை வாங்கி ஒடுக்கிய காலத்தும், ஓர் மாற்றமும் இல்லை, சித்தி பெற்ற உயிர்களாகிய அவற்றுள் அப்போதே மேழெுந்த ஓம் என்னும் நாதம் ஊர்த்துவ சகஸ்ரதளத்தை அடைந்து எழுந்து சென்ற விதமே, முத்தி முற்பட்டவாறாம்.

***651.*** ***முந்திய முந்நூற் றறுபது காலமும்***
***வந்தது நாழிகை வான்முத லாயிடச்***
***சிந்தைசெய் மண்முதல் தேர்ந்தறி வார்வல***
***ருந்தியுள் நின்று வுதித்தெழு மாறே.***

சூரியோ தயம் முதல் முந்நூற்றறுபது விநாடியும், வந்தது நாழிகை வான் முதலாயிட அமைய வந்ததாகிய நாழிகைக் காலத்தை ஆகாயம் முதலாகக் கொண்டு இடவும், எண்ணப்படுகின்ற இரவுக் காலத்தை மண் முதலாகக் கொண்டு அறியவும் வல்லவர், உக்திக் கமலத்தில் நிற்கும் சூரியன் உதித்து மேலெழுதலை அறிவார்.

***652.*** ***சித்தந் திரிந்து சிவமய மாகியே***
***முத்தம் தெரிந்துற்ற மோனர் சிவமுத்தர்***
***சுத்தம் பெறலாம் ஐந்தில் தொடக்கற்றோர்***
***சித்தம் பரத்தில் திருநடத் தோரே.***

சித்தம் புறத்தே செல்லாது மாறுபட்டுச் சிவமாகி, வீடுபேற்றை ஆராய்ந்தடைந்த பிரணவோபாசகர் சிவத்தோடு கூடிய முத்தர்களாவார்கள், அவர் பஞ்சேந்திரியங்களின் தொடர்பில்லா தவர்களாகையால் அகத் தூய்மை பெறலாம், அவர்கள் அறிவாகாயத்தில் தத்துவங்களை விட்டுச் சிவத்துடன் பொருந்தி நிற்பர்.

***653.*** ***ஒத்தஇவ் வொன்பது வாயுவும் ஒத்தன***
***ஒத்தஇவ் வொன்பதின் மிக்க தனஞ்செயன்***
***ஒத்தஇவ் வொன்பதில் ஒக்க இருந்திட***
***ஒத்த வுடலும் உயிரும் இருந்ததே.***

தம்முள்மிகாமலும் குறையாமலும் ஒன்பது வாயுக்களும் ஒத்து இயங்குவன, இவ்வொன்பதல்லாத பத்தாவதாக உள்ள தனஞ்செயன் என்னும் வாயு, ஒத்து இயங்கும் இவ்வொன்பதிலும் கூடியிருக்கவே, உடலோடு உயிரும் நீங்காதிருக்கும்.

***654.*** ***இருக்குந் தனஞ்செயன் ஒன்பது காலில்***
***இருக்கும் இருநூற் றிருபத்து மூன்றாய்***
***இருக்கு முடலி லிருந்தில வாகில்***
***இருக்கும் உடலது வீங்கி வெடித்ததே.***

தனஞ்செயன் என்னும் வாயு ஏனைய வாயுக்கள் இயங்கும் நாடிகளிலும் பொருந்தியிருக்கும், அஃது இருநூற்று இருபத்து மூன்றாவது புவனமாகிய அநந்தை என்ற மண்டலத்தில் பொருந்தியிருக்கும், இந்தக் காற்று பொருந்தியில்லாவிடில், இவ்வுடல் வீங்கி வெடித்துப்போகும்.

***655.*** ***வீங்குங் கழலை சிரங்கொடு குட்டமும்***
***வீங்கும் வியாதிகள் சோகை பலவதாய்***
***வீங்கிய வாதமுங் கூனு முடமதாய்***
***வீங்கு வியாதிகள் கண்ணில் மருவியே.***

வீங்கும் வயிற்றுக்கட்டி, சிரங்கு, குட்டம், வீக்க வியாதிகள் சோகை, காலில் வாதம் கூன் முடம், கண்ணில் பொருந்தி வீங்கும் வியாதிகள் பலவும் தனஞ்செயன் திரிபால் உண்டாவன.

***656.*** ***கண்ணில் வியாதி யுரோகந் தனஞ்செயன்***
***கண்ணிலிவ் வாணிகள் காச மவனல்லன்***
***கண்ணினிற் கூர்மன் கலந்தில னாதலாற்***
***கண்ணினிற் சோதி கலந்ததும் இல்லையே.***

ஆராயுமிடத்தில் தனஞ்செயன் என்னும் வாயு திரிபு அடையின் வியாதியாம், கண்களில் உண்டாகும் ஆணிகள், காசம் முதலிய நோய்கள் தனஞ்செயன் திரிபால் வருவன அல்ல, கண்ணினிடம் கூர்மன் என்ற வாயு பொருந்தாவிடில், கண்ணில் நோய் உண்டாகி ஒளியும் இல்லையாம்.

***657.*** ***நாடியின் ஓசை நயனம் இருதயம்***
***தூடி யளவுஞ் சுடர்விடு சோதியைத்***
***தேவருள் ஈசன் திருமால் பிரமனும்***
***ஓவற நின்றங் குணர்ந்திருந் தாரே.***

கண்கள் இருதயம் ஆகிய இவற்றில் நாடியின் ஓசையுள்ளது, சிறு துடியால் அமையும் ஒலி உண்டாக்குகின்ற சுடருடைய சோதியை, தேவர்கள் தலைவர்களாகிய உருத்திரன், விஷ்ணு, பிரமனும், இடைவிடாது அங்குப் பொருந்தி உணர்ந்திருந்தனர்.

*658. ஒன்பது வாசல் உடையதோர் பிண்டத்துள்*
*ஒன்பது நாடி யுடைய தோரோரிடம்*
*ஒன்பது நாடி ஒடுங்கவல் லார்கட்(கு)*
*ஒன்பது வாசல் உலைநல மாமே.*

கண் முதலிய ஒன்பது துவாரங்களையுடைய உடம்பில், இடை முதலிய ஒன்பது நாடிகள் ஒடுங்குவதற்குரிய சுழுமுனையாகிய இடம் ஒன்றுள்ளது, அவ்விடத்தில் அவை ஒடுங்கியிருக்கத் தவம் செய்யவல்லார்க்கு, ஒன்பது வாயில்களையுடைய உலைக்களமாகிய உடல், நன்மை எய்தும்.

*659. ஓங்கிய அங்கிக்கீழ் ஒண்சுழு முனைச்செல்ல*
*வாங்கி இரவி மதிவழி ஓடிடத்*
*தாங்கி உலகங்கள் ஏழுந் தரித்திட*
*ஆங்கது சொன்னோம் அருவழி யோர்க்கே.*

சிறந்த குண்டலினியாகிய அங்கியின் கீழே சுழுமுனை நாடியைச் செல்லச் செய்து, வாங்கிச் சூரிய கலையில் இயங்கும் பிராணனைச் சந்திரகலையில் ஓடும்படி செய்து, ஏழுலகங்களையும் தாங்கிட, யோக நெறி நிற்போர்க்குச் சொன்னோம்.

*660. தலைப்பட்ட வாறண்ணல் தையலை நாடி*
*வலையப்பட்ட பாசத்து வன்பிணை மான்போல்*
*துலைப்பட்ட நாடியைத் தூவழி செய்தால்*
*விலைக்குண்ண வைத்ததோர் வித்தது வாமே.*

பிரமரந்திரத்தால் விளங்கும் சிவசத்தியை நாடி, வலையில் அகப்பட்டு எங்கும் செல்லாது நிற்கும் மானைப் போல, சந்திரகலை சூரிய கலையில் செல்லாது பிராணனைச் சுழுமுனையில் நிறுத்தினால், விலைக்கும் உண்ணுவதற்கும் சேமித்து வைத்த விந்துப் போலப் பயனாகும்.

*661. ஓடிச்சென் றங்கே ஒருபொருள் கண்டவர்*
*நாடியி னுள்ளாக நாதம் எழுப்புவர்*
*தேடிச்சென் றங்கே தேனை முகந்துண்டு*
*பாடியுள் நின்ற பகைவரைக் கட்டுமே.*

மூலாதாரத்திலிருந்து சகஸ்ரதளத்தை விரைந்து அடைந்து சிவமாகிய ஒரு பொருளைத் தரிசித்தோர், அங்குள்ள நாடியினுள்ளே நாதத்தை வெளிப்படுத்துவர், மேலும் ஆராய்ந்து அங்கே உண்டாகின்ற அமுதத்தையும் பருகி, உடலாகிய பாசறையிலுள்ள காமாதி அறு பகைவர்களைச் சிறைப்படுவத்துவர்.

*662. கட்டிட்ட தாமரை ஞானத்தில் ஒன்பது*
*மட்டிட்ட கன்னியர் மாதுடன் சேர்ந்தனர்*
*கட்டிட்டு நின்று களங்கனி யூடுபோய்*
*பொட்டிட்டு நின்று பூரண மானதே.*

சகஸ்ரதளத்தோடு பிணிக்கப்பட்ட சுழுமுனை நாடியில், சீவர்களை உலகமுகப்படுத்திக் கொண்டிருக்கவாமை முதலான ஒன்பது சத்திகள் சீவர்கள் பக்குவப்பட்ட பின்னர்த் தம் செயலற்றுப் பராசத்தியுடன் பொருந்தி அமைந்தனர், அப்போது மூலாதாரத்தில் செயற்படுத்திக் கொண்டிருந்த குண்டலினி தொண்டைச் சக்கரத்தின் வழியாகச் சென்று, ஆஞ்ஞைச் சக்கரத்தை அடைந்து பூரண சத்தியாக விளங்கியது.

*663. பூரண சத்தி எழுமுன் றறையாக*
*ஏரணி கன்னியா எழுநூற்றஞ் சாயினர்*
*நாரணன் நான்முக னாதிய ஐவர்க்குங்*
*காரண மாகிக் கலந்து விரிந்ததே.*

பராசத்தியே ஏழு கன்னிகளாக இச்சை ஞானம் கிரியையாகிய பேதத்தால் இருபத்தொன்றாக, அழகு மிக்க அக்கன்னிகள் ஐம்பெருந்தொழிலுக்கு நூற்றைந்து கன்னிகளாயினர், நாராயணன், பிரமன், உருத்திரன், மகேசுவரன், சதாசிவனாகிய ஐவருக்கும், காரணமாகி அவர்களோடு கலந்து விரிந்து நின்றனள்.

*664. விரிந்து குவிந்து விளைந்தஇம் மங்கை*
*கரந்துள் எழுந்து கரந்தங் கிருக்கிற்*
*பரந்து குவிந்தது பார்முதற் பூதம்*
*இரைந்தெழு வாயு விடத்தினில் ஓங்கே.*

இவ்வாறாக விரிந்து பின்னர் ஒடுங்கிப் பலவகைப் போகங்களையும் விளையச் செய்த இப்பராசத்தி, மறைந்து சிவத்தினுள் சிறந்து தோன்றிப் பின் ஒடுங்கியிருப்பின், பூமி முதலிய பூதங்களும் பரந்து பின் ஒடுங்கிவிடும். ஆதலால் நீ மேலெழுகின்ற நாதத்தில் ஓங்கி விளங்குவாயாக.

*665. இடையொடு பிங்கலை என்னும் இரண்டு*
*மடைபடு வாயுவு மாறியே நிற்குந்*
*தடையவை யாறேழுந் தண்சுட ருள்ளே*
*மிடைவளர் மின்கொடி தன்னில் ஒடுங்கே.*

நாதத்தில் ஒடுங்கியவர்க்கு இடைபிங்கலை அடைபட்டுச் சுழுமுனை திறக்கும், சுவாசம் அவர்க்கு மெத்தென இயங்கும், ஆறாதாரங்களும் ஏழு சத்திகளும் நீங்கிச் சந்திரமண்டலத்தில், புருவ நடுவில் விந்துத் தானத்தில் நீ ஒடுங்குவாயாக.

*666. ஒடுங்கி ஒடுங்கி யுணர்ந்தங் கிருக்கில்*
*அடங்கி அடங்கிடும் வாயு வதனுள்*
*மடங்கி மடங்கிடு மன்னுயி ருள்ளே*
*நடங்கொண்ட கூத்தனும் நாடுகின் றானே.*

மனம் ஒருமைப்பட்டுப் புருவ நடுவில் இருப்பின், பிராணன் அப்போது சுட்டுப்பட்டு நின்றுவிடும், புறநோக்கமின்றி அகமுகமாக நோக்கும் உயிரினுள்ளே, நடனம் புரியப் பெருமானும் தன்னை அறியச் செய்வான்.

*667. நாடியின் உள்ளே நாதத் தொனியுடன்*
*தேடி யுடன்சென்றத் திருவினைக் கைக்கொண்டு*
*பாடியுள் நின்ற பகைவரைக் கட்டிடு*
*மாடில் ஒருகை மணிவிளக் கானதே.*

சுழுமுனை பாயும் இடத்தில் விளங்கும் நாத ஒலியுடன், சென்று அங்கு நிலைபெற்றுள்ள சிவசத்தியைப் பொருந்தி, பாசறையிலுள்ள இருளாகிய பகைவரைக் கட்டுகின்ற, பெருமை பொருந்திய சுழுமுனையே தூண்டா விளக்காயிற்று.

*668. அணிமாதி சித்திக ளானவை கூறில்*
*அணுவில் அணுவின் பெருமையின் நேர்மை*
*இணுகாத வேகார் பரகாய மேவல்*
*அணுவத் தனையெங்குந் தானாத லென்றெட்டே.*

அணிமா முதலான சித்திகளைச் சொல்லுமிடத்து, அணுவில் அணுவாதலும், பெரியதில் பெரிதாதலும், அசைக்க இயலாத கனமுடையதாலும், புகைபோல இலேசாதலும், மேலுள்ள ஆகாயத்தைத் தொடுதலும், எல்லாப் பூதங்களிலும் வியாபித்து எழுதலும், உயிர்கட்கெல்லாம் கருத்தாவாதலும், எல்லாவற்றையும் வசியம் செய்து எங்கும் தானாக இருந்தலும் ஆகிய எட்டாகும்.

*669. எட்டா கியசித்தி யோரெட்டி யோகத்தாற்*
*கிட்டாப் பிராணனே செய்தாற் கிடைத்திடும்*
*ஒட்டா நடுநாடி மூலந்த னல்பானு*
*விட்டான் மதியுண்ண வும்வரு மேலேத.*

அட்டமா சித்திகளும் அட்டாங்க யோகத்தால், அடக்கி ஆள முடியாத பிராண வாயுவை அடக்கியாண்டால் அடையப்பெறும், மூலாதாரத்திலுள்ள குண்டலினியானது சுழுமுனை நாடி வழியாகச் சென்று அக்கினி மண்டலம் சூரிய மண்டலம் ஆகியவற்றைக் கடந்தால், மேலுள்ள சந்திர மண்டல அமுதம் பசிக்கக்கூடும்.

*670. சித்திக ளெட்டன்றிச் சேரெட்டி யோகத்தாற்*
*புத்திக ளானவை எல்லாம் புலப்படுஞ்*
*சித்திகள் எண்சித்தி தானாந் திரிபுரைச்*
*சத்தி அருள்தரத் தானுன வாகுமே.*

பயிலப்பெறுகின்ற அட்டாங்க யோகத்தால் முற்கூறப்பட்ட அட்டமாசித்திகளான்றி, ஞானங்களாக உள்ளவை எல்லாம் வெளிப்படும்,எண் வகைச் சித்திகளும் தானேயாகிய திரிபுரைச்சத்தி, கருணையின் தரத்தால் சித்தியும் புத்தியும் உண்டாம்.

## அணிமா

*671. எட்டிவை தன்னோ டெழிற்பரங் கைகூடப்*
*பட்டவர் சித்தர் பரலோகஞ் சேர்தலால்*
*இட்டம துள்ளே இருக்கல்பர காட்சி*
*எட்டு வரப்பு மிடந்தானில் றெட்டுமே.*

இந்த எட்டுச் சித்திகளுடன் எல்லாம் வல்ல பரஞானமுங் கைவரப் பெற்றவர்களே சித்தராவர், இவர்கள் சிவலோகத்தை அடைதலால், இவர்கள் இஷ்டப் பொருளான சிவத்தைக் கண்டு அழுந்திருப்பார்கள், எட்டினை வரம்பாகவுடைய சித்திகள் இவர்களிடம் தாமே வந்தடையும்.

*672. மந்தர மேறு மதிபானு வைமாற்றிக்*
*கந்தாய்க் குழியிற் கசடற வல்லார்க்குத்*
*தந்தின்றி நற்காமிய லோகஞ் சார்வாகும்*
*அந்த வுலகம் அணிமாதி யாமே.*

பலை என்கிற சிரசில் சந்திர சூரிய கலைகளை மாற்றி, அடித்த முளை போலச் சுழுமுனையையாக்கி விந்து (சுக்கிலம்) நீக்கமின்றி இருக்க வல்லார்க்கு, நரம்பின்றிய பிரணவ தேகம் பெற்று விரும்பிய நல்ல உலகத்தை அடைவர், அவ்வுலகம் அணிமாதி சித்திகளை அளிக்க வல்லதாம்.

*673. முடிந்திட்டு வைத்து முயங்கிலோ ராண்டில்*
*அணிந்த அணிமாலை தானாம் இவனுந்*
*தணிந்தவப் பஞ்சினுந் தானொய்ய தாகி*
*மெலிந்தங் கிருந்திடும் வெல்லவொண் ணாதே.*

விந்து நீக்கமின்றிச் சேமித்து வைத்து ஓர் ஆண்டு யோக முயற்சியில் ஈடுபட்டால், நூல்களால் புகழ்ந்து கூறப்பட்ட அணிமா சித்தி கைவசமாகும், கைவரப்பெற்ற சித்தனும் மெலிந்த நுட்பமான பஞ்சைக் காட்டிலும் நுண்மையாய், மெலிந்து இருப்பான், அவனை வெல்ல முடியாது.

## இலகிமா

*674. ஆகின்ற வத்தனி நாயகி தன்னுடன்*
*போகின்ற தத்துவம் எங்கும் புகலதாய்ச்*
*சாகின்ற காலங்கள் தன்வழி நின்றிடின்*
*மாய்கின்ற ஐயாண்டின் மாலகு வாகுமே.*

ஆக்கத்தை அளிக்கின்ற பராசத்தியுடன், மூலாதாரத்தினின்றும் மேலே தான் செல்லுகின்ற எல்லாத் தத்துவங்களிலும் அச்சத்தியே ஆதாரமாய், செல்ல வேண்டிய காலங்கள் தன் வழிப்பட்டு நிற்பின், செல்லுகின்ற ஐந்து ஆண்டுகளில் மேன்மையான இலகிமா சித்திக்கும்.

*675. மாலகு வாகிய மாயனைக் கண்டபின்*
*தானொளி யாகித் தழைத்தங் கிருந்திடும்*
*பாலொளி யாகிப் பரந்தெங்கு நின்றது*
*மேலொளி யாகிய மெய்ப்பொருள் காணுமே.*

இலகிமா சித்தி பெற்று அழகிய தலைவனைத் தரிசித்த பிறகு, தான் ஒளியாய் விளங்கி அந்தப் பரஞ்சோதியில் திளைத்திருப்பான், இவ்வண்ணம் பால்போன்ற ஒளிப்பொருளாய் எங்கும் பரந்துநின்ற ஆன்மா, எல்லாவற்றுக்கும் மேலாகிய ஒளிப்பொருளான சிவபரம்பொருளைத் தரிசிக்கும்.

## மகிமா

*676. மெய்ப்பொருள் சொல்லிய மெல்லிய லாளுடன்*
*தத்பொரு ளாகிய தத்துவங் கூடிடக்*
*கைப்பொரு ளாகக் கலந்திடு மோராண்டின்*
*மைப்பொரு ளாகு மகிமாவ தாகுமே.*

உண்மை ஞானத்தை உணர்த்தியருளிய அருட்சத்தியுடன், "தத்" என்று குறிக்கப்பெடும் சிவம் கூட, மறைந்த பொருளான மகிமாவானது, ஒரு வருடத்தில் உள்ளங்கையிலுள்ள பொருள் போலக் கலந்திடும்.

*677. ஆகின்ற காலொளி யாவது கண்டபின்*
*போகின்ற காலங்கள் போவது மில்லையாம்*
*மேனின்ற காலம் வெளியுற நின்றபின்*
*தானின்ற காலங்கள் தன்வழி யாகுமே.*

இடைபிங்கலை என்னும் இரு நாடிகளைப் பொருந்தி அமையும் சுழுமுனை, சிரசின் மேலே சென்று விளங்கும் போதுள்ள ஒளியைக் கண்டபின், அழிகின்ற ஆயுட்காலங்கள் அழிவதும் இல்லையாகும், இனி வரக்கூடிய ஆயுட்காலத்துக்கு வெளியே தான் நின்றபின், எஞ்சியுள்ள கால தத்துவம் அனைத்தும் தன் வழியாம்.

*678. தன்வழி யாகத் தழைத்திடு ஞானமுந்
தன்வழி யாகத் தழைத்திடு வையகந்
தன்வழி யாகத் தழைத்த பொருளெல்லாந்
தன்வழி தன்னரு ளாகிநின் றானே.*

மகிமா சித்தி பெற்றவன் வாயிலாக ஞானம் செழித்தோங்கும், அவன் வாயிலாக உலகம் துயர் தீர்ந்து செழுமை பெறும், அங்ஙனம் தன் வாயிலாகச் செழுமையுற்ற பொருளெல்லாம், தன் வசப்பட்டு நிற்கத் தான் சிவனருள் வசப்பட்டுத் நின்றான்.

## பிராத்தி

*679. நின்றன தத்துவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப் படையவை யெல்லாங்
கொண்டவை யோராண்டு கூட இருந்திடில்
விண்டது வேநல்ல பிராத்தியர் தாகுமே.*

பராசத்தியுடன், தூலமாய்க் காணப்பட்ட உலகப் பொருள்களெல்லாம் சூக்குமமாய் ஒடுங்கி நின்றன, அத்தகைய சூக்குமமான ஒளிப் பொருள்களைக் கண்டு ஓராண்டு தாரணை செய்யின், தாரணையில் வெளிப்பட்ட சித்தியே வேண்டுவன அடையச் செய்யும்.

## கரிமா

*680. ஆகின்ற மின்னொளி யாவது கண்டபின்
பாகின்ற பூவிற் பரப்பவை காணலா
மேகின்ற காலம் வெளியுற நின்றது
போகின்ற காலங்கள் போவது மில்லையே.*

அத்தகைய மின்னொளியைக் கண்ட பின்னர், விரிந்த சகஸ்ரதளக் கமலத்தில் உலகப் பொருளின் விரிவைக் காணலாம், அப்போது மேவுகின்ற கால தத்துவம் புறம்பாக நின்றது, கழிகின்ற காலங்கள் அதனால் கழிய மாட்டா.

*681. போவதொன் றில்லை வருவது தானில்லை
சாவதொன் றில்லை தழைப்பது தானில்லை
தாமத மில்லை தமரகத் தின்னொளி
யாவது மில்லை யறிந்துகொள் வார்க்கே.*

மின்னொளி கண்டவர் பிற இடத்துக்குச் செல்ல வேண்டியதில்லை, போவதின்மையால் வருவதும் இல்லை, இறப்பதும் இல்லை, இறப்பின்மையால் பிறப்பும் இல்லையாகும், தாமதமாகி முக்குணங்கள் இல்லை, உண்மை உணர்வார்க்குப் பிரமரந்திரத்தின் உட்டொளையாகிய சுழுமுனையில் விளங்கும் பல்வேறு பட்ட ஒளிகளும் இல்லையாகும்.

*682. அறிந்த பராசத்தி யுள்ளே அமரில்
பறிந்தது பூதப் படையவை யெல்லாங்
குவிந்தவை யோராண்டு கூட இருக்கில்
விரிந்த பரகாய மேவலு மாமே.*

அத்தகைய பராசத்தியுடன் ஆன்மா பொருந்தியிருந்தால், தத்துவக் கூட்டங்களை அமைக்கும் பூதப் படைகளெல்லாம் நீங்கிவிடும், மனம் குவிந்து பராசத்தியுடன் ஓராண்டு இருந்தால், விரிந்த பரகாயப் பிரவேசம் செய்தலுமாம்.

## பிராகாமியம்

*683. ஆன விளக்கொளி யாவ தறிகிலர்
மூல விளக்கொளி முன்னே யுடையவர்
கான விளக்கொளி கண்டுகொள் வார்கட்கு
மேலை விளக்கொளி வீடெளி தாநின்றே.*

ஆன்மாவிடம் தன்னை விளக்கிக் காட்டும் ஒளி அடைந்திருத்தலை அறிய மாட்டார், அவர்கள் மூலாதாரத்திலே மூலக்கனலை உடையவர்கள், அதனை எங்கும் விளங்கும் ஒலி ஒளியாகத் தரிசித்திருப்பார்க்கு, சிரசுக்கு மேல் விளங்கும் சிவ ஒளியும் அதனால் வீடும் எளிதாம்.

## ஈசத்துவம்

684. *நின்ற சதாசிவ நாயகி தன்னுடன்*
*கண்டன பூதப் படையவை எல்லாங்*
*கொண்டவை யோராண்டு கூடி யிருந்திடிற்*
*ஆகின்ற சந்திரன் தானவ னாமே.*

சீவர்களிடம் என்றும் நிலைபெற்றுள்ள சிவசத்தியுடன், சூக்கும திருஷ்டிக்குப் புலப்படும் ஒளி அணுக்கள் எல்லாவற்றையும், சிரசுக்கு மேலுள்ள விந்து மண்டலத்தில் வெவ்வேறு வகை ஒளி பாய்வதை ஓராண்டு சய்யம் செய்வாயானால், பழமையான உடலில் பொருந்திய சதாசிவ தத்துவம் அமையும்.

685. *ஆகின்ற சந்திரன் தன்னொளி யாயவன்*
*ஆகின்ற சந்திரன் தட்பமு மாயிடும்*
*ஆகின்ற சந்திரன் தன்கலை கூடிடில்*
*ஆகின்ற சந்திரன் தானவ னாமே.*

வளர்கின்ற சந்திரனது ஒளியை நெற்றி நடுவில் விளங்கப் பெறுபவன், அச்சந்திரனைப் போன்று தண்ணளியுடையவனாவான், வளர்கின்ற சந்திர கலை பூரணத்துவம் பெற்றிடில், சந்திர கலை விளங்கப் பெற்ற சீவன் சதாசிவ நிலை பெறுவான்.

686. *தானே படைத்திட வல்லவ னாயிடுந்*
*தானே யளித்திட வல்லவ னாயிடுந்*
*தானே சங்காரத் தலைவனு மாயிடுந்*
*தானே யிவனென்னுந் தன்மைய னாமே.*

ஈசத்துவம் பெற்றவர் படைத்தல் தொழிலைச் செய்ய வல்லவராவர், அவரே காத்தலைச் செய்பவராவர், அவரே அழிந்தலையும் செய்யவல்லவர், அவரே தமக்குத் தாமே ஒப்பாகுந் தன்மையுடையவராவர்.

687. *தண்மைய தாகத் தழைத்த கலையினுள்*
*பன்மைய தாகப் பரந்தஜம் பூதத்தை*
*வன்மைய தாக மறித்திடில் ஓராண்டின்*
*மென்மைய தாகிய மெய்ப்பொருள் காணுமே.*

குளிர்ந்த கிரணங்களுடன் கூடிய சந்திர கலையில் விளங்கும் ஒளியில், பலவாறாகக் காணும் பஞ்சபூத அணுக்களை, ஓராண்டுக் காலம் வெவ்வேறாகக் காணாமல் பால் வண்ணனது நீலவொளியைக் கண்டால், மெய்ப் பொருளான மேன்மையான ஆன்மா சிரசின்மேல் ஒளியாக விளங்கும்.

## வசித்துவம்

688. *மெய்ப்பொரு ளாக விளைந்தது வேதெனின்*
*நற்பொரு ளாகிய நல்ல வசித்துவங்*
*கைப்பொரு ளாகக் கலந்தஉயிர்க் கெல்லாம்*
*தற்பொரு ளாகிய தன்மைய ளாகுமே.*

உண்மைப் பொருளாகத் தாரணை முதலிய சம்மியத்தால் உண்டாகியது எது என்றால், நல்ல பொருள் என்ற பாராட்டப்பெறும் வசீகரிக்குந் தன்மையாம், தன் விருப்பப்படி நடக்கச் செய்யும் உயிர் வருக்கத்துக்கெல்லாம், சிவமேயான தன்மையனாகச் சாதகன் ஆவான்.

689. *தன்மைய தாகத் தழைத்த பகவலன்*
*மென்மைய தாகிய மெய்ப்பொருள் கண்டிடின்*
*பொன்மைய தாகப் புலன்களும் போயிட*
*நன்மைய தாகிய நற்கொடி காணுமே.*

சிவமாந் தன்மை பெற்றுச் சிறப்புற்ற சித்தன், மகா சூக்குமமாகிய தனது ஆன்மாவை அறியின், பொன்னொளியுடன் கூடிய ஒளி உடலைப் பெற்றுப் புலன்களின் சேட்டையினின்றும் விடுபட, உலகுக்கு நன்மையைச் செய்கின்ற நல்ல சதாசிவ நாயகியைக் காண்பான்.

690. *நற்கொடி யாகிய நாயகி தன்னுடன்*
*அக்கொடி யாகம் அறிந்திடில் ஓராண்டு*
*பொற்கொடி யாகிய புவனங்கள் போய்வருங்*
*கற்கொடி யாகிய காமுக னாமே.*

நல்ல கொடி போன்ற நன்மையைச் செய்யும் சதாசிவ நாயகி தன்னுடன், அக்கொடி போன்ற சத்தியைத் தன்னிடத்தில் நிலை பெற்றுள்ளதாக ஓராண்டு தியானிப்பவன், பொன்னொளியாகிய புவனங்களில் நினைத்த மாத்திரத்தில் சென்று வருகின்ற, செவ்வொளி போன்ற காமேசுரனது இயல்பினை பெறுவான்.

*691.* *காமரு தத்துவ மானது வந்தபின்*
*பூமரு கந்தம் புவனம தாயிடும்*
*மாமரு வுன்னிடை மெய்த்திடு மானனாய்*
*நாமரு வும்ஒளி நாயக மானதே.*

எல்லாவற்றையும் வசீகரிக்கும் தன்மை வந்த பின்னர், சகஸ்ரதளத்தில் வாசனையாகத் தங்கியுள்ள தன்மாத்திரை உருவமான ஒளிகள் அதனதன் தன்மைக்கேற்பப் புவனங்களாய் விரிந்து நிற்கும், மகத்து போன்ற பெருமையுடையாய்! அருட்சத்தியானது வசித்துவம் கைவரப் பெற்றவரிடம் விளங்கும், சத்தியோடு பேதமின்றி வாக்கு ரூபமான ஒளித்தன்மை பெற்று நாயகன் என ஆகும்.

*692.* *நாயக மாகிய நல்லொளி கண்டபின்*
*தாயக மாகத் தழைத்தங் கிருந்திடும்*
*போயக மான புவனங்கள் கண்டபின்*
*பேயக மாகிய பேரொளி காணுமே.*

எல்லாவற்றுக்கும் தலைமையா சிவச்சோதியை தரிசித்த பின்னர், அவ்வொளியை தாய் வீடாகக் கொண்டு மகிழ்ச்சியுடன் அங்கு வீற்றிருப்பான், எல்லாப் புவனங்களிலும் சென்று கண்டபின், உடலுள் பேய்கள் போன்ற காமக்குரோதாதிகள் வாழும் ஏனைய புவனங்களுக்கா சித்தி பெற்றவன் செல்லுவான்? செல்ல விரும்ப மாட்டான்.

*693.* *பேரொளி யாகிய பெரியஅவ் வெட்டையும்*
*பாரொளி யாகப் பதைப்பறக் கண்டவன்*
*தாரொளி யாகத் தரணி முழுதுமாம்*
*ஓரொளி யாகிய காலொளி காணுமே.*

பேரொளிப் பிழம்பான இறைவனை, உலக ஒளியைக் காணுதல் போல நடுக்கமின்றிக் கண்டவன், ஆன்ம ஒளியுடன் பூ மண்டலம் முழுவதும், விசுவ வியாபியாய் ஒரே ஒளிமயமான பிராண ஒளியைக் காணுவான்.

*694.* *காலோ டுயிருங் கலக்கும் வகைசொல்லிற்*
*காலது அக்கொடி நாயகி தன்னுடன்*
*காலது ஐஞ்ஞூற் றொருபத்து மூன்றையும்*
*காலது வேண்டிக் கொண்டஇவ் வாறே.*

சுழுமுனை நாடியில் உயிர் எவ்வாறு கலந்துள்ளது என்பதைச் சொல்லின், சுழுமுனையில் மின்னொளி போன்று விளங்கும் பராசத்தியின் ஒளியுடனாகும், சுழுமுனையில் தொடர்புள்ள ஐந்நூற்றுப் பதின்மூன்றையும், சுழுமுனையில் வேண்டி உயிர் கலந்திருக்கும் தன்மை இதுவாம்.

*695.* *ஆறது வாகும் அமிர்தத் தலையினுள்*
*ஆறது ஆயிர முந்நூற் றொடைஞ்சுள*
*ஆறது வாயிர மாகு மருவழி*
*ஆறது வாசு வளர்ப்ப திரண்டே.*

அமிர்தத்தைப் பெருக்குகின்ற சிரசினுள் நிரோதினி கலையுள்ளது, அமுதத்தைப் பெருக்கி மாற்றத்தைச் செய்வதற்கு வழியாக ஆயிரத்து முந்நூற்றைந்து நரம்புத் தொகுதிகள் உள்ளன, மேல் நிலையிலுள்ள சகஸ்தரதளத்துக்குச் செல்ல இது வழியாகவுள்ள இதனை வழியாகக் கொண்டு உயிரை வளர்ப்பது சிவசத்தியாகிய இரண்டுமாம்.

*696.* *இரண்டினின் மேலே சதாசிவ நாயகி*
*இரண்டது கால்கொண் டெழுவகை சொல்லில்*
*இரண்டது ஆயிரம் ஐம்பதோ டொன்றாய்த்*
*திரண்டது காலம் எடுத்ததும் அஞ்சே.*

சிவதத்துவத்தில் சுத்த வித்தை மகேசுர தத்துவத்துக்கு மேல் சாதாக்கியத்தில் விளங்கும் மனோன்மணியாகிய சதாசிவ நாயகி, இடைபிங்கலையாகிய இரு நாடிகளின் மேல் சிரசுக்குச் சென்று விளங்குவதைச் சொல்லின், இரண்டு நாடிகளும் சகஸ்ரதளத்தை அடைந்து விரியுமுன் ஐம்பத்தோர் அட்சரங்களால் உணர்த்தப்பெறும் ஆறு ஆதாரங்களைக் கடந்ததாய்த் திரண்டுள்ளது, அந்நிலையில் சாதகனின் காலத்தைக் கடக்கச் செய்வதும் ஐம்முகங்களோடு கூடிய சதாசிவனின் நாயகியாகும்.

*697. அஞ்சுடன் அஞ்சு முகமுள நாயகி*
*அஞ்சுடன் அஞ்சது வாயுத மாவது*
*அஞ்சது வன்றி இரண்டது வாயிரம்*
*அஞ்சது காலம் எடுத்துளும் ஒன்றே.*

பத்துத் திசைகளும் பத்து முகங்களாகவுடைய சதாசிவநாயகிக்கு, பிராணன் முதலிய பத்து வாயுக்களும் பத்து ஆயுதங்களாம், ஐம்முகச் சத்திக்கு அவையன்றிக் கவிழ்ந்த சகஸ்ரதளம் நிமிர்ந்த சகஸ்ரதளமாகிய இரண்டும் ஆயுதங்களாகும், அச்சத்தி உருவமற்ற நிலையில் தசவாயுக்களையும் திக்குகளையும் கடந்த வெளியாகவும் விளங்கும்.

*698. ஒன்றது வாகிய தத்துவ நாயகி*
*ஒன்றது கால்கொண் டூர்வகைசொல்லிடில்*
*ஒன்றது வென்றிகொள் ஆயிரம் ஆயிரம்*
*ஒன்றது காலம் எடுத்துளு முன்னே.*

அகண்ட வியாபகமான ஏக பராசத்தி,சுழுமுனை நாடியில் பொருந்தி ஏறும் வகை சொல்லின், கவிழ்ந்த சகஸ்ரதளத்தை நிமிர்ந்த சகஸ்ரதளமாக மாற்றி அமைத்து, காலத்தைக் கடக்கச் செய்ய உதவும் என்பதை நினைவு கூர்வாயாக.

*699. முன்னெழும் அக்கலை நாயகி தன்னுடன்*
*முன்னுறு வாயு முடிவகை சொல்லிடின்*
*முன்னுறும் ஐம்பத் தொன்றுடன் அஞ்சுமாய*
*முன்னுறு வாயு முடிவகை யாமே.*

சிரசின் முன்பக்கத்தில் விளங்கும் ஊர்த்துவ சகஸ்ரதளத்தில் அமர்ந்துள்ள பரையுடன், முன்னோக்கிப் பாயும் வாயு முடியும் வகையைச் சொல்லப்போனால், முன்னாக விளங்கிய ஐம்பத் தோரட்சரங்களையுடைய ஆறாதாரங்களை இயக்கிக் கொண்டு இருந்த ஐம்முகச்சத்தி பராசத்தியாக மாறினபோது, முன்னர் விளங்கிய வாயு அடங்கும் வகையாகும்.

*700. ஆய்வரும் அத்தனி நாயகி தன்னுடன்*
*ஆய்வரு வாயு அளப்பது சொல்லிடில்*
*ஆய்வரும் ஐஞ்னூற்று முப்பதொ டொன்பது*
*மாய்வரு வாயு வளப்புள் ளிருந்ததே.*

ஆராய்ச்சியினால் அடைய முடியாத ஒப்பற்ற பரையுடன், ஆராய்வதற்குரிய வாயுவின் அளவை அறிந்து சொல்லப்போனால், ஆகி வருகின்ற வாயு ஒரு நாளைக்கு ஐந்நூற்று முப்பத்தொன்பதாகக் குறைந்து, வளமான பராசத்தியினிடம் இலயமடையும்.

*701. இருநிதி யாகிய எந்தை யிடத்து*
*இருநிதி வாயு இயங்கு நெறியில்*
*இருநூற்று முப்பத்து மூன்றுடன் அஞ்சாய்*
*இருநிதி வாயு இயங்கும் எழுத்தே.*

பெருஞ்செல்வமாகிய ஒளிமண்டலம் தாண்டி விளங்கும் சிவனிடத்து, செல்வமாகவுள்ள மூச்சுக்காற்று இயங்கும் தன்மையில், இருநூற்று முப்பத்தெட்டாகக் குறைந்து, அது பிரணவத்தில் கடக்கும்.

*702. எழுகின்ற சோதியுள் நாயகி தன்பால்*
*எழுகின்ற வாயு இடமது சொல்லில்*
*எழுநூற் றிருபத் தொன்பா னதுநாலாய்*
*எழுந்துடன் அங்கி இருந்ததிவ் வாறே.*

மூலாதாரத்திலிருந்து எழுகின்ற சோதியுள் விளங்கும் பராசத்தியினிடம், சுழுமுனை வழிப் பாய்கின்ற மூச்சுக்காற்றின் இடத்தைச் சொன்னால், எழுநூற்று இருபத்து ஒன்பது நாடிகளிலும் கலந்துள்ளது, நான்கு இதழ்களையுடைய மூலாதாரத்திலுள்ள அக்கினியே இவ்வாறு சோதியாய் வெளிப்படுகிறது.

*703. ஆறது கால்கொண் டிரதம் விளைத்திடும்*
*ஏழது கால்கொண்ட டிரட்டி இறக்கிட*
*எட்டது கால்கொண் டிடவகை யொத்தபின்*
*ஒன்பது மாநிலம் ஒத்தது வாயுவே.*

ஆறாவது கலையாகிய நிரோதினி சத்தியை நெற்றியின் மேற்பாகத்தில் தியானித்தால் புகை போன்ற நிறம் விளையத் தொடங்கும், ஏழாவது கலையாகிய நாதகலை ஒளியை வியக்தமாகத் தெரிவித்துச் சந்திர கலையைப் பெருக்கிச் சாதகனை இரு மடங்க ஆனந்தத்தில் அழுந்தும்படி செய்து, எட்டாவது இடமாகிய நாதாந்தத்தில் மனம் எண்ணுவதைவிட்டு உணர்தல் என்ற நிலையில் ஒன்றியபோது, ஒன்பதாவது நிலையாகிய சத்தி, கலையில் உடலை இயக்கி வந்த பிராண வாயு அடங்கியது.

*704. சந்திரன் சூரியன் தற்பரன் தாணுவிற்*
*சந்திரன் தானுந் தலைப்படுந் தன்மையைச்*
*சந்தி யிலேகண்டு தானாஞ் சகமுகத்*
*துந்தி சமாதி யுடையொளி யோகியே.*

சந்திரன் நூரியன் ஆன்மாவாகிய மூன்றும் விளங்கும் நிமிர்ந்த சகஸ்ரதளத்தில், சந்திரகலை விளங்கும் இயல்பினை, உலகில் உயிருடன் வாழும்போதே சீவவொளியைச் சிவவொளியுடன் பொருத்திச் சமாதி நிலை பெற்ற யோகியே, சுழுமுனை உச்சியிலே உணர்ந்து உணர்ந்து சிவமாந் தன்மை பெறுவான்.

*705. அணங்கற்ற மாதல் அருஞ்சன நீவல்*
*வணங்குற்ற கல்விமா ஞான மிகுத்தல்*
*சிணுங்குற்ற வாயர் சித்திதூரங் கேட்டல்*
*நுணங்கற் றிரோதல்கால் வேகத்து நுந்தலே.*

*706. மரணஞ் சரைவிடல் வண்பர காயம்*
*இரணஞ் சேர்பூமி இறந்தோர்க் களித்தல்*
*அரணம் திருவுரு வாதன்மு வேழாங்*
*கரனுரு கேள்வி கணக்கறிந் தோனே.*

ஆசை அழிதல், பந்துமித்திரர்களிடமிருந்து விலகியிருத்தல், பணிவைத் தரும் சிவஞானம், பதிஞானம் வலுத்தல், சுருங்குதலையுடைய வாயினராதல், அஃதாவது பேச்சுக் குறைதல், அநுக்கிரக நிக்கிரக சத்தி பெறுதல், தூரத்தில் நடப்பவை கேட்டல், நுட்பமாய் மறைந்திருத்தல், காற்றை மேலே செலுத்துதல் (பிராண செயம் பெறுதல்).

*707. ஓதம் ஒலிக்கும் உலகை வலம்வந்து*
*பாதங்கள் நோவ நடந்தும் பயனில்லை*
*காதலில் அண்ணலைக் காண இனியவர்*
*நாதன் இருந்த நகரறி வாரே.*

கடல் சூழ்ந்த உலகத்தைச் சுற்றி வலமாக வந்து, கால் வருந்த தல யாத்திரை செய்தும் அடையும் பயன் ஒன்றும் இல்லை, அன்போடு இறைவனைக் கண்டு இன்பம் பெறுபவர், தலைவன் எங்கும் உள்ளான் என்று உணர்ந்து வழிபட்டுப் பயன் எய்துவர்.

*708. மூல முதல்வேதா மாலரன் முன்னிற்கக்*
*கோலிய ஐம்முகன் கூறப் பரவிந்து*
*காலப் பரநாதம் விந்துத் தனிநாதம்*
*பாலித்த சத்தி பரைபரன் பாதமே.*

மூலாதாரத்துக்குமேல் சுவாதிட்டானத்தில் பிரமனும் மணிபூரகத்தில் திருமாலும், அநாகதத்தில் உருத்திரனும் விளங்க, அதற்குமேல் நெற்றி முதல் சிரக வரை வியாபகமுள்ள சிவாம்சமான சதாசிவனும், சதாசிவ நிலைக்கு மேலுள்ள பரவிந்து பெருமைமிக்க பரநாதம் நாதாந்தமும், கடந்து அருள் வழங்கும் சிவசத்தியின் திருவடியாம்.

*709. ஆதார யோகத் ததிதே வொடுஞ்சென்று*
*மீதான தற்பரை மேவும் பரனொடு*
*மேதாதி ஈரெண் கலைசெல்ல மீதொளி*
*ஓதா அசிந்தமீ தானந்த யோகமே.*

ஆதாரங்களுக்குரிய பிரமனாதி அதிதேவதையோடு பொருந்திச் சென்று, மேன்மையான பரை பொருந்தும் பரனோடு, மேதை முதலாகப் பதினாறு கலைகளாகிய பிரசாத நெறியில் மேல் விளங்கும் ஒளியில், வாக்கும் மனமும் இறந்து எண்ணமற்று நிற்கின்ற நிலையே ஆனந்த யோகமாம்.

*710. மதியமும் ஞாயிறும் வந்துடன் கூடித்*
*துதிசெய் பவரவர் தொல்வா னவர்கள்*
*விதியது செய்கின்ற மெய்யடி யார்க்குப்*
*பதியது காட்டுப் பரமன்நின் றானே.*

இடைபிங்கலை இணைந்துள்ள சுழுமுனை உச்சியில், சிவனைத் துதித்து வணங்குபவர் பழமையிலேயே தேவரானவர், பிராசாத நெறியில் முறைப்படி உண்மைப் பொருளை நாடிச் செல்லும் அவ்வடியார்களுக்கு, நிலையான வீடுபேற்றை அளிக்கும் பரமனும் உடனின்று அருளுவான்.

*711. கட்டவல் லார்கள் கரந்தெங்கும் தானாவர்*
*மட்டவிழ் தாமரை யுள்ளே மணஞ்செய்து*
*பொட்டெழக் குத்திப் பொறியெழத் தண்டிட்டு*
*கட்டறி வார்க்கு நமனில்லை தானே.*

பிராணனைக் கட்டவல்லவர்கள் எங்கும் மறைந்து நின்ற எவ்விடத்திலும் விளங்க வல்லவர்கள், தேன் மிகுந்த தாமரையாகிய சுவாதிட்டனம் மூலாதாரத்தில் சேர்க்கையை உண்டுபண்ணி, பிரமரந்திரத்தில் மோதச் செய்து பொறியறிவு நீங்கிச் சுழுமுனையில் நின்று, அங்கு நடம்புரியும் சிவனை அறிந்திருப்பார்க்கு எமனில்லை.

## 12. கலை நிலை

கலை நிலை - கலை நிற்கும் நிலை, சந்திர கலை, சூரிய கலை, அக்கினி கலை ஆகியவை உடம்பில் விளங்கும் முறை இங்குக் கூறப்பெறும், குருவருளால் சந்திர சூரிய கலைகளைச் சேர்த்து அக்கினிக் கலையில் சீவன் பொருந்தி நிற்கும் நிலையும் இப்பகுதியில் காண்க. சந்திர கலை அகரம் முதல் உன்மனி வரை பதினாறாகும். அக்கினி கலையாகிய சுழுமுனையில் சீவன் பொருந்தியிருக்கும்போது பிராணன் இலயமடைந்து ஒளி மண்டலம் விளங்கும்.

மந்திர யோகத்துக்குரியது பிராசாதமாகும். இதற்கே பிரணவ நெறி என்றும் பெயர் உண்டு. இதில் கிரியை வழி என்றும், ஞான நெறி என்றும் இரு வகையுள்ளன். கிரியை வழி பற்றியவர் ஆதாரச் சக்கரங்களில் ஆதார தேவர்களை நினைத்து, ஒவ்வொர் ஆதாரமாக் கடந்து மேல் செல்வர். ஞான நெறியிலுள்ளோர் நேரே அருவ வழிபாட்டினால் உருவ மூர்த்திகளை விட்டுச் சதாசிவ நிலைக்குச் செல்வர். இது ஞானிகளின் நெறியாகும். இங்குப் பொதுமையில் விளக்கம் கூறப்பட்டுள்ளது என்பதை அறியவும்.

*712. காதல் வழிசெய்த கண்ணுதல் அண்ணலைக்*
*காதல் வழிசெய்து கண்ணுற நோக்கிடில்*
*காதல் வழிசெய்து கங்கை வழிதருங்*
*காதல் வழிசெய்து காக்கலு மாமே.*

காமத்துக்கே காரணமாய்ச் சுவாதிட்டனத்திலிருந்து வழிசெய்துகொண்டிருந்த நெற்றிக் கண்ணையுடைய பெருமானை, அன்பு செலுத்திக் கண்கள் இரண்டையும் சேர்த்து மேலே பார்த்தால், அன்பின் வழி கங்கைபோன்ற ஒளிப்பிரவாகம் பெருகும், அவ்வாறு அன்பு செய்வதால் உடம்பில் பொருந்திய உயிரை அழியாது காக்கலுமாகும்.

*713. காக்கலு மாகுங் கரணங்கள் நான்கையுங்*
*காக்கலு மாகுங் கலைபதி னாறையுங்*
*காக்கலு மாகுங் கலந்தநல் வாயுவுங்*
*காக்கலு மாகுங் கருத்துற நில்லே.*

மனம், பத்தி, சித்தம், அகங்காரமாகிய அந்தக்கரணங்கள் நான்கையும் பாச வழிச் செல்லாது பதிவழிச் செலுத்திக் காத்தலுமாகும், அந்தக்கரணங்கள் நன்மை செய்வதால் சந்திர கலை பதினாறும் வியாபகம் பெறுமாறு காக்கலாம், பாச இயக்கத்துக்குத் காரணமான மனம் சிவவொளியைப் பற்றி நின்றபோது பிராணனும் சிவவொளியில் சென்று இலயமடையும், ஆகவே உன்னுடைய கருத்தை அகண்டமான ஆகாயத்தில் பதித்து நிற்பாயாக.

*714. நிலைபெற நின்றது நேர்தரு வாயு*
*நிலைபெற நின்றது தீபமும் ஒத்துக்*
*கலைவழி நின்ற கலப்பை அறியில்*
*அலைவற் வாரும் வழியிது வாமே.*

சுழுமுனையில் செல்லும் வாயு நிலைபெற நின்றது, அது காற்றில்லாத இடத்திலுள்ள விளக்கொளி போலும் அசையாது மலைபோலும் நின்றது, சந்திர கலை பதினாறில் சிவசத்தி பொருந்தியுள்ளதை அறியில், மனம் அலையாது நிற்கும் வழி இதுவேயாகும்.

*715. புடையொன்றி நின்றிடும் பூதப் பிரானை*
*மடையொன்றி நின்றிட வாய்ந்த வழியுஞ்*
*சடையொன்றி நின்ற அச் சங்கர நாதன்*
*விடையொன்றி லேறியே வீற்றிருந் தானே.*

எங்கும் நிறைந்து நிற்கும் பூதநாயகலை, சிறு வழிகளாகிய நாடிகளில் மாறிச் செல்லாது பிராணன் நடு நாடியில் ஒன்றி நிற்க வாய்த்தபோது, கிரணங்களாகிய சடையோடு கூடிய அச்சங்கர நாதன், விந்து மண்டலமாகிய இடபத்தில் ஏறி அமர்ந்திருந்தான்.

*716. இருக்கின்ற காலங்கள் ஏதும் அறியார்*
*பெருக்கின்ற காலப் பெருமையை நோக்கி*
*ஒருக்கின்ற வாயு வொளிபெற நிற்கத்*
*தருக்கொன்றி நின்றிடுஞ் சாதக னாமே.*

சமாதியில் பொருந்தியிருக்கும் காலத்தைச் சாதகர் உணரார், இனிப் பெருக இருக்கின்ற காலத்தின் பெருமையை எதிர் நோக்கி, சுழுமுனையில் ஒன்றுபட்டிருக்கின்ற பிராணன் ஒளி பொருந்திய பரவொளியாகிய சகஸ்ரதளத்தைப் பொருந்த, செருக்கின்றி இருப்பவன் சாதகனாம்.

*717. சாதக மானஅத் தன்மையை நோக்கியே*
*மாதவ மான வழிபாடு செய்திடும்*
*போதக மாகப் புகலுறப் பாய்ச்சினால்*
*வேதக மாக விளைந்து கிடக்குமே.*

இவ்வண்ணம் சாதகமான அத்தன்மையை ஆராய்ந்து, பெரிய தவமான வழிபாட்டை நீங்கள் செய்யுங்கள், அவ்வாறு செய்து பிராணனைக் கபாலத்திலுள்ள ஆயிர இதழ்த் தாமரையினுள்ளாகப் புகச் செலுத்தினால், இரசவாதம் செய்வோர் உபயோகிக்கும் வாத குளிகை போன்று உடலில் விளைந்தள்ள குற்றங்களை அகற்றிவிடும்.

*718. கிடந்தது தானே கிளர்பயன் மூன்று*
*நடந்தது தானேஉள் நாடியுள் நோக்கிப்*
*படர்ந்தது தானே பங்கய மாகத்*
*தொடர்ந்தது தானேஅச் சோதியுள் நின்றே.*

அங்ஙனம் விளைந்து கிடந்த பயன் இம்மையின்பம், மறுமை இன்பம், வீடாகிய மூன்றாம், உள் நாடியான சுழுமுனையை நோக்கிச் சென்ற சிவனை, சகஸ்ரதளத்தில் பொருந்த, அச்சோதி மூலமாகிய சிவத்துடன் தொடர்ந்து அடங்கியதாம்.

*719. தானே எழுந்தஅத் தத்துவ நாயகி*
*ஊனே வழிசெய்தெம் உள்ளே யிருந்திடும்*
*வானோர் உலகீன்ற அம்மை மதித்திடத்*
*தேனே பருகிச் சிவாலய மாகுமே.*

இவ்வாறு தனக்கு ஓர் ஆதாரமின்றித் தான் பிறவற்றுக்கு ஆதாரமாயுள்ள பராசத்தி, இவ்வுடயில் வழி செய்துகொண்டு எமக்குள்ளாகவே இருப்பாள், தேவர் உலகையும் பெற்ற தாயாகிய பராசத்தி விரும்பி இடங்கொள்ள, இன்பத்தை உண்டாக்கும் ஒளியில் அமிழ்ந்து திளைத்த சிவயோகியின் உடம்பு சிவாலயமாகும்.

*720. திகழும் படியே செறிதரு வாயு*
*அழியும் படியை அறிகில ராரும்*
*அழியும் படியை அறிந்தபின் நந்தி*
*திகழ்கின்ற வாயுவைச் சேர்தலு மாமே.*

விளங்கும் வண்ணம் நிறைந்து நிற்கும் பிராணன், ஒடுங்கும் முறையை யாரும் அறியவில்லை, பிராணன் ஒடுங்கும் முறையை அறிந்தபின், வாயு இலயமடைந்த ஆகாய மண்டலத்தில் விளங்கலாம்.

*721. சோதனை தன்னில் துரிசறக் காணலாம்*
*நாதனும் நாயகி தன்னித் பிரியுநாள்*
*சாதன மாகுங் குருவை வழிபட்டு*
*மாதன மாக மதித்துக்கொள் வீரே.*

யான் கூறுவதைச் சோதனை செய்து உண்மையைக் குற்றமறக் காணலாம், ஒளிமயமான பிராணனாகிய சிவன் குண்டலினியை விட்டுப் பிரிந்து மேற்சென்ற போது சிவயோக சமாதி சாதகமாகும், சிவகுருவை வணங்கி, பெரிய செல்வம் கிடைத்தாற்போல அதனைப் பெற்றுப் போற்றிக் கொள்ளுங்கள்.

*722. ஈறாறு கால்கொண் டெழுந்த புரவியைப்*
*பேராமற் கட்டிப் பெரிதுண்ண வல்லீரேல்*
*நீதா யிரமும் நிலமாயி ரத்தாண்டும்*
*பேராது காயம் பிரான்நந்தி ஆணையே.*

இடைகலை பிங்கலையாகிய இரு நாடிகளில் வழியாகக் கொண்டு மேலெழுந்த பிராணனாகிய குதிரையை, சிரசின் மேலே அசையாது நிறுத்தி அமுதத்தைப் புசிக்க வல்லீரானால், நீரில் ஆயிரம் ஆண்டு நிலத்தில் ஆயிரம் ஆண்டு சமாதியிருப்பினும் உடலுக்கு அழிவில்லை, இது எம் தலைவனாகிய சிவத்தின் ஆணை ஆகும்.

*723. ஓசையில் ஏழும் ஒளியின்கண் ஐந்தும்*
*நாசியில் மூன்றும் நாவில் இரண்டுந்*
*தேசியும் தேசனும் தன்னிற் பிரியுநாள்*
*மாசறு சோதி வகுத்துவைத் தானே.*

குற்றமில்லாத சோதியாகிய சிவன், குண்டலினியும் பிராணனும் தம்மை விட்டுப் பிரியும் காலத்து, ஓசை என்ற ஆகாய பூத தன்மாத்திரையில் வெளிப்படும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், எரித்தல், சேர்த்தல் ஏழு வகைகளையும், ஒளியினிடத்து உண்டாகிற சுவை, ஒளி, நாற்றம், வெம்மை, எரித்தல், என்ற ஐந்து வகைகளையும், நாசியினிடம் பொருந்திய நாற்றம், உயிர்ப்பு, உணர்தல் என்ற மூன்றனையும், நாவின் கண்ணதாகிய உணவை எடுத்தல், சுவைத்தலாகிய இரண்டனையும், ஒடுக்கி அருளினான்.

## 13. சரீர சித்தி உபாயம்

சரீர சித்தி - சாகாக் கலை. உபாயம் - வழி. சரீரத்தை அழியாமல் பாதுகாப்பதற்குரிய வழியே சரீர சித்தி உபாயமாம்.

*724. உடம்பரர் அழியில் உயிரார் அழிவர்*
*திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்*
*உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே*
*உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.*

உடம்பு அழியின் உயிரும் நீங்கும், உடல்வலி குன்றினோர் உறுதியான ஞானத்தை உடைய மாட்டார், ஆதலால் உடம்பைப் பேணிக் காக்கும் முறையை அறிந்து, உடம்பை காத்து உயிரையும் காத்தேன்.

*725. உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்*
*உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்*
*உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்*
*றுடம்பினை யானிருந்த தோம்புகின் றேனே.*

முன்னே உடம்பைக் குற்றமுடையது என்று எண்ணிருந்தேன், ஆனால் இந்த உடம்புக்குள்ளே சிறந்த பொருளான சிவத்தைக் கண்டேன், இவ்வுடம்பினுள்ளே இறைவன் கோயிலாகக் கொண்டு எழுந்தருளியிருக்கிறான் என்று அறிந்து, யான் உடம்பைப் பாதுகாத்துக் கொண்டு இருக்கின்றேன்.

*726. சுழற்றிக் கொடுக்கவே சுத்தி கழியுங்*
*கழற்றி மலத்தைக் கமலத்தைப் பூரித்*
*துழற்றிக் கொடுக்கும் உபாயம் அறிவார்க்*
*சுழற்றித் தவிர்ந்துடல் அஞ்சன மாமே.*

உலக நோக்கில் செல்லும் மனத்தை மாற்றிச் சிவத்தை நினைக்கச் செய்யவே சுத்தி உண்டாகும். சிவசிந்தனையால் குற்றங்களைப் போக்கிக் கவிழ்ந்த சகஸ்ரதளத்தை மலரச் செய்து, கீழ் முகமாகச் செல்லும் நோக்கினை மேல்முகமாகத் திருப்புவர்க்கு, வெம்மை நீங்கிக் குளிர்ச்சி பொருந்திய பிரணவ தேகம் அமையும்.

*727. அஞ்சனம் போன்றுட லையறு மந்தியில்*
*வஞ்சக வாத மறுமத்தி யானத்திற்*
*செஞ்சிறு காலையிற் செய்திடிற் பித்தறும்*
*நஞ்சறச் சொன்னோம் நரைதிரை நாசமே.*

மாலையில் சந்திவேளையில் இவ்வியோகம் பயின்றால் உடல் குற்றமாகிய கபம் அகலும், மத்தியானத்தில் செய்யும் யோகத்தால் கொடுமையான வாதநோய் அகலும், செம்மையான விடியற்காலை பயின்றால் பித்த நோய் நீங்கும், தீமை நீங்கச் சொல்லியதோடு நரைதிரை மாறும்.

*728. மூன்று மடக்குடைப் பரம்பிரண் டெட்டுள*
*வேன்ற வியந்திரம் பன்னிரண் டங்குலம்*
*நான்றலிம் முட்டை யிரண்டையும் கட்டியிட்*
*டூன்றி யிருக்க உடம்பழி யாதே.*

உடம்பில் மூன்று முடிச்சுகளும் சூரியகலை சந்திரகலையாகிய இருநாடிகளும் பாம்புபோல் பின்னிக் கிடக்கின்றன. இயங்குகின்ற உடலாகிய இயந்திரத்துக்குக் காரணமானது பன்னிரண்டங்குலத்தால் உணர்த்தப் பெற்ற பிராணனாகும், கீழ் முகமாகச் செல்லும் சந்திர சூரியனாகிய இரு கண்பார்வைகளையும் ஒன்றாக்கி, கீழ்நோக்காது மேல் நோக்குடன் நிலைத்திருந்தால் பிராணலயம் பெற்று உடம்பு அழியாது.

*729. நூறும் அறுபதும் ஆறும் வலம்வர*
*நூறும் அறுபதும் ஆறும் இடம்வர*
*நூறும் அறுபதும் ஆறும் எதிரிட*
*நூறும் அறுபது மாறும் புகுவரே.*

நூறு நாடிகளும், ஆறத்துவாவும் பிங்கலையைப் பற்றி இயங்கியும், அமை இடைகலையைப் பற்றி இயங்கியும் வர, அவை சாதனையால் தூய்மை பெற்று மாறி அமைய, சாதகர் இவற்றைக் கடந்து மேல் நிலைக்குச் செல்வர்.

*730. சத்தியார் கோயி லிடம்வலஞ் சாதித்தால்*
*மத்தியா னத்திலே வாத்தியங் கேட்கரைந்*
*தித்தித்த கூத்துஞ் சிவனுந் வெளிப்படுஞ்*
*சத்தியஞ் சொன்னோஞ் சதா நந்தி ஆணையே.*

சந்திர கலையைச் சூரிய கலையில் பொருந்துமாறு சாதனை செய்தால், மத்தியானத்தில் பிரணவகோஷம் கேட்கலாம், இன்பத்தைத் தரும் சிவ நடனத்தைக் கண்டு களிக்கலாம், இறைவன் மேல் ஆணையிட்டு இதனைச் சொன்னோம்.

*731. திறத்திறம் விந்துத் திகழு மகார*
*முறப்பெற வேநிலைந் தோதுஞ் சகார*
*மறிப்பது மந்திர மன்னிய நாத*
*மறப்பெற யோகிக் கறநெறி யாமே.*

மிகத் தூய்மையான ஒளியுடன் கூடிய அகாரம், பொருந்தும்படி நினைந்து சகாரத்தை ஓதுங்கள், அவ்வாறு அம்சம் என்று மனனம் செய்வதே மந்திரமாகும், அவ்வாறு முழுமையாக எண்ணிப் பெறும் நாதமே யோகிக்கு வழிபாட்டுக்குரிய மூர்த்தியாகும்.

*732. உந்திச் சுழியின் உடனே பிராணனைச்*
*சிந்தித் தெழுப்பிச் சிவமந் திரத்தினால்*
*முந்தி முகட்டின் நிறுத்தி அபானனைச்*
*சிந்தித் தெழுப்பச் சிவனவ னாமே.*

உந்திக் கமலத்திலுள்ள பிராணனை (சூரியனை) உடனே, அம்சம் என்ற மந்திரப்பொருளான சிவத்தை நினைத்து எழுப்பி, முன்புறம் புருவ நடுவில் தியானித்து நிறுத்தி, பின் மேலிருந்து கீழே நினைந்து அபானனை எழுப்பச் சிவனாவான்.

*733. மாறா மலக்குதந் தன்மே லிருவிரற்*
*கூறா இலிங்கத்தின் கீழே குறிக்கொண்மின்*
*ஆறா உடம்பிடை அண்ணலும் அங்குளன்*
*கூறா உபதேசங் கொண்டது காணுமே.*

நீங்காத மலம் பொருந்திய எருவாய்க்கு இரண்டு விரற்கடை மேலும், வாயிட்டுச் சொல்ல முடியாத பாலுணர்வைத் தரும் குறிக்கும் கீழேயும் உள்ள மூலாதாரத்தில் தியானம் செய்யுங்கள், உடம்பையே வழியாகக் கொண்டு சீவர்களை நடத்தும் சிவம் அங்குள்ளது, சம்பிரதாயத்தால் உணர்த்தப்படும் உபதேசத்தைப் பெற்று முன் கூறியவற்றைக் காணுங்கள்.

*734. நீல நிறனுடை நேரிழை யாளொடுஞ்*
*சாலவும் புல்லிச் சதமென் திருப்பார்க்கு*
*ஞாலம் அறிய நரைதிரை மாறிடும்*
*பாலனு மாவர் பராநந்தி ஆணையே.*

நீலவொளியில் விளங்குகின்ற சத்தியுடன், சாலவும் புல்லிச் சதமென்றிருப்பார்க்கு, முழுவதும் பொருந்தி அவளையே அடைக்கலம் என்றிருப்பார்க்கு, உலகோர் காணும் வகையில் நரைதிரை மாறி இளமைத் தோற்றம் அமையும், இது சிவனது ஆணையாகும்.

*735. அண்டஞ் சுருங்கில் அதற்கோர் ரழிவில்லை*
*பிண்டஞ் சுருங்கிற் பிராணன் நிலைபெறும்*
*உண்டி சுருங்கில் உபாயம் பலவுள*
*கண்டங் கறுத்த கபாலியு மாமே.*

கருவாய் செயலற்றிருந்தால் மனிதனுக்கு எவ்வித இழப்பும் இல்லை, உடம்பு மெலிவால் சத்துவகுணம் மேலிட்டுப் பிராணனைச் செபிக்க முடியும், உணவு குறையின் மேல் நிற்றலுக்கும் வழி பலவுண்டு, யோகநெறி நிற்போர் நீலகண்டப் பெருமானாவர்.

*736. பிண்டத்துள் உற்ற பிழக்கடை வாசலை*
*அண்டத்துள் உற்று அடுத்தடுத் தேகிடில்*
*வண்டிச் சிக்கு மலர்க்குழல் மாதரார்*
*கண்டிச் சிக்குநற் காயமு மாமே.*

உடம்பில் பொருந்தியுள்ள மூலாதாரச் சக்கரத்திலுள்ள காம வாயுவை, சிரசின்மேல் சகஸ்ரதளத்துக்கு அனுப்பும் பயிற்சியைச் செய்து வந்தால், வண்டுகள் விரும்பும் நறுமணமுள்ள பூக்களை அணிந்துள்ள பெண்கள், பார்த்தும் விரும்பும் அழகிய வடிவைப் பெறுவர்.

*737. சுழலும் பெருங்கூற்றுத் தொல்லைமுன் சீறி*
*அழலும் இரதத்துள் அங்கியுள் ஈசன்*
*கழல்கொள் திருவடி காண்குறில் ஆங்கே*
*நிழலுளுந் தெற்றுளும் நிற்றலு மாமே.*

காலத்தை உருண்டோடச் செய்கின்ற எமனை முன்பு வெகுண்டு, பிரகாசம் பொருந்திய புணர்ச்சியில் மூலாதாரத்திலுள்ள அதோமுகச் சக்கரத்தில் விளங்கும் சிவனது, ஒலிக்கின்ற திருவடியைக் கண்டால், அப்பொழுதே இவ்வுலகிலும் மேலுலகிலும் வாழலாம்.

*738.* ***நான்கண்ட வன்னியும் நாலு கலையேழுந்***
***தான்கண்ட வாயுச் சரீர முழுதொடும்***
***ஊன்கண்டு கொண்ட வுணர்வு மருந்தாக***
***மான்கன்று நின்ற வளர்கின்ற வாறே.***

நான் தரிசித்த அக்கினி கலையாகிய சிவம், சந்திரன் சூரியன் அக்கினி தாரகையாகிய நான்கு கலைகளிலும், ஏழு ஆதாரங்களிலும், தான் கண்ட பிராணனாய் உடல் முழுவதும், உடலில் வெளிப்பட்ட உணர்வே அமுதமாக, சீவன் இன்பம் பெற்று வளர்கின்ற முறையில் துணை புரியும்.

*739.* ***ஆகுஞ் சனவேத சத்தியை அன்புற***
***நீர்கொள நெல்லில் வளர்கின்ற நேர்மையைப்***
***பாகு படுத்திப் பல்கோடி களத்தினால்***
***ஊழ் கொண்ட மந்திரந் தன்னால் ஓடுங்கே.***

ஆகுஞ்சன முத்திரையில் வெளிப்படும் வேத சத்தியை, நீ அன்போடு ஏற்றுக்கொண்டு, வேளாண்மையில் நெல்லினை விதைப்பண்டமாகவும் உணவுப் பண்டமாகவும் சேமித்து வைப்பது போல, அளவற்ற பயிற்சியால் இருளுக்கும் ஒளிக்கும் நடக்கும் போரில் இருள் கீழ்ப்படுத்தப்பட்டு ஒளிச்சேமிப்பு உண்டாய் அங்கே ஒடுங்குவாயாக.

## 14. கால சக்கரம்

காலம் சக்கரம் போல முடிவின்றி மாறி மாறி வருவதாகலின் கால சக்கரம் எனப்பட்டது. மக்களின் கால எல்லையும் அதனைக் கடக்கும் உபாயமும் இங்குக் கூறப்பெறும்.

*740.* ***மதிவட்ட மாக வரையைந்து நாடி***
***இதுவிட்டிங் கீரா றமர்ந்த அதனாற்***
***பதிவட்டத் துள்நின்று பாலிக்கு மாறு***
***மதுவிட்டுப் போமாறு மாயலுற் றேனே.***

சந்திர மண்டலத்திலுள்ள வியாபினி முதலிய ஐந்து கலைகளின் இயல்பை அறிந்து, இவற்றை நீங்கிச் சிரசின்மேல் துவாதசாந்தப் பெருவெளியில் அமர்ந்தமையால், சிவசத்தியின் சங்கற்பத்தால் அருளும் வகையும், அக்கால சத்தியின் ஆளுகையை விட்டுக் கடக்கும் நிலையையும் ஆராயலுற்றேன்.

*741.* ***உற்றறி வைந்தும் உணர்ந்தறி வாறேழுங்***
***கற்றறி வெட்டுங் கலந்தறி வொன்பதும்***
***பற்றிய பத்தும் பலவகை நாழிகை***
***அற்றறி யாது அழிகின்ற வாறே.***

சத்தம் முதலாகிய ஐம்புலன்களைப் பொருந்தி அறியும் அறிவும், ஐவகைக் கருவிபற்றிய அறிவை வேறாக இருந்து அறியும் ஆறாவது அறிவும், பொருள்களின் நலன் தீக்குகளைப் பற்றிய ஆராய்ச்சியுடைய ஏழாவதாகவுள்ள அறிவும், கல்வியினால் பெற்ற எட்டாவதாகவுள்ள அறிவும், அவ்வெட்டுடன் தம் அனுபவம் பற்றிய அறிவும் சேர்ந்த போதுள்ள ஒன்பதாவது அறிவும், ஒன்பது வகை அறிவுக்குக் காரணம் சிவசத்தி என்றறிந்து அதனைப் பிரியாது நிற்கும் பதிஞானமாகிய பத்தாவது அறிவுமாகிய, பல வகையான அறிவின் தாரதம்மியத்தை அறிந்து ஒழுகாது நிற்பதால் காலம் அறுதியிடப்பட்டு மக்கள் அழிகின்றனர்.

*742.* ***அழிகின்ற ஆண்டவை ஐயைஞ்சு மூன்று***
***மொழிகின்ற முப்பத்து முன்றெனப தாகுங்***
***கழிகின்ற காலறு பத்திரண் டென்ப***
***தெழுகின்ற ஈரைம்ப தெண்ணற் றிருந்தே.***

மக்கள் அழிகின்ற காலம் இருபத்தைந்து ஆண்டு முதல் இருபத்தெட்டு ஆண்டு வரை ஓர் எல்லையும், சொல்லப்படுகின்ற முப்பது முதல் முப்பத்து மூன்று வரை ஓர் எல்லையும் ஆகும், பின் செல்கின்ற காலம் அறுபது முதல் அறுபத்திரண்டுவரை ஓர் எல்லை என்றபடி, இனி நூறாண்டுக்கு ஓர் எல்லையும் அதற்கு மேல் வருவனவற்றுக்கு எல்லையும் இல்லையாம்.

*743.* ***திருந்து தினமத் தினத்தி னொடுநின்***
***றிருந்தறி நாளொன் திரண்டெட்டு மூன்று***
***பொருந்திய நாளொடு புக்கறிக் தோங்கி***
***வருந்துத லன்றி மனைபுக லாமே.***

திருத்திய நாளாகிய பிறந்த நாளும், அதனோடு பொருந்தி நிற்கின்ற ஜென்ம நட்சத்திரம் கூடிய நாள் ஒன்றும், பின் ஜென்ம நட்சத்திர தினத்தோடு பதினாறு நாள்கள் கூட்டப் பதினேழாம் நாளும், ஆறு நாள்கள் கூட்ட ஏழாம் நாளும் ஆகியவை தவிர, பொருந்திய நாள்களை ஆராய்ந்து அறிந்து, வருத்தமின்றி யோகப் பயிற்சி தொடங்குவதற்குரிய நாளாகும்.

*744. மனைபுகு வீரும் மகத்திடை நாடி*
*எனவிரு பத்தஞ்சும் ஈரா றதனால்*
*தனையறிந் தேறட்டுத் தற்குறி யாறு*
*வினையறி யாறு விளங்கிய நாலே.*

உம்முடைய உள்ளத்தின்கண் விரும்பி ஞானயோகம் செய்யப் புகுவீர்! இருபத்தைந்து தத்துவங்களம் பன்னீர் இராசியில் செல்லும் சூரியனாகிய அறிவால், தன்னுண்மையை அறிந்து பக்குவப்பட்டு, சிவன் விளங்கும் ஆறாதாரங்கள் கிரியை செய்யும் வழிகளென அறிந்து அவற்றைக் கடந்தபோது, சிவம் சத்தி நாதம் விந்தவாகிய நான்கே விளங்குமாம்.

*745. நாலுங் கடந்தது நால்வரும் நாலைஞ்சு*
*பாலங் கடந்தது பத்துப் பதினஞ்சு*
*கோலங் கடந்த குணத்தாண்டு மூவிரண்*
*டாலங் டகந்ததொன் றாரறி வாரே.*

உருவங்கள் நான்கையும் கடந்து அருவுருவம் அருவம் ஆகிய ஒன்பது வடிவங்களாக விளங்கி, நெற்றியைக் கடந்த இருபத்தைந்து ஆன்ம தத்துவங்களால் விளங்கும் குறியைக் கடந்ததாய், நச்சுத் தன்மையுடைய வினையை ஈட்டுகின்ற ஆறாதாரங்களைத் தாண்டிய ஆன்மாவாகிய சூரியனை யாரே அறிய வல்லார்?

*746. ஆறும் இருபதுக் கையைஞ்சு மூன்றுக்கும்*
*தேறு யிரண்டு மிருபத்தொ டாநிலை*
*கூறு மதியொன் றினுக்கிரு பத்தேழு*
*வேறு பதியங்க ணாள்விதித் தானே.*

ஆறாதாரங்களில் நாற்பத்தெட்டு இலக்கங்கள் அமைந்த பதுமங்களை அறியுங்கள், இரண்டாகிய சூரியன் இருப்த்தாறால் அமைவதாக உள்ளது என்று கூறும், அகரமாகிய சந்திர வட்டம் இருபத்தேழாகும், இனி வேறு வகையாகவும் நாட்கணக்கை வித்துள்ளான்.

*747. விதித்த இருபத்தெட் டொடுமுன் றறையாகத்*
*தொகுத்தறி முப்பத்து மூன்று தொகுமின்*
*பகுத்தறி பத்தெட்டுப் பாரா திகணால்*
*உதித்தறி மூன்றிரண் டொன்றின் முறையே.*

முறையான இருபத்தெட்டு இலக்கத்தை அக்கினி சூரியன் சந்திரன் ஆகிய மூன்று கண்டங்களில் காணுங்கள், அதில் முப்பத்து மூன்று தத்துவங்களையும் தொகுத்து அறியுங்கள், பத்து எட்டு என்றவற்றைப் பூமி முதலாகப் பொருத்தி அறிந்துகொள்ளுங்கள், அவை நான்கு மூன்று இரண்டு ஒன்றாகவுள்ள முறைமையை அறியுங்கள்.

*748. முறைமுறை யாய்ந்து முயன்றில ராகில்*
*இறையிறை யார்க்கும் இருக்க அரிது*
*மறையது காரணம் மற்றொன்று மில்லை*
*பறையறை யாது பணிந்து முடியே.*

உபதேச முறைப்படி முயற்சி செய்யாவிடில், இறைவனோடு தொடர்பு கொள்ளுதல் யாவர்க்கும் அருமையாம், மறைவாகச் சொல்லியது உபதேசப்படி பெற வேண்டும் என்பதேயன்றி வேறொன்றில்லை, தம்பட்டம் அடிக்காமல் வணங்கிப் பெற்றுக் கொள்வாயாக.

*749. முடிந்த தறியார் முயல்கின்ற மூர்க்கர்*
*இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டு*
*கடிந்தனல் மூளக் கதுவலல் லார்க்கு*
*நடந்திடும் பாரினில் நண்ணலு மாமே.*

மறைத்துவைத்தமை அறியாது முயற்சி செய்யும் அறிவிலிகள், நிமிர்ந்த சகஸ்ரதளமாகிய அகலைக்கொண்டு ஒளியைப் பெற்று, இருளைக் கடிந்து சிந்தனையாகிய தைலத்தைவிட்டுச் சுழுமுனையைத் தூண்டிப் பிரகாசப்படுத்தும் திறமையைக் குரு காட்டிய முறையில் பெறுவாராயின், அழிகின்ற உலகினில் அழியாதிருக்கலாம்.

*750. நண்ணு சிறுவிர னாணாக மூன்றுக்கும்*
*பின்னிய மார்பிடைப் பேராமல் ஒத்திடுஞ்*
*சென்னியில் மூன்றுக்குஞ் சேரவே நின்றிடும்*
*உன்னி யுணர்ந்திம் ஒவியந் தானே.*

பொருந்தும் சிறு விரலை நாணாக, ஒரு கையிலுள்ள மூன்று விரல்களோடு மற்றொரு கையிலுள்ள மூன்று விரல்களையும் கண்களிலும் புருவத்திலும் நெறித்துப் பிடிக்கின் பிராணன் அபானன் ஆகியவை மார்பிடை ஒத்து நிற்கும், அதனால் சிரசில் அக்கினி சூரியன் சந்திரன் ஆகிய மூன்று மண்டலங்களும் ஒத்து நிலை பெறும், அங்குக் காணும் ஒளியில் சித்திரம் போல் அசையாது நினைந்து நில்லுங்கள்.

*751. ஓவிய மான வுணர்வை அறிமின்கள்*
*பாவிக ளித்தின் பயனறி வாரில்லை*
*தீவினை யாமுடன் மண்டல மூன்றுக்கும்*
*பூவில் இருந்திடும் புண்ணியத் தண்டே.*

அழகான உணர்வை அறிந்துகொள்ளுங்கள், பாவிகள் இதன் பயனை அறிகின்றாரில்லை, தீவினைக்குக் காரணமான இவ்வுடலில் மூன்று மண்டலங்களும், சுழுமுனை நாடியில் பொருந்திச் சகஸ்ரதளத்தில் விளங்கி நிற்கும்.

*752. தண்டுடன் ஓடித் தலைப்பெய்த யோகிக்கு*
*மண்டலம் மூன்று மகிழ்ந்துடன் ஒத்திடுங்*
*கண்டவர் கண்டனர் காணார் வினைப்பயன்*
*பிண்டம் பிரியப் பிணங்குகின் றாரே.*

வீணாத்தண்டமாகிய முதுகந்தண்டோடு பிணைந்து சென்று பிரமரந்திரத்தை அடைந்த யோகிக்கு, சோம சூரியாக்கினியாகிய மண்டலங்கள் மூன்றும் ஒத்து உடற்கண் மகிழும்படியாகப் பொருந்தியிருக்கும், இவ்வுண்மையைக் கண்டவர்களே மெஞ்ஞானிகள், இதனை அறியாதார் வினையால் விளைந்த உடம்பு அழியுமாறு மாறுபட்டுக் கெடுகின்றனர்.

*753. பிணங்கி அழிந்திடும் பேற்று கேள்நீ*
*அணங்குட னாதித்த னாறு விரியின்*
*வணங்குட னேவந்த வாழ்வு குலைந்து*
*கணங்கனுக் காகச் சுழல்கின்ற வாறே.*

நீ மாறுபட்டு உடம்பு அழியும் பயனைக் கேட்பாயாக, சூரியனாகிய அறிவு குண்டலியின் வழி காம காரியம் செய்யின், வணங்குவதற்குரிய வாழ்வு கேட்டு, நாய் மலம் உண்ணுவதில் விருப்பம் கொள்வது போலக் காமச் செயலில் விருப்பம் கொள்வர்.

*754. சுழல்கின்ற வரறின் துணைமலர் காணான்*
*தழலிடைப் புக்கிடும் தன்னு ளிலாமற்*
*கழல்கண்டு போம்வழி காணவல் லார்க்குக்*
*குழல்வழி நின்றிடுங் கூத்தனு மாமே.*

காமவயப்பட்டு அலைவதனால் சகஸ்ரதளத்துக்கு மேல் விளங்கும் திருவடியினை உணர முடியவில்லை, தன்னொளியில் மேல் நில்லாமல் கீழேயுள்ள அக்கினி மண்டலத்தினால் அழிகின்றனர், திருவடியின் சிலம் போசையை அறிந்து அதன் வழியாகச் செல்பவனுக்கு, சுழுமுனை நாடியில் கூத்தப் பெருமான் விளங்குவான்.

*755. கூத்தன் குறியிற் குணம்பல கண்டவர்*
*சாத்திரந் தன்னைத் தலைப்பெய்து நிற்பர்கள்*
*யாத்திருந் துள்ளே அனுபோக நோக்கிடில்*
*ஆத்தனு மாகி யலர்ந்திரு மொன்றே.*

நாத சம்மியம் செய்வதால் விளையும் பயன் பலவற்றையும் கண்டவர், மெய்ந் நூற்பொருளை உணர்ந்து அனுபவித்திருப்பர், அவ்விதமாக உள்ளே தியானம் செய்திருப்பின், அவன் விருப்பமுடையவனாகிச் சாதகரும் தானும் வேறி;னறி ஏகனாய் விளங்குவான்.

*756. ஒன்றில் வளர்ச்சி உலப்பிலி கேளினி*
*நன்றென்று மூன்றுக்க நாளது சென்றிடுஞ்*
*சென்றிடு முப்பதுஞ் சேர இருந்திடிற்*
*குன்றிடைப் பொன்திகழ் கூத்ரனு மாமே.*

முன்மந்திரத்தில் கூறியவாறு இறைவனுடன் பிரிப்பின்றிப் பொருந்தி நிற்பவரது ஆயுள் வளர்வதோடு அழிவும் இல்லை என்பதைக் கேட்பயாக, உலக நலம் கொண்ட பூரக ரேசக கும்பகமாகியவற்றால் வாழ்நாள் குறையும், அவ்வாறு பூரக ரேசக கும்பகமற்று முப்பது நாழிகை சமாதி செய்யின், சகஸ்ரதளத்திலுள்ள பொன்னொளியில் கூத்தன் விளங்குவான்.

*757. கூத்தவன் ஒன்றிடுங் கூர்மை அறிந்தங்கே*
*ஏத்துவர் பத்தினில் எண்டிசை தோன்றிடப்*
*பார்த்து மகிழ்ந்து பதுமரை நோக்கிடிற்*
*சாத்திட நூறு தலைப்பெய்ய லாமே.*

கூத்தை உடலில் நடத்தும் பிராணன் சூக்குமமாக அடங்கும் நிலையை அறிந்தது, அவ்விடத்தில் அகர உகரத்தைப் பொருத்தி அட்டதள கமலத்தை விளங்கச் செய்வர், அட்டதள கமலத்தில் விளங்கும் சிவனைக் கண்டு இன்புற்றிருப்பின், எடுத்த உடம்பில் சொல்லப் பெற்ற நூறாண்டுக் காலம் வாழலாம்.

*758.* *சாந்திமு நூறு தலைப்பெய்து நின்றவர்*
*காத்துடல் ஆயிரங் கட்டுறக் காண்பர்கள்*
*சேர்த்துடல் ஆயிரஞ் சேர இருந்தவர்*
*மூத்துடன் கோடி யுகமது வாமே.*

சொல்லப்பெற்ற நூறாண்டு கூடியவர், இவ்வுடலையே ஆயிரம் ஆண்டுகட்குக் குலையாத வண்ணம் காப்பார்கள், இவ்வண்ணம் உடம்போடு கூடி ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தவர், பல யுகம் அறிவால் முதிர்ந்து வாழலாம்.

*759.* *உகங்கோடி கண்டும் ஒரிவற நின்று*
*அகங்கோடி கண்டு ளயர்வறக் காண்பர்கள்*
*சிவங்கோடி விட்டுச் செறிய இருந்தங்*
*குகங்கோடி கண்டங் குயருறு வாரே.*

அங்ஙனம் பல நாள்களைக் கண்டு தளர்ச்சியின்றி இருந்து, மனத்தால் முடிந்த பொருளாகிய சிவத்தை எண்ணி இடையறாது தியானிப்பவர், சிவம் என்றும் தான் என்றும் இரண்டாக அறியாமல் ஏகமாய் உணர்ந்து அங்கே உறைந்து, அங்கே நீண்ட காலம் வாழ்ந்து உயர்வினை அடைவார்.

*760.* *உயருறு வாருவ கத்தொடுங் கூடிப்*
*பயனுறு வார்பலர் தாமறி யாமற்*
*செயலுறு வார்சிலர் சிந்தையி லாமற்*
*கயலுற கண்ணியைக் காணகி லாரே.*

இங்ஙனம் சிவமாந்தன்மை எய்தி உயர்ந்தவரே உலகத்தோடும் கூடிப் பயனை அடைந்தவராவர், பலர் இவ்வுண்மையை அறிந்து கொள்ள மாட்டாமையால் கன்மங்களை மேலும் மேலும் ஈட்டுவாராயினர், சிலர் இத்தகைய பேற்றை அடையவேண்டுமென்ற விருப்பம் இல்லாமையால், மீன் போன்ற எப்போதும் இமைக்காத கண்ணினையுடைய பராசக்தியை அறியாதவராயினர்.

*761.* *காணகி லாதார் கழிந்தோடிப் போவர்கள்*
*நாணகி லாதார் நயம்பேசி விடுவர்கள்*
*காணகி லாதார் கழிந்த பொருளெலாங்*
*காணகி லாமற் கழிகின்ற வாதே.*

பரையொளியைப் பெறாதவர் பிரவிப்பயன் எய்தாது வீணே கழிவர், வெட்கமில்லாதவர் அனுபவமின்றிச் சாந்திர நயங்களைப் பேசுவர், பரையொளியைப் பெறாதார் தத்துவப் பொருளனைத்தும், காண முடியாமையால் சேவை செய்யாது விலகிவிடுகின்றனர்.

*762.* *கழிகின்ற அப்பொருள் காணகி லாதார்*
*கழிகின்ற அப்பொருள் காணலு மாருங்*
*கழிகின்ற வுள்ளே கருத்துற நோக்கிற்*
*கழியாத அப்பொருள் காணலு மாமே.*

பந்தப்படுத்தும் உலகப்பொருளைப் புறக்கண்ணால் காணதவர், நீங்குகின்ற அப்பொருளின் தன்மையை அகக்கண்ணால் அறிய முடியும், நீங்குகின்ற பொருளின் உள்ளே மனவொருமைப்பாட்டுடன் பார்த்தால், எப்பொருளிலும் இருந்து நீங்காத சிவனைத் தரிசிக்கவும் கூடும்.

*763.* *கண்ணன் பிறப்பிலி காணந்தி யாயுள்ளே*
*எண்ணுந் திசையுடன் ஏகாந்த னாயிடுந்*
*திண்ணென் றிருக்கஞ் சிவகதி யாநிற்கும்*
*நண்ணும் பதமிது நாடவல் லார்கட்கே.*

முக்கண்ணையுடையவனும் பிறப்பில்லாதவனும் குருவானவனுமாகிய நந்தியெம்பெருமானை உயிரினுள்ளாக ஆராய்ந்து காண்க, எண்ணப்பட்ட பத்துத் திக்குகளில் இருப்பதோடு தனித்தும் உள்ளது புலப்படும், உறுதியைத் தரும் சிவகதி கிட்டும், ஆராய வல்ல யோகியர்க்கு அடையும் பயன் இதுவேயாகும்.

*764.* *நாடவல் லார்க்கு நமனில்லை கேடில்லைள*
*நாடவல் லார்க்கு நரபதி யாய்நிற்பர்*
*தேடவல் லார்கள் தெரிந்த பொருளிது*
*கூடவல் லார்கட்குக் கூறலு மாமே.*

இவ்வண்ணம் நந்தியெம்பெருமானை அறிய வல்லவர்க்கு ஆயுள் எல்லை அகன்றுவிடுவதால் அழிவில்லை, அறிய வல்லவர் மக்களின் தலைவராவர், ஆராய்ச்சி செய்பவர் கண்ட உண்மை இதுவாகும், பெருமானைக் கூட வேண்டுமென்ற விருப்புடையோர்க்கு இவ்வுண்மையைச் சொல்லுதலுமாகும்.

***765.*** ***கூறும் பொருளி தகார வுகாரங்கள்***
***தேறும் பொருளிது சிந்தையுள் நின்றிடக்***
***கூறு மகாரங் சூழல்வழி யோடிட***
***ஆறும் அமர்ந்திடும் அண்ணல மாமே.***

தகுதியுள்ள சீடருக்கு உணர்த்த வேண்டிய பொருள் அகார உகாரமாம், தெளியும் அகார உகாரங்கள் மனத்துள் நிலைபெற்றால், உணர்த்தும் மகாரம் சுழுமுனையாகிய சூழலின் வழியே உயரச்சென்று நாதமாக அமைய, மாயையின் காரியமான ஆறாதாரங்களும் சேட்டையற்றுச் சிவமும் விளங்கித் தோன்றும்.

***766.*** ***அண்ணல் இருப்பிட மாரும் அறிகிலர்***
***அண்ணல் இருப்பிடம் ஆய்ந்துகொள் வார்களுக்***
***கண்ணல் அழிவின்றி உள்ளே அமர்ந்திடும்***
***அண்ணலைக் காணில் அவனிவ னாகுமே.***

சிவ பெருமான் எழுந்தருளியிருக்கும் இடத்தை யாரும் அறியமாட்டார், அப்பெருமான் ஓசை ஒளி மயமாய் எழுந்தளிருக்கும் இடத்தை உணர்வார்க்கு, அவன் உள்ளத்தை விட்டு அகலாது விளங்குவான், அவ்வாறு அவனைக் காணில் சிவமேயாவர்.

***767.*** ***அவனிவ னாகும் பரிசறி வாரில்லை***
***அவனிவ னாகும் பரிசது கேள்நீ***
***அவனிவ னோசை ஒளியினுள் ஒன்றிடும்***
***அவனிவன் வட்ட மதாகிநின் றானே.***

சிவன் தானாகும் தன்மையை அறிவார் யாரும் இல்லை, அவ்வாறு சிவமாகும் தன்மையை நீ கேட்பாயாக, சிவன் ஆன்மாவின் சூக்குமவாக்கிலும் சூக்கும ஒளியிலும் பொருந்தும், சிவன் இவனது ஆகாயக்கூற்றில் விளங்குவான்.

***768.*** ***வட்டங்க ளேழு மலர்ந்திடும் உம்முனே***
***சிட்டன் இருப்பிடஞ் சேர அறிகிலீர்***
***ஒட்டி யிருந்துள் உபாயம் உணர்ந்திடக்***
***கட்டி யிருப்பிடங் காணலு மாகுமே.***

ஆதாரச் சக்கரங்களாகிய வட்டங்கள் ஏழும் உம்முள்ளே மலரும், அங்கு மேன்மையுடைவனாகிய சிவன் இருக்குமிடத்தை அடைய அறியீர்கள், உபாயத்தினால் சிவனுடன் பொருந்தி நிற்க, கரும்பின் கட்டி போன்ற இன்பம் இருக்குயிடத்தை நீவிரும் அறியலாம்.

***769.*** ***காணலு மாகும் பிரமன் அரியென்று***
***காணலு மாருங் கறைக்கண்டன் ஈசனைக்***
***காணலு மாருஞ் சதாசிவ சத்தியுங்***
***காணலு மாகுங் கலந்துடன் வைத்ததே.***

முன்மந்திரத்தில் கண்ட முறையால் உள்ளே ஆதார மலர்களில் பிரமன் என்றும் திருமால் என்றும் காணலாம், நீலகண்டன் மகேசுவரன் ஆகியோரையும் அவ்வாறே காணவும் கூடும், இனி சதாசிவ சத்தியையும் காணலாம், உன்னுடைய உயிரிலும் உடம்பிலும் இக்கடவுளரெல்லாம் பொருந்தியுள்ளதைக் காணலாம்.

## 15. ஆயுள் பரிட்சை

ஆயுள் பரிட்சை - வாழ்நாளை அறிவதற்குரிய தேர்வு. அஃதாவது, பிராணன் இயக்கத்தை அறிந்து ஆயுட்கால எல்லையை முடிவு செய்தல், பிராண இயக்கம் நீண்டு செல்லுமாயின் ஆயுள் குறையும், குறைந்து செல்லுமாயின் ஆயுள் நீளும், பிராண சேமிப்பு ஆயுள் நீட்டிப்புக்கு இன்றியமையாதது என்க.

***770.*** ***வைத்தகை சென்னியில் நேரிதாய்த் தோன்றிடில்***
***உத்தம மிக்கிடில் ஓராறு திங்களா***
***மத்த மிகுத்திட் டிரட்டிய தாயிடில்***
***நித்தல் உயிர்க்கொரு திங்களில் ஓசையே.***

தலையில் கைபருத்துமின்றிச் சிறுத்துமின்றி அளவாய்த் தோன்றினால் நன்மையாம், பெருத்துத் தோன்றினால் ஆறு மாதங்களில் இறப்பு உண்டாகும், கையானது இரண்டு பங்கு பருத்துத் தோன்றினால், எந்நாளும் ஒரு மாதத்துக்குள் இறப்பு உண்டாகும்.

*771.* *ஓசையும் ஈசனும் ஒக்கும் உணர்வின்கண்*
*ஓசை யிறந்தவர் ஈசனை உள்குவர்*
*ஓசை யிறந்தவர் நெஞ்சினுள் ஈசனும்*
*ஓசை யுணர்ந்த வுணர்வினு வாமே.*

உள்ளத்தில் உண்டாகும் சூக்குமை முதலிய வாக்குகள் ஈசனோடு ஒப்பானவையாகும், நாதத்தைக் கடந்தவர் ஈசனை நினைந்து நாதாந்தத்தில் இருப்பர், நாதாந்தத்தில் இருப்பவர் நெஞ்சில் ஈசனும், ஓசையால் உணர்ந்த உணர்வாக விளங்குவான்.

*772.* *ஆமே அழிகின்ற வாயுவை நோக்கிடில்*
*நாமே லுறைகின்ற நன்மை யளித்திடும்*
*பூமேல் உறைகின்ற போதகம் வந்திடுந்*
*தாமே உலகில் தலைவனு மாமே.*

அழிகின்ற நாலங்குல வாயுவைக் கண்டு அழியாமல் பொருந்தும் படி செய்யின், உண்ணாக்கு மேல் அமையும் சகஸ்ரதளம் விரிந்து நன்மையைச் செய்யும், சகஸ்ரதளம் தங்கும் ஞானம் நிலைபெறும், அவ்வாறு ஞானம் பெற்றவரே உலகத்தலைவராவர்.

*773.* *தலைவ னிடம்வலஞ் சாதிப்பார் இல்லை*
*தலைவ னிடம்வல மாயிடில் தையல்*
*தலைவ னிடம்வலந் தன்வழி யஞ்சில்*
*தலைவ னிடம்வலந் தன்வழி நூறே.*

தலைவன் வாழ்கின்ற இடக்கண் பார்வையை வலக்கண் பார்வையோடு பொருந்தும் வகை அறிவார் இல்லை, தலைவன் இடம் வலமாயிடில் தையல் இடக்கண்ணை வலக்கண்ணோடு பொருத்தினால் ஒளியாகிய சத்தி விளங்கும், இச்சாதனையால் ஞானேந்திரியங்கள் ஐந்தும் தன் வழிப்பட்டமையின், இவரது வாழ்நாள் நூறாண்டாகும்.

*774.* *ஏறிய வாறினில் எண்பது சென்றிடுந்*
*தேறிய ஏழிற் சிறக்கும் வகையெண்ணில்*
*ஆறொரு பத்தாய் அமர்ந்த இரண்டையும்*
*தேறியே நின்று தெளியிவ் வகையே.*

ஆறு விரற்கடை அளவு சுவாசம் வெளியேறினால் எண்பது ஆண்டு வாழலாம், ஏழு விரற்கடை அளவு சுவாசம் வெளிப்படுவதை எண்ணினால், அறுபத்திரண்டாய் ஆயுட்காலம் அமைந்ததையும், ஆராய்ந்து நின்று இவ்வகையாகத் தெளிவாயாக.

*775.* *இவ்வகை எட்டும் இடம்பெற ஓடிடில்*
*அவ்வகை ஐம்பதே யென்ன அறியலாஞ்*
*செவ்வகை ஒன்பதுஞ் சேரவே நின்றிடின்*
*முவ்வகை யாமது முப்பத்து மூன்றே.*

இவ்வகையான எட்டு விரற்கடை சுவாசம் நீண்டு இயங்குமாயின், அவ்வகை ஆயுள் ஐம்பது ஆண்டுகள் என அறியலாம், செம்மையாக ஒன்பது விரற்கடை சுவாசம் சேர இயங்குமாயின், மூத்து அழியும் காலம் முப்பத்து மூன்று ஆண்டுகளாம்.

*776.* *மும்மூன்றும் ஒன்றும் முடிவுற நின்றிடில்*
*எண்மூன்றும் நாலும் இடவகை யாய்நிற்கும்*
*ஐம்மூன்றும் ஓடி அகலவே நின்றிடிற்*
*பன்மூன்றொ டீராறு பார்க்கலு மாமே.*

பத்து விரற்கடை சுவாசம் முடிவு பெற நின்றிடில், இருபத்தெட்டு ஆண்டுகள் வாழலாம், பதினைந்து விரற்கடை ஓடி நிற்குமாயின், இருபத்தைந்து ஆண்டுகள் வாழலாம்.

*777.* *பார்க்கலு மாகும் பகல்முப் பதுமாகில்*
*ஆக்கலு மாகுமவ் வாறிரண் டுள்ளிட்டுப்*
*போக்கலு மாகும் புகலற ஒன்றெனில்*
*தேக்கலு மாகுந் திருத்திய பத்தே.*

பகல் முப்பது நாழிகைகளும் சூரியனைச் சந்திரன் பகுதியில் சேர்த்து நின்றபின் சிரசின் ஈசான திக்கில் உணர்வை உதிக்கச் செய்யலாம், அப்போது சுழுமுனையில் சுவாசம் போதலைச் சாதிக்கலாம், இதனால் அகர உகரமாகிய இரு கலைகளும் செம்மையுற்றுப் பத்தாகிய அக்கினி கலை விளங்கும், இதனைப் பார்க்கக்கூடும்.

*778. ஏயிரு நாளும் இயல்புற ஓடிடில்
பாயிரு நாலும் பகையற நின்றிடும்
தேய்வுற மூன்றுந் திகழவே நின்றிடில்
ஆயுரு வாறென் றளக்கலு மாமே.*

முற்கூடியபடி பொருந்திய இரு நாள்களிலும் சுழுமுனையில் பிராணவ இயங்கில், கீழ்நோக்குதலையுடைய அபரனனும் வியாபகமான சந்திரனும் சீவனுக்குப் பகையாக இல்லாமல் உதவுவான், இவ்வாறு கீழ்நோக்கும் சத்தியைக் குறைத்து மூன்று நாள்கள் நிலைபெறில், ஆயுள் நீடிக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

*779. அளக்கும் வகைநாலும் அவ்வழியே ஓடில்
விளக்கும் ஒருநாலு மெய்ப்பட நிற்கும்
துளக்கும் வகையைந்தும் தூய்நெறி ஓடில்
களக்க மறமூன்றிற் காணலு மாமே.*

இங்ஙனம் அளக்கும் வகையால் நான்கு நாள்கள் சுழுமுனை வழியே பிராணன் இயங்கினால், விளக்கத்தைச் சிவம், சத்தி, விந்து, நாதம் ஆகிய நான்கும் உண்மையாகக் காணலாம், விளக்கமான முறையில் ஐந்து நாள்கள் தூய்மையான இவ்வழியில் இயங்குமாயின், களங்கமின்றிச் சிவம் சத்தி, ஆன்மாவாகிய மூன்றையும் காணலாம்.

*780. காணலு மாகுங் கருதிய பத்தோடிற்
காணலு மாகுங் கலந்த இரண்டையும்
காணலு மாகுங் கலப்பற மூவைந்தேற்
காணலு மாகுங் கருத்துற ஒன்றே.*

முன்னே விளக்கியபடி பத்து நாள்கள் சுழுமுனையில் அறிவு பொருந்தியவர்க்கு, தன்னுடன் பொருந்திய சிவம் சத்தியை அறியலாம், அவ்வண்ணம் கலந்த தன்மையும் விட்டுப் பதினைந்து நாள்கள் சுழுமுனை அறிவில் பொருந்தியவர், சிவம் ஒன்றே எண்ணத்தில் காண்பர்.

*781. கருதும் இருபதிற் காணஆ றாகும்
கருதிய ஐயைந்திற் காண்பது மூன்றாம்
கருதும் இருப துடனாறு காணிற்
கருதும் இரண்டெனக் காட்டலு மாமே.*

கருதப்படுகின்ற இருபது நாள்கள் சுழுமுனையில் நிலைபெறின் ஆகாயக் கூறிலிருந்து ஆறாதாரங்கள் அறியப்படும், அவ்வாறு இருபத்தைந்து நாள்கள் இயங்கினால் ஐம் பூதாகாயத்தில் பூதாகாயமும் குணமய ஆகாயமும் கீழ்ப்படுத்தப்படும் தேயுவும் வாயுவம் ஆகாயமுமாகிய மூன்று விளங்கும், மேலும் இருபத்தாறு நாள்கள் இயங்கினால், கருதுகின்ற தேயுவும் ஆகாயமுமாகிய இரண்டும் சிறப்புறும்.

*782. காட்டலு மாகும் கலந்திரு பத்தேழில்
காட்டலு மாகுங் கலந்தெழும் ஒன்றெனக்
காட்டலு மாகுங் கலந்திரு பத்தெட்டிற்
காட்டலு மாகுங் கலந்த ஈரைந்தே.*

முற்கூறியவாறு சுழுமுனையில் இருக்கும் ஞானி இருபத்தேழு நாள்கள் அவ்வாறு இருப்பின், சோதிவடிவாகிய சிவத்தைப் பிறர்க்கும் உணர்த்தல் கூடும், அவ்வாறு இருபத்தெட்டு நாள்கள் சூழுமுனையில் பொருந்தியிருப்பின், பத்தாவது நிலையான ஊர்த்துவ சகஸ்ரதளத்தில் விளங்கும் ஆன்மாவைப் பிறர்க்கு உணர்த்தல் கூடும்.

*783. ஈரைந்தும் ஐந்தும் இருமூன்றும் எட்டுக்கு
பாரஞ்சி நின்ற பகைபத்து நாளாகும்
வாரஞ்செய் கின்ற வகையாறஞ் சாமாகில்
ஓரஞ்சொ டொன்றொன் றெனவொன்று நாளே.*

பத்தும் ஐந்தும் ஆறும் எட்டுமாகிய இருபத்தொன்பது நாள்களும், உலகோர் அஞ்சும்படி பகைசெய்யும் இந்நாள்கள் யோகியர்க்குப் பத்து நாள்கள் போலத் தோன்றும், அன்பினைப் பெருக்கின்ற வகையில் இறைவனோடு கலந்திருக்கின்ற முப்பது நாள்களும், ஓர் ஐந்தோடு ஒன்றும் ஒன்றுமாகிய ஏழு நாள்கள் கழிந்தன போலத் தோன்றும்.

*784. ஒன்றிய நாள்கள் ஒருமுப்பத் தொன்றாகிற்
கன்றிய நாளுங் கருத்துற மூன்றாகுஞ்
சென்றுயிர் நாலெட்டுஞ் சேரவே நின்றிடின்
மன்றியல் பாகு மனையில் இரண்டே.*

இறைவனுடன் பொருந்திய நாள்கள் முப்பத்தொன்றாயின், சிறுமையைச் செய்யும் நாள்கள் மனத்தில் மூன்று நாள்கள் போல யோகியர்க்குத் தோன்றும், இறைவனுடன் சென்று உயிர் முப்பத்திரண்டு நாள்கள் பொருந்தி நின்றிடின், உலக நடையினர்க்குரிய இரண்டு நாள்கள் சென்றது போலத் தோன்றும்.

*785. மனையில்ஒன் றாகதும் மாதமு மூன்றுஞ்*
*சுனையில்ஒன் றாகத் தொனித்தனன் நந்தி*
*வினையற வோங்கி வெளிசெய்து நின்றால்*
*தனையுற நின்ற தலைவனு மாமே.*

மூன்று மாதங்களும் சிவமும் ஆன்மாவும் பேதமற ஒன்றாயினார்க்கு, சகஸ்ரதளத்தில் சூக்கும வாக்கு விளங்கும்படி செய்தனன் நந்தியெம்பெருமான், யாதொரு கிரியையுமின்றிப் பரமாகாயத்தில் நிமிரிந்து நின்றவர்க்கு, தன்னுடன் பொருந்தி நின்ற சிவமேயாதல் கூடும்.

*786. ஆரு மறியார் அளக்கின்ற வள்ளியை*
*ஆரு மறியார் அளக்கின்ற வாயுவை*
*ஆரு மறியார் அழிகின்ற அப்பொருள்*
*ஆரு மறியா அறிவறிந் தேனே.*

பரவெளியில் சூக்கும நிலையில் கலந்துள்ள அக்கினியாகிய பூதத்தை யாரும் அறியார், கலந்துள்ள வாயு பூதத்தை யாரும் அறியமாட்டார், எல்லாவற்றையும் ஒடுக்கியிருக்கின்ற சிவத்தை யாரும் அறியார், மற்றவர் அறிந்து கொள்ள முடியாத அறிவை நான் சிவத்துடன் பொருந்தி உணர்ந்தேன்.

*787. அறிவது வாயுலொ டைந்தறி வாயு*
*அறிவா வதுதான் உலகுயி ரத்தின்*
*பிறிவுசெய் யாவகை பேணியுள் நாடிற்*
*செறிவது நின்று திகழு மதுவே.*

வாயுவோடு கூடி ஐந்து தன்மாத்திரைகளை அறியும் அறிவாகிய சிவம் அறிவாகும், அச்சிவமே உலகுயிர் அனைத்தின் அறிவுமாம், ஆதலின், சிவத்தைப் பிரித்து வேறாகக் காணாமல் ஒன்றாய்க் காணின், அப்பொருளாகிய சிவமே உயிரோடு பொருந்தி நின்று எல்லாப் பொருளையும் விளக்கித் தானும் விளங்கும்.

*788. அதுவரு ளும்மரு ளான துலகம்*
*பொது வரு ளும்புக ழாளர்க்கு நாளு*
*மதுவரு ளும்மலர் மங்கையர் செல்வி*
*இதுவருள் செய்யும் இறையவ ளாமே.*

அச்சிவம் அருளிச்செய்த உலகம் அஞ்ஞானியர்க்கு மயக்கத்தைத் தருவதாகும், ஞானியர்க்கு நாள்தோறும் சுட்டறிவின் நீங்கிய பொது அறிவை நல்கும், இன்பத்தை நல்கும் சகஸ்ரதளத்தில் விளங்கும் பராசத்தி இப்பேற்றை ஞானியர்க்கும் கூட்டி வைப்பான், அதனால் ஞானியர் சிவமேயாவர்.

*789. பிறப்பது சூழ்ந்த பெருந்தகை நந்தி*
*குறிப்பது கூடிய கோலக் குரம்பைப்*
*பழப்பதி யாவது பற்றறும் பாசம்*
*அழப்படி செய்வார்க் ககலு மதியே.*

சிருட்டியைக் கருதிய பெருமையுடைய நந்திக்கு, பிறிப்பின்றிக் காண்பவரது அழகிய உடம்பு பழமையான இடமாம், இவ்வுண்மையை உணர்ந்தவர்க்கு ஆசை நீங்கும், பின் ஆசைக்குக் காரணமான பாசங்களை வருந்தும்படி செய்யும் அகன்ற அறிவு விளங்கும்.

## 16. வார சரம்

வாரம் - நாள், சரம் - பிராணன் இயக்கம், இன்னின்ன நாளில் இன்னின்ன நாடி வழியாகப் பிராணன் இயங்க வேண்டிய முறையைக் கூறுவது இப்பகுதியாகும்.

*790. வெள்ளிவெண் திங்கள் விளங்கும் புதனிடம்*
*ஒள்ளிய மந்தன் இரவிசெவ் வாய்வலந்*
*வள்ளிய பொன்னே வளரும் பிறையிடந்*
*தெள்ளிய தேய்பிறை தான்வல மாமே.*

வெள்ளி, திங்கள், புதன் கிழமைகளில் இடைநாடி வழியாகச் சுவாசம் இயங்கவேண்டும், ஒண்மையான சனி ஞாயிறு செவ்வாய் கிழமைகளில் வல நாடி வழியாக இயங்க வேண்டும், அழகிய வியாழக் கிழமை வளர்பிறை நாளில் இடை கலையில் விளங்கு வேண்டும், அழிகின்ற தேய்பிறை நாளில் வியாழன்கிழமை வலநாடியில் இயங்க வேண்டும்.

*791.* *வெள்ளிவெண் திங்கள் விளங்கும் புதன்மூன்ற*
*தள்ளி இடத்தே தயங்குமே யாமாகில்*
*ஒள்ளிய காயத்துக் கூன மிலையென்று*
*வள்ளல் நமக்கு மகிழ்ந்துரைத் தானே.*

வெள்ளி, திங்கள் விளங்குகின்ற புதன் கிழமைகளில், இடை நாடியில் சுவாசம் தள்ளி இயங்குமாயின், ஒளி பொருந்திய உடம்புக்கு அழிவில்லையென்று, வள்ளலாகிய குருநாதன் நம்மனோர்க்கு மகிழ்ச்சியோடு உபதேசித்தருளினான்.

*792.* *செவ்வாய் வியாழஞ் சனிஞாயி றேஎன்னும்*
*இவ்வா றறிகின்ற யோகி இறைவனே*
*ஒவ்வாத வாயு வலத்துப் புரியவிட்*
*டவ்வா றறிவார்க்கல் வானந்த மாமே.*

செவ்வாய், தேய்பிறை வியாழன், சனி, ஞாயிறு ஆகிய கிழமைகளில், சரத்தை வலப்பக்கத்தில் அறிகின்ற யோகி இறைவனாவான், இந்நாள்களில் சரம் மாறி இயங்குந்தன்மையை அறிந்து வலப்பக்கத்திலே ஓடவிட்டு, அம்முறையில் அறிகின்றவர்களுக்கு ஆனந்தம் உண்டாகும்.

*793.* *மாறி வருமிரு பான்மதி வெய்யவன்*
*ஏறி இழியும் இடைபிங் கலையிடை*
*ஊறும் உயிர்நடு வேயுயி ருக்கிரன்*
*தேறி அறிமின் தெரிந்து தெளிந்தே.*

சந்திரனும் சூரியனும் இடைபிங்கலை நாடிகளில் மாறி மாறி இயங்கும், அப்போது இடைகலை வழியாக ஏறிப் பிங்கலை வழியாக இறங்கியும், பிங்கலை வழியாக ஏறி இடைகலை வழியாக இறங்கியும், பிராணன் நடுநாடியில் ஊர்ந்து செல்லும், பிராணனின் சிவன பொருந்தியதை ஆராய்ந்து தெளிந்து அறியுங்கள்.

*794.* *உதித்து வலந்திடம் போகின்ற போது*
*அதிர்த்தஞ்சி யோடுத லாமகன் றாரும்*
*உதித்தது வேமிக லோடிடு மாகில்*
*உதித்த விராசி யுணர்ந்துகொ ளூற்றே.*

பிராணன் வலப்பக்கம் உதித்து இடப்பக்கம் மாறிச் செல்லுகின்ற போது, ஒருபுறம் கனமாகவும் மற்றொரு புறம் இலேசாகவும் இளைத்து ஓடுதலாகும், தோன்றிய அப்பிராணன் அகன்றும் தணிந்தும் ஓடுதல் நீங்கிப் பொருந்த ஒரு நாடியின் மிகுதியாக ஓடுமாயின், தோன்றிய இராசியைப் பொருந்தி மிகுதியாக ஓடும் நாடியைக் கொள்வாயாக.

*795.* *நடுவுநில் லாமல் இடம்வலம் ஓடி*
*அடுகின்ற வாயுவை அந்தணன் கூடி*
*இடுகின்ற வாறுசென் றின்பணி சேர*
*முடிகின்ற தீபத்தின் முன்னுண்டென் றானே.*

சரியான சுழுமுனையில் பொருந்தியில்லாமல் இடமாகவோ வலமாகவோ ஓடி, பாய்கின்ற வாயுவை யோகியானவன் பொருந்தி, நாடிகள் ஒத்து இயங்குகின்ற புருவ நடுவில் இனிமையைத் தரும் குண்டலினியைச் சேரச் செய்தால், நடுநாடியின் உச்சியில் தீப்பிரகாசம் அமையும் என்றும் நந்தி அருளினான்.

*796.* *ஆயும் பொருளும் அணிமலர் மேலது*
*வாயு விதமும் பதினா றுளவலி*
*போய மனத்தைப் பொருகின்ற வாதாரம்*
*ஆயுவி நாளும் முகுர்த்தமு மாமே.*

ஆராயத்தக்க பொருளான சிவமும் அழகிய கண்மலர்க்கு மேலாகவுள்ளது, அச்சிவனை நினைந்து சுவாச கலையை மாறச்செய்யின் பதினாறு கலைகளையுடைய சந்திரன் விளங்கும், அக்கலை வலிமையாகச் சென்று மனத்தை அழிக்கின்ற ஆதாரமாக, ஆயுளும் நாளும் தியான காலமான முகூர்த்தமுமாக அமைகின்றது.

## 17. வார குலம்

வார குலம், கிழமை தோஷம், பயணத்துக்குரிய தோஷம் இங்குக் கூறப்பெறும்.

*797.* *வாரத்திற் சூலம் வரும்வழி கூறுங்கால்*
*நேரொத்த திங்கள் சனிகிழக் கேயாகும்*
*பரரொத்த சேய்புதன் உத்தரம் பானுநாள்*
*நேரொத்த வெள்ளி குடக்காக நிற்குமே.*

வார நாள்களில் சூலம் வருகின்ற திசையைக் கூறுமிடத்து, திங்களும் சனியும் கிழக்கே சூலமாகும், செவ்வாயும் புதனும் வடக்காகும், ஞாயிறும் வெள்ளியும் மேற்காகும்.

*798.* ***தெக்கண மாகும் வியாழத்துச் சேர்திசை***
***அக்கணி சூலமு மாமிடம் பின்னாகில்***
***துக்கமும் இல்லை வலமுள்னே தோன்றிடின்***
***மிக்கது மேல்வினை மேன்மேல விளையுமே.***

வியாழக் கிழமை சூல திசை தெற்காகும், சூலம் இடப்பக்கமாகவும் பின்பக்கமாகவும் இரு பக்கப் பயணம் செல்லுவது நன்மையாம், வலப்பக்கமும் முன்பக்கமும் இருக்கச் சொல்லின், மேலும் மேலும் பயணத்தில் தீய விளைவுகள் உண்டாகும்.

## 18. கேசரி யோகம்

கேசரி என்பது ஆகாயம் அல்லது சிங்கம் என்று பொருள். யோகம் என்பது சேர்க்கை. கேசரி யோகமானது, சிங்கத்தைப் போன்ற மேல் நோக்கிப் பார்வையைச் செலுத்தியிருப்பதாகும். இந்த யோகத்தால் சாதகர் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் ஆற்றலைப் பெறுவர்.

*799.* ***கட்டக் கழன்று கீழ்நான்று வீழாமல்***
***அட்டத்தைக் கட்டி அடுப்பை அணைகோலி***
***விட்டத்தைப் பூட்டி மேற்பையைத் தாட்கோத்து***
***நட்ட மிருக்க நமனில்லை தானே.***

பிராணன் கீழே இறங்கி வராமல் அண்ணாக்கில் கட்டி, பின் அபானன் குதம் வழியாகவோ குறி வழியாகவோ போகாது குதத்தைச் சுருக்கி நிறுத்தி, பின் இரண்டு கண் பார்வைகளையும் ஒன்றாக்கி, அடுத்து மனத்தைச் சுழுமுனை வழியாகப் பாயும் பிராணனில் நிறுத்தியிருக்க, உடலைத் தாண்டின நிலைக்குச் சென்றமையால் காலத்தைக் கடக்கலாம்.

*800.* ***வண்ணான் ஒலிக்குஞ் சதுரப் பலகைமேற்***
***கண்ணாறு மோழை படாமற் கரைகட்டி***
***விண்ணாறு பாய்ச்சிக் குளத்தை நிரப்பினால்***
***அண்ணாந்து பார்க்க அழுக்கற்ற வாறே.***

சிவயோகி நாதத்தால் மோதி முன்புறமுள்ள மூளையில், இரு கண் பார்வைகளையும் மாறிமாறிப் பார்ப்பதனால் உண்டாகும் கரையின் எல்லைக்குள், இரு கரைகளினூடே ஆகாயத்தில் உண்டாகும் ஒளியைக் கொண்டு சகஸ்ரதளத்தை நிரப்பினால், நெற்றிக்கு மேலே நிமிர்ந்து பார்க்கச் சீவனின் குற்றமான இருள் விலகிப் பரிசுத்தமாகும்.

*801.* ***இடக்கை வலக்கை இரண்டையும் மாற்றித்***
***துதிக்கையால் உண்பார்க்குச் சோரவும் வேண்டாம்***
***உறக்கத்தை நீக்கி உணரவல் லார்கட்***
***கிறக்கவும் வேண்டாம் இருக்கலு மாமே.***

இடைகலை, பிங்கலை நாடிகளின்வழிப் பிராணன் இயங்குவதை மாற்றி, சுழுமுனை வழியாகப் பிராணனைச் செலுத்த வல்லார்க்குத் தளர்ச்சியிராது, உறங்கும் காலத்தில் விழித்திருந்து பயில வல்லார்க்கு, இறப்பின்றி அழியாது இருக்கக்கூடும்.

*802.* ***ஆய்ந்துரை செய்யில் அமுதநின் றூறிடும்***
***வாய்ந்துரை செய்யும் வருகின்ற காலத்து***
***நீந்துரை செய்யில் நிலாமண் டலாமாய்ப்***
***பாய்ந்துரை செய்தது பாலிக்கு மாறே.***

ஆராய்ந்து சொல்லுமிடத்துச் சாதனையில் அமுதம் நிலை பெற்று ஊறும், அது வருகின்ற பொழுது நன்கு அமைந்து ஒலித்தலைச் செய்யும், பெருகி ஒலித்தலைச் செய்யின் சந்திரமண்டலமாய், விளங்கி ஒலித்தலைச் செய்து அது பாதுகாக்கும் என்றவாறு.

*803.* ***நாவின் நுனியை நடுவே விசிறிடில்***
***சீவனும் அங்கே சிவனும் உறைவிடம்***
***மூவரும் முப்பத்து மூவருந் தோன்றுவர்***
***சாவதும் இல்லைச் சதகோடி யூனே.***

சாதகர் நல்லாசனத்தில் அமர்ந்து நாக்கின் நுனியை அண்ணாக்கின்மேல் உரசியிருப்பின், சீவனும் சிவனும் அங்கே விளங்கித் தோன்றும், மூவரோடு ஏனைய முப்பத்து மூவரும் அங்கே தோன்றுவர், உடலில் நூறு கோடி ஆண்டுகள் மரணமில்லாமல் வாழலாம்.

*804.* ***ஊனூறல் பாயும் உயர்வரை உச்சிமேல்***
***வானூறல் பாயும் வகையறி வாரில்லை***
***வானூறல் பாயும் வகையறி வாளர்க்குத்***
***தேனூறல் உண்டு தெளியலு மாமே.***

ஊனுடலால் அறியப்படும் அறிவெல்லாம் பொருந்தி அமையும் இடமாகிய சிரசின் உச்சிமேல், ஆகாய மண்டலம் விளங்கும் தன்மையை அறிபவர் இல்லை, ஆகாய மண்டலத்தைப் பெருக்கி அறியவர்க்கு, அமுதத்தை உண்டு தெளிவினை அடையலாம்.

*805.* ***மேலையண் ணாவில் விரைந்திரு காலிடித்***
***காலனும் இல்லைக் கதவந் திறந்திடும்***
***ஞாலம் அறிய நரைதிரை மாறிடும்***
***பாலனு மாவான் பராநந்தி ஆணையே.***

மேலை அண்ணாக்குப்பிரதேசத்தில் சாதனையால் பிராண அபானனாகிய இரு வாயுக்களையும் பொருந்தும்படி செய்யின், தேகத்திற்து அழிவு இல்லை, பிரமப்புழை திறந்து சாதகர் மேலே செல்வர், உலகத்தார் அறியும்படி நரையும் திரையும் மாறும், இளைஞனாவார், இது சிவசத்தி ஆணையாம்.

*806.* ***நந்தி முதலாக நாமேலே யேறிட்டுச்***
***சந்தித் திருக்கில் தரணி முழுநாளும்***
***பந்தித் திருக்கும் பகலோன் வெளியாகச்***
***சிந்தித் திருப்பவர் தீவினை யாளரே.***

இம்முறையில் சிவனை முன்னிட்டுக் கொண்டு நாவினை அண்ணாக்கினுள்ளே ஏறும்படி செய்து, அங்கே நடு நாடியின் உச்சியில் சந்திந்திருப்பின் அச்சாதகர் உலகமுழுதும் ஆள்வார், உடலோடு பின்னிக்கிடக்கும் அறிவு நீங்க, சிவனை எண்ணியிருப்பவரே உண்மையான அக்கினி காரியம் செய்தவராவார்.

*807.* ***தீவினை யாடத் திகைத்தங் கிருந்தவர்***
***நாவினை நாடின் நமனுக் கிடமில்லை***
***பாவினை நாடிப் பயனறக் கண்டவர்***
***தேவினை யாடிய தீங்கறம் பாமே.***

தீயவினைகள் தங்களை வெற்றி கொள்ள அறிவு மயங்கியிருந்த சீவர்கள், நாவால் செய்யும் சாதனையால் நாடினால் நமனுக்கு வேலையில்லை, பரந்த வினைகளை ஆராய்ந்து அவற்றின் பயனின்மையை அறிந்தவர், தெய்வப் பணியைச் செய்து அதன் இனிமையைச் சுவைத்திருப்பர்.

*808.* ***தீங்கரும் பாகவே செய்தொழி லுள்ளவர்***
***ஆங்கரும் பாக அடையநா வேறிட்டுக்***
***கோங்கரும் பாகிய கோணை நிமிர்த்திட***
***ஊன்கரும் பாகியே ஊனீர் வருமே.***

இனிய கரும்பையொத்த வினையைச் செய்பவர், சுழுமுனை நாடியாம் கரும்பைப் பெற நாவினை மேலே ஏற்றி, நடு நாடியின் கோணலை ஒழுங்கு பெறச் செய்ய, ஊனுடலிலேயே அமுதத்தைக் காண்பர்.

*809.* ***ஊனீர் வழியாக வுண்ணாவை யேறிட்டுத்***
***தேனீர் பருகிச் சிவாய நமவென்று***
***கானீர் வரும்வழி கங்கை தருவிக்கும்***
***வானீர் வரும்வழி வாய்ந்தறி வீரே.***

நாவின் வழியாக உண்ணாக்கை மேலே செலுத்தி, அதனால் ஊற்றெழுந்து வரும் அமுத்தைப் பருகிச் சிவாயநம எனச் சிந்தித்திருப்பார்க்கு, காத்தலைச் செய்கின்ற ஒளி நீர்ப்பிரவாகம் போல் முகத்தின் முன் பெருகும், அவ்வாகாய கங்கையைப் பெற்று அறிந்து கொள்ளுங்கள்.

*810.* ***வாய்ந்தறிந் துள்ளே வழிபாடு செய்தவர்***
***காய்ந்தறி வாகக் கருணை பொழிந்திடும்***
***பாய்ந்தறிந் துள்ளே படிக்கத வொன்றிட்டுக்***
***கோய்ந்தறிந் துள்ளுறை கோயிலு மாமே.***

சிவத்தைப் பொருந்தி உள்ளத்தில் வழிபாடு செய்தவர்க்கு, மலத்தைச் சுட்டெரிக்கும் அருள் சத்தி ஒலி ஒளி வடிவில் வெளிப்பட்டருளுவாள், அத்தகைய ஒலி ஒளி வடிவில் மனம் பதிவுற்றுக் கீழிறங்காது சாலந்தா பந்தனம் அமைத்து, அங்குக் குவிந்து அறிந்து தியானிப்பார்க்கு எடுத்த உடல் சிவாலயமாகும்.

*811.* *கோயிலின் உள்ளே குடிசெய்து வாழ்பவர்*
*தாயினும் நல்லார் தரணி முழுதுக்குங்*
*காயினும் நல்லவர் காய்ந்தவர் தம்முளூந்*
*தீயனும் தீயரத் தீவினை யாளர்க்கே.*

அகக்கோயிலையே வாசமாகக் கொண்டு வாழும் சீவர்கள், அனைத்து உலகுக்கும் தாயினும் மிக்க கருணை உடையவராவர், சிலர் இவைரைச் சினந்தாலும் நன்மையே செய்வர், ஆனால் சினந்தவரில் தீய வினை செய்தவர்க்குத் தீயைக் காட்டிலும் கொடியராய் அழிந்துவிடுவர்.

*812.* *தீவினை யாளர்தஞ் சென்னியி னுள்ளவன்*
*பூவினை யாளர்தம் பொற்பதி யானவன்*
*பாவினை யாளர்தம் பாவகத் துள்ளவன்*
*மாவினை யாளர்தம் மதியினுள் ளானே.*

சிவன் மூலாக்கினியை எழுப்பி யோகம் செய்பவர் சிரத்தில் இருப்பவன், அவன் சகஸ்ரதளத்தில் உணர்பவர்க்குப் பொன்னொளி மண்டலத்தில் விளங்குவான், இடைவிடாது பாவனை செய்வார்க்கு அவன் பாவகப் பொருளாய் விளங்குவான், பெருவினையாகச் சிவயோகம் புரிவோர்க்கு அவரது அறிவில் செறிந்து விளங்குபவனாய் உள்ளான்.

*813.* *மதியி னெழுங்கதிர் போலப் பதினாறாய்ப்*
*பதிமனை நூறுநூற் றிருபத்து நாலாய்க்*
*கதிமனை யுள்ளே கணைகள் பரப்பி*
*எதிர்மனை யாமல் இருந்தனன் தானே.*

சந்திரனினின்றும் எழுகின்ற கலைகளைப் போன்று பதினாறு இதழ்களையுடைய விசுத்திச் சக்கரத்திலிருந்து, பொருந்திய உடம்பாகிய மனையில் இருநூற்றிருபத்து புவனங்களிலுமாகி, நடக்கின்ற உடம்பில் ஒளிக்கதிர்களைப் பரப்பி, தத்துவங்கள் ஒன்றுக்கொன்று முரண்படாவாறு சிவன் பொருந்தியிருந்தான்.

*814.* *இருந்தனன் சத்தியு மக்கலை சூழ*
*இருந்தனன் கன்னியு மந்நடு வாக*
*இருந்தனன் மானேர் முகநில வார*
*இருந்தனன் தானும் அமுதம் பொழிந்தே.*

சித்ரூபிணியாகிய பராசத்தியும், விசுத்திச் சக்கரத்திலுள்ள கிரணங்களில் அமைத்துள்ளார்கள், அவள் அக்கிரணங்களின் நடுவாக விளங்குகிறாள், அவளே ஆன்ம தத்துவத்திலும் சந்திரனாக விளங்கினாள், இவளேதான் போகத்தில் பொருந்தி இன்பம் பொழிபவளாக உள்ளான்.

*815.* *பொழிந்த இருவெள்ளி பொன்மண் ணடையில்*
*வழிந்துள் ளிருந்தது வான்முத லங்குக்*
*கழிந்தது போகமற் காக்கவல் லார்க்குக்*
*கொழுந்தது வாகுங் குணமது தானே.*

ஆகாய முதலாகிய பராசத்தி, பெய்த வெண்மையான சுக்கிலத்திலும் பொன்மையான சுரோணிதத்திலும் பொருந்தி அவை தொழிற்படும் சுவாதிட்டானச் சக்கரத்தில் உள்ளாள், அங்கு ஆற்றல் கழியாது பாதுகாக்கும் திறமைபுடையோர்க்கு அதுவே உடலைக் காக்கும் பச்சிலை மருந்தாகும், முன் மந்திரங்களில் கண்ட விசுத்திச் சக்கரத்தின் பயன் அதுவாகும்.

*816.* *குணமது வாகிய கோமள வல்லி*
*மணமது வாக மகிழ்ந்தங் கிருக்கில்*
*தனமது வாகிய தத்துவ ஞானம்*
*இனமது வாக இருந்தனன் தானே.*

காம செயத்தை அளிக்கும் கொடி போன்ற குண்டலினி சத்தி, ஆகாய மண்டலத்தில் சிவத்துடன் சேர்க்கையுற்று மகிழ்ச்சியுடன் விளங்கினால், அட்டமாசிசித்திகளை அளிக்கும் உண்மை ஞானம் உண்டாகும், குண்டலினியின் இனமாகிய சிற்சத்தியுடன் அறிவுமயமான சிவனும் அறிவில் விளங்குவான்.

*817.* *இருந்த பிராணனும் உள்ளே எழுமாம்*
*பரிந்த இத் தண்டுடன் அண்டம் பரிய*
*விரிந்தஅப் பூவுடன் மேலெழ வைக்கின்*
*மலர்ந்தது மண்டலம் வாழலு மாமே.*

விசுத்திச் சக்கரத்தின் கீழே ஒடிக்கொண்டிருந்த பிராணன் கண்டத்திலிருந்து உள்முகமாக மேல் நோக்கிச் செல்லும், உடலைத் தாங்கிய வீணாத் தண்டை விட்டுத் தாண்டி ஆகாயத்தை அடைந்து, கவிழ்ந்த சகஸ்ரதளத்தை நிமிர்ந்த சகஸ்ரதளமாக்கி மண்டலம் வளர்ச்சி பெற்றுப் பூமண்டலத்தில் நெடிது வாழலாம்.

*818. மண்டலத் துள்ளே மனவொட்டி யாணத்தைக்*
*கண்டகத் தங்கே கருதியே கீழ்க்கட்டிப்*
*பண்டகத் தங்கே பகலே ஒளியாகக்*
*குண்டலக் காதனும் கூத்தொழிந் தானே.*

மதிமண்டலத்தில் மனத்தைப் பிணிக்கும் ஒட்டியாண பீடத்தை, கண்டு மனத்தை அங்கேயே நினைந்து கீழ்நிலையில் செல்லாமல் நிறுத்தி, பழமையான ஆனந்த மய கோசத்தில் மகாசூரியப் பிரகாசம் விளங்க, குண்டலத்தை அணிந்த கூத்தப் பெருமானும் அசைவற்று விளங்குவான்.

*819. ஒழிகின்ற வாயுவும் உள்ளே அமருங்*
*கழிகின்ற வாயுவும் காக்கலு மாகும்*
*வழிநின்ற காலத்து வட்டக் கழலைப்*
*பழிகின்ற காலத்துப் பையகற் றீரே.*

முற்கூறிய சாதனையால் விசுத்திச் சக்கரத்துக்குக் கீழே சென்று ஒழிகின்ற வாயு அண்ணாக்கின் வழி மேலே சென்று தங்கும், அதனால் ஒளியானது நிலை கொண்டு வழிகின்ற காலத்தில் சகஸ்ரதளத்தில் விளங்கும் திருவடியை, புகழ்கின்றபோது உடம்பாகிய பையை விட்டு நில்லுங்கள்.

*820. பையினி னுள்ளே படிக்கத் வொன்றிடின்*
*மெய்யினி னுள்ளே விளங்கும் ஒளியதாங்*
*கையினுள் வாயுக் கதித்தங் கெழுந்திடின்*
*மையணி கோயில் மணிவிளக் காமே.*

உடலினுள் மூலாதாரக் கதவாகிய குதத்தை (எருவாயை)  இறுகப் பிடித்தால், உடம்பினுள்ளே ஒளி விளங்குமாம், நாடியினுள் அபானன் உக்கிரமாக மேலெழுந்த போது, மலங்களோடு கூடிய பிரகாசம் பொருந்தியதாகய் விளங்கும்.

*821. விளங்கிடும வாயுவை மேலெழ உன்னி*
*நலங்கிடுங் கண்டத்து நாடியி னுள்ளே*
*வணங்கிடு மண்டலம் வாய்த்திடக் கும்பிக்*
*கணங்கிட நின்றவை சொல்லலு மாமே.*

மூலபந்தத்தால் அமைந்த வாயு மேலெழுவதை நினைந்து, கசக்குதலினால் சுருங்குகின்ற விசுத்திச் சக்கரத்தின்மேல், வணங்கத்தக்க சந்திர மண்டலம் விளங்க, அக்கினி சூரிய மண்டலங்கள் சுருங்கிட, நின்ற இத்தன்மையைச் சொல்லவா வேண்டும்.

*822. சொல்லலு மாயிடு மாகத்து வாயுவுஞ்*
*சொல்லலு மாகு மனல்நீர்க் கடினமுஞ்*
*சொல்லலு மாகும் இவையஞ்சுங் கூடிடிற்*
*சொல்லலு மாந்தூர தெரிசனந் தானே.*

ஆகாய பூதத்தில் வாயு பூதம் உள்ளதைச் சொல்லக்கூடும், மேலும் அக்கினி நீர் நிலம் ஆகியவை அங்குக் கூறலுமாம்,ஆகாயம் முதலாகிய ஐம்பூதங்களும் ஒளி மயமாக ஆகாயத்தில் பொருந்தியிருப்பதைச் சொல்லக்கூடும், அவ்வாறு கண்டவர் தூரதிருஷ்டியுடையவராவார்.

*823. தூர தரிசனஞ் சொல்லுவன் காணலாங்*
*காராருங் கண்ணி கடைஞான முட்பெய்து*
*ஏராருந்த தீபத் தெழிற்சிந்தை வைத்திடிற்*
*பாரா ருலகம் பகன்முன்ன தாமே.*

தூர திருஷ்டியைப் பற்றிச் சொல்லுவதை உங்கள் அனுபவத்தில் காணலாம், மேகத்தைப் போன்று அருள் வழங்கும் கண்ணையுடைய பராசத்தியைப் பொருந்துவதால் உண்டாகும் ஞானத்தை உள்ளே நிறுத்தி, அழகு நிறைந்த சிவத்தினிடம் சிந்தையை வைத்திருந்தால், பூமி முதலான உலகங்கள் பகலில் காணப்படுவது போல் நன்கு விளங்கும்.

*824. முன்னெழு நாபிக்கு முந்நால் விரற்கீழே*
*பன்னெழு வேதப் பகலொளி யுண்டென்னும்*
*நன்னெழு நாதத்து நற்றீபம் வைத்திடத்*
*தன்னெழு கோயில் தலைவனு மாம்.*

முன்னே எழுகின்ற உந்திக் கமலத்துக்குப் பன்னிரண்டு விரற்கடை கீழேயுள்ள மூலாதாரத்தில், பன்னி எழுகின்ற வேதம் சூரியனாகிய புருடன் விளங்குவதாகக் கூறும், கீழேயுள்ள குண்டலினியைப் பந்தித்து மேலே செலுத்துவதில் நன்றாக எழுகின்ற நாதமாகிய அறிவில் மனம் பதிந்திருப்பின், ஆன்மாவாகிய தன்னிடம் எழுகின்ற கோயிலில் சிவம் பிரகாசிக்கும்.

# 19. பரியங்க யோகம்

பரியங்கம் - கட்டில், யோகம் - சேர்க்கை, கட்டிலில் பெண்ணோடு கூடியிருந்து செய்யும் போகத்தை யோகமாக்குதல் பரிபங்க யோகமாகும்.

*"பெற்ற சிற்றின்பமே பேரின்ப மாய்அங்கே*
*மூற்ற வரும்பரி சுந்தீபற*
*முளையாது மாயைஎன் றுந்தீபற"*

- திருவுந்தியா - 33

இதுவே ஒளியை அடைவதற்குரிய குறுக்கு வழி என்கிறார், தியேந்திய குருமார்களில் சிறந்தவராக விளங்கிய நரோப்பா அவர்கள்.

*825. பூசு வனவெல்லாம் பூசிப் புலர்த்திய*
*வாச நறுங்குழல் மாலையுஞ் சாத்திக்*
*காயக் குழவி கலவியொ டுங்கலந்*
*தூசித் துளையுறத் தூங்காது போகமே.*

பூசத்தகுந்த வாசனைத் திரவியங்களெல்லாம் ஆடவன் உடம்பில் பூசிக் கொண்டு, மலர்ந்த மணம் நிறைந்த மாலையை அணிவித்து, பெண்ணோடு கலவியிலே பொருந்தி, மனமானது பிரமாந்திரமாகிய உச்சியை நினைந்திருக்கப் போகம் தளராது.

*826. போதத்தை யுன்னவே போகாது வாயுவு*
*மேகத்த வெள்ளியு மீளும் வியாழத்தில்*
*சூதொத்த மென்முலை யாளுநற் சூதனுந்*
*தாதிற் குழைந்து தலைகண்ட வாறே.*

முன்மந்திரத்தில் கூறியவாறு பிரமரந்திரத்தில் விளங்கும் பேரறிவுப் பொருளை நினைவில் கொண்டு போகம் புரியின் காமவாயு விரைந்து தொழிற்படாது, அப்போது நீர்த்தன்மையுடைய சுக்கிலம் சுரோனிதத்தில் கலக்காது மீளும், சூதாடு கருவியையொத்த தனங்களையுடைய பெண்ணும் உடம்பாகிய தேரினை நடத்தும் ஆணும், தம்மில் பொருந்திய கூட்டுறவால் விளைந்த சுக்கில சுரோணிதங்கள் விந்துநாதங்களாக மாற்றம் பெற்றுச் சிரசில் பொருந்தும்.

*827. கண்டனுங் கண்டியுங் காதல்செய் யோகத்து*
*மண்டலங் கொண்டிரு பாலும் வெளிநிற்கும்*
*வண்டியை மேற்கொண்டு வானீர் உருட்டிடத்*
*தண்டொரு காலுந் தளராது அங்கமே.*

தலைவனும் தலைவியும் விரும்பிப் புணரும் யோகத்து, அக்கினி மண்டலம் சூரிய மண்டலங்களைக் கடந்து சந்திர மண்டலத்தில் இருவரும் சிரசின் மேலேயுள்ள வெளியை அறிவர், உடலாகிய வண்டியை மேலும் மேலும் செலுத்துவதால் மதிமண்டலத்தில் ஆகாய கங்கையாகிய ஒளியைப் பெருக்கிட, அங்கம் அங்கத்தில் தண்டு ஒருபோதும் தளர்ச்சியடையாது.

*828. அங்கப் புணர்ச்சியு மாகின்ற தத்துவ*
*மங்கத்தில் விந்து வருகின்ற போகத்துப்*
*பங்கப் படாமற் பரிகரித் துத்தம்மைத்*
*தங்கிக் கொடுக்கத் தலைவனு மாமே.*

அவ்விடத்தில் அப்புணர்ச்சியின் காரணமான காமாக்கினி, உடம்பில் விந்துவை நீக்கம் செய்கின்ற போகத்தில், அது கெடாமல் பாதுகாத்து, யோகத்தினால் மாற்றிவிந்து செயம் பெற்றவன் தலைவனாவான்.

*829. தலைவனு மாயிடுந் தன்வழி ஞானந்*
*தலைவனு மாயிடுந் தன்வழி போகந்*
*தலைவனு மாயிடுந் தன்வழி யுள்ளே*
*தலைவனு மாயிடுந் தன்வழி அஞ்சே.*

அங்ஙனமாகிய தலைவன் ஆன்மாவை அறிந்தவனாகின்றான், அவன் விரும்பிய சிவயோகம் தானே வந்தமையும், அவன் தன்னை வசப்படுத்தி ஆளும் தலைவனாவான், அவன் விருப்பப்படி பஞ்சபூதங்கள் முதலியன நடக்கும்.

*830. அஞ்சி கடிகைமேல் ஆறாங் கடிகையில்*
*துஞ்சு தொன்றத் துணைவி துணைவன்பால்*
*நெஞ்சு நிறைந்தது வாய்கொளா தென்றது*
*பஞ்ச கடிகை பரியங்க யோகமே.*

ஐந்து நாழிகைக்கு மேல் ஆறாவது நாழிகையில், துணைவி துணைவனுடன் பொருந்தி உறக்கங் கொள்வாள், ஐந்து நாழிகை கொண்ட பரியங்க யோகம், மனம் நிறைவோடு இனித் தேவையில்லை என்னும்படி செய்தது.

*831. பரியங்க யோகத்துப் பஞ்ச கடிகை*
*அரியஇவ் யோகம் அடைந்தவர்க் கல்லது*
*சரிவளை முன்கைச்சி சந்தனக் கொங்கை*
*உருவித் தழுவ ஒருவர்க் கொண்ணாதே.*

பரியங்க யோகத்தில் ஐந்து நாழிகை, அருமையாக இருப்பவர்க்கல்லாமல், நழுவுகின்ற வளையலை அணிந்த முன்கையையுடையவளும் விஷய வாசனை பொருந்திய சூரிய சந்திரர்களாகிய தனங்களையுமுடைய குண்டலினி சத்தியை, கடந்து மேற்செல்ல ஒருவராலும் முடியாது.

*832. ஒண்ணாத யோகத்தை உற்றவ ராரென்னில்*
*விண்ணார்ந்த கங்கை விரிசடை வைத்தவன்*
*பண்ணா அமுதினைப் பஞ்ச கடிகையில்*
*எண்ணா மெனஎண்ணி இருந்தான் இருந்ததே.*

அடைவதற்கு அருமையான இவ்யோகத்தை அடைந்து அறிவித்தவர்யார் என்றால், தேவகங்கையைத் திருமுடிமேல் வைத்தவனாகிய சீகண்ட ருத்திரனாவான், நாதத்தோடு கூடிய ஒளியினை ஐந்த நாழிகை வரையில், எண்ணாமல் எண்ணி நுயர்ந்திருந்தான்.

*833. ஏய்ந்த பிராயம் இருபது முப்பதும்*
*வாய்ந்த குழலிக்கு மன்னார்க்கு மானந்தம்*
*வாய்ந்த குழலியோ டைந்து மலர்ந்திடச்*
*சோர்ந்தன சித்தமுஞ் சோர்வில்லை வெள்ளிக்கே.*

இவ்யோகத்துக்குப் பொருந்திய வயது பெண்ணுக்கு இருபதும் ஆணுக்கு முப்பதுமாகும், அப்போது பொருந்திய பெண்ணுக்கும் மன்னனாகிய ஆணுக்கும் ஆனந்தமாம், பொருந்திய அப்பெண்ணோடு ஐம்பொறிகளும் மலர் மனம் முதலியன அழிந்திடும், சுக்கிலத்துக்கு அழிவில்லை.

*834. வெள்ளி யுருகிப் பொன்வழி ஓடாமே*
*கள்ளத்தட் டானார் கரியிட்டு மூடினார்*
*கொள்ளி பறியக் குழல்வழி யேசென்று*
*வள்ளியுண் ணாவில் அடக்கிவைத் தாரே.*

வெண்ணிறமாகிய சுக்கிலம் உருகிப் பொன்னிறமாகிய சுரோணிதத்தில் (நாதத்தில்) கலக்காமல், மறைந்துள்ள தட்டானாகிய சிவன் கரியாகிய அருளை நல்கிப் பக்குவம் செய்தார், நெருப்பாகிய அக்கினி கலை உண்டாக ஊது குழலாகிய சுழுமுனை வழியே சென்று, பொன்னாகிய சந்திரனைச் செப்பாகிய உள்நாவில் விளங்க வைத்தார்.

*835. வைத்த இருவருந் தம்மின் மகிழ்ந்துடன்*
*சித்தம் கலங்காது செய்கின்ற ஆனந்தம்*
*பத்து வகைக்கும் பதினெண் கணத்துக்கும்*
*வித்தக னாய்நிற்கும் வெங்கதி ரோனே.*

இவ்வண்ணம் விந்து நீக்கமின்றிப் புணரும் இருவரும் தம்மில் இன்புற்று, காம வசப்படாமல் தேவகாரியமாக நினைத்துச் செய்கின்ற ஆனந்த நிலையில், பத்துத் திசைகளுக்கும் பதினெட்டு வகைத் தேவர்களுக்கும், தலைவனாகவுள்ள சிவ சூரியன் விளங்குவான்.

*836. வெங்கதி ருக்குஞ் சனிக்கும் இடைநின்ற*
*நங்கையைப் புல்லிய நம்பிக்கோ ரானந்தந்*
*தங்களிற் பொன்னிடை வெள்ளிதா ழாமுனந்*
*திங்களிற் செவ்வாய் புதைத்திருந் தாரே.*

விருப்பத்தைத் தருகின்ற சூரியனுக்கும் சனிப்பித்தலைச் செய்யும் கருவாய்க்கும் இடையில், சிறந்த பெண்ணைப் புணருகின்ற ஆண்மகன் ஆனந்தமடைகிறான், இருவரது புணர்ச்சியில் சுரோணித வழிச் சுக்கிலம் பாயாமல், சந்திர மண்டலத்தில் விளங்கும் செந்நிறம் பொருந்திய வாக்கின் சந்தியாகிய நாதத்தில் திளைத்திருந்தனர்.

*837. திருத்திப் புதனைத் திருத்தல்செய் வார்க்குக்*
*கருத்தழ காலே கலந்தங் கிருக்கில்*
*வருத்தமு மில்லையா மங்கை பங்கற்குந்*
*துருத்தியில் வெள்ளியுஞ் சோரா தெழுமே.*

பரியங்க யோகத்தால் புதனாகிய அறிவைச் சந்திர மண்டலத்தில் வைப்பதாகிய நன்மையைச் செய்வார்க்கு, வியாபகக் கருத்துகள் பொருந்த அங்கு இருந்தால், பெண்ணுடன் பொருந்துவார்க்குத் துன்பமும் இல்லையாம், உடம்பில் விந்து நீக்கமின்றி ஊர்த்துவ ரேதக அமையும்.

*838. எழுகின்ற தீயைமுன் னேகொண்டு சென்றிட்டால்*
*மெழுகுரு கும்பரி செய்திடும் மெய்யே*
*உழுகின்ற தில்லை ஒளியை அறிந்தபின்*
*விழுகின்ற தில்லை வெளியறி வார்க்கே.*

சுவாதிட்டானத்திலுள்ள காமாக்கினியை (பாத்திபாக்கினியை) மூலாதார வழிப் புருவ நடுவுக்குக் கொண்டுசென்றால், அனலின் முன் மெழுகு போன்று சாதகர்க்கு உடம்பு காணாதொழியும், சோதியைக் கண்ட பிறகு உழுதலாகிய செயல் இல்லை, புருவ நடுவைத் தாண்டி துவாதசாந்தப் பெருவெளியை அறிந்த போர்க்கு உடல் கீழே விழுகின்றதில்லை.

*839. வெளியை அறிந்து வெளியி னடுவே*
*ஒளியை அறியி னுளிமுறி யாமே*
*தெளியை அறிந்து செழுநந்தி யாலே*
*வெளியே அறிந்தனன் மேலறி யேனே.*

ஆகாயத் தானத்தை அறிந்து, அங்கு விளங்கும் பொன்னொளியை அறியின், உள்ளம் வேறுபடாமல் தெளிவான ஞானத்தைப் பெற்று, செழுமையான சிவனருளால் பரமான ஆகாயத்தை அறிந்திருந்தேன், அதற்கு மேல் யான் ஒன்றும் அறியவில்லை.

*840. மேலாந் தலத்தில் விரிந்தவ ராரெனின்*
*மாலாந் திசைமுகன் மாநந்தி யாயவர்*
*நாலா நிலத்தி னடுவான வப்பொருள்*
*மேலா யுரைத்தனர் மின்னிடை யாளுக்கே*

ஒன்றற்கொன்று மேலாக விளங்கும் தலங்களில் விளங்குகின்றனர் யாரென வினவில், திருமால், பிரமன், உருத்திரன் முதலியோர் ஆவர், துரிய பூமியில் விளங்கும் சிவமாகிய பெரும்பொருள், பராசத்தியைவிட மேலே உள்ளது என்று கூறினர்.

*841. மின்னிடை யாளுமின் னாளனுங் கூட்டத்துப்*
*பொன்னிடை வட்டத்தின் உள்ளே புகப்பெய்து*
*தன்னொடு தன்னைத் தலைப்பெய்ய வல்லிரேன்*
*மண்ணிடைப் பல்லூழி வாழலு மாமே.*

மின்னொளியில் விளங்கும் சத்தியும் அவளை ஆள்பவளாகிய சிவமும் ஆகிய இருவரையும் கூட்டத்துடன், பொன்னொளி கொண்ட ஆகாயத்தில் நிலை பெறும்படி செய்து, அக்கூட்டத்திடை ஆன்மாவாகிய தன்னையும் காண வல்லிரேல், இவ்வுலகத்து நீங்கள் நெடுங்காலம் வாழலாம்.

*842. வாங்க லிறுதலை வாங்கலில் வாங்கிய*
*வீங்க வலிக்கும் விரகறி வாரில்லை*
*வீங்க வலிக்கும் விரகறி வாளரும்*
*ஓங்கிய தன்னை உதம்பண்ணி னாரே.*

வெளிமுகமான காம வாயுவை உள்ளுங்கிழுத்துச் சுக்கிலம் கெடும்படி செய்தலும், அவ்வாறு உள்ளுக்கிழுத்த காம வாயுவை ஊர்த்துவ முகமாக்குதலுமாகிய உபாயத்தை அறிவா இல்லை, அவ்வாறு மாற்றம் செய்யும் உபாயத்தை அறிந்தவரும், வளர்ச்சி பெற்ற தன்னைச் சிவத்திடம் ஆகுதி பண்ணினவராவார்.

*843. உதமறிந் தங்கே ஒருசுழிப் பட்டாற்*
*கதமறிந் தங்கே கபாலங் கறுக்கும்*
*இதமறிந் தென்றும் இருப்பான் ஒருத்தி*
*பதமறிந் தும்முளே பார்கடிந் தானே.*

ஆத்மாகுதி பண்ணிப் பிரமப்புழையின் மேலான சகஸ்ரதளத்தில் பொருந்தினால், அவ்வழியிலே மண்டையிலுள்ள உரோமம் சுருக்கும், சீவனுக்குச் செய்ய வேண்டிய நன்மையைக் கருதிக் கொண்டு பராசத்தி விளங்குவாள், பக்குவத்தை உம்மிடம் அறிந்து உம்மிடமுள்ளே பிருதிவிச்சக்கரத்தின் காரியத்தை அவள் மாற்றியருளுவாள்.

*844. பாரில்லை நீரில்லை பங்கயம் ஒன்றுண்டு*
*தாரில்லை வேரில்லை தாமரை பூத்தது*
*ஊரில்லை காணும் ஒளியது ஒன்றுண்டு*
*கீழில்லை மேலில்லை கேள்வியிற் பூவே.*

சகஸ்ரதளமாகிய தாமரை ஒன்றுள்ளது, சிதாகாயத்தில் விளங்குவதால் பூமியும் நீரும் இல்லை, சகஸ்ரதளமாகிய இத்தாமரை மலர்ந்தது, பூவாகவே உள்ளமையால் மொட்டும், மேலிருந்து வந்தமையால் வேரும் இல்லை, அங்குக் காணப்படுகின்ற ஒளி ஒன்றுள்ளது, அகண்டமானமையின் குறிப்பிட்ட இடம் இல்லை, நாதத்துக்குக் காரணமான இச்சகஸ்ரதள மலருக்கு, எங்கும் படர்ந்துள்ளமையின் அடியும் நுனியும் இல்லை.

## 20. அமுரி தாரணை

அமுரி - வீரியம், தாரணை - தரித்தல், அமுரி தாரணையாவது, வீரியத்தை உடம்பில் தரிக்கும்படி செய்தல், குடிநீர், சிவ நீர், வான் நீர் ஆகாய கங்கை, அமுத நீர், உவரி, தேறல், மது, கள், மலை நீர் என்பனவெல்லாம் அமுரியைக் குறிக்கும் பல சொற்களால், "சந்திரன் தூலத்தில் வீரியமாகவும், சூக்குமத்தில் ஒளியாகவும், பரத்தில் ஆன்மாவின் சாட்சியாகவும் உள்ளது." - யோகசிகோ உபநிடதம், அமுரியைச் சிறுநீர் என்று கல்ப நூல் கூறும். பரியங்க யோகத்தின் பின் இப்பகுதி அமைந்திருப்பதால் அப்பொருள் இங்குப் பொருந்துமாறு காண்க.

*845. உடலிற் கிடந்த உறுதிக் குடிநீர்க்*
*கடலிற் சிறுகிணற் றேற்றுமிட் டாலொக்கும்*
*உடலில் ஒருவழி ஒன்றுக் கிறைக்கில்*
*நடலைப் படாதுயிர் நாடலு மாமே.*

உடம்பினின்றும் நீங்காது உறுதியைப் பயப்பதாகவுள்ள உணர்வு நீரானது, கடலின் அருகே சிறு கிணறு தோண்டி ஏற்றமிட்டு இறைத்தலை ஒத்திருக்கும், உடலில் வேறொரு வழியாகக் கீழ்ப்போவதை மேலே செலுத்தினால், உயிர் வருந்தாது பாதுகாக்கலாம்.

*846. தெளிதரும் இந்தச் சிவநீர் பருகில்*
*ஒளிதரும் ஓராண்டில் ஊனமொன் றில்லை*
*வளியுறும் எட்டின் மனமும் ஒடுங்குங்*
*களிதரும் காயங் கனகம தாமே.*

தெளிந்த இந்தச் சிவநீரைக் கொண்டால், ஓராண்டு சாதனத்தில் ஒளியைக் காணலாம், கெடுதல் இல்லாதது, இது காற்றுடன் கலந்து மேலேறும், எட்டு ஆண்டுகளில் மனம் கீழ்நோக்குதலைத் தவிர்த்து மேலே நிற்கும், மகிழ்ச்சியை விளைவித்துக் கொண்டிருக்கும், உடம்பு பொன் போன்று பிரகாசிக்கும்.

*847. நூறு மிளகு நுகருஞ் சிவத்தினீர்*
*மாறும் இதற்கு மருந்தில்லை மாந்தர்கள்*
*தேறில் இதனைத் தெளியுச்சி கப்பிடின்*
*மாறும் இதற்கு மறுமயி ராமே.*

அவ்வாறு அருந்தும் சிவநீரானது கீழேயுள்ள குறியை நெருக்குவதாலும் பிழிதலாலும் அதன் தன்மை கெட்டு மேலேறும், உயிரை உடம்பில் நீடிக்கச் செய்ய இதைவிட மேலான மருந்து வேறில்லை, மக்கள் இச்சூட்சமத்தை உணர்ந்து தெளிந்து சிரசில் பாயச் செய்து கொண்டால், நரைந்த உரோமம் கருப்பாகும் மாற்றத்தைக் காணலாம்.

*848. கரையரு கேநின்ற கானல் உவரி*
*வரைவரை என்பர் மதியிலா மாந்தர்*
*நுரைதிரை நீக்கி நுகரவல் லார்க்கு*
*நரைதிரை மாறும் நமனுமங் கில்லையே.*

அறிவில்லாத மக்கள், சிறுநீர்க் குழாய்க்கருகில் உள்ள சுக்கிலத்தைக் கழிக்க வேண்டும் என்பர், சத்தற்ற முதல் நிலையையும் முதிர்ந்த நிலையையும் அகற்றி அருந்த வல்லார்க்கு உரோமம் நரைத்தலும் தோல் சுருங்குதலும் மாறும், அவ்வாறு நீரை உடம்பில் அமைக்க வல்லார்க்கு எம பயம் இல்லையாம்.

*849. அளக நன்னுத லாயோ ரதிசயங்*
*களவு காயங் கலந்த இந்நீரில்*
*மிளகு நெல்லியும் மஞ்சளும் வேம்பிடில்*
*இளகும் மேனி இருளுங் கபாலமே.*

அழகிய கூந்தலையுடைய பெண்ணே! ஒரு வியப்பு, உடம்பில் மறைமுகமாகச் சென்று (உணர்வாகிய) இந்நீர் சிரத்தை அடையுங்காலத்து, மிளகு, நெல்லிப் பருப்பு, கத்தூரி மஞ்சள், வேப்பம் பருப்பு ஆகிவற்றை அரைத்துத் தலையில் தேய்த்து முழுகி வருவீராயின், உடம்பு மென்மையாவதோடு உரோமம் கருமையாகும்.

*850. வீர மருந்தென்றும் விண்ணோர் மருந்தென்றும்*
*நாரி மருந்தென்றும் நந்தி அருள்செய்தான்*
*ஆதி மருந்தென் றறிவார் அகவிடஞ்*
*சோதி மருந்திது சொல்லவொண் ணாதே.*

வீரியத்தால் உண்டான படியான வீர மருந்து என்றும், ஆகாய வெளியில் சோதியாக அமைவதால் தேவர்கள் மருந்தென்றும், பெண்ணால் அடையப்படுவதால் நாரி மருந்தென்றும், என் குருநாதன் அருளிச் செய்தான், இதனை முதன்மையான மருந்தென்று யோகியர் அறிவர், இது விரிந்த சோதி மயமானது, இதனைச் சாமானியர்க்குச் சொல்லலாகாது.

## 21. சந்திர யோகம்

சந்திர யோகம் என்பது சந்திரனை உடம்பில் விளங்கச்செய்யும் யோகம் என்றபடி. புறத்தே சந்திரன் சூரியன் அக்கினி முதலிய ஒளிப்பொருள்கள் இருப்பன போன்று அகத்தேயும் உண்டு.

*851. எய்து மதிக்கலை சூக்கத்தி லேறியே*
*எய்துவ தூலம் இரு வகைப் பக்கத்துள்*
*எய்துங் கலைபோல ஏறி இறங்குமாந்*
*துய்யது சுக்கத்துத் தூலத்த காயமே.*

சந்திரகலை தூல உடலில் இருந்து சூக்கும் உடலுக்கு ஏறியும், சூக்கும உடலில் இருந்து தூல உடலுக்கு இறங்கியும் வரும், இது புறத்திலுள்ள சந்திரன் ஒரு பட்சத்தில் வளர்வதும் மற்றொரு பட்சத்தில் தேய்வதும் போல் அமையும், சந்திர கலை விளக்கத்தால் சூக்கும உடல் தூய்மை பெறுவதற்கேற்பத் தூல உடலும் தூய்மை பெறும்.

*852. ஆகின்ற சந்திரன் சூரியன் அங்கியுள்*
*ஆகின்ற ஈரெட்டொ டாறிரண் டீரைந்துள்*
*ஏகின்ற வக்கலை யெல்லா மிடைவழி*
*ஆகின்ற யோகி அறிந்த அறிவே.*

உடம்பினுளாகின்ற சந்திரன் சூரியன் அக்கினியாகிய மூன்றுக்கும், முறையே பதினாறு பன்னிரண்டு பத்தாக இயங்குகின்ற கலைகள் எல்லாம், நடுநொடியான சுழுமுனை வழி இயங்கச் செய்கின்ற யோகி அறிந்த அறிவேயாம்.

*853. ஆறாற தாங்கலை ஆதித்தன் சந்திரன்*
*நாறா நலங்கினால் ஞாலங் கவர்கொளப்*
*பேறாங் கலைமுற்றும் பெருங்கால் ஈரெட்டு*
*மாறாக் கதிர்கொள்ளு மற்றங்கி கூடவே.*

பன்னிரண்டு கலைகளையுடைய சூரியனைச் சந்திரனோடு சேர்க்கப் பயின்றவர், உலகம் உவக்கும் பேற்றினை எய்துவர், பெருங்கால் என்ற சந்திர கலை பதினாறும், அக்கினி கலைக சேரவே சூரிய கலை அடங்கப்பெற்று விளங்கும்.

*854. பத்தும் இரண்டும் பகலோன் உயர்கலை*
*பத்தினொ டாறும் உயர்கலை பான்மதி*
*ஒத்தநல் அங்கிய தெட்டெட் டுயர்கலை*
*அத்திறன் நின்றமை ஆய்ந்துகொள் வீரே.*

சூரிய கலை உயர்ந்து செல்லும் அளவு பன்னிரண்டாகும், வெண்மதிக்கலை உயர்ந்த அளவு பதினாறாம், சூரிய கலையும் சந்திர கலையும் பொருந்திய அக்கினி கலையின் வியாபகம் அறுபத்து நான்காகும், அவ்வாறாகக் கலைகள் நின்றமையை அறிந்துகொள்ளுங்கள்.

*855. எட்டெட் டனலின் கலையாகும் ஈராறுட்*
*சுட்டப் படுங்கதி ரோனுக்குஞ் சூழ்கலை*
*கட்டப் படுமீ ரெட்டா மதிக்கலை*
*ஒட்டப் பாடஇவை ஒன்றோடொன் றாகவே.*

அக்கினியின் கலைகள் அறுபத்து நான்காகும், சூரியனுக்கும் சூழ்ந்துள்ள கலைகள் பன்னிரண்டு என்று சுட்டி அறியப்பெறும், விந்து செயத்தால் அமையும் சந்திர பதினாறாகும், இக்கலைகள் எல்லாம் ஒன்றொயொன்று பொருந்தியிரா.

*856. எட்டெட்டும் ஈராறும் ஈரொட்டுந் தீக்கதிர்*
*சுட்டிட்ட சோமனி தோன்றுங் கலையென்ப*
*கட்டப் படுந்தார கைகதில் நாலுள*
*கட்டிட்ட தொண்ணூற்றொ டாறுங் கலாதியே.*

அறுபத்து நான்கும், பன்னிரண்டும் பதினாறும், முறையே அக்கினி சூரியன் விந்து நீக்கமற்ற சந்திரன் ஆகியவற்றின் கலைகள் என்பர், இவை கட்டப்படும் மூலாதாரத்திலுள்ள நட்சத்திரத்துக்கு நான்கு கலைகள் உள்ளன, இவ்வாறு கட்டப்பட்ட தொண்ணூற்றாறும் கலைகளாகும்.

*857. எல்லாக் கலையும் இடைபிங் கலைநடுச்*
*சொல்லா நடுநாடி யூடே தொடர்மூலஞ்*
*செல்லா எழுப்பிச் சிரத்துடன் சேர்தலால்*
*நல்லோர் திருவடி நண்ணிநிற் பாரே.*

சோம சூரியாக்கினியாகிய எல்லாக் கலைகளும், இடை பிங்கலை நடுநாடியின் வழியே தொடர்புடையன, அவற்றின் இயல்பான கீழ்நோக்கு தலைத் தடுத்துச் சிரசின்மேல் சகஸ்ரதளத்தில் சேரும்படி செய்தலால், நல்ல யோகியர் சிவத்தியானத்தில் பொருந்தியிருப்பார்.

*858. அங்கியில் சின்னக் கதிரிரண் டாட்டத்துத்*
*தங்கிய தாரகை யாகுஞ் சசிபானு*
*வங்கிய தாரகை யாகும் பரையொளி*
*தங்கு நவசக்ர மாகுந் தரணிக்கே.*

கீழேயுள்ள அக்கினியில் குறைவினையுடைய இடைபிங்கலைகளின் அசைவில், பொருந்தி ஒளியாகும் சந்திர சூரியர்கள், நாதத்தைச் செய்கின்ற பிரணவமாக மேலே சென்ற போது விளங்கும், அவ்வொளியே பரையொளி விளங்கும் மேன்மையான சக்கரமாகப் பூமியில் விளங்கும்.

*859. தரணி சலங்கனல் கால்தக்க வானம்*
*அரணிய பானு அருந்திங்கள் அங்கி*
*முரணிய தாரகை முன்னிய ஒன்பான்*
*பிரணவ மாகும் பெருநெறி தானே.*

நிலம், நீர், தீ, காற்று, சிறந்த ஆகாயம், அழகிய சூரியன், அருமையான சந்திரன், அக்கினி, மாறுபாட்டைச் செய்யும் (சீவ) ஒளியாகிய ஒன்பதும், பிரணவமாகிய பெரு நெறியாகும்.

*860. தாரகை மின்னுஞ் சசிதேயும் பக்கத்துத்*
*தாரகை மின்னா சசிவளர் பக்கத்துத்*
*தாரகை பூவிற் சகலத்து யோனிகள்*
*தாரகை தாரகை தானாஞ் சொரூபமே.*

சந்திரன் தேய்பிறை அனுசரித்துக் கீழ்முகமான போது மூலாதாரத்திலுள்ள ஒளி பிரகாசம் அடையும், சந்திரன் வளர்பிறையை அனுசரித்து மேல் முகமான போது மூலாதாரத்திலுள்ள ஒளி பிரகாசம் இராது, மூலாதாரத்திலுள்ள ஒளியில் எல்லா யோனிகளும் உள்ளன, மூலாதாரச் சக்கரத்துக்குக் காரணமான அகவொளியே சகல சீவர்களின் சொரூபமாகும்.

*861. முற்பதி னைஞ்சின் முளைத்துப் பெருத்திடும்*
*பிற்பதி னைஞ்சிற் பெருத்துச் சிறுத்திடும்*
*அப்பதி னைஞ்சும் அறியவன் லார்கட்குச்*
*செப்பரி யான்கழல் சேர்தலு மாமே.*

சந்திரானது கிரணங்கள் முதல் பதினைந்து நாள்களில் சிறிது சிறிதாக வளர்ந்து பெருத்துப் பூரணத்தைப் அடையும், பிற்பதினைந்தில் சிறிது சிறிதாகத் தேய்ந்து பெருத்த நிலையினின்றும் குறைந்துவிடும், அகரச் கூட்டால் உணர்த்தும் வளர்பிறையை அறிய வல்லவர்களுக்கு, அளவிட்டுக் கூற முடியாத பெருமையுடைய சிவனது திருவடியை அடைதலுமாகும்.

*862. அங்கி எழுப்பி யருங்கதிர் ஊட்டத்துத்*
*தங்குஞ் சசியால் தாமமஐந் தைந்தாகிப்*
*பொங்கிய தாரகை யாம்புலன் போக்கறத்*
*திங்கள் கதிரங்கி சேர்கின்ற யோகமே.*

மூலத்தீயை எழுப்பி அருமையான சூரிய மண்டலப் பெருக்கத்தில், விளங்கும் சந்திரமண்டலத்தால் அகர உகர மகர விந்து நாதமாகிய ஐந்தும் விரிந்த பிரபையுடைய தாய், ஒளியான பிரணவம் விளங்கும், அதனால் ஐம்புல வழி போகாது சந்திரன் சூரியன் அக்கினியாகிய மூன்றும் சேர்கின்ற யோகம் அமையும்.

*863. ஒன்றிய ஈரெண் கலையும் உடலுற*
*நின்றது கண்டும் நினைக்கிலர் நீதர்கள்*
*கன்றிய காலன் கருத்துழி வைத்தபின்*
*சென்றதில் வீழ்வர் திகைப்பொழி யாரே.*

ஒன்றுபட்ட சந்திர கலைகள் பதினாறும் உடம்பின் கண் பொருந்த, நிற்கின்ற ஒளி நிலை கண்டும் தாழ்வானவர்கள் உண்மையை நினைக்கின்றிலர், அதனால் அவர்கள் சினங்கொள்ளும் எமன் உடம்பினின்றும் உயிரைப் பிரிக்க வண்ணம் வைத்தபின், அவ்வெண்ணப்படி சென்று இறப்பு என்னும் சுழியில் வீழ்வர், இத்தடுமாற்றமாகிய மயக்கத்தின்றும் விடுபடார்.

*864. அங்கி மதிகூட வாகும் கதிரொளி*
*அங்கி கதிர்கூட வாகு மதியொளி*
*அங்கி சசிகதிர் கூடவத் தாரகை*

ஆண்குறியிலுள்ள சந்திரன் மூலாக்கினியோடு பிரமந்திரம் நோக்கிச் சென்றால் சூரிய ஒளி கிட்டும்.மூலாதாரத்திலுள்ள அக்கினியையும் மணிபூரகத்திலுள்ள சூரியனையும் ஒன்றாகச் சேர்ப்பதில் சந்திரன் ஒளி அமையும், இவ்விரண்டு ஒளியும் பிரமந்திரத்தில் ஒன்றானால் சோம சூரியாக்கினி கூடிய பிரணவம் அமையும், அந்நிலையே சகலமும் ஆம்.

*865. ஈராறு பெண்கலை எண்ணிரண் டாண்கலை*
*பேராமற் புக்குப் பிடித்துக் கொடுவந்து*
*நேராகத் தோன்றும் நெருப்புற வேபெய்யில்*
*ஆராத ஆனந்தம் ஆனந்த மானதே.*

பன்னிரண்டு கலைகளையுடைய சூரியன் பெண், பதினாறு கலைகளையுடை சந்திரன் ஆண், இவ்விரண்டும் புறத்தே செல்லாமல் பிடித்து நிறுத்தி, முகத்துக் முன் தோன்றும் ஒளியில் கலப்பித்தால், தெவிட்டாத திருவடி இன்பம் நிலைத்த இன்பமாக விளங்கும்.

*866. காணும் பரிதியின் காலை இடத்திட்டு*
*மாணும் மதியதன் காலை வைத்திட்டுப்*
*பேணியே யிவ்வாறு பிழையாமற் செய்வீரேல்*
*ஆணி கலங்காதவ் வாயிரத் தாண்டே.*

மாட்சிமையுடைய சந்திரனாகிய இடக்கண் பார்வையைச் சூரியனாகிய வலக்கண் பார்வையோடு குரு காட்டிய நெறியில் பொருந்தியும், தோன்றுகின்ற சூரியனாகிய வலக்கண் பார்வையை இடக்கண் பார்வையோடு பொருந்தியும், இம்முறையில் நின்று வழுவாமல் பாதுகாத்து வந்தால், ஆயிரம் ஆண்டு இவ்வுடம்பாகிய ஆணி கெடாது நிலைபெறும்.

*867. பாலிக்கும் நெஞ்சம் பறையோசை ஒன்பதில்*
*ஆலிக்கும் அங்கே அமரர் பராபரன்*
*மேலைக்கு முன்னே விளக்கொளி யாய்நிற்குங்*
*காலைக்குச் சங்கு கதிரவன் தானே.*

சீவகலை ஒன்பதில் சகஸ்ரதளத்துக்குச் சென்ற போது சிரசில் நாதம் முழங்கும், அந்நாதத்தில் தேவாதி தேவனான சிவபெருமான் களிப்புடன் பொருந்துவான், இந்நிலைக்கு முன்னே சூரிய சந்திரர்கள் வலப்புறமும் இடப்புறமும் சிறு தீபவொளி போல் விளங்குவர், சூரியன் புறப்படுமுன் சங்கோசை மக்களை எழுப்புவது போல் ஞான சூரியன் எழுமுன் நாதம் உதித்து முன்னே விளங்கும்.

*868. கதிரவன் சந்திரன் காலம் அளக்கும்*
*பொதிரவ னுள்ளே பொழிமழை நிற்கும்*
*அதிரவ னண்டப புறஞ்சென் றடர்ப்ப*
*எதிரவ வீச னிடமது தானே.*

சூரிய சந்திர இயக்கத்தில் காலம் அளவிடப்படும், இருவரும் ஒன்றுசேர்ந்த பிரணவ நிலையில் சிவசக்தி விளங்குவதால் அமுதம் பெருகும் அருள் நிலையுள்ளது, நாத சம்மியம் செய்பவன் நாதத்தோடு கூடி ஆண்டத்தின் எல்லையாகிய துவாத சாந்தத்துக்குச் சென்று நெருங்க, அவ்விடத்தில் ஈசனும் நேராக எதிர்ப்பட்டு விளங்குவான்.

*869. உந்திக் கமலத் துதித்தெழுஞ் சோதியை*
*அந்திக்கு மந்திர மாரும் அறிகிலார்*
*அந்திக்கு மந்திர மாரும் அறிந்தபின்*
*தந்தைக்கு முன்னே மகன்பிறந் தானே.*

மணிபூரகத்தில் வெளிப்படுகின்ற சோதியை, அடைந்து பிரணவத்தின் உண்மையை யாரும் அறியவில்லை, யாவராயினும் அடைந்து பிரணவத்தை அறிந்தபின், தந்தைக்கு முன்னே மகன், அவர்க்குச் சிவவொளிக்கு முன்னே சீவவொளி பிரகாசித்து நிற்கும்.

*870. ஊதியம் ஏதும் அறியார் உரைப்பினும்*
*ஓதியும் ஏதும் அறியார் ஊமர்கள்*
*ஆதிஸயம் அந்தமும் அந்திக்க வல்லீரேல்*
*வேதியன் அங்கே வெளிப்படுந் தானே.*

உண்மைப் பயன் ஒன்றும் அறியமாட்டார், அவ்வுண்மையைப் பிறர் எடுத்துச் சொன்னாலும் தாமே படித்தாலும் உணராத அறிவிலிகள், சந்திரகலையின் ஆதியையும் முடிவையும் சேர்க்கத் திறம் பெற்றராகில், இரசகுளிகை போன்ற மாற்றத்தைச் செய்யும் சிவவம் அங்கே வெளிப்பட்டுவிடும்.

*871.* *பாம்பு மதியைத் தினலுறும் பாம்பது*
*நீங்கு கதிரையுஞ் சோதித் தனலுறும்*
*பாம்பு மதியம் பகைதீர்த் துடன்கொளீஇ*
*நீங்கல் கொடானே நெடுந்தகை யானே.*

குண்டலினியாகிய பாம்பு சுவாதிட்டனத்தில் பொருந்திச் சந்திரகலை வளரவொட்டாது, விந்து நீக்கம் செய்துகொண்டுள்ளது, அக்குண்டலினியின் ஆற்றல் தீமை தரும் மணிபூரகத்தில் சூரியனையும் அசைத்து வெப்பத்தினைச் செய்து கொண்டிருக்கும், குண்டலினியையும் சந்திரனையும் பகைமைத் தன்மை நீங்கும்படி சிரசின் மேல் உடனாகக் கொண்டால், பெருங்கருணையாளனான சிவபெருமான் சாதகனை விட்டு நீங்கமாட்டான்.

*872.* *அயின்றது வீழ்வள வுந்துயில் இன்றிப்*
*பயின்ற சசிவீழ் பொழுதில் துயின்று*
*நயந்தரு பூரணை உள்ள நடத்தி*
*வியந்தரு பூரணை மேவுஞ் சசியே.*

குண்டலினியோடு சென்ற சந்திரன் சிரசின் மேல் நிற்குமளவும் உறங்காது அதனைக் கவனித்தும், அப்படியாக நின்ற சந்திரன் கீழே இறங்கியபோது உறங்கியும், நன்மையைத் தரும் ஒளியை உள்ளத்தில் நிலைப்பித்தால், விரிவினைச் செய்யும் சந்திரன் பூரணமாகச் சாதகனிடம் விளங்கும்.

*873.* *சதியுதிக் கும்அள வுந்துயி லின்றிச்*
*சசியுதித் தானேல் தனதூண் அருந்திச்*
*சசிசரிக் கின்றள வுந்துயி லாமற்*
*சசிசரிப் பின்கட்டன் கண்டுயில் கொண்டதே.*

சந்திரன் சிரசில் உதிக்குமளவும் காலை எழுந்ததும் தியானம் செய்து, சந்திரன் உதித்த பிறகு தன் உணவை உட்கொண்டு, சந்திரன் சிரசில் சஞ்சாரம் செய்யும்வரை துயிலாதிருந்து, சந்திரன் சிரசைவிட்டுக் கீழிறங்கியதும் இதுகாறும் கட்டி நிறுத்தினவன் உறங்கலாம்.

*874.* *ஊழி பிரியா திருக்கின்ற யோகிகள்*
*நாழிகை யாக நமனை அளப்பர்கள்*
*ஊழி முதலாய் உயர்வார் உலகினில்*
*தாழவல் லார்இச் சசிவன்ன ராமே.*

ஊழிக்காலம் உயிர் பிரியாதிருக்கின்ற யோகியர், நாழிகையாகக் கருவியாகக் கொண்டு எமனது வாழ்நாளை அளந்து விடுவார்கள், இவர்கள் உலகில் பஞ்சகிருத்தியம் செய்யும் சதாசிவ மூர்த்தியாவர், உலகில் ஆணவமற்றுச் சிவத்தை முதலாகக் கொண்ட தன்னொளி பெற்றவராய் விளங்குவார்.

*875.* *தண்மதி பானுச்சிச் சரிபூமி யேசென்று*
*மண்மதி காலங்கள் மூன்றும் வழிகண்டு*
*வெண்மதி தோன்றிய நாளில் விளைந்தபின்*
*தண்மதி வீழ்வன விற்கண மின்றே.*

குளிர்ச்சி பொருந்திய சந்திரன் உச்சியாகிய வழியில் (சகஸ்ர தளத்தில்) சென்று, உலகினரால் மதிக்கப்பெற்ற இறப்பு நிகழ்வு எதிர்வு ஆகிய முக்காலங்களையும் அவற்றின் காரணங்களையும் உணர்ந்து, பூரண நிலாமண்டலத்தைக் கண்டபின், அதிலிருந்து விளைந்து விளங்கும் அமுதத்துக்குக் குறைவில்லை.

*876.* *வளர்கின்ற ஆதித்தன் தன்கலை யாறுந்*
*தளர்கின்ற சந்திரன் தன்கலை யாறு*
*மலர்ந்தெழு பன்னிரண் டங்குலம் ஓடி*
*அலர்ந்து விழுந்தமை யாரறி வாரே.*

மேடம் முதல் கன்னியாராசிவரையுள்ள சூரியனது ஆறுகலைகள் வளர்வதிலும், உடலாட்சிக்கான அகரம் உகரம் மகரம்விந்து அர்த்த சந்திரன் நிரோதனியாகிய ஆறு கலைகள் குறைவதிலும், சுவாசம் நான்கு விரற்கடை கழிவுறாமல் பன்னிரண்டு விரற்கடை விரிந்தோடி, விரிந்து நிறைந்துமையாரே அறியவல்லார்?

*877.* *ஆமுயிர்த் தேய்மதி நாளே யெனல்விந்து*
*போம்வழி எங்கும் போகாது யோகிக்குக்*
*காமுற வின்மையிற் கட்டுண்ணு மூலத்தில்*
*ஓமதி யத்துள்விட் டுரையுணர் வாலே.*

ஆகின்ற உயிர்க்குக் குறைகின்ற மதி நாளாவது விந்து சுழிகின்ற வழியலாம், யோகியர்க்குக் காமத் தொடர்பில்லையாதலின் விந்து கழுவரது, மூலாதாரத்தில் கட்டுப்பட்டுவிடும், ஆகவே நீங்கள் பிரணவம் விளங்கும் மதி மண்டலத்தில் உணர்வினாய் செலுத்தி ஏத்துமின்.

*878. வேறுறச் செங்கதிர் மெய்க்கலை யாறொடுஞ்*
*சூறுற நான்குந் தொடர்ந்துற வேநிற்கும்*
*ஈறிலி னன்கலை யீரைந்தொ டேமதித்*
*தாறுட் கலையுள் அகலுவா வாமே.*

சிரசில் வலப்பாகத்தில் மேடராசி முதல் கன்னிமா ராசிவரை விளங்கும் சூரியன் கலை ஆறுடன், கீழுள்ள மூலாதாரத்திலுள்ள நான்கு கலைகளும் கலந்தே நிற்கும், அறிவுப் பொருளான சூரியன் அக்கினி கலை பத்துடன், சந்திரன் விளங்கும் துலா முதல் மீனராசி வரையில் அறிவு பதிந்த போது சந்திரன் பௌர்ணமி நாளாக விளங்கும்.

*879. உணர்விந்து சோணி உறவினன் வீசும்*
*புணர்விந்து வீசுங் கதிரிற் சூறையில்*
*உணர்வும் உடம்பும் உவையொக்க நிற்கில்*
*உணர்வும் உடம்பும் ஒருகால் விடாவே.*

உணர்வினாலான விந்து சுரோணித்துடன் உறவு கொள்ளின் சூரியன் மிக்க ஒளி வீசும், ஆனான் சூரியனது ஆற்றல் குறையின் புணர்ச்சியாலான விந்து ஒளியாகச் சிரசின்மேல் வீசும், ஒளிமயமான உணர்வும் (சூக்கும உடம்பும்) தூலமான உடம்பும்ஒத்து நிற்கில், ஒளிமயமான உணர்வும் (சூக்கும உடம்பும்) தூல உடலம்பும் யோகிக்கு ஒரு காலத்தும் நீங்கா.

*880. விடாத மனம்பவ னத்தொடு மேவி*
*நடாவு சிவசங்கின் நாதங் கொளுவிக்*
*கடாவிடா ஐம்புலன் கட்டுண்ணும் வீடு*
*படாதன இன்பம் பருகார் அமுதமே.*

புறம் போகாத மனம் காற்றோடு இடப்புற மூளையில் பொருந்தி, யாவற்றையும் நடத்துகின்ற சிவசங்கின் தொனியைக் கேட்டு, ஐம்புல ஆசையில் செல்லாது அடங்கி நிற்கும், அவ்வாறு பிரணவத்தில் கட்டப்படாதனவாயின் சாதகர் இன்பமாகிய அமுதத்தைப் பருகமாட்டார்.

*881. அமுதப் புனர்வரு மாற்றங் கரைமேற்*
*குமிழிக் குட்சுட ரைந்தையுங் கூட்டிச்*
*சமையத்தண் டோட்டித் தரிக்கவல் லார்க்கு*
*நமன்இல்லை நற்கலை நாள்இல்லை தானே.*

சந்திர மண்டலப் பிரவாகம் பிடரிக்கண்ணிலிருந்து பாய்ந்து விளங்கும் சகஸ்ரதளத்தில், அதன்கரணிகை குமிழ் போன்று உயர்ந்து நிற்பதில் சிவம், சத்தி, நாதம், விந்து, சீவன் ஆகிய ஐந்து சுடர்களையும் ஒன்றுபடுத்தி, மூலாக்கினியை வீணாத்தண்டில் செலுத்திக் காண்பவர்க்கு, இறப்பு இல்லாமையோடு ஒளி பெருகும் காலம் என்று ஒன்று இல்லையாம்.

*882. உண்ணீ ரமுத முறுமூ றலைத்திறந்*
*தெண்ணீர் இணையடித் தாமரைக் கேசெலத்*
*தெண்ணீர்ச் சமாதி யமர்ந்துதீ ராநலங்*
*கண்ணாற் றெடோசென்று கால்வழி மாறுமே.*

அனுபவிக்க தகுந்த அமுதம் ஊறும் ஊறலைத் திறந்து, பிரபஞ்ச கலப்பால் மாறுதல் இல்லாத ஒப்பற்ற சூரிய சந்திராகள் பொருந்திய சகஸ்ர தளத்தை அடைய, தெளிவான நீரினுள் இருப்பது போன்ற உணரவுடன் சமாதியில் நிலைத்து, முடிவில்லாத ஆனந்தத்தை விளைக்கும் கண்ணில் விளங்கும் சிவம் உணர்த்தும் வழியில் நின்று பிராண இயக்கத்தை மாற்றுங்கள்.

*883. மாறு மதியும் மதித்திரு மாறின்றித்*
*தாறு படாமல் தண்டோடே தலைப்படில்*
*ஊறு படாதுடல் வேண்டும் உபாயமும்*
*பாறு படா இன்பம் பார்மிசைப் பொங்குமே.*

கீழ் நோக்குதல் இல்லாத சந்திரகலையை மாறுபடாமல் போற்றியிருங்கள், பிரிவுபடாமல் வீணாத்தண்டினூடே சகஸ்ரதளத்தை அடைந்தால், உடம்பு அழியாது, வேண்டிய யோக உபாயங்களும் சிதறாது கிட்டும், இன்பம் உலகில் எங்கும் பெருகும்.